
மகா கனம்
பொருந்திய...
எஸ். அகஸ்தியர்
NCBH

# மகாகனம் பொருந்திய...

## எஸ். அகஸ்தியர்

வெளியீடு :

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட்
41.-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098.

Magaganam Porundhia......
by
S. Agasthiar
முதற்பதிப்பு : மார்ச் 1994
(C) எஸ். அகஸ்தியர்
Code No. A 699

விலை: ரூ. 28/-

ISBN 81-234-0236-8

அச்சிட்டோர் : ஸ்ரீ கோமதி அச்சகம்,
41, சூரப்பன் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.
போன் : 844554

# சமர்ப்பணம்

என் இலக்கியங்கள்
உயிர்த்து நிற்க
மக்கள் உறவுக்கு
வழி விட்டு
நெடுங்காலம்
ஆதரவு நல்கி—
பரிசோதனையாய
என் எழுத்து
எதனையும்
அவ்வாறே
பரிவு மீதூரப்
பிரசுரித்து விடும்
தமிழறிஞர்—
'தினகரன்' பிரதம ஆசிரியர்
திரு. ஆர் சிவகுருநாதன் எனும்
மானித இலக்கிய மனிதருக்கு...

—எஸ். ஏ.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 5 |
| 1. | கவரிமான் | 9 |
| 2. | கோபுரங்கள் சரிகின்றன | 79 |
| 3. | மகாகனம் பொருந்திய | 176 |

# முகவுரை

சூன்யத்திலிருந்து ஞானத்தைத் தேடி வீணே பாயும் கற்பனாவாதக் கலை இலக்கியக்காரர்களும், 'கலை கலைக்காக' என்னுங் கோஷ்டிகளும், வாழ்க்கையிலிருந்து கிளரும் கற்பனையே பொருளை உண்டாக்குவதாகப் பாவனை பண்ணும் கோஷ்டிகளும், உலக நடபடிகளில் நேர்மையாக இறங்கத் தயாரில்லை. தான் தான் தன்னளவில் தனக்காக உலகம் இயங்குவதாக வெறுங் கற்பனை பண்ணுகிற எழுத்தாளர்களும் தயாரில்லை. இந்தக் கோஷ்டிகளுக்கு இயக்கவியல் பொருள் முதல் வாத மார்க்ஸிய அழகியல்— சமூகவியலின் யதார்த்த நெறி பொய்மையாகவும் பழங் கோட்பாடாகவும் தெரிகிறதாம் இத்தகைய சுயவாதக் கோஷ்டிகளுக்கெல்லாம் சமூகவியலாளர்களால் எப்பவோ விடை கொடுத்தாயிற்று. எனினும், தூவானம் விட்டபாடாயில்லை.

ஜாதி, மத, குல, இன, கோத்திர பேதம் காட்டி உலகைப் பிரித்து வைத்துக் கோடானு கோடி மக்களை ஈவிரக்கமின்றிச் சுரண்டி ஏப்பமிடும் முதலாளித்துவ ஏகாதிபத்தியச் சண்டியர்களும், அதிதீவிரவாத எடுபிடிகளும், ஜனநாயகச் சுதந்திரவாதிகளாம். இவர்கள் ஜோதிடத்தாலும், பக்தி மார்க்க ஆன்மீகத்தாலும், 'புனித யாத்திரை'களாலும் சமுதாயத்தின் அழுக்கைப் போக்க வந்த தேவதூதர்களாம். அடக்கப்படுகின்ற, சுரண்டப்படுகின்ற, ஒடுக்கப்படுகின்ற மக்கள் பக்கம் நின்று எவன் போராடுகின்றனோ அவனின் போராட்டம் தான் புனிதமானது—அவன்தான் புனிதமானவன் என்பதை நாம் அறிவோம். மார்க்ஸிய அழகியலைக் கற்றுத்தேர்ந்த இலக்கிய விமர்சகர்களும் தத்துவ சித்தாந்த அறிஞர்களும் ஏலவே இது பற்றி விளக்கியுள்ளார்கள்.

வாழ்க்கையின் பிரதிபிம்பமே இலக்கியம். இவ்வாறு பிம்பமாகும் இலக்கியம் சமுதாயத்தை விமர்சிப்பதாகவும், இதே சமுதாயத்தை முன்னேற்ற இதற்கான கருத்தியலை அழுத்திச் சமூக மாற்றத்தை உந்துதற்படுத்துவதாகவும்

அமையுமாயின் அதுவே மகத்தான இலக்கியம். வாழ்க்கையும் இது சார்ந்த இயக்கமுமே சகல கலை இலக்கியச் சிருஷ்டிகளுக்கும் ஆதாரம். முழுக்கலை இலக்கிய வடிவங்களும் இலக்கிய உத்தி வகைகளும் இவை சார்ந்த கருத்துருவங்களும், மனிதனால் தோற்றுவிக்கப்பட்டவை. சகல இயக்கங்களினதும் கண்டு பிடிப்பாளனும் சிருஷ்டி கர்த்தாவும் இந்த மனிதனே. ''மனிதனின் சிருஷ்டியைத் தவிர, வேறு எதனையும் என்னால் பொய்யாகக் கற்பனை பண்ணவும் முடியவில்லை'' என்பார் மார்க்ஸிம் கார்க்கி.

உலகம் மனிதனால் அளக்கப்படுகிறது. ஆளப்படுகிறது. அனைத்தினதும் கர்த்தா மனிதனாக இருக்கும் போது, இதே மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு மாய சக்தி மனிதனை வழி நடத்துகிறது என்பதில் உள்ள பேதமையையும் மனிதன் விளக்கியுள்ளான்.

உலகத்தில் தோன்றிய பல மேதைகள் சமுதாயத்தை விமர்சித்துக் கொண்டிருந்தார்கள். ரூஸோ, சோக்கிரட்டீஸ், அரிஸ்டாட்டல், வால்டேயர், கரிபோல்டி, எங்கர் ஷால் புருத்தோயன், பேட்டன்ரஸல் போன்ற உலகச் சிந்தனையாளர்களும் சமுதாயத்தை விமர்சித்தார்கள்—நடப்பியல் வாழ்வு முறையையும் அழகாகச் சித்தரித்தார்கள். நமது சங்க கால நூல்களும் விமர்சித்தன. ஆனால் இப்படியாக விமர்சிக்கப்படுகிற சமுதாயத்தை எப்படி மாற்றியமைப்பது என்பதை இயக்கவியல் விஞ்ஞான பூர்வமாக ஆய்வு செய்து முதன் முதல் உலகத்துக்குச் சொன்னவர்கள் மார்க்ஸ்-எங்கல்ஸ் மட்டும்தான். உயிரினத் தோற்றம், மனித இனம் பற்றியும் டார்வின் தத்துவத்தோடு இணைந்து இச்சமுதாய மாற்றத்துக்கான புரட்சிகர சித்தாந்தத்தை உலகுக்கு அறிக்கை செய்தவர்களும் மார்க்ஸூம் எங்கல்ஸூம்தான். மார்க்ஸ்-எங்கல்ஸ் தத்துவத்தை விமர்சித்தவர்களும் எதிர்த்தவர்களும் உண்டு. ஆனால், வென்றவர்கள் எவரும் இல்லை.

'ஒரு புரட்சிகரமான தத்துவம் இல்லாமல் புரட்சிகரமான கலை இலக்கிய இயக்கம் என்ற எதுவும் இருக்க முடியாது. இது தவிர்ந்த அனைத்தும் போலியானது' என்னும் மார்க்ஸ்-எங்கல்ஸ் சித்தாந்தம் உலகில் நிரூபணமாகி வருவதை இன்றும் கலை இலக்கிய அரசியல் இயக்க உலகில் நேரடியாகப் பார்க்கிறோம் புரட்சிகரமான

இந்தத் தத்துவம் தொடர்ந்து சரியாக அழுத்தப்படாத தாலேயே மனிதகுலம் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகி யுள்ளது. இதனை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பு, சமுதாய மாற்றத்துக்காக எழுதும் இன்றுள்ள புரட்சிகரச் சித்தாந்த முற்போக்கு இலக்கிய இயக்க வாதிகளின் கடமையாகும்.

தெரியாத ஒன்றை, புரியாத ஒன்றை, புலப்படாத ஒன்றை, ருசுப்பிக்கப்படாத ஒன்றை, எதுவுமே இல்லாத ஒன்றை 'ஏதோ ஒரு மகாசக்தி' என்று கற்பிதம் பண்ணி அதன் குணாம்சத்தையும் வினோதத்தையும் கற்பிதமாகச் சொல்லித் தம்மைத் தாமே வஞ்சிப்பதோடு சமுதாயத்தையும் வஞ்சிக்கும் கற்பனாவாத இலக்கியங்களை 'வாழ்க்கையின் பிரதி பிம்பம்' என்று எந்தப் படைப்பாளனும் கூற முடியாது; அப்படிச் சொல்லவும் அவனுக்கு அருகதை இல்லை.

இவற்றையெல்லாம் உள் வாங்கி இவ்வகையில் எழுந்த வாழ்க்கை இலக்கணமும் இலக்கியமும் கருத்துருவமுமே மக்கள் படைப்புகளாகின்றன.

சிருஷ்டி அனைத்தும் படைக்கப்படும் வரைதான் எழுதுகிறவனுக்குச் சொந்தம். அது வெளிவந்தபின் பொது மக்களுக்குரியது. அது அவன் பிரசவமாகினும், அதனை விமர்சிக்க எழுதுகிறவனுக்கில்லாத உரிமை பொது மக்களுக்கே உண்டு. எந்த இலக்கியப் படைப்பும் எழுதுகிறவனின் தனித்துவ ஆற்றலாகவன்றி, வாழ்க்கை உந்துதலோடு சம்பந்தப்பட்டே வெளிப்படுகின்றது. மக்கள் வாழ்க்கையையும் அவர்கள் உணர்வுகளையும் கற்றுணர்கின்ற அனுபவமே படைப்பாளியின் சிறந்த பல்கலைக்கழகம்.

'மக்களிடமிருந்துதான் கலை இலக்கியம் வடிவம் பெறுகின்றது. ஒவ்வொரு படைப்பாளனும் மக்களை நாடிச் செல்ல வேண்டும், சூன்ய மந்திரங்களால் மக்கள் வாழ்வை அளந்துவிடமுடியாது. மக்களே நமக்குச் சொல்லிக் கொடுத்து உண்மையான கலை இலக்கியம் பிறக்க ஆதர்ஸமாக இருப்பார்கள்'' என்ற மாபெரும் சோவியத் கலைஞர் புடாவ்கின் கூற்று எனக்கு இசைவானது.

இவ்வகையில் எனது இலக்கியப் படைப்புகள் ஏதோ ஓர் வகையில் அவ்வக்காலத்தின் தாக்கங்களைச் சுவடு பதிப்பித்திருப்பதோடு அவை கோரி நிற்கும் சமதர்மச்

சமுதாயத்தையும் எதிர்கொண்டு நிற்கின்றன. என் நெடுங்கால வாழ்க்கை அனுபவங்கள், பலதரப்பட்ட மக்களிடமிருந்து கற்றுக் கொண்ட படிப்பினைகள்—படிமங்கள், முற்போக்கு இயக்க இலக்கிய ஈடுபாடுகள், தொழிலாள வர்க்க இணைப்பின் போதம் இவையே என் இலக்கிய வளர்ச்சிக்கும் வளத்துக்கும் ஊற்றுக்கண். மக்களிடமிருந்து கற்றுணரும் தாக்கம், இதனால் விளையும் இலக்கியக் கோட்பாடு வெல்லற்கரிய தத்துவமாக இருப்பதுபோலவே எனது இலக்கியங்களும் குறுகிய வட்டத்துள் நில்லாமல் உலகு தழுவி நிற்பதை என் போல் என் வாசகர்களும் காண்கின்றனர். இதனை இக்குறு நாவல்களிலும் பார்க்கலாம்.

இதில் மூன்று குறுநாவல்கள் உண்டு. 1960 'தினகரனி'ல் பிரசுரமான 'சவுந்தரி' என்ற குறுநாவல் சில ஆண்டுகள் கழித்து 'கண்ணதாசன்' ஆண்டு மலரில் மறுபிரசுரம் செய்யப்பட்டது. இது கருத்தியல் கருதி இந்நூலில் 'கவரிமான்' என்ற தலைப்பில் வருகிறது. 1968 'தினகரனி'ல் வெளியான 'கோபுரங்கள் சரிகின்றன' என்ற குறுநாவலை யாழ்ப்பாணம் ரஜனி குகநாதன் பதிப்பகம் 1985இல் நூலாக்கியும், மக்களிடம் சேரும் முன்பே இலங்கையின் 'கெடுபிடி நெருக்கடி'யால் அந்நூலும் நாசமாயிற்று. பிரான்ஸ் வந்து 1987இல் எழுதிய 'மகாகனம் பொருந்திய' என்ற குறுநாவல் 1952இல் 'பாரிஸ் முரசு'ப் பத்திரிகையில் பிரசுரமானது.

இக்கதைகள் பற்றி நான் இங்கே ஒன்றும் சொல்லப் போவதில்லை. அதைக் கூறுவது மக்கள்.

இந்நாவல்களைப் பிரசுரித்த 'தினகரன்' 'வீரகேசரி' 'பாரிஸ் முரசு' ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கும், யாழ்ரஜனி பதிப்பகத்திற்கும், சமூகவியல் நூல்களை ஓர் இலக்கியத் தவமாகக் கருதி நெடுங்காலம் பணியாற்றி வரும் என்.சி.பி.எச். நிறுவனம் ஏலவே எனது மூன்று நூல்களை வெளியிட்டதுடன், இந்நூலையும் அழகாக வெளியிடும் அதே சென்னை என்.சி.பி.எச். நிறுவனத்தினர்— பொறுப்பாளர்— தொழிலாளர்கள் அனைவருக்கும் என் தோழமையுள்ள நன்றி.

S. AGASTHIAR, எஸ். அகஸ்தியர்
9, Rue Galleron, 75020 Paris
France.

# 1. கவரிமான்

அன்று சனிக்கிழமை. அது, ராயப்பு அம்மானின் 'முழுக்கு நாள்.'

அம்மான் முழுகப்போகிறாரென்றால், வீடு, 'அமர்க்களப்படப்போகிறது' என்று அர்த்தம். இந்த முழுக்கு நாளில்தான் சவுந்தரியின் நினைவும் அலைமோதி எழும். இன்றும் அப்படி. அவளை நினைக்க நெஞ்சு நீவிப் பெருமூச்சு எகிறிக் குதிக்கிறது. கண்களில் ஒரு காந்த மயக்கம். உத்தம வேதக்காரராதலால், அது பக்தி மயக்கமாகவுமிருக்கலாம்.

ஒரு வாரத்துக்கு முன்புதான் அந்தச் 'சம்பவம்' நிகழ்ந்தது. அம்மானுக்கோ இன்று நேற்றுமாதிரி இருக்கிறது. அவருள் எழுகிற சுரீரிப்பு ஒரு மின்னற் கீற்றுப்போல் மனத்தைப் பிரளயப்படுத்துகிறது.

'என்ன கோதாரியெண்டு அந்த மனம் வந்தது?'

அவள் நினைவின் உணர்வூற்றுச் சுணைப்போடுதான் இன்றும் அம்மான் முழுக அடுக்கப்பண்ணுகிறார்.

வெள்ளாப்போடு எழுந்து, கூரையால் இறக்கிய சேவற்கோழி முற்றத்தில் கால் வைக்கவே அப்பிப்பிடித்து, அப்படியே குசினிக் கப்பில் அதன் தலை பறக்க அடித்துக் 'குளோஸ்' பண்ணிவிட்டு, அதன் உடல் பதற அவரும் கை

உதறியவராய்த் 'தாவார'ப் பக்கம் சென்று அதை வெகு 'நீற்'றாக உரித்து மனைவியிடம் கொடுத்தார்.

''றோசு, புளிமுளகாய் உறைக்கத்தக்கனதா, ஏதேன் உண்டணைப் போட்டுக் காரசாரமாகக் காச்சு.''

சவுந்தரி அழுந்தலில் எழுந்த ஒரு சுகமான வீறாய்ப்பு உந்த மனைவியிடம் சமைக்கச் சொன்ன அம்மான், நல்லெண்ணெய்ப் போத்தலை எடுப்பித்துக் கைக் குவளையில் வார்த்துத் தலை சளிக்க வைத்தார். நெஞ்சு, முதுகு, கை, கால், நாரிப்பூட்டு என்று சர்வாங்கமாக உரஞ்சிவிட்டுச் சற்று நேரம் முற்றத்தில் நின்று உலாத்தினார்.

தேகத்தில் சாடையாக முறுக்கேறிற்று.

அந்தவாக்கில் நேரே கொட்டடிக் காத்தான் கள்ளுக் கொட்டிலுக்கு எழுந்தருளினார். போன சுவட்டோடு காத்தான் முட்டியில் மண்டிக் கிடந்த பனையானிலும் தென்னையானிலும் கலந்து புளாவில் வார்க்க, இவர் பனைக்குத்தியில் இருந்து ஒருபாட்டம் அடித்தார்.

அப்பவும் 'பொச்சம்' அடங்கவில்லை.

அந்தச் சூட்டோடு உடம்பில் கொஞ்சம் உசார் ஏற்ற, ஒரு அரைப்போத்தல் 'சுறுப்பானை'யும் வேண்டிக் கமக்கட்டுக்குள் வைத்தார். மனங் கேக்கவில்லை. எனவே, அதிலும் ஒரு 'அரைக்கிளாஸ்' வாயில் ஊற்றியபின், றால்வடை ஒன்றை 'ரேஸ்ற்' பண்ணிக்கொண்டு எழுந்த அம்மான், 'பேசுந் தரமோ காதல் பரவசமானால்?' என்று 'சிந்தாமணி'யில் எம். கே. தியாகராஜபாகவதர் பாடிய பாட்டை முணுமுணுத்து முடிய, 'இந்த இன்பமே சொந்த மதானால் வானுலகம் வேண்டாம்' என்று 'அம்பிகாவதி'யில் சந்தானலஷ்மியோடு பாகவதர் பாட்டையும் தொண்டை திறந்து ராகமிழுத்துப் பாடிக்கொண்டு,

நாவாந்துறைக் கடற்கரையோரமாக வீட்டுக்கு நடையைக் கட்டினார்.

புசுபுசுத்து வீசுகிற ஆனிச் சோளகக்காற்று இதமாக இருந்தது.

கடற்கரை வெளி தாண்டி மண்புட்டிச் சவக்காலை கழிய, சிறீவள்ளி நாடகத்தில சங்கீத மேதை கிட்டப்பா பாடிய 'காயாத கானகத்தே நின்றுலாவும் நற்காரிகையே' என்ற ராகமாலியைத் தனது சுருதியில் ஆலாவர்ணனை யோடு பாடி அம்மான் வீடு வந்து சேர, பொழுதும் உச்சிக்கு ஏறிவிட்டது.

வந்தவர் அயல் வீடுகள் கேட்கக் கண்டம் திறந்து தாளம் லயம் சுருதி பாராமலே தன்பாட்டில் நாடகம்—படங்கள் பாடல்களை உரத்துப் பாடலானார். அப்போது கிட்டப்பா, எம். ஆர். கோவிந்தன், சுந்தராம்பாள். மகாலிங்கம், பி. யு. சின்னப்பா இவரிடம் சங்கீதப்பிச்சை வாங்கிக் கொண்டிருந்தார்கள்

சினிமா, நாடகப் பாடல்களைப் புரட்டியடித்து வாய் ஆறிய அம்மான் சற்று நேரம் செல்ல, கறுப்பானைத் திறந்து ஒரேமூச்சில் ஒரு வீதுறு அடித்தார். வாங்கில் பலகை ஒன்றை எடுத்து முற்றத்தில் குந்திக் கொண்டு அரை அவியலில் அடுப்பில் கொதிக்கிற இறைச்சிக் கறியை ஒரு குண்டாளச் சிரட்டையில் எடுப்பித்து 'ரேஸ்ற்' பண்ணத் தொடங்கினார்.

பொழுது சாயச்சாய அம்மான் அடித்த 'சரக்கு'களும் கொஞ்சங்கொஞ்சமாகத் தலைக்கேறிச் சுமாராக வேலை செய்யத் தொடங்கிவிட்டன.

ஒரு பாட்டம் கச்சேரி ஆரம்பமாகியது.

தியாகராஜபாகவதர், எம். எஸ். சுப்புலக்ஷ்மி ஹொன்னப்பப் பாகவதர், தண்டபாணிதேசிகர் போன்ற

சங்கீத மேதைகள் கொஞ்ச நேரம் மறுபாட்டமும் அம்மா னிடம் சரணடைந்து மீண்டனர்.

கச்சேரி முடிய சிவந்துபோன அம்மான் கண்கள் றோசம்மாவை விழுங்க ஆரம்பித்தன

''றோசு, இஞ்ச ஒருக்காக்கிட்ட வாடியாத்தை.''

வெள்ளை முழிகள் முற்றாகவே சிவந்து துள்ளிட்டன. றோசம்மாவுக்குச் சாடையாக நடுக்கம் எடுத்தது.

'இண்டைக்கு என்பாடு உத்தரிப்புத்தான்'

அடுக்களையில் அவள் மிகப் பரபரப்போடு சமையற் பாட்டைக் கவனித்துக்கொண்டிருப்பதை அவதானித்த அம்மான், கொஞ்ச நேரம் அலம்பாமல் மீசையில் கை போட்டு முறுக்கிக் கொண்டார்.

கடையடிக் கணேசன், அழுக்கடைச் சண்முகம், காராளமுத்தன் போன்ற பிரபல யாழ்ப்பாணத்துச் 'சண்டியர்'கள் அவர் நினைவில் வந்துபோயினர்,

கிறங்கிப் போன அவர் கண்கள் றோசம்மாவைத் திருடுவதுபோல் கள்ளமாக உற்றுப்பார்த்தன.

''றோசு, நீ இப்ப என்னில நல்ல 'கரிசனை'தான்', என்று 'தக்கு' வைத்து முணுமுணுத்தது, வாய்.

றோசம்மாவுக்குப் 'புண்ணில் புளி பற்றின' சாடை எரிந்தது.

''வயது வந்த கடுக்கண்ட புள்ளையன் இருக்கிறதையும் கவனியாமல், சீத்தல் குடிவாக்கில இதென்ன திலிச கெட்ட பேச்சுகள் உந்த நாத்தல் வாயில வருகுது?''

றோசம்மா சினந்து பொரிந்ததை அவர் கவனித்துக் கொண்டார். அவள் பொச்சரிப்போடு அம்மானைப் பார்த்த போதும், அவர் ரசித்துச் சிரித்து உதடுகளைப் பனாட்டுத்தட்டாட்டம் அப்பிக்கொண்டு மவுனமாக விருந்தார்.

சவுந்தரிமட்டில் அம்மான் நடந்துகொண்ட விதம்—அந்தத் தவறு—அவர் மனத்தை இப்பவும் உறுத்துகிறது. அதை உணர்ந்தவராய் சற்று நேரம் ஊமையானார். ஆனால், கண்கள் றோசம்மாவையே மேய்ந்தன.

'றோசு புத்தி யூகம் இல்லாட்டியும் எனக்கு வாய்ச்ச பத்தினி—என்ர ராசாத்தி ..'

சொண்டுகளை நன்னிக்கொண்டு அந்த இன்ப மயக்கத்திலே மனைவியைப் பார்த்தபடி, இக்கால ராஜபாட் நடிக கலாமணி சிலுவைராசா பாடிய நாட்டுக்கூத்துப் பாட்டைக் கொஞ்சம் 'தக்கு' வைத்துப் பாடலானார் :

''வண்டனெங்கும் குழலாளே—காதல்
மான்விழியே ஒயிலாளோ
செண்டரும்பும் செவ்விதழே—எந்தன்
சித்தினியே பத்தினியே
அண்ணல் நானுன் அருங்கணவன்—உன்மேல்
ஆசைகொண்டேன் தேன்மொழியே
வண்ணமலர்ச் சித்திரமே—ஆசைக்
கண்மணியே விண்ணொளியே!''

சடுதியாக வாங்கில் பலகையைத் தள்ளியவர் கோவணக் கட்டோடு சப்பாணி கட்டி இருந்து கொண்டு, மிஜ்ர சாப்புத் தாளத்தை மூன்று வீச்சு அடியாகப் பிரித்துத் தொடையில் போட்டபடி ஒரு சள்ளைப் பாடாகச் சரிந்து றோசம்மாவைப் பார்த்துக் கண் சிமிட்டினார்.

றோசம்மா வெகு குளிர்த்தியாகப் புல்லாங்குழலிசையில் இரை மீட்க மறந்த பசுவைப்போல் தனக்குள் ரசித்த வண்ணம் அவர் பாடுகிற பாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

றோசம்மா புத்திபேதலித்தவளாயினும், புருஷனை ஓரக்கண்ணால் நாணித்துப் பார்த்தபோது, இளங்கால நினைவுகள் சிலம்பமாடின.

'மனிசன் என்னில சரியான ஆசை. எந்த நேரமும் அவருக்கு என்ர நினைவுதான். அதுதான் அவர் படிக்கிற பாட்டிலயும் அப்புடி வருது'

இச்சையோடு அர்த்தப்படுத்திக்கொண்ட றோசம்மா, "உதில இருந்து உப்பிடியே புலம்பிக் கொண்டிருக்காமல் நேர காலத்தோட போய் முழுகிப்போட்டு வந்து கை கால் அலுப்புத்தீர எப்பனுக்குப் படன்" என்று மிகையான பாசத்தோடு சற்றுச் சினப்பாகவே கூறினாள்.

"என்ன, அலுப்புத்தீர வந்து படுக்கட்டோ?"

தேவையற்ற ஒரு 'தக்கு' வைத்துத் திரும்பப் பதில் கூறிய அம்மான், மனைவிக்கு ஓர் இன்ப உணர்வை நினைவூட்டினார்.

இன்றைய அவரின் கோலநிலை அவளுக்கு வள்ளீசாகப் புரிந்து விட்டது.

'இண்டைக்கு எக்கணம் இந்த மனுஷனோட பெரிய சில்லெடுப்புத்தான். முழுக்கு நாளில எனக்கு ஒரு உத்தரிப்புஸ்தலம்'

"உதென்ன உந்த வாயில வந்த நரகல் பேச்சு?"

"பின்ன என்ன? றோசு சும்மா படுத்தாப்போல அலுப்புத்தீருமே?"

அவர் பேச்சுக்கு மறுபேச்சுக் கொடுத்தால் பிறகு 'வம்பில' வந்துமுடியும் என்ற பீதியில் றோசம்மா வாய் திறக்கவில்லை.

அவள் மௌனம் ஒரு சவாலாக—தன் ஆண்மைக்கே இழுக்காக அவருக்குப் பட்டது.

அந்த மௌனத்திற்கும் அம்மான் 'கரு' வைத்து ஒரு பாட்டம் விளாசினார்:

''றோசு, நீ இப்ப கடைசியா உன்ர வாயையும் மூடிப் போட்டாய். பொறு வாறன... முழுகிப் போட்டு வந்து, பொலிஸ் சின்னத்தம்பியிட்டப் பழகின சீனடிசிலம்படி விளையாட்டில ஒண்டு காட்டி வைக்கிறன்.''

ஏதோ ஒரு பாட்டை முணுமுணுத்து ராகமிழுத்தார்.

இந்தக் கட்டத்தில் தெருப்படலையில் ஒரு பையன் குரல் கேட்டது:

''அம்மான்...?''

ஜேக்கப்பர் நிலை குத்தி நின்றார்.

அவர் பார்வை, 'அதாற்ரா அது?' என்று கேட்பது போல் முறைத்துக் கிடந்தது.

''எங்கட அப்பு உங்களை ஒருக்கா அவசரமாக வந்திட்டுப் போகட்டாம்.''

'சுவாம்பிள்ளையின்ர பொடியன் — சவுந்தரியின்ர தம்பி'

அது, ஆனந்தம் என்பதை அவன் குரலில் அம்மான் மட்டுக்கட்டிக் கொண்டார்.

''தார், ஆனந்தமே?''

''ஓம்.''

''என்ன சங்கதி; அவசரமாமே?''

'ஓமாக்கும். உடன வரட்டாம்.''

பெருமிதத்தில் அம்மான் நெஞ்சு நிமிர்ந்தது.

விசாரிப்பை நிறுத்திவிட்டு சற்றுவேளை சிந்தனையிலாழ்ந்தார்.

மனம் குருக்குத்திற்று.

"தம்பி, நீ போ. தலையில சீயாக்காய் லெந்தயம் வச்சிட்டன். முழுகிப்போட்டு வாறன்"

ஆனந்தம் திரும்பிவிட்டான்.

அம்மான் முகம் 'சடா'ரென்று கறுத்துச் சூம்பிற்று. காலையிலிருந்து வலு 'குஷி'யாக அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்த அம்மான், சகலதையும் இழந்தவராக ஆசுவாசப்படலானார்.

'சவுந்தரி...'

அவளை நினைக்கவே அவர் நெஞ்சு இப்போது குபீரித்தது.

"அவள் பொடிச்சியின்ர சங்கதியாகத்தான் இருக்கும். அவள் இப்பவும் வாய் துறந்து வெளிய சொல்லாத படியால் தான் நான் இன்னும் ஊரில ஒரு மனிசனாட்டம் உலாவித்திரியிறன். பொடிச்சி மட்டும் 'அதை'ச் சொன்னாளெண்டால், நான் 'பொலிடோல்' தான் குடிக்க வேணும்."

தூங்குகிற கோழியாட்டம் அம்மான் தலை சவிழ்ந்தது.

'அவள்தான் இனி ஒருத்தனையும் கட்டமாட்டனெண்டுறாளே. இந்தக் கோலத்தில இப்ப நான் அங்க எதுக்குப் போவான்?'

கணை ஒன்று மனதிற் கொழுவியது.

'வந்த ஒரு நல்ல சம்பந்தத்தையும் வேண்டாமெண்டிட்டாள். ஒரு வேளை என்னை ஊருக்க காட்டிக் குடுக்க அடுக்குப் பண்ணுறாளோ?'

மனசு துணுக்கிற்று.

'ஏதோ பாப்பம். வியளத்தை அறிஞ்சு வருவம்'

அசட்டுத் துணிச்சல் அருக்கூட்டிற்று.

பொழுது உச்சி சரிந்து விட்டது. முற்றத்தில் கொம்மாளம் கொட்டிய அம்மான், பையன் வந்து போன பின் மலாரடித்துக் கிடந்தார்.

ஏதோ நினைத்தவராகத் 'திடீ'ரென்று எழுந்து கிணற்றடிக்குச் சென்ற கையோடு தாக்கற முழுகலானார்.

முழுக்கு முடிந்து திரும்புகையில் கண்கள் மிளகாய்ப் பழம்போல் சிவந்து விட்டன. வெறி துப்பரவாக முறிந்து விட்டது. மனதில் உறைந்திருந்த கொஞ்ச உசார்கூடச் சோர்ந்து விட்டது. இருந்தும் அம்மான் அந்தரபவனியில் தான் நின்றார்.

நிலம் கறுத்து விட்டது. செக்கல் நேரம்.

கிராமத்து ஆசனக் கோயிலில் திருந்தாதி மணி ஒலி அம்மான் நெஞ்சில் இன்று இடியேறாக அதிர்ந்தது.

செக்கற் குளிர் காற்று அவர் உடம்பில் பரவியது. தேகம் புல்லரித்தது.

'போவோமா விடுவோமா?'

மனம் அங்கலாய்க்க, சார்மனையில் பாடாகக் கிடந்து தலை திருகச் சரிந்து, அரிக்கிற காதுக்குள் ஓர் ஈர்க்கிலால் குடும்பியைக் குடைந்து கொண்டே சிக்கலான அந்தச் சங்கடத்தில் மூழ்கிய அம்மான், நீண்ட நேரம் தனது மனக் குமுறலை மெதுவாக இறக்கிக் கொண்டிருந்தார்.

சம்பவங்கள் கானல் நீர் போல் வெறும் நினைவுச் சுழிகளாகக் கழிந்தன.

'சிக், துப், தூ'

அடி வயிறு எக்கி ஒரு பாட்டம் காறித்துப்பினார். முகம் அஷ்டகோணமாகியது. குமைந்து வந்த குமட்டலை அருவருத்து வெளியே துப்பினார்,

'நாய் வாய் நக்குத் தண்ணியாட்டம் எங்க போய்க் குந்தினாலும் அந்தப் பொட்டையால எனக்கு மீளாத உத்தரிப்பு...'

மனங்கனிந்தது. ஒருவித சினப்போடு சகட பாணியில் உன்னி எழுந்தார்.

மணி ஏழு ஏழேகால் ஆயிற்று.

ஒரே தாவில் சார்மனையில் கிடந்த நாரி அவர் உன்னி எழுந்தபோது பாவற்காய் முறிந்த சாடை 'நறுக்'கென்று 'நொறுக்'கிட்டது. கரங்க ளை உயர்த்தித் 'திமிர்' மீட்டுச் சோம்பல் முறித்து, வாய் பிளக்கக் கொட்டாவி விட்டவராய் நடந்தார் அம்மான்.

அவர் நடந்தாராயினும் அவரின் இதயத்தைக் கரைக்கின்ற அந்தக் கிலிசகேடு, அம்மான் மனசை விட்டு நகர மறுத்தது. தூண்டில் மீன் மாதிரி உடம்பு தவண்டையடித்தது.

'ஏதோ கிடக்கிற காலம் மட்டும் நாலு பேரைப் போல இருக்காமல், என்ர திமிர் செய்த வேலை, சும்மா கிடந்த பொடிச்சியிவ தொட்டுப் போட்டு, அவளின்ர கர்மத்தைப் பாக்க முடியாமல் என்னில மாஞ்சு சாகிறன்'

அவர் நெஞ்சில் இப்போது இதுவே சுமையாயிற்று.

அவளைச் சாடையாக மருட்டி 'அதை' வெளிய தெரியவிடாமல் 'சடைஞ்சு' போட்டு, ஆரேன் ஒருத்தன்ர தலையில் கட்டிவிட்டுச் சும்மா இருக்க அம்மான் மண்டையைப் போட்டு உடைத்தார்.

'சவுந்தரி...'

காளை இரை மீட்கிறது.

அந்த ஒரு பொழுதின் இன்ப சுகம்...

ஒரு நாள் சாயந்தரம் அம்மான் ஆறுகால் மடத்தில் இருந்து அவளையே நினைத்து ஏதோ திட்டம் வகுத்துக் கொண்டிருந்தார்.

'தட்டினால் போறன் தடவினால் வாறன்' என்ற நுளம்பு வாழ்க்கையே தன்னை ஒரு பொறுப்பற்ற மனிதனாக்கியது என்று யோசிக்கவே அவருக்குத் தன்மீது சலிப்பு உண்டாயிற்று.

வேலை வெட்டியின்றி ராஜா வீட்டுப்பிள்ளைபோல் ஊர் சுற்றித் திரிந்த காலங்கள் எத்தகைய பாதிப்புகளை உண்டாக்கிவிட்டன. கடமைக்கேனும் பிதா மாதாவைக் கனம் பண்ணாமல் 'விடுகாலி'யாய்த் திரிந்த காலம்... 'பொறுப்பு'க்காக ஒரு கலியாணம்... கலியாணம் பண்ணியும் பெற்றவர்களை அண்டி உழையாத்தீனில் கொழுத்து நாடோடியான காலத்தில் எதிர் வீட்டு மரியமுத்துவில் மையல் கொண்டு... அவள் அரவணைப்பில் குல விருத்தி கண்டபோது ஊர் சும்மா விடவில்லை. அதன் விளைவாகப் புத்தி பேதலித்த றோசம்மாவைக்'கட்டிய மனைவி' யாக்கிக் கொண்ட தலையெழுத்து அம்மானுக்கு 'விதி'யாயிற்று.

இந்த விதியை மாற்ற அவர் பல நாள் தெண்டித்த தன் பயனாக, கிராமத்தில் 'மக்கள் தொண்டு'ம் 'சமயத் தொண்டு'ம் இவர் தலையில் சுமத்தப்பட்டன. கேட்பானேன், அம்மான் ஊருக்கே மூப்பரானார்.

ஆனால், அலக்சாந்தனுக்கு அவரால் மூப்பராக முடியவில்லை. இதுதான் வில்லங்கம்.

அம்மானுக்கு இவன் சவாலாக முளைக்கவா?

இந்த 'அநியாயத்தை' அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

'சவுந்தரியை இவன் கட்டுகிற கெட்டித்தனத்தைப் பாப்பம்'

அம்மான் தீட்டிய திட்டம்...

அவருக்கு இருப்பே கொள்ளவில்லை.

ஒருநாள் தருணம் பார்த்து அவர் அதைச் சாதித்தே விட்டார்.

வெற்றி. அந்த வெற்றிக் களிப்பு இப்பவும் அம்மான் உடம்பில் சிலிர்த்தது.

'எந்தப் பெரிய சாதனையைச் சாதித்து விட்டேன்.'

ஒரு கணம் திகைத்துப் போயிருந்தார். ஆனால், இந்தத் 'தொண்டு' எதில் சேர்த்தி என்பதே அவர் நெஞ்சை இன்றும் சிப்பிலியாட்டிக் கொண்டிருக்கிறது. என்றாலும், தனக்கு எதிரியாக வெளிக்கிட்ட அலக்சாந்தனை மட்டந்தட்டியதில் அவருக்கு ஒரு மன நிறைவு.

பிரிட்டிஷ் சாம்ராஜ்ய அரச கொலு--அந்த ஆளுமையில் அம்மானுக்கு வந்த கவுண்மேந்து உத்தியோகத்தையே உதறித் தள்ளியவர்.

இந்தத் 'தியாக'த்தால் அம்மானுக்கு ஊருக்குள்ளும் பெருங்கியாதி.

அலக்சாந்தனோ ஏதோ இயக்கம், அணி, சமுதாயம், சமத்துவம், தொழிலாளித்துவம் என்றெல்லாம் அம்மான் கேள்விப்படாத எதையெதையெல்லாமோ வரித்துக் கொண்டு, அம்மானின் இலட்சியத்திற்கே— ஊர்த் தொண்டு சமயத் தொண்டு புரியும் இலட்சியத்திற்கே எதிரியாகி— சவாலாக மல்லுக்கட்டி நிற்கிறான். அது மட்டுமா? அவனுக்குப் பின்னால் ஓர் இயக்க சக்தியான தொழிலாளர் விவசாயக் கூட்டமே பெருகி விட்டது.

இது அம்மான் புகழுக்கு இழுக்கு. அவர் வரித்துக் கொண்ட பிரிட்டிஷ் சாம்ராஜ்ய மன்னர்களுக்கே அவமானம்.

ஆத்திரம் வராதா?

அலக்சாந்தனுக்குப் பின்னால் படைதிரளும் தொழிலாளர் கூட்டத்தைக் காண்கிறபோது, 'நாக்கை இழுத்துச் செத்தால் என்ன?' என்றுகூட அம்மான் தன்னுள் அழுந்துவார்.

இப்பவும் அதே அழுந்தல்— அதே புகைச்சல். இவர் மனசுள் இப்போது சுரீரித்தது.

''.. தொழிலாள வர்க்கமே சிறந்த போராட்ட சக்தி. அவர்களே அப்பழுக்கற்ற உறுதியுடன் முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடத் தகுதி வாய்ந்தவர்கள். தொழிலாள வர்க்கமே முதலாளித்துவத்தின் சுரண்டற்பிடியில் நேரடியாகச் சிக்கித் தவிக்கிறது தொழிலாளர்கள் தங்கள் வீறான கரங்களை ஒரு தடவை ஒன்றாக உயர்த்தினால் அடுத்த கணமே முதலாளித்துவத்தின் விலங்கு பொடிப்பொடியாகி விடும். முதலாளித்துவத்தின் சுரண்டற் கோட்டைகள் தவிடுபொடியாகாத வரை மனித குலத்துக்கு மீட்சி இல்லை...''

'தொழிலாள வர்க்கம்' என்றாலே அம்மான், 'நரகத்தின் பிசாசுகள்' என்று கருதுபவர். அப்படிப்பட்ட அம்மானால் அவன் போக்கைச் சகித்துக் கொண்டு சும்மா இருக்க முடியவில்லை.

''முதலாளியள் இல்லாமல் தொழிலாளியள் எப்பிடிச் சீவிக்கிறது? இந்த மடையனுக்கு இது தெரியுமா?'' என்றும் தன் பாட்டில் பொரிவார்.

'முந்தாநாள் பேஞ்ச மழைக்கு நேத்து முளைச்சகாளான் தனக்கும் ஏதேன் தெரியுமெண்டு ஒருவித எடுப்பு. தொழிலாளர்... முற்போக்கு... கண்டறியாத முற்போக்கும் மண்ணாங்கட்டியும். இப்பிடிப்பட்டவங்கள்தான் அமைதியாகச் சும்மா கிடக்கிற ஊரைக் கிண்டி விடுறவங்கள்?

அம்மான் கூற்றிலும் ஒருவகை உண்மையுண்டு. அவரின் 'ஆசைநாயகி'யோடு அவர் கொண்ட உறவை இவன் ஒருநாள் அவர் மூதாவில்—அதுவும் 'பப்ளிக்'கில் கண்டித்தே விட்டான். அன்று, அவருக்குப் பிடித்த அட்டமத்துச்சனியன் அவன்மேல் சீறியது

'ஊரைக் குழப்புகிற பயங்கரப் பிறவி' என்ற பிரசாரத்தில் அம்மான் இறங்கியே விட்டார்.

ஒரு களத்தில் இரு கன்னைப்போர் களை கட்டி விட்டது.

அம்மானைத் தட்டிக் கேட்க ஆளில்லை. அவர் மூளை 'சதி' என்ற சகதியில் குதித்தது! அவன் மீது அதனை மெல்லப் பாய்ச்சத் தருணம் பார்த்துக் கொண்டே யிருந்தார்.

இதே சிந்தனையில் ஆழ்ந்துபோன அவர் மனத் தாக்கம் அவர் சொந்த வாழ்க்கைக்கே ஒரு சவாலாகி விட்டது.

'அலக்சாந்தனை ஊருக்க தலையெடுக்க விடக் கூடாது.'

விடிந்து பொழுது உறையுமட்டும் அவன் உருவமே அவர் கண்ணில் விஸ்வரூபமெடுக்கிறது.

'இந்தப் புளுக்கப்பயலை இப்பிடியே நெடுக விட்டால், பிறகு எக்கணம் என்னோட நேரடியாக மோதி என்ர மானத்தையும் கடைசியில வித்துப் போடுவான். அதுக்கிடையில ஆளை மட்டந்தட்ட வேணும்.'

அம்மான் சிங்கத்துக்கெதிரே நிற்கும் 'சேர்க்கஸ்' காரன் போல் நைந்து சிரித்தார். நெஞ்சு 'படக்படக்' கென்று குதறியது.

திண்ணையில் வந்து மெதுவாகக் குந்தினார்.

'அவனை மடக்க வழி என்ன?'

மண்டை பிளக்க யோசிக்கலானார்.

அப்போது அவர் கண்ணில் ஓர் அபூர்வமான காட்சி தெரிந்தது. நன்றாக உற்றுப் பார்த்தார்.

அடுக்களை வாசலோரம் றோசம்மா ஒரு காலை நீட்டி மறுகாலை மடக்கித் தாக்கற இருந்து கொண்டு, எஞ்சிய இறைச்சிக் கறிச் சட்டியில் பழஞ்சோற்றைப் போட்டுக் குழைத்துத் திரணையாக உருட்டி வாய்க்குள் திணித்துக் கொண்டிருந்தாள்.

முற்றத்து வேப்பங்கொப்பில் கரைந்து கொண்டிருந்த அண்டங்காகம் ஒன்று அவள் தலைக்கு மேல் இறாஞ்சி வந்து கதவில் பதுங்கியிருந்து கத்தியது.

'காலங்காத்தால காகங் கரைந்தால் வீட்டுக்குச் சனியன்' என்பது றோசம்மாவின் வாகடம்.

அவளுக்கு மனசில எழுந்த அழல் உடல் எல்லாம் புழுங்கியது. சீலம்பாய் கணியம் 'புறுபுறு'க்கலானாள்:

''ஆ... கொள்ளையில போவான்ர காகம் காலங் காத்தால வந்து வாய்க்க பருக்கையும் வைக்க விடாதாம். ஒரு கண்ட சீருக்குக் கரையுதே... சீ, சனியன்... சூய் சூய், காய் காய்...''

பனை ஓலைச் சருகு ஒன்றை இருக்கி எடுத்து உதறித் துரத்தினாள்.

காகம் பறக்கிறவாக்கில் சொல்லி வைத்தமாதிரி அவள் சாப்பிட்ட சட்டிக்குள் 'பொழிச்' சென்று எச்சமிட்டு விட்டுப் பனைக் கூடலுக்குள் மறைந்து போயிற்று.

அவளுக்கு அழுகை வருமாப் போலிருந்தது. வெப்பிசாரத்தோடு சோற்றுச் சட்டியைக் குனிந்து பார்த்தாள்.

பொழிச்சிட்ட காக எச்சம் பழஞ்சோற்றுக்குள் சளித்துக் குமிழ்த்துக் கிடந்தது

அவள வயிறு குமட்டியது. குடலைப் புரட்டிக் கொண்டு வருவதுபோல் ஓங்காளம் திணறிற்று.

''உஞ்சு... உஞ்சு...'' என்று நாயைக் கூப்பிட்டாள்.

அது நாக்கைச் சுருட்டி வளைத்து வாலை ஆட்டிக் கொண்டு அவள் முன்னே வந்து முனங்கியது.

அவள் ஒரு சட்டிச் சோற்றையும் அப்படியே திரட்டி ஒரு தடுக்கில் வைத்தாள்.

அது மூசிமூசி... முகர்ந்து நுகர்ந்து நக்கிய போதும் வாய்க்குள் அடங்க எடுத்து விழுங்குவதாயில்லை. கடைசியில் நாய் சோற்றைக் கவ்விக்கூடப் பார்க்காமலே முனகிக் கொண்டு திரும்பி விட்டது.

'எச்சில் பட்டதை நாயும் தின்னாது...'

ராயப்பு அம்மான் தீர்மானித்துக் கொண்டார். அவர் மனசு அணில் போல் தாவியது.

'சவுந்தரி...'

'றோசம்மாவும் சோறும்....'

'சோற்றில் அண்டங்காகம் போட்ட எச்சம்...'

'எச்சம் பட்டதை நாய் முகர்ந்தும் பார்க்கவில்லை...

'சவுந்தரியை எச்சிற்படுத்தி விட்டால்... பிறகு அலச்சாந்தன் அவளை ஏறெடுத்தும் பார்க்கமாட்டான்...

'இவனை ஒழித்துக்கட்ட, அவளை எச்சமிட வேணும்'

'சவுந்தரி எச்சிற் பண்டமானால், பிறகு அவன் ஆட்டமெல்லாம் நிக்கும்'

'வழி......?'

இந்த விதமான நினைவுகளில் அமுங்கிப்போன அம்மான் திண்ணையிலிருந்து எழுந்தபோது, பகல் பதினொரு மணி.

அவர் முகத்தில் புதிய களை கொட்டியது. அதற்கேற்ற வீறு அவர் உடம்பில் அப்போது காணப் பட்டது.

'இண்டைக்கு வாய்ப்பில்லாட்டி, நாளைக்கெண்டா லும் சவுந்தரியை ஒரு முறை தனியச் சந்திச்சு அலக்சாந்தனைப் பற்றி விளாசித் தள்ளினால், அவள் மனம் பேதலிக்கும். அதுக்குப் பிறகு...?'

மனசில் முதிர்ந்த விபரீத எண்ணங்களைப் பெரும் இலட்சிய வேட்கையாக வரித்துக் கொண்ட அம்மான், மீசையில் கை போட்டு முறுக்கியவராக தன்னாரவாரம் எங்கோ சடுதியில் கிளம்பலானார்.

அவர் உடல் அயர்ந்து உறங்காத நாளும் அதுதான்.

கும்பிடப் போகிற தெய்வம் யாருக்கும் லேசில் குறுக்கே வருவதில்லை; அம்மான் கொடுத்து வைத்தவர். அவரைத் தேடி அந்தத் தெய்வம் அவர் எதிரிலே குடுமியோடு வந்து நிற்கிறது. உள்ளூர்ப் பிரமுகர்— கோயில் தொண்டர் - செலவு சித்தாயம் கணக்கு வழக்கு அதிகாரத் தலைவர் அம்மானுக்குத் தரிசனமாகினார்.

''என்ன ராயப்பண்ணை, கோயில் முகாமைக் காரர் உங்களைக் கையோட கூட்டிக் கொண்டு வரட்டாமல்லே'' என்றார் அவசரமாக.

தொண்டருடன் எதிர் வீட்டுச் சுவாம்பிள்ளையின் சற்புத்திரன் — சவுந்தரியின் தம்பி ஆனந்தன், ஒரு சேங்கிணி அலுகோசுபோல் பக்கத்தே நிற்பதை அம்மான் கவனித்துக் கொண்டார்.

''தம்பி ஆனந்தம், என்ன சங்கதி?''

அம்மான், ஆனந்தனிடமே விசாரித்தார்.

'அடிகோலின சங்கதி வாச்சுப் போச்சு. இதைச் சாட்டாக வச்சுக்கொண்டு இந்த ஊரையே ஆட்டலாம்; சவுந்தரியையும் மாட்டலாம்'

அம்மான் தனக்குள் திட்டமிடலானார்.

அவர்கள் கண்கள் ஆனந்தன் பதிலை எதிர்பார்த்து விழித்தன.

"போன கிழமை நடந்து முடிஞ்ச கோயில் பெருநாள் வரவுசிலவு கணக்குப் பாக்கவேணுமாம். அதுக்குப் பாத்தியமாக இந்த வரியம் உங்களைத்தான் பொறுப்பு எடுக்கத் தெரியப் போகினம். அதுக்குத்தான் கையோட கூட்டியரட்டாம்''

'கணக்குப் பாப்பன், கணக்கும் விடுவன். இப்ப கணக்குத்தான் விட வேணும். கோயிலடியில கூட்ட மெண்டால் வீட்டில பெரியவே இருக்காயினம் போனால் சவுந்தரியைச் சாடைமாடையாக...'

அம்மானின் குயுக்தி மூளை செப்பமாக வேலை செய்தது.

''தம்பி, கொப்பர் வீட்டில இருக்கிறாரோ கோயிலடிக்குப் போட்டாரோ?''

''வீட்டிலதான் நிக்கிறார்.''

'ஓ..., அப்ப, இப்ப போனால் கரியம் சித்தியாகாது' என்றது அவர் மனம்.

''நீங்க போங்கோ. அஞ்சு நிமிட்டில கோயிலடிக்கு வாறேன்.''

ஆனந்தன் திரும்பினான்.

அம்மான் ஏதோ யோசித்தவராகச் சைகை காட்டி அழைத்தார்.

''டே தம்பி, இஞ்ச கிட்ட வா.''

'என்ன சங்கதி?' என்று கேட்பது போல் அவர் முகத்தை ஏறெடுத்துப் பார்த்தான்.

''கொக்கா ஏன் போனநாயித்துக்கிழமை கோயிலுக்கு வரேல்ல?''

''சுகமில்லாமலிருந்தவ...''

''ஓ...அப்பிடியே சங்கதி? அது கிடக்க, கொக்கா அவன் அலக்சாந்தனைக் கட்டப்போறதெண்டு ஊரில கதை உலாவுது. உண்மையே?''

''ஓம்''

''சிக், அந்த விடுதாவாலியையோ?''

''அது என்னவோ எனக்குத் தெரியாது. அக்கா அவரைத்தான் கட்டப்போறாவாம்.''

''அவள் ஒரு விசரி. எக்கணம் அவலப்படப்போறாள்''

ஆனந்தன் ஒன்றும் கூறாமல் நின்றான். ஏதோ யோசனையாக வந்தது.

'அக்காவில இம்மட்டு அக்கறையாக இவர் ஏன் கேக்கிறார்?'

அவன் மனசில் சலிப்புத் தட்டிற்று.

'நான் பறைஞ்ச விசயத்தை இவன் தமக்கைக்கு எக்கணம் சொல்லிக்கில்லிப் போடுவானோ?'

இப்படி நினைத்த மாத்திரத்தில் அம்மான் முகம் சற்று வெளுறியது.

''சரி தம்பி, நீ போ.''

அவன் திரும்பி நடந்தான்.

'அக்காவைப் பற்றி ஏன் கேட்டியளெண்டு அம்மானிட்டக் கேக்காமல் வந்திட்டனே?' என்று ஆனந்தனும், 'நான் பறஞ்சதுகளைக் கொக்கா அறிஞ்சு ஏதேன் கதைச்சால் அதை எனக்கு வந்து தெரிவி'யெண்டு சொல்லிவிட்டிருக்கலாமே?' என்று அம்மானும், தத்தமக்குள் கவலைப்பட்டுக் கொண்டே பிரிந்தனர்.

அப்போது நேரம் செக்கலாகிவிட்டது.

ராயப்பருக்கு இப்போது மதியம் திரும்புகிற பருவம். என்றாலும், அம்மான் இப்பவும் முதுமை கொள்ளாத இளங்கோலத்தில் 'மொழுமொழு'வென்று இருக்கிறார். தேகவாகு கிழமானாலும் முக வாளிப்பில் அம்மான் குமரி எடுப்பு. ஆள் நல்லெண்ணெய்க் கறுவல். வாட்ட சாட்டமாகத் திரண்ட சரீரம். அவரை உற்றுப் பார்த்தால் காலஞ்சென்ற சண்டியன் சரவணமுத்தர் நினைவுக்கு வருவார். காலப்போக்கில் இவர் கப்பங்கேட்டு யாழ்ப் பாணக் கடை முதலாளிகளை அன்றாடம் கலக்கியடித்த அழுக்கடையராகவோ, அநியாயத்தை எதிர்த்து ஆனைக் கோட்டையை உலுப்பியடித்த சுத்த வீரன் சிங்கரா சாவாகவோ தன்னை உவமித்துக் கொண்டார்.

முச்சந்தி வம்பு, சேவற் சண்டை, சின்னமேளக் கச்சேரி, ரேகைச் சாத்திரம், பந்தடி, வாசிகசாலை, நாடகக் கொட்டகை, சையிக்கிள் ரேஸ்-என்கின்ற பெருங் 'கலாசார' ஆசாரங்களில் ஏதோ ஒரு வகையில் பங்கு கொள்ளாவிடில் அம்மானுக்குப் பொச்சம் தீராது.

தாய்க்கிழவி பாவம் இந்தத் தள்ளாத வயதிலும் புகழ் பெற்ற இந்தப் புத்திரனுக்காக அம்மானுக்காகத் தன் இதயத்தைச் சிலுவையில் ஏற்றி வைத்திருக்கிறாள்.

'இவன் ஒரு தொழில் துறையில்லாமல் என்ர சம்பாத்தியத்தில் இப்பவும் திண்டு கொண்டு சோக்குப்

பண்ணித் திரியிறான். இவனுக்கு இந்தக் கோயிலில யெண்டாலும் ஏதேன் ஒரு பொறுப்பைக் குடுத்தால் அந்தப் பிராக்கில கிடப்பான்...'

அம்மானைப் பற்றி பெத்தாச்சி ஏலவே, கோயிற் கட்டளைச் சுவாமியிடம் சொல்லி வைத்த பிரகாரம், கோயிற் பொறுப்பு இந்தக் கோசு அம்மானுக்கே கொடுபட்டிருக்கிறது.

இனி அம்மான் கோயில் தொண்டர்; ஊர்த் தொண்டர்; தேவ தொண்டர்—சமூகசேவையாளர்.

கோயிற் பொறுப்பு எடுத்துத் தேவ தொண்டரான யின்பு ராயப்பரை ஊர் விசுவாசிகள் 'அம்மான்' என்று தேவபந்த உரிமையோடு அழைக்கிறார்கள்.

அம்மானோடு அன்று தொட்டுத் தன்னை ஒரு 'கவுண்மேன் ஏஜண்ட்'டாக எண்ணிக்கொண்டு 'சேவை' செய்யலானார். கேட்பானேன், நிர்வாகம் அவர் பொறுப்பு. ஊருக்கும் முன்னோடி அவரே இப்பொழுது ஊருக்கும் உபதேசி.

உபதேசியென்றால் சும்மாவா? சயற்கட்டு விவகாரம் தொட்டு வாழத் துடிக்கின்ற 'குமர்களைக் கரைசேர்க் கிறது'வரை அவரே இங்கே சகலதுக்கும் கர்த்தாவாக விளங்கி வருகிறார்.

காலகெதியில் அவர் நாக்கு அசைந்தால் நாடு அசையும், வாக்கு உதிர்ந்தால் வாழ்க்கை உயரும்.

இப்படியாக ஊருக்கு உபதேசியாய், கோயிலுக்குத் தொண்டராய்ச் சீரும் சிறப்புமாகப் பெருங்கியாதியோடு வாழ்ந்து வருபவர் அம்மான்.

சகட யோகம் சர்வ நிவாரணம். இந்தச் சந்தர்ப் பத்தில்தான் அலக்சாந்தன் அம்மானுடன் மல்லுக் கட்டி நிற்கிறான்.

இந்தக் காலக்கட்டத்தில்தான் சவுந்தரியில்அம்மானின் இதய நாதம் பரீட்சார்த்தமாக இசை மீட்கத் தொடங்கியது.

'எச்சில் பண்டத்தை நாயும் தின்னாது'

காமம் தலைக்கேறினால் மூளை கலங்கும் என்பதை இன்றுதான் அம்மான் அனுபவ மூலமாக உணர்கிறார்.

அவர் உடம்பின் நரம்புகள் முறுக்கேறிச் சிலிர்க்கின்றன. சர்வாங்கமும் அனல் கக்கிப் புளுங்குகிறது. நெஞ்சுள் ஏதோ பாரச் சுமை.

'சட்'டென இருக்கை விட்டெழுந்து கண்ணாடியை எடுத்து முகத்தைப் பக்குவமாகப் பார்த்தார்.

வழுக்கல் மண்டை கண்ணாடியில் 'பளிச்'சிட்டது.

கன்னத்துச் சோணைகளில் கெம்பிய சொற்ப நரை மயிர்களை இடுங்கி, அடர்ந்த கருமயிரைத் தாவ விட்டுத் தன்னாரவாரம் தனக்குள் சிரித்தார். வெற்றிலையைச் சதுரமாகக் கிள்ளி எடுத்துக் கன்னச் சோணை முனையில் அப்பிக் கொண்டு சவுந்தரி வீட்டுக்குப் புறப்பட அடுக்குப் பண்ணுகையில்—வாசற்படி தாண்டித் தெருப்படலை திறந்து அம்மான் வீதியில் இறங்கும்போது பல்லி சொன்னமாதிரி அவர் காதில் கோயில் ஆராதனை மணி 'கணீ'ரித்துக் கேட்டது

'கோயில்மணி நல்ல சகுனம்; போற காரியம் சித்தியாகும்.'

தன்னாட்டம் அருக்கூட்டிக் கொண்டு, மேல் நோக்கி வானத்தைப் பார்த்தபடி, நெஞ்சில் கை வைத்து, 'யேசுவே என்னை ரட்சியும்' என்று முணுமுணுத்த அம்மான், 'பிதா சுதன் இஸ்பிரீத்துச் சாந்து' என முனகி, நெஞ்சில ஒரு சிலுவை பாவக் கீறினார்.

செக்கல் நேரம் முடுகியது. பொழுது கருகிப் படுவானுக்குள் இறங்கிப் பனைக்கூடலுக்குள் மறைந்து விட்டது.

கிட்டத்தட்ட மணி ஆறு ஆறேகால்:

'சவுந்தரி ஒருவேளை பிராத்தனைக்காகக் கோயிலுக்குப் போயிருந்தால்...?'

'அய்மிச்சம்' எழுந்ததும் அம்மான் நடையில் தானாக ஒரு வேகம் தட்டியது, பிசாசு மாதிரி நாய்ப் பாய்ச்சலில் வலு கெதியாக அம்மான் விரைந்தார்.

வந்தாயிற்று.

தெருவில்— சங்கடம்படலைக்கருகில் கெந்து கால் ஊன்றிப் பெருவிரல்களில் நின்று, உள்ளே எட்டிப் பார்த்தார்,

எந்த அசுமாற்றத்தையும் காணவில்லை.

''புள்ளோய்...?''

நடுங்கும் குரல் வைத்துக் கேருந்தொனியில் அவர் அழைப்பு இதமாக வெளியேறியது.

ஒரு சந்தடியும் இருக்கவில்லை.

'இண்டைக்கு வீண் எடுப்புத்தான்...'

'புள்ள, சவுந்தரி...?'

பதில் வரக் காணோம்.

துரு துருத்த குரல் தொண்டைக்குள்ளால் மீண்டு வரப் பஞ்சிப்பட்டது,

வெளிறி உப்பிய முகத்தைச் சால்வையால் துடைத்துக் கொண்டு, ஓசைப்படாமல் படலையை மெல்லத் திறந்தார்.

வீடு வெறிச்சோடிக்கிடந்தது. ஒரு 'மனு'வையுங் காணவில்லை.

நாறல் மீன் வெடிலை முகர்கிற கள்ளப்பூனை மாதிரித் 'திருதிரு'வென்று முழிசிக் கொண்டு மிக மெதுவாக வளவுக்குள்ளே கால் வைத்தார்.

'ஒரு 'சிலமனை'யும் காணேல்லியே..?'

பட்டாசு வெடித்த மாதிரி நெஞ்சு 'திடுக்திடுக்'கென்று சுடுக்கிற்று.

முற்றம்வரை சென்று அக்கம் பக்கம் பாத்த வண்ணம் அவல கோலத்தில் கேருந்தொனியில் குரல் வைத்தார்.

''புள்ள சவுந்தரி, வீட்டில ஆர் இருக்கிறது?''

''ஏன்... உதாருது?''

சத்த வெடியா, கிளிக்குரலா? அவரால் மட்டுக்கட்ட முடியவில்லை. சற்றுவேளை நிலை குத்து மலைத்து நின்றார்.

வீட்டுக்குள்ளேயிருந்து 'கதவைச் சடார்' ரென்று திறந்து கொண்டு வாசற்படி வரை வந்து கால் முடக்கி நின்று வெளியே எட்டிப் பார்த்துச் சற்றுச் சீற்றமாக விசாரித்தாள் சவுந்தரி.

அவள் மென் குரலில் சொக்கிய அம்மான், இனிய ஒரு நாதத்தை ரசித்து அனுபவிக்கின்ற வித்துவ பாவத்தில் ஒரு கணம் மூழ்கி நின்றார்.

நெஞ்சுப் பதற்றம் சற்றுக் குறைந்தது. நிஷ்டை கலைந்தவராக அம்மான் சவுந்தரியை ஒரு பாட்டம் நோட்டம் விட்டார்.

தூங்கி வழிந்து 'பளபள'க்கின்ற இரட்டைப் பின்னல்கள், துன்னுகின்ற இளம் திட்டுகளில் நெளிந்து நர்த்தகித்தன. நடு உச்சி பிரித்த இரு கன்னைச் சுருள் மயிர்

அவள் வட்ட முகத்துக்கு எடுப்பாக இருந்ததை அம்மான் அவதானித்த போது, அவருக்கு அங்கு நிலை கொள்ள முடியவில்லை. அம்மான் கண்கள் இந்த அற்புதமான ரம்மியக் காட்சியைத் துழாவி அவளையே அரித்து ஊனின. சர்வாங்கம் தகித்து ஒடுங்கியது. ஞானஸ்நானம் பெற்றுத் தபசு பூண்ட கோலத்தில் அம்மான் அசையாமல் வாசலில் நின்றார்.

ஒரே மௌனம். அவரின் இதய நாளங்கள் முற்றாக ஸ்தம்பித்து விட்டன. வாய் பிளக்க மரமாக விறைத்துப் போய் நின்ற அம்மான், அவள் நெஞ்சு முனைகளையே கண்ணூனிப் பார்த்தார்.

'பிறந்தவிடம் தேடுதே பேடை மன நெஞ்சம்
கறந்தவிடம் நாடுதே கண்.'

என்ற பட்டினத்தார் பாடல் நினைவிற்கு வந்தது.

அவர் மனசு அவரையே தீண்டிய மயக்கத்தில் திணறியது.

'உண்மையில் பெண் ஒரு சாகசக்காரி. தாயின் பாசமும், சகோதர வாஞ்சையும், தாசியின் ஸ்பரிசமும் சங்கமித்த சுரங்கம். இவற்றைத் தனதாக்கிக் கொண்ட பெண் ஓர் ஆடவன் முன் தோன்றும் போது அவனுக்குப் பக்தியல்ல, பித்துத்தான் பிடிக்கும்.'

அம்மான் சிந்தனை இத்தனை தூரம் போய்க் கொண்டிருந்தது. அப்பவே அவருக்குண்டான மயக்கம் மூடு சன்னியாட்டம் தொட்டுக் கொண்டது

'வதனமோ சந்திர பிம்பமோ,
மலர்ந்த சரோஜமோ?'

'சிவகவி'யில் தியாகராஜபாகவதர் பாடிய பாட்டை அவர் மனசு அப்போது மீட்டது.

'சவுந்தரி'

கற்கண்டை வாயிற்போட்டு அப்படியே கடித்து நொறுக்கிச் சப்புகின்ற அங்கலாய்ப்போடு அம்மான் அவனையே இமை சொடுக்காமல் நோக்கினார்.

''ஏன். ஆரைத் தேடுறியள்?''

'அ... நான் ஆரைத் தேடினேன், எவரைக் கூப்பிட்டேன்?'

மின்னல் அடித்த திடுக்காட்டம். அம்மானுக்கு, 'இவள் என்ன கேட்டாள்?' என்றும் புலனாகவில்லை.

அவர் தனக்குள் ஒரு கணம் வாய்க்குள் புலம்பினார்.

''என்ன பேசுறியளில்லை?''

''ஹி... ஹி... ஹி...''

அம்மானின் முன் வாய்ப் பற்களே அவர் இளிப்பி னூடாக அவர் பதில் போல் வந்தன,

''ஏன் நிக்கிறியள்; உதில இருங்கோ.''

இது போதும். அம்மான் உள்ளமும் உடலும் அலை சுக்கிக் கெந்தகித்தன. தேகத்தில் ஏறிய அனற் கொதிப் போடு சவுந்தரியைக் கண்ணூனிப் பார்த்தார்.

ஆவலோடு ரசித்து வாசித்து இடையில் நிறுத்தியதைப் புலப்படுத்துவது போல் சவுந்தரியின் ஆள்காட்டி விரல், 'நவமணி' என்ற இலக்கிய சஞ்சிகை ஒன்றைப் பாதியாக விரித்தபடி, ஒரு மெழுகுவர்த்தியாகச் சஞ்சிகையினுள் துழாவி வளைந்திருந்தது.

'அது கெட்டுது போ. அவன் அலக்சாந்தனுக்குப் பிடிச்ச இலக்கியப் பயித்தியம் இந்தப் பொடிச்சிக்கும் தொத்தியிட்டுது.'

மனசுக்குள்ளே சவுந்தரியைக் கறுவிக் கொண்டு, அவளில் பதிய வைத்த கண்களை மீட்காமல், ''சரி புள்ள, நான் இந்தப் பலகையில் இருக்கிறான்'' என்று சொன்ன அம்மான் 'சளுக்'கென்று குந்தினார்.

'காயாத கானகத்தே நின்றுலாவும் நற்காரிகையே'யைக் கிட்டப்பாவைப் போல் பாட அவர் மனசு 'துருதுரு'த் தது; அடக்கிக் கொண்டார்.

முகட்டு வளையில் பல்லி ஒன்று பூச்சியைத் துரத் தியது. முற்றத்தில் கோழி எதையோ கிளறிக் கொண்டிருக் கிறது. எதிரே சேவல் ஒன்று சிறகடித்துக் கொள்கிறது.

'சூய்...காய்...'

தலைவாசல் வரை வந்து சவுந்தரி கோழியைக் கலைத்த போது... 'ம்'என்ற பெருமூச்சு ஒன்று அம்மான் நெஞ்சில் நீவி எழுந்தது.

''அது கிடக்க, கொப்பர் எங்க போட்டார்?''

''யாழ்ப்பாணம் பெரிய கடைக்குச் சாமான் வேண்டப் போட்டார்.''

உச்சியில் பல்லி சொல்லிற்று.

'உச்சத்திற் பல்லி அச்சமில்லை' எனறு மனசுள திருப்தி கொண்டார்.

''அப்ப, கோச்சி?''

''அவ அடி வளவுக்க இருந்து கிடுகு பின்னுறா''

''ம்...''

''ஏன், நுச்சியைச் கூப்பிடுறதோ?''

' வேண்டாம், சும்மா கேட்டனான்.''

நிலையைத் தாண்டி உள்ளே சென்று வெளியே பார்த்தபடி நின்ற சவுந்தரி, அறைக்குள்ளிருந்து சஞ்சிகையை வாசிப்பதா, வீட்டுக்கு வந்த மனுஷனுக்கு வெற்றிலை பாக்குத் தட்டம் குடுத்து உபசரிக்கவா என்றெல்லாம் யோசித்துத் தடுமாறிக் கொண்டே, எதையுமே செய்யாமல் அப்படியே நினைவிழந்து முழிசினாள்.

அம்மானுக்கு அவள் நிலை வள்ளீசாகப் புரிந்து விட்டது. இருந்தும் அவர் அப்பவும் கனிவோடு அவளையே கூர்ந்து பார்த்தார்.

அவர் தொண்டையில் வழிந்த ஊனம் வாயில் குமிழ்த்து அவருள் உறைந்தது.

முக்கோணக் கருந்திலகம், நட்சத்திரம் போல் அவள் நெற்றியில் மின்னியது வாசலை மேவிச் சரீரத்து வந்த பூங்காற்று, அவள் கருங்கூந்தலில் தாவியபோது கன்னத்து மயிர்ச் சுருள்கள் சிலிர்த்தன. காதுக் கமண்டலங்கள் குதறித் தெறித்தன. விரிந்த மலரிதழ்களின் விளிம்பாக அவளின் சொண்டுக்குமிழ்கள் குவிந்துவாளித்துக்கிடந்தன. மதாளித்த பிள்ளைக்கற்றாளைச் சதைப்பிடிப்பாக அவள் அதரச் சோங்குகள் கோழிமுட்டைக் கணியம் வட்டமாகப் பரந்து தக்காளிப்பழங்கள் போன்றிருந்தன.

'தக்காளிப்பழங்கள்—கொவ்வைப் பழங்கள்—கொய்யாப் பழங்கள்...'

அம்மான் மனசுள்ளே தீட்டிய ஓவியங்கள் வர்ணனைகள் அவள் அங்கமெல்லாம் வியாபித்துக் கிடந்தன. கண்கள் மேய்ச்சலை நீக்கவில்லை தானே தன்னுள் மயங்கி வெதும்பினார். தொண்டைக்குழியை 'முடுக்'கிட்ட உமிழ் நீரின் ஊனத்தை உள்வாங்கி ஒரு பாட்டம் மீட்டார்.

'கன்னங்களைக் கிள்ளி....கடிச்சுத் தீண்டு...' ஆசைப் படுவது போல் இதெல்லாம் உடனே நினைத்த மாத்திரத்தில் கை கூடுகிற காரியமாக இருந்தால் பெண்கள் பட்டி

மாடுகளாகத்தான் சீவிப்பார்கள். அவர் நினைவின் - ஆசைகளின் பேரிரைச்சல் காதுகளை அடைத்தது; கண்களில் பஞ்சு தாவிற்று.

அப்போது ஒரு பெருமூச்சுக் கிளர்ந்து எழுந்தது.

நேரம் செக்கலைத் தாண்டிவிட்டது. நிலம் நன்றாக இருட்டிக் கொண்டு வந்தது.

அம்மான் இதயம் தந்தி அறுந்த வீணையாட்டம் 'ணங்' கிட்டது. சமாளித்துக்கொண்டு விஷயத்தில் வாய், வைத்தார்.

''கையில உதென்ன புத்தகம்?''

"நவமணி"

"நவமணியெண்டா?''

''இலக்கிய சஞ்சிகை''

அம்மானுக்குக் கை கொட்டிச் சிரிக்கவேணும் போலிருந்தது. சிரிக்கவில்லை. முகத்தில் அநாயாச அசட்டை.

''மெத்தச் சந்தோஷம்.... இந்தக் கதைப் புத்தகங்கள் படிக்கிற பயித்தியம் உமக்கும் பிடிச்சிட்டுதாக்கும். கதைப் பயித்தியம், கள்ளுப் பயித்தியம், காதல் பயித்தியம் எல்லாம் ஒண்டுதான். இனிமேல் உமக்குக் கதை படிக்கிற பயித்தியம் போம், கதைகள் எழுதிற பயித்தியம் வரலாம்... அதாவது, பெரிய எழுத்தாளராயும் வரலாம்......''

அம்மான் யாரை மனத்தில் வைத்து இப்படிக் கிண்டல் பண்ணி 'அடி' போடுகிறார் என்று புரிந்து கொண்ட சவுந்தரி தனக்குள் சினந்து கொண்டாள்.

எழுத்தாளன் என்றால் நெஷனல் சேட்டு, வேட்டி சால்வை, காலில் செருப்பு, கையில் ஒரு தோற்பை, சாடையான சிலுப்பா, சந்தனப் பொட்டு, வாய் ததும்பத் தாம்

பூலம், கழுத்தில் ஒரு வெந்தயச் சங்கிலி, இடது கையில் ஏதும் ஒரு மட்டைக்கலர்ப் புத்தகம், பொக்கற்றில் ஒரு பவுண்டன் பெண்—இந்த வகையறாக்களைக் கொண்ட கலாசாரத் தோற்றத்தோடு உலாவுவதன் மொத்த உருவ மாயிருந்தாலே ஒரு கணிப்பும் மவுசும் உண்டு என்பது அம்மான் எண்ணம்,

ஆனால், இப்போ பார்த்தால் கொடிச்சுவால் பேய் களாட்டம் ஊர் சுற்றித் திரிகிற வெங்கணாந்திகளும் எழுத்தாளர் கவிஞர்களென்று லேபல் குத்திக் கொண்டு விளம்பரங்காவிகளாகத் திரிவதை அம்மான் அவதானித் துக் கொண்டு வந்தபடியால் அம்மானுக்கு எழுத்தாளர் என்றாலே ஓர் அசூசை.

'குறைந்தது ஒரு கல்லூரி அல்லது யூனிவர்சிட்டிப் படிகள் ஏறிப் 'பட்டம்' தட்ட வேண்டாமா?' என்ற எண்ணம்.

'மனித குலத்தின் மூளை கலாசாலைப் பட்டம் என்ற அந்த வட்டத்துக்குள் விளைகிறது' என்பதை வலு சுளு வாகக் கண்டுபிடித்த பெரும் மேதாவிகளைப் போல் அம்மான் தன்னையும் வரித்துக் கொண்டு அப்படிக் கிண்டல் செய்ததை அவதானித்த சவுந்தரிக்கு உண்மையில் கோபம் தலைக்கேறியது,

'இந்த ஆளுக்குச் செருப்பால் அடித்தால் என்ன? என்று கூட ஆத்திரப்பட்டாள். என்றாலும், அவள் எந்தக் காழ்ப்புணர்வு பாவத்தையும் காட்டிக் கொள் ளாமல் அவர் எதிரே ஒரு மௌன விரதகாரி போலிருந் தாள்.

சவுந்தரிக்குச் சினம் வந்துவிட்டதை அவள் முகச் சாயலில் உணர்ந்து கொண்ட அம்மான், 'நக்கல்' பண்ணு வதை நிறுத்திவிட்டு, அவள் கையில் வைத்திருந்த இலக்கிய சஞ்சிகையை நூதனமாகப் பார்த்தார்.

அவரின் இயல்பான குணதோஷம் கேலியாகவே பட்டது.

"உது நவமணியோ நவமணமோ?"

அவளும் இறுக்கமாகப் பதில் சொன்னாள்.

"இது இலக்கிய சஞ்சிகையெண்டு அப்பவே சொன்னேன் தானே?"

"ஓ......அப்பிடியே? சரி சரி......"

"ஏன் உப்பிடி 'விடுத்துவிடுத்து'க் கேக்கிறியள்?"

அவள் அடுத்துக் கேட்டபோது அவர் எல்லாம் தெரிந்தவர் கணக்காக அநாயாசமாகச் சிரித்தார்.

"இந்தக் காலத்தில் இலக்கியம், இயக்கம், இலட்சியம் அது இதுவெண்டு சொல்லிச் சில சில்லறைப் பொடியங்கள் தாங்களும் கெட்டு அடுத்தவனையும் கெடுத்துக் கடைசியா ஊரவனையும் 'சூய்'க்காட்டிக் குழப்புறாங்கள்..."

'அப்பிடி இந்த ஊருக்க என்ன கெடுதல் நடந்திட்டுது?"

"நடந்திட்டுதோ? இதுவும் ஒரு கண்டறியாத கேள்விதான். ஏன் அங்க இங்க போவான்? உவன் அலக்சாந்தனை எடுத்துப் பாரன். அவனுக்கு என்ன தெரியும்? நாலு பத்துப் பேரைப் போல ஏதேன் பிற சொல்லுப் படிச்சவனே? சும்மா றோட்டுவழிய சுத்திக் காவாலியனோட திரிஞ்சுபோட்டுத் தானுமொரு ஆளெண்டு ஊருக்க வெட்டிப் புடுங்கிறாராம். அவர் கூடித்திரியிறதுகளைப் பாத்தாலே போதும். ஒண்டில் கழிக்கப்பட்டதுகளோட இல்லாட்டி ஏதேன் கண்ட நிண்ட எழிய சாதியளோட தான் கூட்டம். தனக்கும் அஞ்சாறு உலக நடபடியன் தெரியுமெண்டு அவனுக்குள்ள ஒரு எண்ணம் ஆனால், ஸ்ரீதேவியை இந்த ஊருக்க ஒரு நாய்கூட மதிக்கிறேல்ல..."

தன்னை மேதாவியாக்க அடுத்தவனை மட்டந்தட்டுவதில் உண்டாகும் ஆனந்தம் எப்படியெல்லாம் அசிங்கமாக வெளிப்படுகிறது என்பதைக் கவனித்தபோது அவள் உடம்பு கூசியது. இந்தப் பெரிய ஊர்த்தொண்டர் வாயில் எப்படியெல்லாம் வசை புராணம் புனருத்தாரணம் செய்கிறது என்பதை நினைக்கவே அவளுக்கு ஊரின் 'மகத்தான வளர்ச்சி' புலனாகியது.

'உலகத்தில் குரோதத்தையும்,மோட்சத்தில் சமத்துவம் நாடும் ஆத்துமாக்களை'யும் தரிசிப்பதில் ஒரு மனிதனுக்கு இருக்கிற அனுபவம் எத்துணை ரசமானது?

சவுந்தரிக்கு இந்த அனுபவம் புதிது. வஞ்சகமில்லாமலே சொன்னாள்:

''நீங்கள் சொல்றதைப் பார்த்தால் கொஞ்சமும் கவலைப்படத் தேவையில்லை.''

''என்ன, இந்தக் கிலிசகேடுகளைக் கண்டும் கவலைப்படாமலிருக்க முடியுமே?''

''ஏன் கவலைப்படவேணும்? பரவாயில்லை. நாய்கள் தானே அவரை மதிப்பதில்லை? அவரை நெடுக ஒரே கண்ட சீருக்குக் குறை சொல்லிக் கொண்டிருக்கிறியனல்லாமல், அது என்னெண்டு விளக்கமாகச் சொன்னால்தானே நானும் ஒத்துக்கொள்ளமுடியும்?''

வேலிக்கடப்படியில் சேவல் ஒன்று குப்பை கிளறிக் கொண்டிருந்தது. முற்றத்தில் மையிருட்டுத் தாவிற்று.

அவள் வார்த்தை அம்மானுக்குக் கோபத்தைக் கிளறினாலும் அதுவே வாசியாகப்பட்டது. 'விளாசித் தள்ளவேணும்' என்று நினைத்தார்.

''அவன்ர திருக்கூத்தை எத்தனையெண்டு சொல்றது? அண்டைக்கொருநாள் கோயில் குத்தகைக் காசு குடுக்கப்படாதெண்டு ஓடிப்போய் சனங்களை மறிக்கிறான்.

கிராமச் சங்கம் வரி எடுக்க வரேக்க, 'வரிக்காசு கூடிப் போச்சு. தொழிலாளியள் ஒத்து நிண்டு வரிகொடா இயக்கம் நடத்துங்கோ' வெண்டு தொழிலாளியளத் தூண்டிவிட்டான். இவன்ர சொல்லைக் கேட்டுச் சில மொக்குக் கழுதையள் வரிகட்டாமல் 'கோட்'டில் குற்றக் காசும் கட்டி மதியலுக்கும் போகப்பாத்தாங்கள். 'இதென்னடாப்பா உன்ர கூத்து—சனங்களை இப்பிடிப் போட்டுப் பேய்க்காட்டுறதோ?' வெண்டு திருப்பிக் கேட்டா, அவன் அதுக்கு, 'எல்லாத் தொழிலாளியாளும் உறுதியோட ஒற்றுமையாப் போராட முன்வராதபடியால் தான் இப்பிடி வந்த'தெண்டு சொல்லித் தப்பப் பாக்கிறான்...இப்பிடி எத்தனையோ அநியாயங்கள்..."

"இதெல்லாம் அநியாயமே? கொஞ்சங்கூட எனக்கு அப்பிடித் தெரியேல."

"அப்ப, எப்பிடித் தெரியுது?"

"சரியா அலசிப் பாத்தால், அது நீதியான குரல் போலத்தான் தெரியுது."

தான் விட்ட பாணம் அவளில் ஏறவில்லை என்பதை அம்மான் உணர்ந்தார். பிறகு ஒரு வார்த்தைகூட அவளுக்குமுன்னே இருந்தது கதைக்க அவர் மனசு துணிய வில்லை...'இனி வாய்போட்டால் இருக்கிற சாரமும் கழன்றுவிடும்' என்று எண்ணிய அம்மான் சாடையாக நைந்து சிரிக்கலானார்.

பல்லி ஒன்று வாசலில் எச்சமிட்டது. அவள் சிந்தனை கலைந்தது.

அம்மான் கை உயர்த்தி விரித்துக் காட்டினார்.

"இந்த அஞ்சு விரலையும் பாரும். இது போலத்தான் உலகத்தில வீக்க தூக்கம் இருக்கு. அப்பிடி இருக்கேக்க

இப்பத்தைப் பொடியங்கள், 'எல்லாம் சமனாக இருக்க வேணு'மெண்டு மல்லுக்கட்டுறாங்கள். அதுதான்..."

சவுந்தரி இடையில் குறுக்கிட்டாள்.

''அஞ்சு விரல்களும் ஒருமாதிரி இல்லாதபடியால்தான் வீக்கதூக்கம் இருக்கு. இப்பிடி உலகத்தில் வீக்க தூக்கம் இருக்குமட்டும் போராட்டமும் கொந்தளிப்பும் நடக்கும் தானே? இந்த உண்மையை ஏன் மறைக்கிறியள்?''

''ஏன் போராட்டம்?''

''சமுதாயத்தில ஏற்றத் தாழ்வு முரண்பாடு வீக்க தூக்கம் இருந்தால் போராட்ட உணர்வு எவனுக்கும் தானாக வரத்தான் செய்யும். அந்தப் போராட்டம் இருந்தாற்போல் வெடிக்கும்...''

''அப்ப இந்த ஊர் உலகம் இனி அமைதியாகக் கிடவாதோ?''

''அமைதியான அந்தக் காலம் கட்டாயம் வரும்''

''இதென்ன சாத்திரம்?''

''இல்ல, தத்துவம்.''

''அந்தக் காலம் எப்ப வரும்?''

''வர்க்கபேதம் ஒழிஞ்சு சமத்துவமான ஒரு சமுதாய அமைப்பு உலகத்தில் வந்த பிறகு...அது இந்த நாட்டில் வந்தாலும் இஞ்ச அமைதி காணலாம்.''

''உப்பிடித்தான் அவன் அலக்சாந்தனும் சொல்லிக் கொண்டு ஊரெல்லாம் கத்தித் திரியிறவன்.''

கிணற்றுத்தவளை தன் வாயால் கெட்டநிலை. அம்மான் பிறகு வாய் திறக்கவில்லை.

தான் அம்மானோடு இப்படியெல்லாம் அதிகம் வாய் காட்டிப் பேசியிருக்கக் கூடாது என்று அவள் மனத்துள்

சற்றுக் கவலை கொண்டாள். மனத்தில் கொஞ்சம் சலிப்புத் தட்டிற்று. ஆனால், அவருக்கு உறைக்கும்படி ஒரு வார்த்தை இறுக்கிக் கூற அவள் மனம் துடித்தது. வாயுன்னும்போது தெருப் பக்கம் ஒரு சந்தடி கேட்டது.

சவுந்தரி 'திடுக்'கிட்டு எழுந்தாள்.

அம்மான் விறைத்துப்போய் மலாரடித்து நின்றார்.

''அக்கா, அக்கா...''

ஆனந்தன் ஓடி வருகின்ற காலதைப்பு முற்றத்தில் நின்ற சவுந்தரியின் நெஞ்சில் இடித்தது.

அவனுக்குப் பின்னால் சுவாம்பிள்ளை கோபக் கனல் தெறிக்க நிலைகொள்ளாத பரபரப்போடு வந்து கொண் டிருந்தார்.

தகப்பனின் இந்தச் சன்னதத்தைக் கவனித்த சவுந்தரி 'தறுதறு'த்து முழிசினாள்.

அம்மான் பக்கத்தில் மௌனமாக நின்றார். 'என்ன சங்கதி?' என்று கேட்பதுபோல் அம்மான் பார்வை சுவாம்பில்லையில் விழுந்தது.

''ராயப்பண்ணை, எங்கட மானக்கேடு ஊருக்க வெளிச்சுப் போச்சு. இனி உனக்குத் தெரிஞ்சாலும் பரவாயில்லை. இந்த நேரமாப்பாத்து நீ ஒரு நீதியான பொது மனிசன் இஞ்ச நிண்டதும் நல்லதாப் போச்சு...''

சுவாம்பிள்ளை உருவேறி ஆடலானார்.

அம்மான் ஒன்றும் புரியாதவர்போல் — உண்மையில் எதுவும் தெரியாமலே கண்களைச் சிமிட்டிக்கொண்டு நமட்டிச் சிரித்தார். என்றாலும், முழிசாட்டம்தான்.

சுவாம்பிள்ளையின் சடலம் பேய் உருக்கொண்டவன் மாதிரிப் 'படபட'த்துக் கொண்டது. பற்கள் முறுக்கு நொறுங்கினமாதிரி நறுமின. குரல் கம்மியது.

''சவுந்தரி...''

''அ...''

''இஞ்ச எனக்கு முன்னால வா''

அவள் மெல்ல நகர்ந்து, தகப்பன் எதிரே தலை கவிழ்த்து நின்றாள்.

''முதல்ல நான் கேக்கிறதுக்கு ஒன்றும் மறைக்காமல் 'சட்'டெண்டு மறுமொழி சொல்ல வேணும்?''

அவள் தேகம் குல்லிட்டது. அப்பரின் கண்கள் நெருப்புக் கோளமாகச் சிவந்து சிலிர்த்து வருவதைக் கவனித்தபோது அவள் கருங்குடல் கரைந்தது.

'அப்புக்கு இண்டைக்கு என்னவோ சனியன் பிடிச்சிட்டுது. எதுக்காக இப்பிடித் துள்ளிக் குதிக்கிறார்? ஒருவேளை அந்தக் கடிதம்... இவற்ற கையில அம்புட்டுப் போச்சோ...?'

அவள் இதயம் குலுங்கியது. குடல் தகித்தது. வயிறு குறாவிற்று. 'படபட'க்கின்ற நெஞ்சை அவள் மென் கரங்கள் இறுக அழுத்திப் பிடித்தன. ஏக்க விழிகள் பிதுங்க, பக்கத்துப் பக்கத்து மரக்கப்பைத் தாவிப் பிடித்துக்கொண்டு, தகப்பனின் மூர்க்காவேசத்தை அவதானித்தாள். கண்கள், 'என்ன?' என்று கேட்பது போல் இரந்தன.

''இஞ்ச கிட்ட வா.''

அருகில் வந்து நின்றாள்.

''எனக்கு உண்மை சொல்லவேணும். இல்லாட்டி வயது வந்த பிள்ளையெண்டும் பாரன். இண்டைக்கு என்ர கையால தப்பமாட்டாய்.''

இப்போது அப்பரின் உடம்பு கோபாக்கினியால் தீய்ந்து சாம்பியது. நரிடிய பற்களும் வெருட்டிய கண் களும் அவளை உறுத்தின.

''ஓம்... உள்ளது சொல்றன்.''

அடித் தொண்டைக்குள்ளிருந்து பதில் கரகரத்து வந்தபோதும், அவளின் கிளிக் குரலில் கீறு இருக்கவில்லை.

''நீ, அவன் அலக்சாந்தனுக்கு எப்பாகிலும் கடிதம் கிடிதம் எழுதினனியோ?''

'ஆ...!'

தாவணிச் சேலை 'துளுக்'கென்று நழுவி நுளுந்திற்று. தாவணியில் விழுந்த கண்ணீர் சொட்டுச் சொட்டாகத் தெறித்துச் சிதறியது. விரல்களால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு விறைத்த பிரேதமாக நின்றாள் சவுந்தரி.

'அம்மாடி... இது எப்பிடி அப்புவுக்குத் தெரிஞ்சுது? எங்களுக்கு இந்த நெருப்புக் கொள்ளியை வைச்சது ஆர்?'

கோழி அடை காக்க அதன் வெம்பத்தினால் முட்டைக் கருக்கள் முரண்பட்டுக் கலங்கி உருமாறிப் பரிணமித்துக் குஞ்சாகும் போது, கோது வெடித்துச் சிதறுவது போல, இந்தத் தாக்கம் சவுந்தரியின் இதயக்கூட்டைச் சின்னாபின்னமாகச் சிதறடித்தது.

''ஏனடி பேசாமல் நிண்டு நீலிக்கண்ணீர் வடிக்கிறாய்? வாயைத் துறந்து 'ஓமோ இல்லையோ'வெண்டு சொல்லன்ரி.''

'வாய்...?'

நெஞ்சு உக்குருகிக் கரைந்து, சர்வாங்கம் ஊனி, தேகம் மெழுகுவர்த்தியாய் உருகுகின்ற நிலையில் வாய்

திறந்து மறுமொழி கூறுவதற்கு அவளுக்குள் சூத்திரப் பாவையா இயங்குகின்றது?

மௌனமான அந்தகாரத்தைக் கிழித்துக்கொண்டு அவள் குரல் கமாரிட்டது.

"அய்யோ... என்ர அம்மா!"

கோடை இடிபோல் சவுந்தரி பெருங்குரல் வைத்துக் கத்தின தொனி, அடி வளவுக்குள்ளேயிருந்து கிடுகு பின்னுகிற தாய்க்கு அவலமாகக் கேட்டது.

"புள்ளோய், அது என்ன சத்தமடா?"

காதைத் தீட்டியபடி அங்கலாய்த்துக் கொண்டு ஓடி வந்தாள் தாய்.

ஓடி வந்த இளைப்பு ஆறவில்லை. நெஞ்சு மேலும் கீழும் துடித்துப் பிரளயப்படுத்திற்று. புருஷன் கோபாவேசத்தோடு நிற்கிற கோலம் இவள் மனத்தைக் கிலேசப் படுத்தியது.

ராயப்பு அம்மான் முழிசிக் கொண்டு பக்கத்தே அலுக்கோசுபோல் நிற்பதும், சவுந்தரி கண்ணீர் உகுத்து வதும் இவள் சந்தேகத்தைத் தூண்டின.

'நான் நொந்து பெத்த என்ர ராசாத்திக்கு என்ன கொடுவினை வந்துதோ?'

இடியேக்கம் நெஞ்சைத் தாக்க, புருஷனை நோக்கினாள்.

"இஞ்ச இப்ப என்ன நடந்தது; பிள்ளை ஏன் இப்பிடி விக்கி விக்கி அழுகுது?"

மனிசிக்காரியைச் சுவாம்பிள்ளை இரக்கமாகப் பார்த்தார். அவளின் 'அறியாமை'யைக் கண்டு அவர்

தனக்குள்ளே வருந்திய போதும், கெம்பிய கோபம் அவர் கண்களில் புகைந்து கொண்டிருந்தது.

"உனக்குச் சங்கதி தெரியாதே? எடி ஆத்தே, இந்த வீட்டில நடக்கக்கூடாத அலுவல் நடந்திட்டுதடி..."

அவள் இதயம் கை நெகிழ்ந்த முட்டை போல் நொறுங்கிச் சிதறிற்று. சிலந்தி வலையாட்டம் மனத்துள் ஏதோ ஊசலாடிற்று.

'அய்யோ, கரை சேருகிற என்ர குமருக்குக் 'கதை' கட்டி இங்கிசைப் படுத்திச்சினமோ...?'

ராயப்பு அம்மானையும் பக்கத்தில் வைத்துக் கொண்டு தன்னை 'எடிபுடி' என்று முறைத்துப் பேசுகிற சொற்களை அவளால் தாங்க முடிந்தது. புத்திரியைப் பற்றிக் கதைத்த வார்த்தைகளை இந்தத் தாயால் தாங்கவோ மன்னிக்கவோ முடியவில்லை.

'ஆ பாதக மனுஷா...ஒரு புறத்தி மனுசனுக்கு முன்னால என்ர குமர்ப் பிள்ளையைப் பேசினால் எப்பிடித் தாங்குவன்... அது வாய்விடாச் சாதியாட்டம் நிண்டு அழுகுது...என்ர பெத்த வயிறு தாங்குதில்லையே, நான் என்ன செய்ய...?'

தன் கோலங் கெட்டுத் தலைவாசற் கப்போடு ஒட்டிக் கொண்டு நின்ற புதல்வியை, தாய் சோகமாகப் பார்த்தாள்.

அவள் கண்கள் தூருத்திக் கொண்டு அழுகை பீறிட்ட போதும், தாயைக் கண்ட குஞ்சுபோல் மனம் தேறி ஒருவாறு சாந்தியடைந்தாள்.

மனிசிக்காரி கேட்ட கேள்விக்கு எந்தவிதமான பதிலும் சொல்லாமல் சுவாம்பிள்ளை ஒரு 'விடுபேயன்' போல் நின்று கள்ளனாட்டம் முழிசிக் கொண்டிருந்தார்.

அம்மான் மௌனத்தைக் கலைத்தார்.

''தம்பி சுவாம்பிள்ளை, இது ஒரு குமர் காரியம். பெத்த தேப்பனான நீயே நெத்திக்கு நேர ஒரு அந்நிய னாட்டம் கேட்டால், அது பிள்ளை எப்பிடி வாய் துறந்து சொல்லும்?''

அம்மான் முகத்தில் வறட்டுச் சிரிப்பு நமட்டியது.

பிள்ளையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டு கின்ற கலை அப்பட்டமான வேசைத்தனம் என்பதை அம்மான் கசடற அறிவார். அம்மானின் பழக்கதோஷம், 'நாசகாரச் சதி வேலைகளைத் திறமையாகச் செய்வதே ஒருவனின் மேதாவித்தனத்துக்கு எடுத்துக் காட்டு' என்ற மேல் நாட்டுத் தத்துவத்தில் வேறு நம்பிக்கை கொண்ட வர் இந்த இக்கட்டான வேளையில் அதை முறையாகப் பாவித்து அதன் பெறுபேறை எதிர் பார்த்துக் கொண்டி ருந்தார்.

பரம சாதுபோல் இருந்துவிட்டு அம்மான் வைத்த 'பொறியில்' சுவாம்பிள்ளை எக்கச்சக்கமாக மாட்டிக் கொண்டார்.

''ராயப்பண்ணை. இனி எதை ரகசியமாக மறைச்சுப் பேசுறது? அவன் அலக்சாந்தன் கொஞ்ச நேரத்துக்கு முந்தி, 'நான் சவுந்தரியம் கட்டப் போறதைத் தடுக்க ஆரோ சதி செய்யிறாங்கள். ஆனால், அவளுக்கு நான் ஒரு தகவல் குடுத்தால் போதும். உடனே அவ என்னோட வந்திடுவா'ளெண்டு நடுச் சந்தியில நிண்டு சொல்றான். நான் விடுவனே...நல்ல வெளுவை குடுத்திட்டுத்தான் இஞ்சமுன்னா வாறன். இப்ப ஊர் 'கெய்யோ'ண்டு போச்சு...''

ஆவேசங்கொண்ட தவில் வித்துவான் மாதிரி சுவாம் பிள்ளை ஒரு தடவை சிலுப்பா குலுக்கி விளாசிவிட்டு

ஓய்ந்தாராயினும், அவர் சதிரம் அட்டகாசமாக ஆர்ப்பரித்துக் கொண்டேயிருந்தது.

'திடுக்'கிடுகிற அந்தச் செய்தியை—அதுவும் தன் தகப்பன் வாயால் கேட்ட சவுந்தரி அப்படியே சோர்ந்து கப்போடு சாய்ந்தாள்.

உலகம் பிரளயம் எடுத்தமாதிரி அவள் மனத்துள் ஒரு மூடுபடலம் சுழன்றடித்தது.

விறைத்துப் போய் நின்ற தாய் கேட்டாள்.

"மெய்யடி புள்ள, கொப்பர் இப்ப சொன்னது உண்மையே?"

சவுந்தரி தலை கவிழ்த்தி நிலத்தைப் பார்த்தாள்.

"நீ கடிதம் எழுதினாலும் காரியமில்லை. பயப்புடாமச் சொல்லு: அவனுக்குக் கடிதம் கிடிதம் எழுதினனியே?"

அவளின் தவறுகளை இவள் தன் தாய்ப்பாசச் சுரங்கத்தில் மறைத்துக்கொண்டு, தானே அவளைக் கண்டிக்கிற பாங்கில், 'கோழி மிதிச்சுக் குஞ்சு சாகாது' என்கிற மனோபாவனையில், குமாரத்தியின் கிரிகையை மனத்துள்ளே நியாயப்படுத்தி, ஒரு நடுத்தீர்வைக்கு ஒப்புவித்து விடுவது போல் பாசாங்கு பண்ணிய தாய், புதல்வியின் முகத்தையே ஏவிப் பார்த்தாள்.

"என்ன புள்ள, சொல்லன்?"

"இல்லை...எனக்கொண்டும் தெரியாது."

'கள்ள மூதேவி; படு பொய்காரி'

நெஞ்சு கமறச் செருமிக் காறித் துப்பிய அம்மான், தனக்குள் பொரிந்துகொண்டார்.

பெற்றவளின் வயிறு பகார் பற்றி எரிந்து தகித்தது.

கப்போடு சாய்ந்து கிடக்கின்ற தன் குமாரத்தியை ஓடிச்சென்று தாவி அனைத்துத் தூக்கி, தன் முந்தானைச் சேலையால் அவள் முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டு குவித்து நெற்றியில் ஊதினாள்.

வெயர்வைத் தேம்பலில் ஒட்டியிருந்த அவள் கருங் கூந்தல்கள் தாயின் ஊதுதலில் உலர்ந்து படபடத்தன.

''வல்லூறு இறாஞ்சினாலும் தாய்க்கோழி தன் குஞ்சை விடாது.'

சவுந்தரி இப்போது தாயின் அந்த இதமான அரவணைப்பில் துவண்டு போயிருந்தாள்.

''கடிதம் எழுதினால் இப்ப என்ன கேடு வந்திட்டுது? எழுதாட்டி ஏன் ராசாத்தி பயந்து அழுதனி? இனி அழாதையடா...எழும்பி இஞ்சால வாடாம்மா.''

கைத்தாவாகத் தூக்கி நிறுத்தி ஒரு கையால் அணைத்து, ஒரு மணப்பெண்ணைப்போல் புத்திரியை நடத்திக்கொண்டு உள்ளே சென்ற தாயை இருவரும் ஏககாலத்தில் பார்த்தனர்.

'நவமணி' இலக்கிய சஞ்சிகை நிலத்தில் விழுந்து விரித்தபடி அதன் ஒற்றைகள் நலங்கி அவளைப்போல் நாதியற்றுக் கிடப்பதை அவதானித்த அம்மான் தன்னார வாரம் பெருமூச்செறிந்தார். மனங்கேட்கவில்லை சஞ்சிகையை மெதுவாகக் குனிந்து எடுத்து விரித்துப் பார்த்தார்.

'அலக்சாந்தர்—சவுந்தரி'

அம்மன் நெஞ்சு குமைந்தது. கண்ணில் ஒரு மின்னல்.

'இது அவன் அலக்சாந்தான்ர கையெழுத்துத்தான். காதல் தூதுகள் புத்தகங்களில் யாத்திரை செய்கின்றன.'

அம்மான் மனம் புழுங்கியது. எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்ற அவர் மனம் அப்போது துடித்தது. ஆனால், 'இப்ப நேரம் சரியில்லை' என்று நினைத்தார்.

தனக்குள் என்னென்னவோ எல்லாம் திட்டம் போட்டுக்கொண்டு உள்ளூறச் சிரித்தவண்ணம், ஏதோ ஒரு மன நிறைவோடு அம்மான் எழுந்து நழுவலானார்.

"தம்பி சுவாம்பிள்ளை, அப்ப நான் போட்டுவாறன். என்ன செய்யிறது சகோத்தியாப் போங்கோ...நான் வாறன்."

"ஓ...ஓ. போட்டு வாண்ணை."

அடுக்களைக் குள்ளிருந்து கடுவன் பூனை ஒன்று கறுமிக்கொண்டு ஓடிற்று.

ராயப்பம்மான் பறதியாகப் போய்க்கொண்டிருக்கும் போது, 'பொன்னூற்செபமாலை' நாட்டுக் கூடத்தில் ராட்சதனுக்கு நடித்துக் கியாதிபெற்ற அப்புக்குட்டியப்பா நாய்களுக்கு நலமெடுக்கிற வில்லுக்கத்தி, கத்தரிக்கோல், ஊசிநூல் பொட்டணி சகிதம் எதிரே தென்பட்டார்.

"இண்டைக்கு எந்த வீட்டு நாய்க்கு நலமடிக்கிற தாக்கும்?" என்று பகிடியாகக் கேட்டார்.

"உவன் மிக்கேல் வீட்டு நாய் பெட்டை வளைச்சல்ல திரியுதாம். அதுக்குத்தான்" என்ற அப்புக்குட்டியப்பா, "நீ இந்த நேரத்தில எங்க வெளிக்கிட்டனி?" என்று நகிடதமாகக் கேட்டார்.

அம்மான் சொண்டுக்குள் சிரித்தார்.

"கோயில் பக்கம் போகலாமெண்டு வெளிக்கிட்ட னான். அது கிடக்க, அண்ணை, ஆக்களுக்குக் கடிக்கிற நாயொண்டு ஊருக்க உலாவுது. அதுக்கும் நலமடிச்சால நல்லது."

''எங்க நிக்குது சொல்லு. இண்டைக்கே அலுவல் பாக்கிறன்.''

''அதைப் பிடிக்கப் பாக்கிறன். அம்புடுதில்லை''

''ஏன், அதுக்கென்ன பத்துக்காலே?''

''இல்லை: ரண்டு கால்.''

அப்புக்குட்டியப்பா ராட்சத சரீரம் குலுங்கச் சிரித்துஓய ஒரு நிமிஷம் எடுத்தது.

''தம்பி, நீ சொல்ற அந்த ரண்டுகால் நாய் எதெண்டு எனக்கு இப்ப விளங்குது. உவன் எங்கட சவரிப்பிள்ளையின்ர அலக்சாந்தனெண்ட பொடியனைத்தானே சொல்றாய்?''

''ஓமோம், கண்டுபுடிச்சிட்டாய்.''

''தம்பி ராயப்பு. நான் ஒண்டு சொல்றன், குறை விளங்காதை. அந்தப் பொடியனோட நீ ஏதண்டைப் படாதை. அவனுக்குச் சரியெண்டு பட்டதை செய்யிறான். உனக்குச் சரியெண்டு பட்டதை நீ செய்யிறாய். எது நல்லதோ அதை ஊர் கேட்டு நடக்கும் இதுக்குப்போய் ஒருத்தனை ஒருத்தன் ஏன் வலோற்காரம் பண்ணுவான்?''

அம்மான் முகம் சில்லிட்டது.

''நீ, கூத்தில் வலோற்காரம் செய்துதானே பொம்புளயச் சிரத்தினனி?''

'அது கூத்தில நான் ராச்சதவேஷம் போட்டபடி நடிச்சது. ஆனா, இது சனங்களின்ர விஷயம். ஆனபடியால் சனங்களின்ர சீவியத்தில ஒருக்காலும் வேஷம் போடக் கூடாது.''

'இந்தாளோட பறைஞ்சால் என்ர காரியம் சரி வராது' என்று கருதிய அம்மான். ''அண்ணை.

கோயிலடியில எனக்கு ஊரிப்பட்ட வேலையிருக்கு. பேந்து ஆறுதலாப் பறைவம்'' என்றவர், ஏதோ அவசர சோலிக்காரன்போல் நழுவலானார்.

**யா**ரோ தெருவால் *சீழ்க்கை அடித்துக்* கொண்டு வருகிற சாடை தெரிந்தது.

சவுந்தரி மெல்ல எட்டிப் பார்த்தாள்.

அம்மான் உண்ட வயிறு புடைக்க, அதிகாலையிலேயே வலு உஷாராகப் படலை திறந்து உள்ளே மிலாந்திக் கொண்டு வருவதை அவள் அவதானிந்தாள்.

''தம்பி சுவாம்பிள்ளை...?''

''தார், ராயப்பண்ணையே?''

''ஓம்...உதென்ன செய்து கொண்டிருக்கிறாய், கையில அலுவலே?''

நைஸாக முற்றத்துக்கு வந்துவிட்டார்.

விருந்தையில் நின்ற சவுந்தரி, அடுக்களைக்குள் போய் தாயோடு குந்தியிருந்து தேங்காய் துருவத் தொடங்கினாள்.

'மூதேசி மனுசன்மறுக்காலும் இஞ்ச என்ன சவத்துக்கு வருகுது?'

மனத்தில் நீறுபூத்த புகைச்சல்.

அம்மான் 'நிலவரத்தை' நோட்டம் விட்டும் அதைக் காட்டிக் கொள்ளாமல் சுவாம்பிள்ளையை நோக்கி வந்தார்.

'அறுந்துபோன இந்த மனுசன் அப்புவுக்கு என்ன நஞ்சை ஊட்ட வருகுதோ?',

அவள் இிதயம் சாம்பியது. துருவிய தேங்காயைத் துருவுபலகையில் அப்படியே தொக்கிப் பிடித்த சவுந்தரி,

மடக்கிய கெண்டைக்காலில் நாடி குத்தி வைத்து ஏதோ யோசனையில் தீய்ந்து போய்க் கிடந்தாள்.

வீட்டுக்குள் நின்ற தகப்பன் என்ன செய்கிறார் என்பதையும் அவள் கவனிக்கவில்லை.

''அந்த விஷயம் இண்டு ராவைக்குத்தானே?''

அப்பர் அம்மானிடம் மெதுவாக அழுத்திக் கேட்ட இந்த வார்த்தை அவள் காதில் மிகத் தெளிவாகக் கேட்டது.

'இண்டிரவு என்ன நடக்கப் போகுது?'

அவள் நெஞ்சு பெருமூச்சாய்க் குதறியது.

'அலக்சாந்துக்கு ஏதேன் கொடுவினை நடக்கப் போகுதோ?'

ஏக்கக் கண்கள் கசிந்தன. உள்ளம் வெம்பிச் சாம்பிக்கொண்டிருந்தது.

அம்மானும் தகப்பனும் ஏதோ 'குசுகுசு'த்தபின் வெளியேறி மறையும் வரை கிடுகுக்கணுக்குகளால் அவள் பார்த்துக்கொண்டிருந்தாள்.

இரவாயிற்று. குளிர் காற்றுப் பூம் பொழிலாகத் தென்னஞ்சோலைக்கூடாக வீசுகிறது.

வெளி விருந்தையில் ஆனந்தன் உறங்கிக் கொண்டிருந்தான், இவள் மெல்ல எழுந்து அவனை எழுப்பினாள்.

''டேய் தம்பி?''

''என்னக்கா?''

''அப்பு அலக்சுக்கு அடிக்கேக்க நீயும் பக்கத்தில நிண்டனியே?''

''ஓ, கொஞ்சம் எட்ட நிண்டனான்.''

"நல்லா அடிச்சிருப்பார், என்ன?"

"ஓமக்கா நல்லாத்தான் அடிச்சுப்போட்டார்."

'அய்யோ 'அது' பாவம்'

ஒரு பெருமூச்சு அவள் சதிரத்தை உலுப்பியது. அந்த வாதைகளெல்லாம் தனது இதயத்தில் உதை படுகிறதான உணர்வில் ஒரு கணம் அவள் முகம் சுண்டிக் கறுத்தது.

"தம்பி, நான் ஒரு சங்கதி சொல்றன். நீ அதை அலக்சாந்தண்ணையிட்டப் போய் ரகசியமாகச் சொல்..."

"புள்ளோய்?"

தாயின் குரல் அப்போது உரத்து ஒலித்தது. அவள் வாய் பிளக்க எழுந்து அங்குமிங்குமாக ஏமலாந்திக் கொண்டிருந்தாள்.

"புள்ள சவுந்தரி?"

"இந்தா வாறன்."

உள்ளத்தினுள் அழுந்துகின்ற சுமை இறக்க எத்தனிக்கும் கட்டத்தில் தாயின் குரலையடுத்து, அப்போது சவுந்தரியையே கூப்பிட்டுக் கொண்டு 'திடீ' ரென்று ராயப்பு அம்மான் படலை திறந்து வருகின்ற சந்தடி அவள் காதில் கேட்டது.

'என்ன மாயம். கூப்பிட்ட அம்மாவையும் காணலியே?'

எட்டிப் பார்த்தாள். தூரத்தே தாயின் ஆசாட்டம் அடி வளவு வடலிகளுக்குள் தெரிகிறது.

ஆனந்தன் அக்காவின் தூது கொண்டு சென்று விட்டான்.

பயந்துபோன சவுந்தரி 'விண்' அறுந்த மாதிரி நெஞ்சு நெருடி இடிக்க, அம்மானை வெறித்துப் பார்த்தபடி ஊமையாக நின்றாள்.

'ஆனந்தன் இதுவரை அலக்சாந்துவைக் சந்திச்சு எல்லாம் சொல்லியிருப்பான்' என்று தனக்குள் சமாதானம் சொல்லிக் கொண்டாள். இருந்தும், அம்மானைக் கண்ட பின் அவள் குதூகலமே சஞ்சலமாக மாறியது.

அம்மான் சுற்று முற்றும் பார்த்தார்.

''என்ன பிள்ளை பேசாமல் நிக்கிறாய்?''

மௌனம் கலைந்து துணிவு பிறந்தது.

''உங்களோட நான் என்னத்தைப் பறையிறது?''

தாயைப் பார்த்தாள். சிலமனைக் காணவில்லை.

'பிறத்தி மனிசர் வந்திருக்கேக்கயும், இவவுக்கு வளவு வாய்க்காலுக்க மாயிறதுதான் வேலை...'

அம்மான் தேகங் குலுங்கச் சிரித்து ஓய்ந்தபோது புளிச்சல் ஏவறை ஒன்று வந்தது. வாயைச் சப்புக் கொட்டினார். கண்கள் சவுந்தரியைக் கனிவோடு நோக்கின.

''பிள்ளை சவுந்தரி, உன்ர மனசில இருக்கிற கவலை எனக்குத் தெரியும். என்ன இருந்தாலும் கொப்பர் பொடியனுக்கு அந்தப் 'பப்ளிக்றோட்'டில வைச்சு அடிச்சிருக்கப் படாது பொடியனும் தனக்கு நீர் கடிதம் எழுதின சங்கதியைப் 'பப்ளிக்'கில சொல்லி உன்னைப் பரிசு கெடுத்திருக்கக் கூடாது. சரி போனது போகட்டும்... உம்மட விருப்பம் போல நானே முன் நிண்டு உம்மட காரியத்தை ஒப்பேத்தித் தாறன். நீர் இனி விசனப்படாதையும்.''

கடைக் கண்களால் சவுந்தரியைப் பார்த்து அவள் மனோ நிலையைக் கவனித்தார். அவருக்கு ஒரு 'பிடிப்பு' உண்டானது.

சவுந்தரியின் முகம் இப்போது சூரியகாந்தியாக மலர் வதை விளக்கு வெளிச்சத்திலும் அவதானித்தார்.

'என்ர விருப்பம் போல்...'

தனது விருப்பத்தை நிறைவேற்றி வைக்க அம்மான் தானே முன் வந்ததை நினைக்க ஒரு கணம் ஆச்சரிய மாகவும் மறுபாட்டம் மகிழ்வாகவும் இருந்தது.

'பெண் புத்தி பின் புத்தி. ராயப்பு அம்மானை நான் தவறாகக் கணித்து விட்டல் போல் தெரியுது எப்பிடியோ அம்மான் ஊர்த்தொண்டு— கோயில் தொண்டு செய் யிறவர்... எண்டாலும் அம்மான் வலு காரியகாரர் தான்...'

"என்ர விருப்பம் போல எனக்கு நீங்கள் என்ன உதவி செய்து வைப்பியள்..?"

'ஆசை வெட்கம் அறியாது' என்று குடி போதையிலா சொன்னான்? பெண்கள் நெற்பங் கெட்டவர்கள் சிறு கவலைகளையும் தாங்க முடியாமல் அழுந்தி அழுவார்கள். இந்தப் பலவீனங்களே பெண்களின் வீழ்ச்சிக்கும் காரணம் என்பதைச் சவுந்தரியின் அவசரக் கேள்வி மூலம் அம்மான் மட்டுக்கட்டிக் கொண்டார்.

அவளைக் காட்டிலும் அவரே அப்போது குதூகலித்து காணப்பட்டார்.

"உப்பிடி விருத்துறையாக் கேளும். முதல்ல உம்முடைய விருப்பத்தை எனக்கு ஒழிக்காமல் சொல்லும்."

அவள் ஒரு கணம் இனங்காண முடியாத மன அழுந் தலில் புழுங்கினாள். நாணத்தின் இன்ப உணர்வைத் தவிர அவள் வாயில் வார்த்தையே கிளம்ப மறுத்தது.

''நீர் வெக்கப்படுகிறீர். ஓ... குமர்ப்பிள்ளை, 'டக்' கெண்டு வாய் திறந்து சொல்ல மனம் ஏவாதுதான். சரி உமது மனசில கிடக்கிற ஆசையை நான் சொல்லட்டோ?''

முகத்தில் பிரமிப்பான ஒரு வெளிப்பு.

''எங்க, சொல்லுங்கோ பாப்பம்?''

''பிறகு மழுப்பக்கூடாது?''

''இல்ல, சொல்லுங்கோ.''

''நீர் அலக்சாந்தைக் கலியாணம் செய்யத்தானே விரும்புகிறீர்?''

தேகம் சுரீரித்துக் கூசியது. நெஞ்சினுள் பூரித்த உணர்ச்சி அலைகளை அவள் உடனே வாய் விட்டு ஒப்புக் கொள்ள வக்கில்லாமல் திமிறிச் சிரித்தாள்.

''என்ன, அப்பிடித்தானே?''

''ஓம்.''

''படு கள்ளி.''

தாய் முலையில வாய் வைத்து உலுப்பினால் பால் சுரக்கும் என்ற கலையைப் பசுக்கன்றுக்குக் கற்றுக் கொடுத்த மேதாவி எவனும் இல்லை. ஆனால், அம்மானுக்கு இந்த வித்தை கை வந்த கலை. அவர் இதில் பழமும் தின்று கொட்டையும் போட்டவர். அவள் இதயத்தைச் சுரப்பிக்க எத்தனிக்கலானார்.

''நீர் உண்மையில அந்தப் பொடியனைக் கலியாணம் செய்ய விரும்புகிறீர், என்ன?''

'ஓம்' என்பது போல தலையசைத்து நாணினாள்.

''பாத்தியே... கள்ளப்பொட்டை. இதை இம்மட்டுக் காலமாக உம்மட நெஞ்சுக்க ஒழிச்சுத்தானே வச்சிருந்

தனீர்? கொப்பருக்கும் கோச்சிக்கும்கூட மறைச்சுப் போட்டீர்... சரி. நான் இதை ஒப்பேத்தி வைப்பன். முதல்ல நான் சொல்றமாதிரி நீர் ஒரு காரியம் செய்ய வேணும். அதுக்கு ஒத்து வருவீரோ?''

''எதுக்கு?''

''உமது நல்ல காரியத்துக்கு.''

''நல்ல காரியமெண்டால்...?''

''அது ஒரு சின்ன விஷயம். அதைத் துணிஞ்சு செய்ய வரவேணும். செய்யிறனெண்டு சொன்னால் சரி...''

''சரி செய்யிறன்.''

''அப்ப, அதைச் செய்ய நீர் சம்மதம்?''

''எதைச் செய்யச் சம்மதம் கேக்கிறியள்?''

''இஞ்ச கிட்ட வாரும், சொல்றன்''

''காது கேக்கும். எட்ட நிக்கிறன் சொல்லுங்கோ.''

''இது எட்ட நிண்டு ஒப்பேத்திற விஷயமில்லை.''

''அப்ப...?''

''கிட்ட வாரும்.''

''ஏன் கிட்ட வருவான்?''

''இது பரம ரகசியம்... அதுதான் கிட்டவா வெண்டுறன்.''

''இஞ்ச இப்ப ஒருத்தருமில்லை. இதில நிக்கிறன். சொல்லுங்கோ.'.

''இப்ப ஒருத்தருமில்லை...?''

அவள் வீசிய அந்தத் தூண்டலில் அம்மான் தனது மனப் புழுவைக் குத்தினார்.

''சரி, உமது விருப்பம். பருவம் வந்தால் காதல் உணர்ச்சி தானாக மொய்க்கும். இது சகஜம்தான். காதலெண்டால் ஆசை தீக்க ஒரு இளம் பெட்டையெண்டாலும் ஒருத்தனுக்குப் போதும்...தான் விரும்புகிறபடி இன்ப சுகம் அனுபவிக்கத் தூண்டுகிற கிளர்ச்சிதான் காதல். இதை வெளியில சொல்ல வெகட்ப்பட்டுப் பெரிய மவுசு காட்டி நடிக்கத் தேவையில்லை...''

''உதென்ன பறையிறியள்? உந்தக் கிலிச கெட்ட கதை இந்த நேரத்தில எதுக்கு?''

அம்மான் கலகலத்து நைந்து சிரித்தார்.

''உமக்கு இப்ப அப்பிடித்தான் தெரியுது. ஆனால், எனக்கு அது 'தேவை'யாக இருக்கு?''

அம்மான் எதுக்கு வளைகிறார் என்று சவுந்தரி முற்றாகத் தெரிந்து கொண்டாள். அக்கினி பற்றியவளாகப் பதறிய சவுந்தரிக்கு ஒருவித பீதி மனத்தில் தோன்றியது.

''தயவு செய்து குறை நினையாமல் எழும்பி வெளியால போங்கோ.''

அம்மான் முகம் குபீரித்துச் சில்லிட்டது. முகத்தில் நெய் வழிய விறைத்துப்போய் அப்படியே இருந்தார்.

அப்போது அவர் முகத்தில் அடித்த மாதிரி அவள் 'சடா'ரென்று கதவை அடித்துச் சாத்திக் கொண்டு உள்ளே சென்றாள்.

''ஆண்மாரி. இந்தச் சிறுக்கி என்னை 'வெளியால போ' வெண்டு நெத்திக்கு நேர சொல்லவோ?''

ஆண்மைக்குச் சவால்: ஆணவத்திற்கு இழுக்கு. அவரால் சகிக்க முடியவில்லை.

'தாயோளி, இவளை இனி விடப்படாது'

கிளறி அடிக்கக் கெம்புகிற வெள்ளடிச் சேவல் போல் அவர் உடம்பு கமறியது.

'எச்சில் பட்டதை நாயும் தின்னாது'

கள்ளக் கடுவன் பூனை மாதிரிப் பதுங்கிய அம்மான் 'சடா'ரென்று உன்னி எழுந்து ஒரு மின்னற் பாய்ச்சலில் வீட்டுக்குள் 'விறுக்' கென்று பாய்ந்தார்-

'ப்பூ...ப்பூ...'

எரிந்து கொண்டிருந்த குப்பி விளக்கை எப்படி ஊதி அணைத்தார் என்று அவருக்கே புலனாகவில்லை.

"'அய்யோ அம்மா ணேய்... அறுந்து போவானே விடடா சட்டைக் கையை... டேய் விடடா..."

திமிறிய மூசுகின்ற ஒலிகள் மூர்க்கமாக விம்மிக் கேட்டன...

தாய்க் கோழிக்குத் தெரியாமல் ஓநாய் ஒன்று கோடிக்குள் பதுங்கி நின்ற குஞ்சைப் பிடித்துக் கொண்டது.

குஞ்சின் கீச்சுக்குரல் அப்போது எங்குமே கேட்க வில்லை.

தேவதொண்டரும் ஊர்ச் சேவையாளருமான ராயப்பு அம்மான் எதையோ சாதித்து விட்ட திடும்பில் ஒரு வெற்றி வீரன் போல் மிக அமைதியாக வெளியேறிக் கொண்டிருந்தார்.

சற்று வேளையால் கோயில் ஆராதனை மணி அடித்துக் கேட்டது.

கொஞ்சக் காலமாகத் தாய் கண்ணுக்கு இந்த மகள முந்தின விறுத்தமாயில்லை. நடை உடை பாவனை எல்லாம் வித்தியாசமாகத் தெரிந்தன.

வைத்தால் வைத்தபடி, இருந்தால் இருந்தபடி. தலை வாரச் சீப்பு எடுத்தால் மயிர் வார்வதில்லை. சீப்பைக் கையில் வைத்தபடி எங்கோ 'மிலாந்தல்' குளிக்கப் போனால் பொழுது உறையில போகுமட்டும் கிணத்தடிப் பூக்கம்தான். காலைச் சாப்பாடு மத்தியானம். அதுவும் 'அருக்காணியம்' பண்ணித்தான். ஆனவாகில அன்னந் தண்ணி வென்னி ஆகாரம் இல்லை. விடிஞ்சால் பொழுது பட்டால் தனிமை. ஆரோடும் பேச்சுப் பறைச்சல் இல்லை. சீப்பு, சவுக்காரம். பவுடர், பொட்டு. பின்னல்" உச்சி என்று ஏதும் கிடையாது. ஆளும் வரவர 'மெலிஞ்சு' கொண்டு போகுது...

'எலும்புருக்கி நோயோ?'

மண்டை புழுத்த யோசனையில் பெற்ற வயிறு கொதித்தது. பெருமூச்சு விட்டு நெட்டி முறித்த கையோடு உன்னி எழுப்பிய போது கலண்டரில் கண் பதிந்தது.

'பங்குனியோட பங்குனி ஒரு வரியமாகுது. அங்கால தமிழற்ர சித்திரை வரியப்புறப்பும் வரப்போகுது. போன சித்திரை வருசத்திலநல்ல உசாரா ஓடியாடித்திரிஞ்ச புள்ள இந்தக் கோசு ஒரு கண்டசீருக்கு முடங்கிக் கொண்டு இருக்கு...'

நொந்து பெறற வயிறும் பாலூட்டிய பயோதரங் களும் தகித்தன. கசிந்த கண்களைத் துடைத்துக்கொண்டு புத்திரியை எட்டிப் பார்த்தாள்.

"புள்ள சவுந்தரி?"

"ம்..."

"உப்பிடியே ஒரு கண்டசீருக்கு யோசிச்சுக்கொண்டி ருந்தால் இதுக்கு ஒரு முடிவில்லையே?"

"முடிவு வரும்."

"உதென்ன கதை? சரி பிள்ளை, எழும்பிச் சோத்தைத் தின்னன்."

"பொறுத்துத் தின்னலாம்."

"பிள்ளை, முதல்ல இருந்த இடத்தை விட்டு எழும்பு."

"எழும்புறன். சும்மா என்னைப் போட்டு அலட்டாதையுங்கோ"

"சொல்றதையும் செய்யாயாம். எழும்பு ராசாத்தி."

"ம்..."

முடுக்கி விட்ட பாவை போல் சலிப்போடு எழுந்து சென்றாள் சவுந்தரி.

முற்றாக உருக்குலைந்து போன புத்திரியின் கோலத்தைப் பார்த்த தாயானவளுக்குச் சித்தங்கலங்குவது போல் தலை அம்மியது.

'ஒரு வரியமாக இந்தக் கோலங்கொண்டால் நான் என்ன செய்ய... ஆரிட்டைப் போய்ச் சொல்லி அழ? பெத்த வயிறு தாங்குதில்லையே...'

தாயின் மூளை குழம்பி விட்டது. இப்போது அவளுக்கு ஒரு கொள்ளை யோசனை.

சுவாம்பிள்ளையோ சாப்பிடுவது படுக்கிறது எழும்புவது என்று வீட்டுச் சோலிகளோடு நின்று கொள்கிறார். பெண்ணாய்ப் பிறந்தவளுக்குத்தானே பெற்றவளின் அருமை பெருமை தெரியும்.

அவள் இந்த ஒரு வருஷமாகப் பாஷையூர் அந்தோனியார், இளவாலைக் கல்லறை ஆண்டவர், மடுமாதா கோயில் என்று அலைந்து தரிசித்து விட்டாள். ஆனால், எந்த நேர்த்திக் கடன்களும் சவுந்தரியின் கோலத்தில் ஒரு வித நல் மாற்றத்தையும் காட்டவில்லை.

அவளுக்குக் கோயில் குளத்தில் இருந்த நம்பிக்கையும் தளர்ந்து விட்டது. பின்பு சத்திரஞ் சாவடிகள், சித்த வைத்தியங்களையும் நாடினாள். அப்பவும் சவுந்தரி சுகப் பட்டதாகத் தெரியவில்லை ஒரு தாயானவள் எத்தனைக் கென்று அடித்துக் கொள்வது.

"ஆ கடவுளே, நான் பெத்த என்ர குமர்ப்பிள்ளைக்கு இருந்தாப்போல என்ன கொடுவினை நடந்தது? நான் என்ன கறுமம் செய்தேன்?"

ஒருநாள் இந்தத் தாய் வாய் புலம்பி ஒப்பாரியாக அழுதே விட்டாள்.

ஒடிந்து போன வேப்பங் கொப்பில் காகம் ஒன்று கரைந்து கொண்டிருந்தது.

சுவாம்பிள்ளை நித்திரை முறிந்து எழுந்து பாயைச் சுருட்டித் திண்ணைச் சுவரோடு சாத்தி வைத்து விட்டு, சவுக்கத்தால் முகத்தைத் துடைத்துக் கொண்டு முற்றத் துக்கு வந்தார்

"உதென்ன உங்கட போக்கு? பெத்த தேப்பன் அக்கறையில்லாமலிருந்தால் நாளைக்கு இந்தக் குமரை என்னெண்டு கரையேத்திறது?"

'பொறுப்பில்லாத மனுசன்' என்று மனங் கறுவிய மனைவி சீறி விழுந்தாள்.

"உண்ணாணையப்பா உனக்கு விசர். நான் என்ன சும்மாவே திரியிறன்? பிள்ளையின்ர அலுவலாத்தானே ஓடித்திரியிறன்."

"பிள்ளை ஆனவாகில தீன் ஊணில்லாமல் கிடந்து மாயுது. ஏதேன் ஒரு அலுவலைப் பாக்காமல் சும்மா ஓடித்திரிஞ்சாப்போல காணுமே?"

"இப்ப நீ என்னை என்ன செய்யச் சொல்றாய்? சும்மா அலட்டாமல் கிட. போன கிழமை அந்தாளோட கதைச்சு அடுக்குப் பண்ணிப் போட்டுத்தான் வந்தனான்."

"எந்தாளோட?"

"ராயப்பண்ணையோட தான்."

"அம்மான் என்ன சொல்றார்?"

"'பார்வை' பாத்து நூல் ஓதிக்கட்டினால் சரியாப் போகுமெண்டுறார்... குருசு மடத்தடி ஞானத்தைக் கொண்டு பாப்பிப்பம்... ஞானத்துக்கும் ஆயுசு நூறு... நாங்கள் பறைய ஞானமும் சொல்லி வைச்சாப் போல வருகுது... உவள் புள்ளைய வெளியால கூப்பிடு."

குருசு மடத்தடியார் படலை திறந்து உள்ளே கால் வைக்க, புருஷன் பெண்சாதி பிணக்கு ஒருவாறு ஓய்ந்தது.

"நாங்கள் வேதக்காரர். உதுகளைச் செய்தால் அயலட்டையில என்ன நினைப்பினம்?"

காதோடு வாயோச்சமாகக் கேட்டாள் மனைவி.

'நீ சும்மா இரு. எல்லாரும் உப்பிடித்தான் சொல் றவை. ஆனால், செய்யிறது இப்பிடித்தான்.

"ஏதோ பிள்ளை சுகப்பட்டால் சரி."

மடத்தடியாருக்கு வழி விட்டு இருவரும் எழுந்து நின்ற போது அவர் சாடையாகச் சிரித்தார்.

சுடலைமுனி, வயிரவர் சாடை, மடத்தடி ஞானம் சடை விரிகோலமாக வந்த காட்சியே 'நல்ல மாந்திரீகன்' எனபதற்குச் சாட்சியாகப்பட்டது.

ஆள் நல்லெண்ணெய்க் கறுவல். நெற்றியில் ஒரு சதக்கணியம் சந்தனப் பொட்டு. காதில் மொட்டு விரித்த ஒரு சிதம்பரத்தம் பூ. வாய்க்குள் வெற்றிலைக் குதம்பல்.

கடவாயில் பச்சைக் கட்டுச் சேலம் பீடி. நாடகங்களில் 'பபூபன்' வேஷம் போட்டுக் கொட்டகையைக் குலுக்கியவர். திடீர்ப் பகிடிகள் விட்டு மகாஜனங்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைப்பதில் சமர்த்தர் என்பது பிரசித்தம்

சின்னமேளக் கச்சேரி, நாடகம், 'வசுக்கோப்பு'' கடுதாசி விளையாட்டு வாசிகசாலை, முச்சந்தி வம்பளப்பு என்பன அவர் பொழுதுபோக்கு. பெண்கள் மயங்கும் நல்ல தேகவாகு. ஆனால், பிரமசாரி. மாந்திரீகம் தொழில். அதில் இவர் கை தேர்ந்த மதியூக தந்திரி என்று பிரசித்தம்.

இவர் பற்றிய பூர்வாங்கம் இப்படியாக இவள் காதிலும் அடிபட்டதுண்டு. இப்பொழுதுதான் நேரில் பார்க்கிறாள். ஆளைக் கண்டதும் அவளுக்கும் ஒரு நம்பிக்கை பிறந்துவிட்டது கேட்பானேன், இவளுக்கே ஒரு ஞானம் உதித்துவிட்டது.

வந்ததும் வராததுமாக மடத்தடியார் முற்றத்தில் நின்று சவுந்தரியை ஏறு கண் வைத்து எட்டிப் பார்த்தார்.

ஒரு புன்சிரிப்பு அவர் முகத்தில் மலர்ந்தது.

சுவாம் பிள்ளையை ஒரு தடவை விறைத்துப் பார்த்துக் கண் சிமிட்டி விட்டு வெளியேற, அவரும் ஞானத்தாருக்குப் பின்னால் ஊனமாண்டியாட்டம் நடந்தார்.

நடக்கும்போது மடத்தடி ஞானத்தார் சொல்கிறார்:

''பொடிச்சிக்குப் 'பிச்சு'ப் பிடிச்சிருக்கு. நீர் அயல் மனுஷனெண்டபடியால் சுருக்கமாய்ச் செய்து தாறன். இனி ஒண்டுக்கும் யோசிக்காதையும். நான் எல்லாம் வெண்டுதாறன். 'மடை'க்கு ஆக வேண்டிய சாமான்களை அடுக்குப் பண்ணும். வெள்ளிக்கிழமை இரவு கிருத்தியம் செய்வம்.''

மடிக்குள் கிடந்த வல்லுவத்தைத் திறந்து, சாமான் வகையறாக்கள் எழுதிய துண்டைக் கொடுத்தார் மடத்தடியார்.

சுவாம்பிள்ளையருக்கு அப்பவே 'புள்ள சவுந்தரி சுகப்பட்டுவிட்டாள்' என்ற ஆதங்கம் உண்டாயிற்று.

மூன்றாம் நாள் வெள்ளிக்கிழமை.

குருசுமடத்தடி மாந்திரிகர் ஞானம் அவர்கள் நேரங்காலம் தவறாமல் உரிய காலத்துக்குச் சொல்லி வைத்த மாதிரி செக்கல்பட வந்துவிட்டார்.

குசினிச் சார்வு மறைவுக்குள் சப்பாணிகட்டிக் குந்திய மடத்தடி ஞானத்தார், சாக்குத் தட்டியை நீக்கி வடக்குப் பக்கமாகப் 'பொளிச்'சிட்டுத் துப்பிவிட்டு, செம்புத் தண்ணீரில் வாயலம்பியபின் 'மடை'ப் படையல் பரப்ப அடுக்குப் பண்ணலானார்.

பூசணி மொட்டு முடியை மருவிக் குங்குமம் சாத்தி சந்தனக் குச்சிப் புகை அலை எழ அதன்மீது குத்தினார். வெள்ளரிப் பழத்தை எடுத்துப் பாறாங்கத்தியால் சரி பாதியாக இரண்டாக வெட்டிப் பிளந்து இரு கன்னைகளிலும் பக்குவமாக வைத்துவிட்டு, மஞ்சள் குங்குமம் எடுத்துச் சாத்தினார். கற்பூரத்தைக் கொளுத்திப் பக்கத்தே வைத்தார். குப்பில் கிண்ணத்தில் சந்தனத்தைக் கரைத்துத் தனது நெற்றியிலும் மார்பிலும் பூசணி விழும்பிலும் தடவினார்.

இரண்டு தேங்காய்கள் கொடு வாக்கத்திப் புடங்கால் உடைக்கப்பட்டன. சாம்பிராணிப் புகையில் வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், நெல்லிக்காய், பலாப்பழக்கட்டி, மாதுளம்பழம்—ஆகிய பதார்த்தங்களை எட்டமாக வட்டம் காட்டிவிட்டு அடுக்கடுக்காகப் பரப்பினார்.

தைலப்புட்டி, பன்னீர்ச்தாடி இரண்டையும் பக்கத்தே பக்குவமாக வைத்துக் கொண்டார்.

குத்துவிளக்கில் தேங்காய் எண்ணெய் ஊற்றித் திரிகளைப் பற்ற வைத்தார். செம்பு, மாவிலை, புதுப்பானை, புதுச்சட்டி, ஒரு குண்டுக்கோப்பை—ஆகிய பாத்திரங்களை இடப்பக்கமாக அடுக்கினார்.

நெல்லு, அரிசி, பயறு, வரகு, சாமி, குரக்கன், உழுந்து, பனங்கட்டி, கற்கண்டு, சர்க்கரை ஆகிய தானிய—பட்சண வகையறாக்களை மருவி நாலு முழச் சவுக்கம் ஒன்றை விரித்து வைத்தார்.

வலப்பக்கமாக ஒரு பெரிய கெண்டைச் சேவற்கோழி அதன் தலை கொடுவாக்கத்தி முனையை மருவிக் கிடந்தது வலது தொண்டைக்குக் கீழே ஒரு பிரப்பந்தடியை மறைவாக வைத்துவிட்டு, சுவாம்பிள்ளையை உற்று முழிசிப் பார்த்த பார்வையில் சுவாம்பிள்ளையர் சற்றுப் பயந்தே போனார்.

சாவலின் தலை அறுப்பதைத்தவிர, சுமார் அரைமணி நேரத்துக்குள் சகல கிருத்தியங்களையும் கன கச்சிதமாகச் சாதித்துவிட்ட பெருமிதத்தில் நெஞ்சு நிமிர்த்தி, ஒரு தட்வை கையை உயர்த்தி உதறித் தட்டிய மடத்தடி ஞானத்தார், கையில் உடுக்கை எடுத்துச் சுருதி லய வாலாயம் பண்ணலானார்.

உடுக்கை தட்டி நாதம் எழுப்பி, சுருதி சுத்தம் சேர்த்து ஆலாவர்ணம் செய்து களை கட்டும்போது. அங்கே சுவாம் பிள்ளை வீட்டாரைக் காணவில்லை.

மடத்தடி ஞானத்தாருக்குக் கோபம் பொங்கிக் கண்கள் செக்கச் சிவந்து சிலிர்த்தன.

''ஏய் சுவாம்பிள்ளை, பொறுத்த நேரத்தில எங்க காணும் போட்டீர்? இஞ்சால வாருமப்பா.''

சத்தஞ் சாவடியைக் காணவில்லை.

ஏதோ எங்கோ ஒரு சந்தடி மடத்தடியார் காதில் நச்சிரமாய் விழுந்தது.

கண்ணறையான சாக்குத்தட்டியை மெல்ல நீக்கி உற்றுப் பார்க்க எத்தனிக்கையில் சவுந்தரி பத்திரகாளி போல் மடத்தடியார் முன் விரிசடையாக வந்தாள்.

தனது கிருத்தியங்களால் சகலரையும் கலக்கி வைக்கிற மடத்தடி ஞானத்தார் அவள் கோலங்கண்டு உண்மையில் நடுங்கிப் போய்விட்டார்.

''ஐயா மடத்தடியார், இது கூத்துக் கொட்டகையில்லை; நான் சின்னமேளக்காரியுமில்லை. தயவு செய்து மரியாதையாக எழும்பிக் கொண்டு போங்கோ. வயிறு வளக்கிறதெண்டால் வேற தொழிலைப் பாருங்கோ. குறை விளங்காமல் போங்கோ.''

தகப்பன் தாய் மட்டுமல்ல; மாந்திரீக மடத்தடி ஞானத்தாரும் அடிபட்ட கழுதைபோல் முழுசிக் கொண்டு அந்தரப்பட்டு எழுந்தார்.

முற்றத்தில் பாதியும் ஞானத்தார் முதுகில் மீதியுமாக மடப்படையல் சிதறிக் கிடக்கிற கோலத்தைப் பார்க்கச் சுவாம் பிள்ளையின் உடல் தீய்ந்து கொண்டேயிருந்தது.

கிராமத்து நாய்கள் படலைக்குப் படலையாக நின்று அம்மாறு போட்டுக் குரைக்கின்றன.

மடத்தடி ஞானத்தார் 'பிச்சைவேண்டாம் நாயைப் பிடி' என்ற கோலத்தில் குச்சொழுங் கைகளால் போய்க் கொண்டிருக்கிறார் போல் தெரிகிறது.

நேரம், நடுச்சாமம்.

வீடு மயான அமைதியாகக் கிடந்தது.

''புள்ள சவுந்தரி?''

''ஓய்.''

''சோறு சாப்பிட்டியே?''

''ஓம்.''

கேட்டால் கேட்டதற்கு நறுக்குப் பதில் மறுமொழியாக வேறு வார்த்தை பேசுவதில்லை. மகிழ்ச்சி, கோபம்,

மனஸ்தாபம் கொள்வதில்லை. முகத்தில் எந்த ஒரு சலனமும் இருப்பதாகக் காட்டிக் கொள்வதுமில்லை.

'அய்யோ, நான் என்ன செய்ய? விலைப்படுகிற என்ர குமருக்கு என்ன நடந்தது?'

பெற்ற வயிறு பகார் பற்றி எரிகிறது. சில வேளை தானாகவே இருந்தாற்போல் வாயிலும் வயிற்றிலும் நெஞ்சிலும் மூசிமூசி அடித்துக் கொள்வாள் கண்ணீர் கசிய — வயிறு குலுங்கத் தன்னாரவாரம் அழுது தீர்ப்பாள். போகாத கோயில் இல்லை; வையாத நேர்த்தி இல்லை. தாயானவள் இப்போ இரண்டு வருஷங்களாக இதே கோலம்.

எப்போதாவது சவுந்தரி தானாக வாய் திறந்தால், 'ஓம்', 'இல்லை', 'சரி', வாய் அசைவுகள் மட்டும் அவளின் சம்பாஷணையாகவிருக்கும். நெருக்கி வெருட்டினால் ஒரே கண்டசீருக்கு அழுகை.

கனவு கண்ட ஊமை போல் அவள் தனக்குள் அழுந்துகின்றபோது 'அதனை' நினைத்து அவள் நெஞ்சு கமறும்.

ராயப்பு அம்மான் அன்று போனவர்தான்.

'இதுக்கு இனி ஒரு பரிகாரம் காணவேணும்'

சுவாம்பிள்ளை மனைவி சகிதம் ஒருநாள் மண்டையைப் போட்டு உடைத்துப் பார்த்தார்.

பலன்?

'ராயப்பு அண்ணையைக் கூப்பிட்டு, பிள்ளை சவுந்தரியோட ஒருக்காக் கதைப்பிச்சுப் பாப்பம். அப்படியான தேவதொண்டர் சொன்னால் ஒருவேளை பிள்ளை மனம் திரும்பும்?'

இப்படியாகத் திட்டம் போட்டபோது, சுவாம்பிள்ளை முகத்தில் கிடந்த சலிப்பு கொஞ்சம் நீங்கிற்று.

''ராயப்பு அண்ணை ஒருக்கா வாய் வச்சால் போதும். ஊருக்கு நடக்காத கருமங்களும் நடந்தேறும். அவன் மனுஷனுக்கு அது கடவுள் குடுத்த வரப்பிரசாதம்.'' என்றெல்லாம் மனைவிக்கும் சொல்லி மனந்தேறினார் சுவாம்பிள்ளை.

சவுந்தரியை ஒரு வழிக்குக் கொண்டுவர—அவளைச் சாந்தப்படுத்த அம்மானையே கூப்பிட வேணும் என்று அறுதியாக முடிவு எடுத்தேவிட்டார்.

''ஆனந்தம், ஓடிப்போய் நான் வரட்டாமெண்டு ராயப்பு அம்மானைக் கையோட கூட்டியா.''

மகனை அனுப்பிவிட்டு அம்மான் வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார், பிள்ளை.

'அப்பு இப்பிடி ஒரு தற்குறியா?'

நீறு சுக்கிய நெருப்பாகக் கிடந்த சவுந்தரியின் நெஞ்சு, தகப்பனை நினைக்கவே எரிசரமாகக் குதறியது. இருந்தும் அவள் மௌனமாகவே இருந்தாள்.

மனைவிக்கோ இருந்துவிட்டுச் சபலம் தட்டும். இதுக்கு அவர் 'விளக்கம்' கொடுப்பார்.

'ராயப்பு அண்ணை இப்ப லேசுப்பட்ட ஆளில்லை. எதையும் சரிக்கட்டுகிற கெட்டித்தனம் உள்ளவர். அந்த மனுஷன் எத்தனையோ இக்கட்டான சங்கதியளை வலு சுளுவாக ஒப்பேத்தினவர். கன குமர்களையும் சீமான் கரை சேர்த்திருக்கிறார். அதுதான் கடவுளாப் பாத்து அந்தாளுக்குக் 'கோயில் முகாமை'யும் கிடைச்சிருக்கு...''

அம்மானைப் பற்றிய தன் கணிப்புகளை இப்படியெல்லாம் மனைவிக்கு வர்ணித்துவிட்ட புருஷனை நம்பி, இந்த மனிசியும் அம்மான் வரவையே எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'ஆர்குத்தியும் அரிசியாக வேணும்' என்பது தாயானவளின் குறிக்கோள்.

'ராயப்பண்ணை பிள்ளையின்ர மனசை மாத்தி வைப்பார்' என்ற திடமான நம்பிக்கை துளிர்த்த போது அவள் புருஷனுக்குச் சொல்கிறாள்.

'' கழுதைப் புண்ணுக்குப் புழுதி மருந்தெண்ட மாதிரி ராயப்பண்ணைனாலதான் பிள்ளையின்ர மனம் தேறக் கூடும். தேறினால், இந்த வரியம் பிச்சை எடுத்தாகுதல் மாதா கோயிலுக்கு ஒரு மூடை அரிசி அவிச்சு விருந்து குடுக்கிறதுதான் என்ர திட்டம்...''

சவுந்தரியின் காதுகளில் இந்த வார்த்தைகள் இடியேறு விழுந்த மாதிரிக் கேட்டன.

கடல் குமுறி இரைவதுபோல் 'ஓ' வென்று குரல் வைத்து அழத் தொடங்கினாள் சவுந்தரி.

சுவாம்பிள்ளையும் மனைவியும் அடித்து விழுந்து பதறிக்கொண்டு ஓடிப்போய்ப் பார்த்தபோது சவுந்தரி விக்கி விக்கி அழுது 'திக்'கிட்டுப்போய்க் கிடந்தாள்.

சுவாம்பிள்ளை மூளை கலங்கி ஒன்றும் புரியாதவராய் ஏங்கி விறைத்து மலாரடித்துப்போய் நின்றார்.

கடைசியாக அவர் மனைவியின் காதுக்குள் ரகஸ்ய மாகச் சொல்கிறார்.

''நீ ஒண்டுக்கும் யோசியாதை. வயது வந்த பொம்புளப்புள்ளையளுக்குஇப்பிடி வாறது வழக்கம்தான். பிள்ளைக்கு ஏதோ சரியான பிச்சுப் பிடிச்சிருக்கு. எதுக்கும் ராயப்பண்ணை வரட்டுக்கும் பாப்பம்.''

இவளை மீறி அப்போது நெஞ்சு நீவி ஒரு பெருமூச்சு எழுந்தது.

'ராயப்பண்ணை கொஞ்சநேரத்துக்குள்ள வந்திடுவார். அதுக்கிடையில பிள்ளையின்ர மனசைத் தேற்றி விடுவம்' என்ற ஆதங்கத்தோடு தாயும் தகப்பனும் ஆளையாள் மாறி மாறித் துருவித் துருவிக் கேட்கத் தொடங்கினார்கள்.

சவுந்தரியோ ஒன்றுக்கும் இறுங்கினதாகத் தெரிய வில்லை. என்றாலும், பெற்ற தோஷம் விடவில்லை. தாயானவளுக்குப் பெண்பிள்ளையைப் பெற முன்னும் சுமை; பெற்றபின்னும் சுமை, சுமை நீங்காதசுமை. பாசம் செய்யும் கொடுவினை. சாவறிதியும் அவளுக்கு உத்தரிப் பிஸ்தலமாயினும் அதுவே இன்ப சாகரம்.

புதல்வியை அப்படி ஒரு வாஞ்சையோடு அணைத்துக் கொண்டாள்.

"பிள்ளை, இனி மவுனமாயிருக்காதை. மவுனம் ஒரு மரண தண்டனை. வாய் துறந்து பேசு ராசாத்தி..."

"சரி, இப்ப என்ன கேக்கிறியள்?"

"அ... இப்பிடி வாய் துறந்து கேள்..."

"சொல்லுங்கோவன்?"

"உன்ர விருப்பம்போல அந்தப் பொடியனையே கட்டித் தாறம்; செய்யன்?"

"வேண்டாம்!"

"அந்தப் பொடியனைக் கட்டப்போறனெண்டுதானே நெடுகலும் நாண்டு கொண்டு நிண்டனி?"

"ஓம்... அதுக்கு?"

"பேந்தேன் மறுக்கிறாய்; இப்ப அதைச் செய்யன்?"

"மாட்டன்"

"ஏன்?"

"விருப்பமில்லை."

"'விருப்பமில்லை' யெண்டு உண்மையாத்தான் சொல்றியே?"

"ஓம்."

"அறுதியா என்ன சொல்றாய்?"

"மாட்டன்."

"இதென்ன வெள்ளிடி?"

"அதொண்டும் வெள்ளிடி இல்லை."

"ஒரு குமர்ப்பிள்ளை. ஏதேன் ஒரு கரையில சேரத் தானே வேணும்?"

"நான் என்ன தோணியே?"

"தோணியெண்டாக் கரை சேர்க்கலாம். இது அப்பிடியே?"

"ஏன், இது சட்டமோ?"

"அப்ப, உனக்குப் பிடிச்சதையெண்டாலும் சொல்லு. எதெண்டாலும் எங்கட ராசாத்திக்கு நாங்கள் செய்து வைக்கிறம்."

"எனக்கு ஒண்டும் வேண்டாம்."

"ஒண்டும் வேண்டாமெண்டு போட்டு நெடுக இப்பிடி இருக்க ஏலுமே?"

"ஏன், ஏலாதே?"

"உதென்ன ராசாத்தி உன்ர கதை?"

"என்ர கதையில என்ன?"

"எங்கட செல்லத்தின்ர நீரோசையைப் பாத்தாத் தானே பெத்த மனம் குளிரும்?"

"அதுக்கு...?"

"உனக்கு விரும்பினதைச் சொன்னால் போதும்".

"என்ன, கலியாணமோ?"

"பின்ன என்ன?"

"இனி எனக்குக் கலியாணம் வேண்டாம்!"

"இதென்ன கோதாரி...அப்ப, இப்பிடியே நீ கன்னியாக முடைஞ்சு கொண்டு வீட்டுக்க நெடுகலும் கிடக்கப் போறியே?"

'கன்னி...........?'

இந்த வாக்கு ஒரு பத்தினித்தனமான தாய் வாயில் மிகப் புனிதமாக வெளிவந்தபோது, சவுந்தரியின் நெஞ்சு கொலுக்கழன்று கோடை இடிபோல் அதிர்ந்தது,

'அய்யோ, என்னைக் 'கன்னி'யெண்டு சொல்லி என்ர மனச்சாட்சியையும் சாக் கொல்லுகினமே...?'

"என்ன பேசாமல் இருந்து குமையிறாய். வாயைத துறந்து ஒருமுற்றுச் சொல்லன் பிள்ளை."

"ஒருக்காச் சொல்லிப் போட்டன் பேந்தென்ன?"

"அப்ப, கலியாணம் வேண்டாம்?"

"வேண்டாம்"

உள் மனக் கொதிப்பைக் காட்டிக் கொள்ளாமல் சாலம் பணணிச் சும்மா சிரித்து விட்டுக் கொஞ்சுவது போல் தாய் சொல்கிறாள்:

"பிள்ளை, அப்பிடிச் சொல்லாதையடா...... ஊரவே நாக்கு வளைச்சுப் பகிடி பண்ணுவினம் நாச்சியார்."

"நாக்கு வளைக்கட்டன். அதால எனக்கொண்டும குறைஞ்சு போகாது...... அதைப் பற்றி அக்கறையுமில்லை."

மகள் இப்போ சம்பாஷிக்கிறாள்.

''ஏன் ராசாத்தி உப்பிடி எடுத்தெறிஞ்சு பறையிறாய்? வயதும் வந்திட்டுதல்லேயடா?''

''நல்லா வரட்டுக்கு.....''

பாசச் சுரங்கம் இதற்குப்பின் கொந்தளிப்பாகப் பரிணமித்தது.

''என்னடி புள்ள, உனக்கு என்ன பிடிச்சுக் கொண்டுது நான் இம்மட்டு நேரமா விடுத்து விடுத்துக் கேக்கிறேன். நீ எல்லாத்துக்கும் அடுத்து அடுத்து அல்லத் தட்டிக் கொண்டிருக்கிறாய்?''

''அப்ப, என்ன செய்ய?''

''நீ அந்த அலச்சாந்தப் பொடியனைத்தானே கட்டப் போறெண்டனி?''

''ஓ''

''இப்ப, அதையும் ஏன் வேண்டாமெண்றாய்?''

''ம்......?''

''குமரெண்ட கோலமும் குலைஞ்சு போனால பிறகு ஆர் தேடுவினம்... நல்லா யோசிச்சு ஒரு முற்றுச் சொல்லு ராசாத்தி.''

''ஆ... என்னைப் பெத்த என்ர அம்மா...... உங்களுக்குப் பாரமெண்டால் கழுத்தில கல்லைக்கட்டிக் கிணத்துக்க தள்ளி விடுங்கோ. நான் சந்தோஷமாகச் செத்துப் போறேன்......''

நெருப்பில் மிதித்தவள் மாதிரிக் குதறி, அடித்து வைத்து 'ஓ'வென்று அங்கம் பதறப் பெருங்குரலில் குமுறிய புதல்வியின் அலங்கோலத்தைப் பார்க்க, நொந்துபோன தாயானவள் சகிக்க முடியாமல் தவித்தாள். க்ஷண

வேளைக்குள் ஆவேஷங் கொண்டவளாகப் பாய்ந்து புத்திரியைத் தாவி அணைத்து முகத்தோடு இணைத்து அழுத்திக் கொஞ்சின தாய் கேருந் தொனியில் கமறி அழுதாள்.

"நான் பெத்த என்ர ராசாத்தி..... என்ர செல்லக் கிளி.... ஏன்ரா அப்பிடிச் சொல்றாய்? சுமந்து பெத்த என்ர முத்தாரத்தை நான் சாவறுதியும் வச்சுக் காப்பாத்துவனே......என் சவுந்தரமே இனி நீ அழாதையடா..."

அன்னையின் தேற்றரவான வார்த்தைகளும் அவளுக்கு ஆறுதல் அளிக்கவில்லை.

பெருங்குரல் வைத்துத் தொண்டை கேரப் பிரலாபித்த சவுந்தரியின் அழுகுரலும் அவளின் அக்கினி கக்குகின்ற வாக்கியங்களும்...—

சிமிக்கிணாமல் படலை திறந்து அப்போது முற்றத்தில் கால்கள் பாவிக் கொண்டு வருகின்ற ராயப்பு அம்மான் செவிகளில் சரிசரமாக எதிரொலித்தன.

வந்தவர் அப்படியே 'சடா'ரென்று நின்று கொண்டார்.

முடிவில்லாத ஒரு சோகத்திலாழ்ந்து அழுது புலம்புகின்ற சவுந்தரியையும் தாய் தகப்பனையும் வெகு அமைதியோடு நின்று சற்று நேரம் கண் குத்திப் பார்த்தார் அம்மான்.

அவர் நெஞ்சு கொலுக்கழன்ற கோபுரம்போல் இடியுண்டது. மனத்துள் கெம்பிய குமுறல் சர்வாங்கம் பூராவும் புரைந்து சிதறியது. உடல் பதறித் 'துருதுரு'க்க மனம் குதறிக் கொண்டு மேலே அண்ணாந்து வானத்தைப் பார்த்தார்.

சவுந்தரியின் அழுகுரல் ஆவசமாகவே தொடர்ந்தும் கமறிக் கொண்டிருந்தது.

வெட்டுண்ட கள்ளி மரத்திலிருந்து பால் துளிகள் வடிந்து திரைவது போல், அவள் கண்களிலிருந்து சாரை சாரையாகக் கண்ணீர் வழிவதை அவர் அவதானித்தார்,

நெஞ்சு 'திக்திக்'கென்று பதறியது,

வந்த சுவடும் தெரியாமல் அம்மான் கோயிலை நாடி விரைந்தார்.

அவர் நடந்தாராயினும் அவரின் இதய கோளம் அவரினுள் அகோரித்துக் கொண்டேயிருந்தது.

''சவுந்தரி...''

நெஞ்சில் இடித்தமாதிரி எங்கோ பழக்கப்பட்ட ஒரு குரல் சற்று வீராய்ப்பாக அம்மான் காதில் கம்பீரித்துக் கேட்டது.

'தாரடா அது?'

திரும்பிப் பார்த்தார்.

அலக்சாந்தன் சவுந்தரி வீட்டுப் படலைக்கு எதிரே சவுந்தரியை எதிர்கொண்டு நின்றான்.

அம்மான் உடல் தீய்ந்தது; அவர் திகைத்துப்போய் விறைத்து நின்றார்.

வெள்ளிகள் மேகத்தில் பிரகாசிக்கவாரம்பித்தன.

(தினகரன் 1960)

# 2. கோபுரங்கள் சரிகின்றன ..

''தொரே. வாங்க,ஒக்காருங்க...என்னா, இடியப்பமா சோறுங்களா?''

''சோறு.''

''அ, தொரைக்கு இங்கிட்டுச்சாப்பாட்டு எல ஒண்ணு போடு.''

''சரி, போடறேன்.

''தண்ணி கொண்ணாந்து வையி.''

''ஆச்சு.''

''என்ன தொரே, சைவமா 'மிலிட்டரீ'ங்களா?'.

''மில்ட்ரி.''

''ஆ, இங்கிட்டு ஒரு கோழி?''

''சரி, கோழி வருது.''

''பொரியல் ஒண்ணு?''

''ரையீட்டு.''

''அங்கிட்டு மேசைக்கு ஒரு மீன் கொழம்பு,''

''சரி, மீன் போவுது.''

''இங்கிட்டு ஒரு கிளாஸ் ஆட்டுச் சூப்பு!?''

''ரையிட்டு சூப்பு வருது.''

லக்ஷ்மி ஹோட்டலில் இன்றும் நெரிசல்தான்.

சிப்பந்திப் பையன்கள் மிக நேர்த்தியாக ஓடியாடி வேலை செய்கின்ற பாங்கினை, பட்டறையில் வெகு குசாலாக இருந்து 'நோட்டம்' விட்டுக் கொண்டிருந்தார், முதலாளி துரைச்சாமி.

பையன்களைச் சொல்வானேன். துரித கதியில் இழுபறிப்படுகின்ற அவர்களின் நோஞ்சான் கால்கள் சவுண்டு கொள்கிறபோதும், ஹோட்டலுக்குள் நாள் முழுதும் கிடந்து பம்பரமாகச் சுழன்று கொண்டிருக் கின்றன. இதெல்லாம் கேவலம் அந்த ஹோட்டல் மேசை புட்டுவங்களுக்கோ, லாப வருவாய் கடாட் சத்திற்குத் தவம் பண்ணிப் பட்டறைக்குமேல் மாட்டிய படத்தின் திருக லக்ஷ்மிக்கோ கொஞ்சங்கூடத் தெரியாது.

ஆயினும், 'சப்ளை' காரர்களின் சூப்பிணிக் கால் களோ பூமியை வலம் வந்த ரஷ்யன் றொக்கட் சாடை ஹோட்டல் மேசைகளையும் புட்டுவங்களையும் ஒரே கண்ட சீருக்குச் சுற்றி வலம் வந்து கொண்டிருந்தன.

இடக்கடித்த யந்திரம்போல் கொலுக் கழன்று இளைத்துப்போன பையன்களால் லக்ஷ்மி ஹோட்டல் அன்றும் வழக்கம்போல் 'கலகல'ப்பாகவே இருந்தது.

அத்தனை பரபரப்புக்கள்ளும் முதலாளியின் கண்கள் நாறல் மீனைப் பார்க்கிற கடுவன் பூனையாட்டம் பையன் கள் மீதே இறாஞ்சுகின்றன.

கறி வகையறாக்கள் சிந்தாமல் தூக்குச் சட்டியை வெகு லாவகமாகக் கையிலே ஏந்திக் கொண்டு மேசை களைச் சுற்றி ஆலவட்டம் போடுவதே ராமனுக்கு எப்பவும் வாலாயம் என்பது ஹோட்டலில் உள்ள சகல தொழிலாளர்களும் அறிந்த சங்கதி. அப்படி ஓடியாடி வேலை செய்வதிலும் ராமனுக்கு ஓர் இனம் தெரியாத குஷி. அந்தக் குஷியில் அவன் சில வேளைகளில் தன் சகல

தொல்லைகளையும் மறந்து விடுவதுண்டு. இவன் தொல்லைகளை மறந்து விடுவதுபோல் தொல்லைகள் இவனை மறந்துவிடுமா? என்றாலும், அப்படியான சந்தர்ப்பங்களில் இந்த ஹோட்டலுக்குள் கால் வைத்தவன் எவனோ அவன்பாடு ஒரு குருச்சந்திர யோகம்தான்.

அவ்விதமான சந்தர்ப்பங்களில் ஒரு 'மூட்' வந்து விட்டால் ராமன் எந்த ஜனநெரிசலுக்கும் தனித்து நின்று வகை சொல்லி தானே 'சப்ளை' பண்ணுவதும் பண்ணுவிப்பதும், ஜனசஞ்சாரத்தை மனங் குளிர வரவேற்று உபசரிப்பதும், உணவை நினைத்தமாத்திரத்தில் போஜன வாதிகள் வாய்களில் நீர் ஊற வைப்பதும் அவன் பயின்ற வல்ல கலை. அந்த வேளைகளில் பார்த்தும் பாராமல் அதிகமாகவே அள்ளிப் பரிமாறுவான்.

அப்படி ஒச் அந்தரிப் போடுதான் இப்பவும் அவன் லக்ஷ்மி ஹோட்டலுக்குள் சுழன் றடிக்கிறான்.

'பில்' கீறுகின்ற பையன் ஹோட்டலுக்குள் நுழைகிறவர்களைக் கவனித்து மாமூல் பிரகாரம் அந்தந்த நபர்களுக்கு உவப்பான பட்சணங்களின் பட்டியல் சொல்லி உரக்கக் கத்தி அவர்களை நாவூற வைக்கின்ற சித்து வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் நேரம் போய்க்கொண்டிருந்தது

'படைக்குப் பிந்து பந்திக்கு முந்து' என்றவன் வாய்க்குச் சீனிதான் போடவேணும் மானத்தை உயிராக மதிக்கும் கற்பனாவாதப் போதகர்கள் மற்றவனையெல்லாம் 'வயிற்றுப் பிண்டவாதிகள்' என்று நக்கல் பண்ணிக் கொண்டே சோற்றுப் பருக்கைக்காகத் தவண்டையடிக்கும்போது, சோற்றுக் கட்சிக்காரரான கந்தசாமியா விட்டு வைப்பார்? மேலும் அவரோ ஒரு சமூக விஞ்ஞான இயக்க எழுத்தாளர். போஜனப் பிந்த விட்டால் லக்ஷ்மி ஹோட்டலைப் பொறுத்தவரை வெறும்

உப்புச் சம்பல்தான் எச்சம் என்பது அவர் அறிந்த விவகாரம்.

ஹோட்டலில் இப்போது அகப்பிரிய முடியாத ஜனநெரிசல். எழுத்தாளர் கந்தசாமியின் வயிற்றை நாசமாய்ப் போன அகோரப் பசி வறுகி எடுக்கிறது. நேரமோ போய்க் கொண்டிருக்கிறது.

இதுவே கந்தசாமியின் மாமூல் ஹோட்டல்..இது ராமனுக்கும் தெரிந்த சங்கதி. அதற்காக அவருக்கென்று பிரத்தியேகமாகச் சாப்பாடு காத்துக் கிடக்குமா?

ஹோட்டலுக்குள் கந்தசாமி நுழைந்ததும் அவரது கண்கள் இட வசதி தேடி ஒரு பக்கமும், ராமனை நாடி மறுபக்கமும் துழாவிக் கொண்டிருக்க...

ராமனே இவரைக் கண்டுவிட்டான். கண்டதே பறதியாகச் சிரித்துக் கொண்டு குதூகலத்தோடு கந்தசாமியை நெட்டுருவிப் பாத்து மாமூல் பிரகாரம் வாயோச்சமாகச் சத்தம் வைத்தான்.

''அ, தொரே ஒக்காருங்க...என்னா, அப்படியே நின்னுக்கிட்டிருக்கீங்க? இந்தால இம்புட்டு எடமிருக்கே, ஏன் அந்தால நின்னு பாக்கிறீங்க? இப்புடி ஓரமா வாங்க. அங்கிட்டுப் புட்டுவத்தில ஒக்காந்துக்கலாம்.''

அவன் சைகை காட்டிய கதிரையில்கந்தசாமி குந்தவே 'பில்' எழுதுகிற பையன்—ராமன் அவனைப் 'பில்மாஸ்டர்' என்றே அழைப்பான்—அந்தப் பில்மாஸ்டர் 'சடா' ரென்று ஆனை அலறின மாதிரிக் குரல் வைத்தான்.

''அ ..நம்ம தொரெக்கு இங்கிட்டு ஒரு சாப்பாடு எல கொண்ணாந்து போடு—போட்டாச்சா?''

''சரி எல போட்டாவுது,''

''என்னாங்க தொரே, 'மிலிட்டரி' தானுங்களே?''

''ஓமோம், வழக்கம் போல.''

அடுத்த வேலைப்பாட்டில் இறங்கிய ராமன், நெரிசலை முண்டியடித்துக் கொண்டு குண்டுக்கறிச் சட்டியைக் கைத்தாவாகத் தூக்கிக் கரண்டியில் தன் கைச்சுருதி வேகத்தைக் காட்டினான். கறி வகையறாக் களுக்குள் கரண்டியை மென்று கொள்கிற விருத்தத்திலே கரங்களில் ஒரு லய ஞான சாயல் இழையோடிக் கொண் டிருக்கிறது

இத்தனைக்கும் ஆளோ கோது நெஞ்சன். காய்ந்து முறுகின முருங்கைக்காய் மாதிரி தேகச் சதைகள் எலும்பு களில் உமிந்து பானம் விட்டுக் கிடக்கின்றன. என்றாலும், பரிமாறுதல் மின் வேகத்தில் மிக நேர்த்தியாகவே நடக் கிறது. சூம்பிய பயிற்றங்காய் கணியம் உலும்பிப் போன அவன் விரல்களில் உண்டாகின்ற கெச்சிதம் அவன் உடற் திராணியிலிருந்தா அல்லது 'படி' அளக்கிற இந்த லக்ஷ்மி ஹோட்டல் முதலாளி முறைத்துப் பார்க்கின்ற உறுத்தற் பார்வையிலிருந்தா என்பதை எழுத்தாளர் கந்தசாமியே பலநாட்களாக யோசித்ததுண்டு.

யோசனை சிரசு முட்டினாலும் சங்கதி அவர் புத்தி யில் சரியாகப் பிடிபடுகிறதாயில்லை. வர்க்க முரண் பாடான சமுதாயத்தில் பேனாவைத் தூக்கி விருத்தமாகப் பிடித்து அழுத்தமாக எழுதுகிறவனுக்கு வருகிற 'வருத்தத்' தில் இதுவும் ஒரு தினுசான நோய். இதனால், 'அடுத் தவன் விவகாரம் நமக்கு எதற்கு?' என்று இவரால் சும்மா இருக்கவும் முடிவதில்லை. எழுதவென்று பேனா எடுத் தவன் புத்தகங்களைச் 'சப்பி' அவற்றின் அடிச் சரடுகளில் வாழ்க்கையைப் பார்ப்பதைவிட, வாழ்க்கையைச் சம்சாரித்து அதன் 'தலைவிதி'யை நிர்ணயம் பண்ணி எழுதுகின்ற சிருஷ்டிகளில்தான் உண்மையான வாழ்க்கை நிலையைத் தூய வெளிச்சமாகக் காண முடியும் என்கிற கட்சிக்காரன் அவர். எனவே, ராமன் இப்படி நோஞ்சானா'கின விருத்தத்தைக் கண்டு பிடிக்க நமது 'வித்துவ சிரோமணிகள் யாத்த சுத்த இலக்கணத் தமிழ்ப்

பிரபந்தங்களான 'சாஸ்திரீக முறை'ப் பிரமாணங்களில் தஞ்சமடைந்து அந்த 'விடைப்பரீட்சை'யில் இறங்காமல், அதன் தாற்பரியங்களை அவனிடமே கேட்டறியக் கந்தசாமி மனம் துடித்தது.

அவனும் தனது விருத்தாந்தங்களைத் தன்னிடம் சொல்லி விடிவு காண ஒருவிதத் துடிப்போடு தன்னைப் பார்க்கிறதையும் கந்தசாமி அவதானித்தார்.

'எல்லாவற்றையும் பிறகு ஆறுதலாகப் பேசிக்கொள்வோம்' என்று அவர் மனம் தீர்மானித்தது.

ராமன் கெண்டைக்கால்களைச் சொடுக்கி வளைத்து முழங்காற் தட்டிட்டபடி குனிந்து பட்டறையில் வீற்றிருக்கிற முதலாளி துரைச்சாமியைப் பார்த்த கண்ணோடு கந்தசாமியை நோக்கிக் கண் சிமிட்டினான்.

'என்ன விஷயம்?' என்று கேட்கிற பாவனையில் அவரும் அவனை நோக்கினார்.

''தொரே, ஒங்ககிட்ட ஒரு முக்கிய சமாசாரம் பேசோணும்'னு இருக்கேன். ஆவகாசங் கெடைக்குங்களா?''

கந்தசாமி ராமனை வாஞ்சையோடு உற்றுப் பார்த்தார். கண்ணில் ஒருவித பாச உணர்வு தேங்கியது.

''நானும் உம்மோடு ஒரு முக்கிய சங்கதி பறைய வேணுமெண்டுதானிருந்தன். சந்தர்ப்பம்தான் கிடைக்கவில்லை.''

ராமன் முகத்தில் மிகையான மகிழ்ச்சிப் பிரவாகம் நீவிற்று. முகச் சோலையில் பூ மலர்ந்தது. கண்களில் வெள்ளி மினுங்கின பிரகாசம். இமைகள் துருத்தித் துடித்தன. கால்களில் 'துளுதுளு'ப்பு. நெஞ்சுக்குள் பஞ்சு பொதிந்த சாடை ஒரு திடுக்காட்டம். மனத்தில்

ஆனந்த சாகரக் கொந்தளிப்பு. அப்படியே பிரமித்துப் போனான்.

''தொரே, நீங்க என்னய இம்புட்டு ஒசத்தியா நெனைப் பீங்க'ன்னு எண்ணலே இப்பவே சொல்லுங்களேன. அதென்ன சமாசாரம்?''

கந்தசாமி மின்னிச் சிரித்தார்.

''அது சரி, ஹோட்டல்களிலே வேலை செய்கிறவங்க ளெண்டால் வீரமார்த்தாண்டம் கொழு கொழுத்துக் கட்டுப்பெட்டி கணக்கா இருக்க வேண்டாமா? நீர் என்னடாவெண்டால் நெத்தலிக் கருவாடு போல உப்பிப் போயிருக்கிறீரே?''

''இதுங்களா வெசயம்?''

''இல்லை. சும்மா கேட்டேன். உம்முடைய சங்கதி பறைய ஊரிப்பட்ட விஷயமெல்லாம் இருக்கு.''

''பாத்தீங்களா, நான் நெனச்சது சரியாப் போச்சு.''

''அப்படி என்ன நினைத்தீர்?''

''நானு ஒங்ககிட்ட எதைச் சொல்லோணும்'னு நெனைச்சனோ அதெ நீங்களே சரியாக கேட்டுப் பூட்டீங்க. அதான் எழுத்தாளங்களுக்கும்மத்தவங்களுக்கும் உள்ள வெத்தியாசம்.''

கந்தசாமி சிரித்தார்.

''என்ன வித்தியாசத்தைக் கண்டீர்?''

''எழுத்தாளங்கென்னா சமுதாயக் கண்ணாடி'ன்னு நீங்க எழுதினதெ எப்பவோ படிச்சிருக்கேன். அது நெசந் தான்னு இப்போ தெரியுது நான் நெனைக்கவே அது மாதிரி நீங்க எங்கிட்டக் கேட்டுப் பூட்டீங்க. அதான் ஏஞ் சமாச்சாரத்தெ ஒங்ககிட்டச் சொல்லோணும்'னு நெனைச்சுக் கிட்டிருந்தேன்.''

கந்தசாமி வாயில் சிரிப்பு வெடித்தது. தேகத்தில் ஒருவித சிலிர்ப்பு. உயிரும் உடலும் போல் ஒரே தத்துவத் தூண்களாயிருந்த தோழர்கள், தாங்களே அடி சறுக்கி விரோதிக்கவும், எழுதுகோல் தூக்க ஆசைப்பட்டவர்கள் கன்னித் தவம் செய்து தங்குமடம் வைத்துக் குளிர் காய்ந்து சூடேறிக்கொண்டு போக வைத்ததும் கந்தசாமி எடுத்த இந்த இலட்சியப் பேனா தான்.

வரலாறு இப்படி இருக்க, அதே பேனாவை நம்பி ராமன் முறைப்பாடு செய்ய வருவதும் சிரிப்புக் கிடமாகவே பட்டது. ஆவனும் தன் காரியத்தை நைஸாக முடித்தபின் உதறி எறிந்து விட்டு நீண்ட பயணம் போகும் அற்பன் ஆகான் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

'அண்ணா' என்று அணுகு, 'தோழர்' எனத் தழுவி, அடி வைத்துக் களம் ஏறிய ஏணியை உதைத்த கால்கள் எத்தனை? மணக்கோலங் கண்டு வெட்கித்த சிறுமி தன் பாவாடை கிளப்பி முகம் மறைத்த விருத்தத்தில் தன்னாணவங் கொண்டு வழி தவறிப்போன செம்மறிப் புருவைகளினால் அர்ச்சிக்கப்படுவதும் ஏச்சுக் கேட்பதும் அவரின் இந்த ஊற்றுப்பேனாதான். இந்த இலக்கியப் பேனாவுக்குத்தான் எத்துணை சக்தி? அலட்சியத்தை நக்ரகிக்கிற பேனா இது; இலட்சியத்தின் வஜ்ஜிர உருக்கு...

''என்னாங்க தொரே, ஒங்க பாட்டுக்குச் சிரிச்சுக்கிட்டு அப்புறம் மவுனமாயிட்டீர்களே?''

கரண்டி விழுந்த மாதிரி அவர் மன இழை 'ணங்' கிட்டது. மறுபடியும் சிரித்தார்.

''இல்ல... ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சுயப் பிரச்சினை. அவனவன் பிரச்சினைதான் அவனவனுக்கு முக்கியம். அது முடிகிறவரைதான் இலட்சிய வெறியோடு ஒட்டிக் கொள்கிறான். அப்பாலே உண்ணி கழன்ற மாதிரி—நாய் வயிறு புடைக்க உண்டால், இலையைக்கூட நக்காதல்லவா? அதுபோல...''

ராமன் முகம் 'திக்' கிட்டு நைந்தது. முகச்சோணையில் ஒருவித அசுமந்தப் புரையோட்டம்.

''நீங்க சொல்றது ஒண்ணுமாப் புரியலீங்க. கொஞ்சம் வெளப்பமாச் சொல்லுங்களேன்'' என்றான் ராமன்.

'திடீ'ரென அதிரும் உறுமலோடு நரிடி ஓங்காரித்த சத்தம் அப்போது ராமன் காதில் கமாரிட்டுக் கேட்டது.

"டே, ராமு... சாப்பிட வந்தவங்களோட கதை அளக்கிறியா. இல்லே, 'சப்பள' பண்ணுறியாங்கிறேன்."

ராமன் மீது முதலாளி துரைச்சாமி எறிந்த நெருப்புக் கண் எடுபடுவதாயில்லை. அகோரப் பார்வை.

அவன் நெஞ்சு பப்படமாக இடியுண்டது. உடனே பம்பரமாக மாறினான்.

கறிச்சட்டி உலும்ப அவுக்கென்று விலகி, வழக்கம் போல் நெரிசலுள் நுழைந்தான்!

மறுபாட்டம் அவன் வைக்கிற கேருந்தொனி ஹோட்டலடங்க எதிரொலிக்கலாயிற்று...

"இங்கிட்டு ஒரு மீன் கொழம்பு...?"

''ரையிட்டு.''

"இந்தால ஒரு எல போடு... போட்டாச்சா?"

"சரி ஆச்சு."

''என்னது, நின்னுக்கிட்டிருக்கீங்க... ஒக்காருங்க, என்னாங்க, மச்சமா சைவங்களா?''

"சைவம்."

"இடியாப்பமா, இட்லீங்களா?"

''அதுங்க வேணாம், தோசை.''

''ஏ... இங்கிட்டுத் தோசை வையி''

''சரி, வருது.''

''அங்கிட்டு எலக்கிச் சாம்பாறு?''

''இந்தாடி சாம்பாறு வருது.''

''ஏ பில் மாஸ்டர், இங்கிட்டு ஒரு 'புல்' சாப்பாட டுக்குப் 'பில்' லுப் போடு.''

''சரி, மூணம்பது.''

சாப்பிட்ட ஆசாமிக்கு வயிறு பற்றி எரிந்தது.

'ஆ... மங்கொள்ளைக்காரங்க... கொள்ளயில போவாங்க...'

வீழ்ந்து போன அரச மகுடங்களைக் கண்ட ராஜதானியான கண்டி மாநகரத்தின் இதயத்திலே ஒரு மணிக்கூண்டுக் கோபுரம கம்பீரித்து நிற்கிறது.

இந்தப் புண்ணிய கோபுரத்தைச் சுற்றித் தெட்டந் தெறியனாகப் பல்வேறு ரகத்திலே 'இந்நாட்டு மன்னர் கள்' பிக்ஷா பாத்திரவாதிகளாகச் சஞ்சரித்துக் கொண்டி ருப்பதை அன்றாடம் தரிசிக்கலாம்.

கோபுரத்தின் பக்கவாட்டாக உள்ள பிராத பஸ் நிலையத்தைத் தாண்டி வருகிற போகிற பாதசாரிகளின் நடமாட்டங்களை ஊடறுத்துக் கொண்டு கடலை மிட்டாய் வண்டிக்காரர்கள் போடுகின்ற சத்தம் ஒரு புறமும், குழந்தைக் கணங்கள் தெலிச்சி முடுக்குகளிலிருந்து போடுகின்ற கூச்சல்களும், கதறி உறுமுகின்ற பஸ் கார் களின் இரைச்சல்கள் மறுபுறமும் எழுத்தாளர் கந்த சாமியைத் திக்குமுக்காட வைத்தன.

அவர் கண்கள் மிட்டாய் வண்டியை நோக்க, வாய் சாடையாக ஊறிற்று. வந்த வழியாகத் திரும்பிய

கந்தசாமி ஒரு சரை கடலை வாங்கி, 'பேவ்மெண்ட்' ஓரத்திலே நின்று வேடிக்கை பார்ப்பதோடு கொறிக்கத் தொடங்கினார்.

சொற்ப நேரத்தில் எங்கோ பழக்கப்பட்ட ஒரு குரல் 'சடா'ரென்று இந்த எழுத்தாளர் செகிட்டில் அடித்த மாதிரி 'நரிடி'க் கேட்டது.

''தொரே, எங்கிட்டு இந்தப் பக்கம்?''

கந்தசாமி யூகித்தது பிசகு. அது பிச்சைக்காரன் குரல் அல்ல; ஹோட்டல் போட்ட சத்தம்.

அவர் வாயடங்கச் சிரித்தார்.

''ஒரு சோலியாக வந்தேன்.''

''ஓ... எழுத்தாளங்கல்லியா, கதெகிதே எழுதுறத்துக் காவ 'வெசயம்' தேடிக்கிட்டுத் திரியிறீங்களாக்கும்...?''

கந்தசாமி தேகங் குலுங்கக் 'கலகல'த்துச் சிரித்தார்

சமுதாயத்தில் புரையோடிப் போன ரண காயத்தைப் பிரக்ஞை பூர்வ உணர்வின் அனுபவ வாயிலாகத் தெரிந்தோ புரிந்தோ கொள்ள முடியாத பேனா தூக்கிகள் 'ஜனரஞ்சகம்' என்ற பாசாங்கில் ஆபாசங்களைக் கொட்டி மானிதத்தைக் கறைப்படுத்துகின்ற குப்பைகளை 'இலக்கியங்கள்' என்று வாசிக்கிறதன் பயனாக மனிதர் உழைப்பைச் சுரண்டுபவர்களையே அறியாமல் ராமனைப் போல் பல இலக்கியப் பிரமாக்கள் விழிகண் குருடராகி விட்டார்கள் என்பதைக் கந்தசாமி நினைத்து மனங் கறுவலானார்.

அப்படித்தான் ராமனும் வீதியில் தன்னைக் கண்டவுடன் சும்மா இப்படி ஒரு போலியான மகுடஞ் சூட்டினான் என்று எண்ணினார்.

'சமூகப் பிரக்ஞையில்லாத எழுத்தாளர்களே தடம் புரளும் போது பதினெட்டு இருபது மணி நேரமாக வெளி உலகே தெரியாமல் ஹோட்டலுக்குள் அடைபட்டிருக்கிற அப்பாவி ராமனுக்கு என்னதான் தெரியப் போகிறது?'

சற்று மௌனமாக நின்றார்.

இவனைப் பார்த்தால் ஹோட்டலிலே பம்பரமாகச் சுழன்றடிக்கிற ராமனாக இப்போது தெரியவில்லை· சாது போல் குடங்கி நின்று கொண்டிருந்தான்.

''சரி, உம்முடைய பிரச்சினை என்ன, சொல்லும்?'' என்றார் கந்தசாமி.

ராமன் உற்சாகமடைந்தான்.

''சேர், சில முக்கிய வெசயங்கள் ஒங்ககூடப் பேசோணும்'னு நெனச்சேன். ஆனா, நேரந்தான் கெடைக்கலே. இருந்திட்டு லீவு கீவு கேட்டா, 'ஒனக்கென்ன பொஞ்சாதியா புள்ளயா, என்னாத்துக்கப்பா லீவு'ன்னு மொதலாளி மொறைச்சுக்கிறாரு. மொறைச்சுக் கிட்டாலும் பரவாயில்லே'ன்னு கொஞ்சம் நறுவிசாக் கேட்டுப்புடலாம். அப்படிக் கேட்டுட்டா, பொறவு 'வேலக்கே வரோணும்'னு சொல்லிப்புடுவாரு. நா ஒருத்தன் வெளியே போனா இப்ப ஒன்பது பேர் உள்ளே வரக் காத்துக்கிட்டிருக்காங்க. நெலவரம் இப்புடி இருக்கப்போ லீவு எடுக்க முடியுங்களா?''

கந்தசாமி மனம் கோபமாகவும் விசனமாகவும் அழன்றது. சற்று எரிச்சலாகவே கேட்டார்:

''அப்படியென்றால் நீர் எந்தக் காலமுமே லீவு எடுப்பதே இல்லையா?''

''ஏதுங் காய்ச்சல் கறுப்பு'ன்னு வந்தா லீவு எடுத்துக்குவேன். எடுக்கிறது என்னாங்க, மொதலாளியே கூப்பிட்டு,

'ஒடம்பைக் கவனிச்சுக்கோடாப்பா'ன்னு கருணையோட நல்லாப் பாத்துக்குவாரு. வூட்டுக்குப் போறதுன்னா மட்டும் லீவு குடுக்கப் பஞ்சிப்படுவாரு.''

கந்தசாமி அட்டகாசமாகச் சிரித்தார்.

''உம்முடைய தேவைக்கு மட்டும் லீவு தராத முதலாளி உமது உடம்புக்கு ஏதும் ஆகிவிடுகிறபோது கருணையோடு கவனித்துக் கொள்கிறாரே. அது ஏன் என்று உமக்குப் புரிகிறதா?''

''இது தெரியாதுங்களா...? அவரு என் மேலே அம்புட்டு அன்பு வெச்சிருக்காரு. அதாங்க''

கந்தசாமிக்குத் தெரியாத ஒரு விஷயத்தை அவருக்கே எடுத்துச் சொல்லிவிட்டதாக ஒருவிதமான பெருமித அக்களிப்பு ராமன் முகத்தில் சுண்டி நின்றது.

கடலையை வாயில் போட்டுக் கொறித்துக் கொண்டு கந்தசாமியைப் பார்த்தான்.

அவன் சொன்ன சம்பவங்களையும் சமாசாரங்களையும், அவன் தாற்பரியங்களையும் அப்படியே திருப்பி விவரித்துக் கந்தசாமி அவனுக்கு விளக்கிவிட்டுக் கடைசியாகக் கூறினார்:

''உமது தேவைக்காக லீவு தருவதற்கு மறுக்கிற முதலாளி, உமக்குக் காய்ச்சல் கறுப்பென்றால் மனங் கனிந்து உடம்பைக் காப்பாற்ற முனைவதன் அர்த்தத்தை நீர் சரியாகப் புரிகிறவரைக்கும் அவர் உமது வாழ்க்கையில் அல்ல, உமது உடம்பின் தேவையில்தான் எப்போதும் கரிசனை கொள்வார். அவருடைய உல்லாச வாழ்க்கைக்கு வேண்டியது உமது உடல்நலம்மாத்திரம்தான். இந்தச் சின்ன விஷயத்தைக் கூடத் தெரியாமல் இருப்பதால்தான் உம்மைப் போன்ற இலட்சக்கணக்கான தொழிலாளர்கள்

இலங்கையில் இன்னும் தலைநிமிர முடியாமல் தவிக்கிறார்கள்...''

ராமன் மலாரடித்து நின்றான்.

''என்ன, நான் சொன்ன விஷயம் புரிகிறதா?''

''ஆமா, புரியுதுங்க.''

''எங்கே, புரிஞ்சதைச் சொல்லும் பார்க்கலாம்?''

ராமன் முழிசினான்.

''சரி, கவனித்துக் கொள்ளும். ஒரு தொழிலாளி தனது வாழ்க்கையின் எதிரியை எப்போது சரியாக இனங் கண்டு கொள்கிறானோ, அப்பவே அவனுக்கு விமோசனப்பாதை திறக்கப்படுகிறது. இன்று எத்தனையோ லட்சக்கணக்கான தொழிலாளர்கள் தமது வாழ்க்கையில் தாமே மண்ணை அள்ளிப் போட்டுத் தீராத கோர வறுமையில் சிக்கித் தவித்துக் கொண்டிருப்பதற்குக் காரணம், அவர்கள் தங்கள் உண்மையான பகைவனைச் சரியாக இனங் கண்டு கொள்ளாமல் இருப்பதுதான்...''

''ஆருங்க பகையாளு...?''

ராமன் முகத்தில் ஒருவித வியப்பு. மனத்துள் விவரிக்க முடியாத ஏதோ ஒரு சுமை கூடி அந்தராத்மாவாகச் சஞ்சரித்தது. கந்தசாமியின் கருத்தில் தெறித்து வந்த வார்த்தைகள் அவன் சிந்தனையில் கவிந்திருந்த பூஞ்சாணத்தை நீவின. கடலை கொறித்த அவன் வாய் அலகுப் பூணாரத்தில் தக்கிட்டு ஆடாமல் பிளந்து கொண்டிருந்தது.

தான் சொன்ன விஷயங்கள் அவன் மனத்தில் ஊறி விட்டதை அவன் பார்வையிலிருந்து யூகித்த கந்தசாமிக்கு உற்சாகம் பிறந்தது. மேலும், இதைப் பற்றி விளக்கி

இவனை முழுமனிதனாக்க வேண்டும் என்று நினைத்து ஏதோ சொல்ல வாயெடுத்தார்.

அதற்கிடையில் ராமன் வாய் முந்தி விட்டது:

''தொரே, நானு ஒங்ககிட்ட எதைக் கேக்கோணும்'னு நெனச்சுடறனோ, நீங்க அதெச் சொல்லி வச்சாப்பல சொல்லிப்புடுறீங்க. நாங்க ரோசிக்கிற வெசயங்கள நீங்க எப்புடிச் சுளுவாக கண்டுபுடிச்சுடுறீங்க?''

கந்தசாமி சிரித்த சிரிப்பு அவர் இதயத்துள் அமுங்கியது.

''அதோ அந்தக் காட்சியைப் பார்'' என்றார்.

கோபுரத்துக்கு எதிரே உக்கிப்போன சுவரில் ஒட்டிக் கிடந்த ஒரு சினிமாப் போஸ்டர் அது.

'அமெரிக்கன் பை நையிற்' என்ற அந்தப் போஸ்டரிலே, எத்தனையோ வெண்மேனி நிர்வாண அழகிகள் சில தூங்கிணி ஆடவர்களுடன் இணை சேர்ந்து, தம் சதை பிதுங்கித் துன்னி வழியும் அம்மணக் கோலத்தில் சல்லாபமாக ஆடுகின்ற ஐரோப்பிய நடனம் ராமன் கண்களைக் காந்தி இழுத்தது. அவன் மேனி கூம்பிச் சிலிர்த்துக் கொண்டது.

சற்று வேளை வாய் பிளக்க நுணாவிப் பார்த்த ராமன் பார்வையை இடுக்கி எடுத்து இவர் பக்கம் திருப்பிக் கொண்டு கேட்கிறான்:

''தொரே, இதுங்களப் பாக்கிறப்போ வெட்டிவச்ச இறைச்சிகணக்கா அசிங்கமாயிருக்கே. இப்புடியாப் பட்டதுங்கள 'பப்ளிக்ரோட்'ல ஒட்டினா எளம் பொடி பொட்டக-குஞ்சு குமருவ கெட்டுப்பூடாதுங்களா?''

கேட்ட சுவட்டோடு தனக்குள்ளே சாடையாகச் சொண்டு சுழித்துச் சிரித்தான்.

கந்தசாமி ஒஸ்கார் வயில்ட் நாவல்களையே கரைத்துக் குடித்து அவற்றின் நாற்றங்களை வீசியவர். சிரிப்பு வந்தது. படத்தையே பார்த்தபடி நின்றார்.

''ஆமா சேர், இப்புடி நாஞ் சொல்லிப்புட்டன் ஆனா நாமளும் ஒரு நாளு கெட்டவேல ஒண்ணு செஞ்சுப் புட்டன் சேர். அதெ நெனச்சா இப்பவும் தல புடுங்கின மாதிரி வெக்கம் 'கூசி'ன்னு வருது. நம்பளக்கொத்தலங்க சில நேரங்கள்ல தன்னைத் தெரிஞ்சுக்காம எம்புட்டுப் பெரிய பெலவீனனாயிடறாங்கிறதே அன்னைக்குத்தான் தெரிஞ்சுக்கிட்டேன்''

தான் சொல்லத் தகாத ஒன்றை அவருக்கு வெளியிட்ட ஒரு குற்ற உணர்வோடு தக்கு விட்டு நின்றான் ராமன்.

கந்தசாமி கிளறினார்.

''அதென்ன விஷயம்?''

''ம்...''

''பயமாக இருக்கிறதா? தனது பலவீனங்களை உற்றவர்களுக்கு வெளிப்படுத்துகிற போதுதான் ஒருவன் பலவானாக முடியும். ஆனபடியால் யோசிக்காமல் சொல்லும்.''

இரண்டு கடலைச் சரைகள் காலியாகின.

ராமன் குழைந்து கொண்டு சொன்ன கதையில் கந்தசாமி சொக்கி நின்றார்.

ஒரு நாள் முதலாளி துரைச்சாமி வீட்டுக் கலியாணம். அன்று லக்ஷ்மி ஹோட்டல் திறக்கவில்லை. ஹோட்டல் தொழிலாளர்களே முதலாளி வீட்டுக் கருமங்களில் 'எடுபிடி' வேலைகாரர்களாக மாறியிருந்தார்கள்.

அன்றுதான் அவர்களுக்கு லீவும் கிடைத்தது — களியாட்டத்துக்கான ஓய்வு.

ஆண்கள் பெண்கள் குஞ்சு குருமன்களாகச் சினிமாவுக்குக் கிளம்பி விட்டார்கள். ராமனும் கூடவே போயிருந்தான்.

வேல்ஸ் தியேட்டருக்குள் நுழைந்தாய் விட்டது.

ஒரே ஏமாற்றம்.

'வயது வந்தவர்களுக்கான அமெரிக்க-பிரென்ஸ் கூட்டு வெளியீடான இங்கிலீஷ் படம் அது.

'அறிவு வராத' இவர்கள் தங்கள் தலையெழுத்தாக 'அறிவாளி'களால் வெளியான அந்தப் படத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கூடவே படம் பார்த்துக் கொண்டிருந்த ஜானகி அத்தனை இளங்காளையர் கண்களிலும் 'ரதி'யாகி விட்டிருந்தாள்.

ராமனின் கரங்கள் ஒரு கட்டத்தில் அணில் தாவின மாதிரி ஜானகி தொடையை மெதுவாக வருடிய போதும் அவள் அவன் ஸ்பரிசத்தில் லாகிரி கொண்டவளாய் மௌனித்திருந்தாள்.

பச்சைச் சதைகளாகப் பிதுங்குகின்ற வெள்ளைப் பொம்மனாட்டிகளின் நிர்வாண கோலங்களை— அந்தப் படத்தை அவள் அருவருத்துக் கொண்ட போதும், ஏதோ ஓர் உணர்வில் தியங்கி மயங்கிப் போயிருந்தாள்.

ராமனுக்கு அதே வெறி; ஜானகிக்கும் ஏக மயக்கம்.

உணர்ச்சிகள் கெந்தகித்தன.

"சீ, என்னா இது?"

ஜானகி கிச்சுக் குரலின் சீறல் அவள் மனத்துள் புழுங்கிற்று.

கும்மிருட்டில் பிகு பண்ணிய முகக் கோலங்கள் இருவருக்குமாக...

படம் 'சப்' பென்று முடிந்து விட்டது.

'லையிற்', 'ப்ளிச்'சிட்டுப் பிரகாசித்தது.

ஜானகி குதறி முறைத்துக் கொண்டு எழுந்தாள்.

அவன் முகத்தை இதன்பின் அவள் பார்க்கவேயில்லை.

வீதி ஏறி ஒரு சந்தி கழிந்து மறுமுனை திரும்பிய போது ராமன் எதிரே ஜானகி நின்றாள்.

அவள் சீறிக் கக்கின வார்த்தைகள் ராமன் நெஞ்சில் விஷமுள் ஏறியது போல் இப்பவும் கடுகடுத்துக் கொண்டிருந்தன.

ஜானகி என்னமாய்ச் சீறினாள்?

''நீயி ஒரு மனுஷனாங்கிறேன். பயத்தில ஊமையா இருந்துட்டேன்'னெதெப் புரிஞ்சுக்காம, நானு ஒன் மேலே ஆசை வச்சுண்டாப்பல நெனச்சு நாயாட்டம் பின்னால சுத்திக்கிட்டு வர்றியா? ஒன்னப்போல காமாந்திரப்பட்ட ஆம்படயாங்களுக்கு பொம்புளயாப்பட்டவங்க ஒருக்காலும் வாழ்க்கப்படவே மாட்டா... தெரிஞ்சுக்க மூதி.''

தன் விருத்தாந்தங்களை இத்துடன் நிறுத்திய ராமன் நாணம் மொய்க்கக் கூனிக் குறுகிக் கொண்டே கந்தசாமியைப் பார்த்து நைந்து சிரித்தான்.

கந்தசாமி அப்பவும் மௌனமாகவே நின்றார்.

''சேர், நம்ப வாழ்க்கையிலே அப்புடி ஒருமுறை தாங்க தவறு செஞ்சிருக்கேன். பொறவு அப்புடிக்கொத்த வெசயங்கள் என் மனசால கூட நெனைக்கிறதில்லீங்க. ஆனா, அவ என்னயப் பாத்து மொறைச்சுப் பேசினாவே, இன்னும் அதாங்க வருத்தமா இருக்கு...''

கந்தசாமி அழுத்தமாகச் சொன்னார்:

"அவ சொன்னது நூற்றுக்கு நூறு சரி."

அவன் முகம் அப்பாவித்தனமான ஒரு சின்னஞ்சிறு குழந்தை போல் தேம்பியது.

"இப்போ இன்னொரு தடவை அந்தப் போஸ்டரை வடிவாகப் பாரும். அவ சொன்னதன் அர்த்தம் சரியாகப் புரியும்" என்றார் கந்தசாமி.

ராமன் உன்னிப்பாகப் பார்த்தான்.

'மனித வர்க்கத்தின் உன்னத சக்தி வாய்ந்த தாய்க்குலத்தை விலை மாதர்களாக்கி ஆண்குலம் தமது போதை வஸ்துவாக ஆக்குமாகில் முழுச் சமுதாயமே சாக்கடையாகி விடும்' என்று விளக்கிய கந்தசாமி, மனித குலத்தின் அர்த்தபுஷ்டியான வாழ்க்கை என்னவென்பதையும் அதன் மேம்பாட்டையும் ராமனுக்கு எடுத்துச் சொன்ன போது, அவன் அந்தச் சினிமாப் போஸ்டரையும் ஜானகி கூறிய வற்றையும் நினைத்துப் பார்த்தான்.

அவன் அனுபவத்தினூடாகவே கந்தசாமி மேலும் கூறுகின்றார்.

"காமாந்திர ஆம்படயாங்களுக்கு பொம்புளயாப் பட்டவங்க ஒருக்காலும் வாழ்க்கைப்படவே மாட்டா' என்று ஜானகி சொன்னாளே, அதுபோலத்தான் இந்தக் காமக் கழிசடை விகாரக் காட்சிகளை யோக்கியமாக வாழத் துடிப்பவர்கள் ஏறெடுத்துப் பார்க்க மாட்டார்கள். தமக்கெதிராகக் கிளர்ந்தெழுகின்ற தொழிலாளர்கள் தங்கள் வாழ்க்கைப் பிரச்சினைகளை முற்றாகவே மறந்து, அவர்களின் உரிமைப் போராட்ட உணர்வுகளை வேறு திசைகளுக்குத் திருப்பி அவர்களை முட்டாள்களாக்குவதற்காகவே அவர்களைச் சுரண்டிக் கொழுக்கின்ற முதலாளிகளும் பணநாயகவாதிகளும் 'கலைகள்—

கலாசாரங்கள்' என்ற போர்வையில் இந்த வஞ்சகமான கேவலங்களை வெளியாகவே காண்பிக்கின்றார்கள். முதலாளித்துவங்களில் கண்கட்டி வித்தைகளில் இதுவும் ஒன்று. இந்த முதலாளித்துவம் மரணப்படுக்கையில் விழு முன் தொழிலாள வர்க்கத்தை நரகக் குழியில் தள்ளி விடப் பார்க்கின்றது. அதுதான் இங்கே அடிபிடி சண்டை களோடும் காமாச்சார அம்மணங்களோடும் கலை கலாசாரமாகப் படை எடுக்கின்றது தமிழ்ச் சினிமா உலகம் அதைக் காப்பியடித்து மக்களை முட்டாள்களாக்கு கிறது. இப்பொழுது புரிகிறதா...?''

''உண்மைதானுங்க'' என்று ஆமோதித்த அவன் வாயில் செப்பமாக ஒலிக்கவில்லை. ஒரே ஆதங்கம்.

அவன் மனச் சுமை ஒருவாறு குறைந்ததை அவதானித்த கந்தசாமி தனக்குள் பெருமிதப்பட்டுக் கொண்டார்.

கோபுரக் கூண்டு மணி ஒன்பது அடித்தது.

''சேர், பத்து மணிக்குள்ள ஒட்டலுக்குப்போயிடனும் இல்லேன்னா மொதலாளியும் கணக்கப் புள்ளயும் மூஞ்சியக் காட்டுவாங்க. போவங்களா?''

''அப்படியா? அது சரி, என்னோட ஏதோ முக்கிய விஷயம் பேச வேணும் என்று சொல்லிவிட்டு இப்ப ஒன்றுமே பேசாமல் நடையைக் கட்ட ஆரம்பிச்சாச்சே?'' என்று கந்தசாமி நினைவூட்டினார்.

''ஓ, அதுங்களா? அது பெரிய பாரதமுங்க. அதெப் பத்தி ஒங்ககிட்ட வெளப்பமாத் தெரிஞ்சிக்கிடணும்னு தான் கதைய ஆரம்பிக்கப் பாத்தேன். அதுக்குள்ளாவ அந்த அமெரிக்கன் சினிமாப் பொம்புளங்கட ஒரிஞ்சாணப் போஸ்டரைப் பாத்தப்போ, அது வேற எங்கிட்டோ பூட்டுது. நீங்க சொன்னீங்களே, அது மாதிரி இதுங்களப்

பத்தி ரோசிக்காம நம்ம வெசயங்கள மறந்திடத்தான் செய்யுது.''

கந்தசாமி 'கடகட' வென்று அங்கங் குலுங்கச்சிரித்தார்.

ராமன் தனக்குள் முறுவலித்துக் கொண்டான். அவன் முகம் உற்சாகத்தால் விரிந்தது. புதுமை கண்ட கோலம் மனத்துள் நிழலாடிற்று. எக்காளம் நெஞ்சுக்குள்ளே குதூகலித்தது. பஞ்சுக்குள் நடந்த மாதிரி அவன் தேகத்தில் ஒரு சுகம்.

அவன் மன நிலையைக் கந்தசாமி வள்ளசாகப் புரிந்து கொண்டார்.

'முதலாளி' என்ற துரைச்சாமிக்கு ராமன் என்னமாய் நடுங்கிச் சாகிறான்.

''இப்படியெல்லாம் நீர் பயந்து சாகப்படாது. எவனும் தனி மனித ஆதிக்கத்திலிருந்து விடுபட வேணும்.''

இந்தப் பேச்சில், 'ஹோட்டலுக்குச் செல்லவேண்டும்' என்ற அவசரத்தையோ அவசியத்தையோ கூட அவன் மறந்து நின்றான்.

''அது சரியுங்க. நம்ம வெசயத்தெ எப்புடித் தீர்க்கிறது? அதெ மொதல்ல தெரிஞ்சுக்கத்தான் ஒங்களத் தேடிக்கிட்டிருந்தேன். நீங்கதான் கதைய வேற பக்கமா மாத்திப்புட்டீங்களே.''

அன்று ஹோட்டலில், 'ஒங்க கிட்ட தனிய ஒரு வெசயம் பேசோணும்' என்று ராமன் சொன்னதை நினைவு படுத்தினார் கந்தசாமி

''ஆமாங்க சேர், அப்புடியெல்லாம் ராவு பகலா ஒழைக்கிறோம்...ஆனா, செம்மளா வாழ ஒருவழியும் கெடைக்க மாட்டேங்குதே. என்ன செஞ்சுக்கிடலாம் கிறீங்க?''

''அதுக்கு எத்தனையோ வழிகள் உண்டு. முதலில் ஹோட்டல்ல வேலை செய்கிற தொழிலாளர்கள் அனைவரும் ஒன்று கூட வேணும். பிறகு ஒரே கொள்கைத் தளத்தில் நின்று முதலாளியை எதிர்த்துப் போராட வேணும்.''

ஹோட்டல் கட்டடம் இடிந்ததுபோல் ராமன் நெஞ்சு கமாரிட்டது.

''என்னாங்க சேர், நாம மொதலாளிய எதிர்க் கலாமுங்களா? அவரு எந்தப் பெரிய பணக்காறரு. மேகம் முட்டின கோபுரமாட்டம் பங்களா, கார், வூடு வாசல், தோட்டம் தொரவு, ஆஸ்திபாஸ்தி'ன்னு உள்ளவர் கூட ஒண்ணுக்குமே வழியத்த நம்மளால இது முடியுங் கிறீங்களா?''

''ஏன் முடியாது?''

''எப்புடியுங்க முடியும்?''

கந்தசாமி பலமாகச் சிரித்தார்.

''முதலாளிக்கோ இழப்பதற்கு அவர் தொழிலாளர் களிடம் சுரண்டிச் சேகரித்த தேட்டங்களும் செல்வங்களும் தான் உண்டு. தொழிலாளர்களுக்கு அப்படியல்ல. அவர் களுக்கு இழப்பதற்கு ஒன்றுமேயில்லை. ஆனால், அவன் அடைவதற்கோ இந்த உலகமே இருக்கிறது—சகல சொத்துக்களும் தொழிலாளர்களுக்காகவே இருக் கின்றன.''

''அதென்னங்க, அப்புடிச் சொல்றீங்க?''

இந்தக் கட்டத்தில் ராமன் சற்று வீனாகக் காணப் பட்டபோதும், அவன் முகத்தில் ஏதோ சலனம் படர்வதை அவதானித்தார்.

''ஏன், அப்படியோசிக்கிறீர்?''

''மொதலாளி தர்ற சம்பளத்தில சீவிச்சுக்கிட்டு, அவங்க சோத்தைத் தின்னுக்கிட்டு அவங்கள எதிர்க்கிறதுன்னா, அது பெரிய துரோகமில்லீங்களா?''

கந்தசாமிக்கு வெடித்த கேலிச்சிரிப்பு, கனல் கக்கிய அவரின் கோபத்தை அடக்கிக் கொண்டு அட்டகாசமாக எழுந்தது. அந்தச் சிரிப்பே ராமன்மீது எரிச்சலாகமாறிற்று. ஆனால், அவனின் கோலத்தையும், வஞ்சகமற்ற குழந்தை போல அப்பாவித் தனமாக அவன் பேசிய வார்த்தைகளையும் நினைத்த மாத்திரத்தில் அந்த எரிச்சல் அவருள் புகைந்து அவனில் பரிதாபம் மேலிட்டது.

''நான் கேட்கின்ற சில கேள்விகளுக்கு நீர் பதில் சொல்லும். அப்போ இதெல்லாம் ஓரளவு புரியும்'' என்றார் கந்தசாமி.

''சரியுங்க'' என்றான் ராமன்.

''நீர் ஒரு நாளைக்கு எத்தனை மணித்தியாலம் ஹோட்டலில் வேலை செய்கிறீர்?''

''காலம் பொற அஞ்சு மணிக்கு ஒழும்பினா, ராவு பத்தரை பதினொரு மணி யாகுங்க,''

''அப்போ, ஒரு நாளைக்குக் கிட்டத்தட்ட பதினேழு பதினெட்டு மணி நேரம் வேலை செய்கிறீர். அப்படித் தானே?''

''அப்படிச் சொல்ல முடியாதுங்க. இடையில ஒருக்கா 'ஓய்வு'த் தருவாருங்க.''

''சரி, அந்த ஓய்வு போக, பதினாறு மணித்தியாலம் போல வேலை செய்யவேணும். இல்லையா?''

''ஆமாங்க.''

''அதுக்கு அவர் எவ்வளவு சம்பளம் தருகிறார்?''

"அதாங்க பெரிய மோசம். தனி ஒரு ஆளு ஒரு கெழமைக்குச் சீவிக்கவே போதாதுங்க."

''சரியப்பா, எவ்வளவு தருகிறார்?''

"அம்பதும் சாப்பாடும்.''

"என்னது, அம்பதா?"

''புது வருஷத்தோட அறுவது தாறதாச் சொல்லி யிருக்காரு.''

"அதுக்கு இன்னும் ஏழு மாதம் இருக்கே?"

"என்னமோ அப்புடித்தான் சொன்னாரு.''

''நீங்களாகக் கேட்டீங்களா, இல்லை, அவராகவே சொன்னாரா?''

"நாங்கதாங்க கேட்டுக் கிட்டிருந்தோம்....''

கந்தசாமி பெருமூச்சு விட்டார்.

''எட்டு மணித்தியாலம் உழைத்தே இன்று இதைவிட இரண்டு மடங்கு சம்பளம் பெறுகின்ற தொழிலாளி சீவிக்க முடியாமல் அன்றாடம் செத்துக் கொண்டிருக்கிறான். அதே வேளை நீர் அதைவிட இரண்டு மடங்கு மணி நேரமாக வேலை செய்கிறதும் போதாமல் அதனிலும் பார்க்க ஆகக் குறைந்த ஊதியத்துக்குத்தானே உழைக்கிறீர்?"

"ஆமாங்க, உண்மைதானுங்க. இதுக்கு நம்மளால என்னாங்க ஆவப்போவுது?''

"இப்படியெல்லாம் மேலதிக நேரமாகப் பாடுபட்டு யாருக்காக உழைக்கிறீர்?"

"இதென்னாங்க புதுக்கேள்வி?''

''புரியவில்லையா?''

''ஒண்ணுமாப் புரியலீங்க.''

''பொதுவாக எல்லாரும் எட்டுமணி நேரமாக வேலை செய்கிறபோது, நீர் மேலும் எட்டு மணி நேரமாகப் பாடுபட்டு வெயர்வை சிந்தி உழைக்கிறீரல்லவா?''

''ஆமாங்க...''

''அப்படி யாருக்காக உழைக்கிறீர்?''

ராமன் தறுதறுத்து முழிசினான்.

''என்ன முழுசுறீர்? அப்படி மேலதிக நேரமாய் முதலாளிக்காகத்தானே உழைக்கிறீர்? இது புரிகிறதா?''

'ஆமா...பாக்கப்போனா அப்புடித்தான தோணுது,' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

வியப்பிலாழ்ந்த அவன் முகக் கோலம் மாறவில்லை. வாய் திறந்து மறு உத்தாரம் சொல்லவும் முடியவில்லை. திக்குமுக்காடிக் கொண்டு கந்தசாமியைப் பார்த்தான்

கந்தசாமி இப்போது சற்று உறுத்திக் கேட்டார்.

''உமது மனசிற் படுகிறதைச் சொல்லும். அப்படி யாருக்காக உழைக்கிறீர். முதலாளிக்காகத்தானே?''

ராமனைப் பீடித்த பிரமை மண்டைக் குழியில் அம்மிக் கொண்டது. மூளையில் ஒருவித மசகல்.

அப்போது கோபுர மணி அடித்தது.

''சேர், மனசு என்னமோ பண்ணிது. மணியும் பத்தாவுதுங்க. பிறகு பேசிக்கிடறேன். தேடப்போறாங்க போவலாங்களா?''

''சரி, போயிட்டு வாரும்.,'

மின்னின வெளிச்சம்போல் இனங்காணாத உற்சாகத்தில் ராமன் முகம் பிரகாசிப்பதைக் கந்தசாமி அப்போது கவனித்தார். சிரிப்பு மலர்ந்தது.

ராமன் வழக்கத்துக்கு மாறாக அன்று சாக்குப் படங்கில் முடங்கிக் கொண்டு சோம்பிக் கிடந்தான்.

பில் மாஸ்டருக்கு ராமன் போக்குத் துப்புரவாகப் பிடிபடவில்லை. அவனுக்கு ஒரு சந்தேகம்.

''ராமுண்ணே, என்னா 'ஒருமாதிரி' இருக்கீங்க. என்ன சமாச்சாரம்? உடம்புக்கு ஏதுமா இல்லே அந்த ஜானகி சொப்பனத்தில வந்து கொழப்பிப்பூட்டாவா?''

ராமனுக்கு எரிச்சலாக வந்தது.

''போடா மூதிக் கழுதே. அவ ஒரு சிங்கிணி. அதெ நீம 'பெரீசா'த் தூக்கிட்டுப் போறியே?''

''அப்பம், ஒடம்புக்கு ஏதும் ஆவிச்சா?''

''ஒண்ணுமில்லே, மனசுதாண்டா என்னமோ பண்ணுது.''

பில் மாஸ்டர் விழித்து ராமனை உற்றுப் பார்த்தான்.

ராமன் ஏதோ கடுவலான யோசனையில் ஆழ்ந்து போயிருப்பது அவனுக்குப் புலனாயிற்று.

'எங்கனாச்சும் பொம்பள வெசயத்தில ஏதும் சங்கடத்தில மாட்டிக்கிட்டாரோ?'

ராமன் தலைமாட்டுப் படங்கில் கிடந்த பீடிக்கட்டில் ஒன்றை எடுத்து, முன் வாய்ப் பற்களில் வைத்து நரிடி, நெருப்புக் குச்சு தட்டிப் பற்றிவிட்டு, ஆழ்ந்த யோசனையோடு நெற்றிப்புருவங்களை நெருடிக்கொண்டு புகை வட்டம் விட்டுக் கொண்டிருந்தான். மனத்திலே ஒரு சுணை குதறிற்று.

'ஆமா, இம்புட்டுக்காலமா—ராவு பகலா நாம ஆருக்கு ஒழைச்சோம்?'

கண்கள் ஊனிக் கடைக்கூறுகளில் சாடையாகக் கசிந்தன.

பூட்டைப் பிரித்த துளையுளிபோல் நெஞ்சுக்குள்ளிருந்து அப்போது ஒரு துவாளிப்பு அவனில் கருக்கொண்டது.

தான் இப்போது நிர்க்கதியாக... எல்லாம் இழந்த ஓர் அனாதையாக இருப்பதுபோல் ஏங்கினான். முகம் வறண்டு சருமம் கருகிறகோலம். மீண்டும் மனத்தில் புயல்.

'இம்புட்டுக்காலமா, ஆருக்காக ஒழைச்சேன்?'

பில் மாஸ்டரை ஒருவாட்டி ஏற இறங்கப்பார்த்தான். முகத்தை மேலே வைத்து முகட்டைப் பார்த்துக்கொண்டு பீடியில் ஒரு 'தம்' இழுத்துவிட்டுச் சொன்னான்.

"பில் மாஸ்டர், நா இந்த ஓட்டலை வுட்டுப் புட்டு இனிமே எங்கிட்டாச்சும் ஒரு பொழைப்புத் தேடப் போறேன்"

கோடை இடிசாடை வந்த ராமன் வாக்கு பில் மாஸ்டர் நெஞ்சில் 'சடக்'கென இடித்தது. விக்கித்துப் போனான்.

'ஏன்'ணே, புத்தி கோணியிடுத்தோ?"

"இல்லே, எனக்கு இந்த ஓட்டல் வேல புடிக்கலே."

ராமன் இப்படிச் சொல்வான் என்று பில்மாஸ்டர் கற்பனையிலும் எதிர்பார்க்கவில்லை. அப்படியே அசந்துபோனான். கை தவறிய குண்டுக்கறிச் சட்டிபோல் அவன் மண்டை நரம்புகள் 'ணங்'கிட்டன. ஏலவே இடியுண்ட சுரீரிப்பு வேறு அவன் நெஞ்சைத் தாக்கியது.

' ஆமாண்ணே, ஒனக்கு இந்தமாதிரிக் கெட்டபுத்தி எப்புடித் 'திடீர்'ன்னு வந்துது?''

இதற்கு ராமன் ஒன்றும் பேசாமல் யோசனையிலாழ்ந்தவாறு பீடியில் ஒரு 'தம்' இழுத்தான். மூட்டைப்பூச்சி ஒன்று நன்னிக் கடித்தது. ஆத்திரத்தோடு ஓர் உரசல் பூச்சி வந்த சுவடு தெரியாமல் பசையாயிற்று. பொச்சம் தீர்ந்தது. படங்கைக் கிளப்பி உதறித்தட்டினான். இன்னொரு பீடியை எடுத்துக் கடவாயில் வைத்துக் கொண்டு எழுந்துபோய் பொயிலர் நெருப்பில் பிடித்துப் பற்ற வைத்துவிட்டு, திரும்பி வந்து வெற்று நெருப்புப் பெட்டியை வீசியவன், மறுபாட்டமும் படங்கை உதறிப் போட்டு இருந்தான். மனத்துள் ஏதோ அந்தகாரம்.

''ராமுண்ணே, என்னது வாயத் தொறந்து ஒண்ணும் பேசக் காணோமே... ஏண்'ணே அப்புடித் திடீர்'ன்னு முடிவு செஞ்சே?''

''அந்தத் தொர வரட்டும். அப்புறம் எல்லாம் வெளப்பமாச் சொல்றேன்.''

''ஓ... நீங்க நம்ம யாழ்ப்பாணத் தொர கந்தசாமியச் சொல்றீங்களா?''

''ஆமா...''

பில் மாஸ்டர் கேலியாக நமட்டிச் சிரித்தான்.

''என்னா இந்தாட்டம் கொமட்டிச் சிரிக்கறே?''

''அதுக்கில்லே, போயும் போயும் வேல வெட்டி இல்லாம மெனக்கிட்டு அந்த யாழ்ப்பாணத்துத் தொரக் கிட்டப் போயி புத்தி கேக்க ரோசிச்சீங்களே, அதான் சிரிப்புச் சிரிப்பாய் வந்துது, யாழ்ப்பாணத்து ஆளுங்க நம்மளப் போல மலே நாட்டு ஆளுங்களப் பத்திக் கவலப் படுவாங்களா?''

ராமனுக்குச் 'சுரீர்' என்று கோபம் வந்து விட்டது' தண்ணீர் கொட்டிய நெருப்புக் கொள்ளியாட்டம் பில் மாஸ்டரிலே சீறி விழுந்தான்.

''டே பில் மாஸ்டரு, ஒன் வாயெ மூடுடா, அவரு மத்தவங்களாட்டம் இல்லே, அவரு யாழ்ப்பாணத்து ஆளுங்காவ மட்டும் எங்கனாச்சும் பேசிக்கிட்டதெப் பாத்தியா? டே. மூதி. அவரெ ஆரென்னு ஒனக்குத் தெரியுமா? அவரு இந்த ஒலகத் தொழிலாளர் கட்சியச் சேந்தவரு. அதுமட்டுமா, ஒன்ன என்னப் போல பாடு பட்டு ஒழைக்கிறவங்க உரிமைக்காவப் பேசி எழுதிக்கிட்டு வர்ற பெரிய எழுத்தாளர் புரிஞ்சுக் கிட்டியா? இனிமே அறருக்கிட்டப் போயி, 'மலெ நாடு, யாழ்ப்பாணம்'னு புறிச்சுப் பேசிப்புடாதே, தெரிஞ்சுக்கோ கழுதே''

சளிந்த அப்பம் மாதிரி பில் மாஸ்டர் முகம் நுளுந்திற்று ஏக்கச் சாயல் கண்களின் இமை வரை தாவிற்று. நெற்றிப் புருவக் கோடுகள் கமண்டலத்தில் சுவடு பதித்தன. ராமன் கந்தசாமியைத் தெரிந்து கொண்டளவிற்குத் தன்னால் புரிந்து கொள்ள முடியவில்லையே என்ற கவலை அப்போது அவன் மனத்தில் குமைந்தது, கண்ணில் இருள் கவ்விய மேகம்.

ஒன்றும் பேசாமல் அவன் ராமனைக் கனி கூர்ந்து சற்று நேரம் நோக்கினான்,

''ஏன்'டா இப்புடிப் பாக்கிறே? நாம சொன்ன உண்மை ஒனக்குப் பொஸழயாப்படுதா?''

''இல்லே ராமுண்ணே. இம்புட்டுக் காலமாப் புளங்கியும் கந்தசாமித் தொரயத் தெரிஞ்சுக்காமப் பூட்டேன்'னு தான் வருத்தமாயிருக்கு. இனிமே அவர்கூட நீம பேசுறப் போ நம்பளையும் சேத்துக்கிடு.''

''ஓ, அதுக்கென்ன. அவரு கொள்கையும் அது தாண்டா.''

"அது சரியண்ணே, இன்னிக்கு ஒருவாட்டியா ஓஞ்சி போயி ரோசிச்சுக்கிட்டு இருக்கியே, இதெவுட வேற சமாசாரம் ஏதும் உண்டுமா'ங்கிறேன்...?"

பதில் சொல்ல ராமன் வாய் உன்ன...

யாரோ செருப்புகள் 'கிறீச்'சிட அந்தக் காம்பராப் பக்கம் வருவது கதவு நீக்கலுக்குள்ளால் தெரிந்தது.

கழுத்துகள் திருக அனைவரும் உற்றுப் பார்த்தனர்.

முதலாளி துரைச்சாமி வேஷ்டியை அள்ளிச் சிரைத்து கொண்டு, மலைக்கள்ளன் மாதிரிக் குசினிக் காம்பராவைத் தாண்டி, வடிகால் ஓரமாக இறங்கிப் 'பாத்ரூம்' பக்கம் போய்க் கொண்டிருந்தார்.

ராமனும் பில் மாஸ்டரும் தங்கள் சம்பாஷணையை நிறுத்திய உணர்வில் 'தறுதறு'த்து முழிசிக் கொண்டே ஆளையாள் மௌனமாக இருந்து கொண்டார்கள்.

சந்தேகம் வலுத்தது.

'மொதலாளி ஒட்டுக் கேட்டிருப்பாரோ?'

'கேட்டால் என்ன?' என்ற ஒரு திட மனம் கூறிற்று.

முதலாளி கை கால் அலம்பி வாய் குதறக் கொப்பளிக்கிற சத்தம் கேட்டது.

ராமன் படுக்கையில் கிடந்தவாறு சாடையாக நகர்ந்து நீக்கல் கதவைக் காலால் மெல்ல உதைத்துச் சாத்தினான். சாத்தியபின் காம்பராவுக்குள்ளே ராமனும் பில் மாஸ்டரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு மௌனமாகவே இருந்தார்கள்.

மாடாக குழியில் குப்பி விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது.

மறுபாட்டம் ஏதோ காலடி ஓசை.

''ஏய் ராமு, என்ன செஞ்சுக்கிட்டிருக்கே? காம்பரா வுக்குள்ள வெளிச்சமாயிருக்கே, நீங்க இன்னும் தூங்க லியா?''

முதலாளி சிலேடையாகத் தொடுத்த குரல் வெளியே கமாரிட்டுக் கேட்டது.

''இல்லீங்க மொதலாளி''

உள்ளேயிருந்து ராமனே பதிற்குரல் வைத்தான்.

''சரி வேளையோட தூங்கிட்டு, நேரத்தோட எழுந் திடுங்க.''

''சரியுங்க.''

துரைச்சாமி தன்னாரவாரம் 'புறுபுறு'த்துக் கொண்டு நடந்தார்.

''கழுதெப் பயலுக. நித்திரையுங் கொள்ளாம இம்புட்டு நேரமா முழிச்சிண்டு சும்மா இருக்கானுவ. இம்மாட்டம் இருக்கிறவனுக அத்தெ இத்தேச் செஞ்சுப் புட்டு ஒறக்கம் வர்றப்போ போயித் தூங்கப்படாதா...?''

கறுமுறுத்துக் கொண்டு போன அனுக்கம் இருவர் காதுகளிலும் செம்மையாக விழுந்தது.

ராமன் நெஞ்சு கமறிற்று. 'ரீ மேக்கர்' தங்க வேலுவைப் பரிதாபத்துடன் பார்த்துப் பெருமூச்சு விட்டான்.

அவன் செத்து விறைத்துப்போன மீன் போல் அப்பவும் காம்பரா மூலையில் குடங்கித் தூங்கிக் கொண் டிருந்தான்.

''ராமுண்ணே, என்னா பேயறைஞ்சவனாட்டம் ரீமேக்கரையே' பாத்துக்கிட்டிருக்கியே,என்ன சமாசாரம்? மணி ரண்டாப்போவுது, இன்னும் தூக்கம் வரலியா?''

குரல் அடக்கிக் கேட்டான் பில் மாஸ்டர்.

''இந்த ரீ மேக்கர் பய பாவம்'டா. அவனெப் பாக்கிறப்போ எனக்குப் பரிதாமாத் தோணுது. அவனும் நாள் பூரா நெருப்போட வெந்து செத்துக்கிட்டிருக்கான். ஆனா, அவன் சம்சாரம் மீனாச்சி 'சுதி' பண்ணிச் சுத்திக் கிட்டிருக்கா. அதெ நெனக்கிறப்போ மனசு கொதிக்கு தடா.',

''ஏ... அப்புடியா வெசயம்? ஒனக்கு அந்தச் சமாசாரம் எப்புடியண்ணே தெரியும்?''

''இம்புட்டு நேரமாக் கேட்டுக்கிட்டிரிக்கியே, 'அது யார்'ன்னு தெரிஞ்சுக்கலியா?''

''இல்லியே?''

''அவதாண்டா, நம்ம ரீமேக்கர் சம்சாரம்...''

பில் மாஸ்டர் நெஞ்சு பப்படம் நொறுங்கின சாடை 'நாறிக்'கிட்டது.

இப்பதான் அவன் மனம் சல்லடை போட்டது.

சற்று வேளைக்குமுன் துரைச்சாமி மாடிப் படிக்கட்டு களில் அணைத்துக் கொண்டு போன அந்த அவளின் உருவம் அவன் மனக்கண்ணில் கோலமிட்டு ஒரு திரை விரிந்தது. ஆனால், அவன் உள் மனம் அதை நம்ப மறுத்தது

'மொதலாளிங்க தனக்கு வாசியில்லாம எதையும் செஞ்சுக்க மாட்டான். அதான் ரீமேக்கர் தங்கவேலு சம்பளத்தையும் 'திடீர்'ன்னு கூட்டிக் குடுத்தாரு. இப்ப ஆள் மாத்தாம அவன்கிட்ட வேலயும் வாங்கிக்கிறாரு...'

''ராமுண்ணே, நீங்க சொல்றது நெசந்தான். அது நம்ப ரீமேக்கர் சம்சாரம் போலத்தான் தெரியுதுடாண்ணோய்.''

''போல என்ன, ரீ மேக்கர் சம்சாரமே தாண்டா.''

''அட சீ, தூ— மானங்கெட்டவ.''

இதற்கு மேல் சம்பாஷணை 'தம்' விட்டது,

இருவரும் பேசாமல் ஒரு சேரப் படுத்துக் கொண் டனர். அப்போது ரீ மேக்கர் தங்கவேலு விட்ட குறட்டை ஒலி அந்தக் காம்பராவை அதிர்த்துக் கொண்டிருந்தது.

ராமன் அன்று காலை எழுந்திருக்கவில்லை. காலை ஏழு மணியாகியும் உடல் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந் தான்.

ஹோட்டல் வழக்கம் போல் பரபரப்பாக இருந்தது. சந்தடி என்னவோ குறைவுதான்.

ரீ மேக்கர் தங்கவேலு நெருப்புத் தட்டில் சாம்பிராணி தூவி, வரிசையாகத் தொங்குகின்ற தெய்வப் படங்களுக்கு ஆலாத்தி எடுத்தபின் ஊதுவர்த்தியை முதலாளி துரைச்சாமி கையில் கொடுத்தான்.

அவர் சாம்பிராணித் தட்டின் நெருப்புக்குள் அதைப் புதைத்து விட்டு நெற்றியில் தொட்டு, கரங்கூப்பிக் கொண்டு பட்டறைக்கு மேல் வீற்றிருக்கிற லக்ஷ்மி சரஸ்வதி, முருகன் படங்களின் மேல் விழி செதுக்கி வணங் கினார்.

ரீ மேக்கர் தன்னையே மறந்து அவர் கிருத்தியங்களின் திருக்காட்சியை 'ஆ'வென்று வாய் பிளக்கப் பார்த்துக் கொண்டு நின்றான்.

'நம்ம மொதலாளி மனசு வச்சுப் பக்தியோட சாமி படங்களக் கும்புடுதாலதான், அவரு மனசு போல ஏதோ சம்பாதிக்கிறாரு. ஒட்டலும் நல்லபடியா நடந்துக்கிட்டு வருது. மொதலாளிங்க நல்ல சொணத்துக்குச் சாமி எல்லாம் குடுக்கும்....

அவன் தன்னுள் புளகித்துக் கொண்டு அப்படியே பரவசமாகி நின்ற போது, முதலாளி முகத்தில் தேங்கியிருந்த கனிவு சடுதியில் குலைந்தது.

''என்னாது பாத்துக்கிட்டிருக்கே...சரி சரி, போயி ஒன் வேலயக் கவனி'' என்று சொன்ன முதலாளி, சற்று முக வாட்டத்துடன்—ஆனால், 'சுடுகடு'த்துக் கேட்டார்.

''ஆமா, ராமனைக் காங்கலியே... அவன் இன்னுமா தூங்கிட்டிருக்கான்?''

பொரித்த மீன் கருவாடு சாடை அவர் முகம் முறுகிவிட்டது.

''தெரியாதுங்க.''

ரீ மேக்கர் மெல்ல நழுவினான்.

துரைச்சாமி தானாகவே பட்டறையை விட்டு எழுந்து பின் பக்கவாட்டாக வந்து, காம்பராக் கதவை மெல்ல நீக்கி ஆமை தலை நீட்டுவது போல் எட்டிப் பார்த்தார்.

ராமன் உடல் அயர்ந்து ஆழ்ந்த உறக்கத்தில் கிடந்தான்.

முதலாளிக்கு மூக்கு முட்டின கோபம் பீறிட்டது.

''டே ராமு, கும்பகர்ணனாட்டம் இன்னுமா தூங்கிக்கிட்டிருக்கே; எழுந்திருச்சு வேலவெட்டி செய்யிறதில்லையா?''

அவர் அதிர்ந்து போட்ட சத்தம் ராமனுக்குச் சாடையாகக் காதில் மொய்த்தது.

மறுவாட்டியும் சத்தம் போட்டார்:

''டே, ராமுப் பயலே...ஏன்டா இன்னுமா தூங்கிறே? எழுந்திரேன்டா.''

ராமன் திடுக்கிட்டுத் துடித்துப் பாய்ந்து எழுந்தான்.

விழித்துப் பார்த்தபோது முதலாளி துரைச்சாமி காறித் துப்பிக் கொண்டு திரும்பி 'விசுக்'கென்று நடந்தார்.

ராமனுக்கு மனம் அடித்துக் கொண்டது.

சாக்குப் படங்கைச் சுருட்டிச் சுவரோடு வைத்தான்.

ஒரு பாட்டம் நாரி நெளித்து நிமிர்ந்து சோம்பல் முறித்துக் !கொட்டாவிட்டான். பிடரி வரித்து விட்டு உதறிய கை மொழிகள் பாவற்காய் முறிவதுபோல் 'நொறுக்'கிட்டன. வயிற்றுள் புகைச்சல். மனம் பொரிந்தது.

'மூதேவி யாட்டம் மொதலாளி காலம்பொற வந்து மூஞ்சியில முழிச்சிட்டாரு.'

அவன் முகத்தில் வெறுப்பும் சினப்பும் அருக்கூட்டின. தேகம் என்னவோ 'அடித்து முறித்த' மாதிரி இருந்தது.

'ஒரு நாள் லீவு கேட்டு எடுத்துக்கிட்டுப் போயி இண்ணக்கி நம்ம கந்தசாமித் தொரைகூடப் பேசிக் கிடணும்' என்று ராமன் தனக்குள்ளே திட்டம் போட்டுக் கொண்டு ஒரு பீடியை எடுத்துப் பற்ற வைத்தான்.

''காலம்பொறக் காட்டிலும் மொறைச்சுக்கிட்டு வந்தவரு லீவு கேட்டாத் தருவாரோ?'' என்று மனம் பிகு பண்ணிற்று.

'ஒடம்புக்கு ஆவேலெ'ன்னா ஓய்வு எடுத்துக்காம 'அவருக்கு ஒழைச்சு'க் கொண்டிருக்க ஏலுமா? லீவு கேட்டுப் பாக்கிறது. 'இல்லே'ன்னா அதெப் பொறவு பாத்துடலாம்.'

இத்துடன் மனம் 'தம்' விட்டது. தனது தீர்மானத் துக்கு இப்பவே முடிவுகாண அவனால் முடியவில்லை.

'சரி, ஏதோ பாத்துக்கிடலாம்' என்ற ஒரு சமாளிப் போடு பாத்ரூமிற்குள்போய் முகத்தை அலம்பிக்கொண்டு' ஹோட்டலுக்குள் நுழைந்தான். கண்களில் எரி காந்தம்.

''ஏ ரீமேக்கரு, சூடா ஒரு கப்புக் காப்பி போடுங்க.'

ரீ மேக்கர் தங்கவேலு கொடுப்புக்குள்ளே கேலியாகக் கொண்டான்.

''என்ன மாப்புளே, இன்னிக்குக் கொஞ்சம் மிடுக்'கா யிருக்கே. லீவு கீவு எடுத்துக்கிட்டு வெளியே எங்காச்சும் 'சுதி' பண்றாப்பல ரோசினையா?''

''சுதியா? பணக்காரங்களுக்கும் மொதலாளிங் களுக்குந்தாண்டா அதுக்கு லாயக்கு. நம்மளப்போல ராவு பகலா நொந்து ஒழைக்கிற கொட்டுங்களப் பாத்து இப்படிச் சொல்றியே...? ஒனக்கு இதெல்லாம் எங்கே தெரியப் போவுது. நீதான் எல்லாத்துக்கும் 'கண்ணெ மூடி'க்கிட்டு இருக்கிறவனாச்சே''

நேற்று இரவு நடந்த சம்பவத்தை மனத்தில் நினைத்துக் கொண்டு ஒரு 'தக்கு' வைத்து ராமன்பேசியதை தங்கவேலு புரிந்து கொள்ளவில்லை.

''என்னாண்ணே அப்புடிப்பேசிப்புட்டே...? நா ஏதோ வெளாட்டுக்குச் சொன்னா, நீமர் ஒம்பாட்டுக்குச் கோவிச்சுக்கிறீரே. என்ன வெசயம், இன்னெக்குக் கோபம் கோபமாப் 'பொத்' துண்டு வருது?''

''சரி சரி காப்பிய ஊத்து. ஒனக்கு எல்லாம் பொறவு வெளப்பமாச் சொல்றேன்''

இந்த வார்த்தைப் பிரயோகம் ராமன் வாயில் வந்த போது, 'ஏதோ விபரீதம் நடந்திருக்கு. அதான் ராமுண்ண அப்புடி மொறைச்சிக்கிடறாரு' என்று தனக்குள் யூகித்தான் தங்கவேலு.

ராமன் கோப்பியைக் குடித்த பின் காம்பராவுக்குப் போய் பக்கூஸ் பெட்டியைத் திறந்து, 'மடிசேஞ்சி'யை எடுத்து இடுப்புக்குள் செருகினான். கால்களைச் சொடுக்கி நின்று நெற்றியைத் தடவி எதையோ யோசித்த பின் நேரே பட்டறைக்கு விரைந்து முதலாளி துரைச்சாமியைக் குமைந்து பார்த்தபடி சற்று வேளை நின்றான்.

அவனின் 'புது எடுப்பு' முதலாளிக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. அவர் முகத்தில் எள்ளும் கொள்ளுமாகச் சினம் வெடித்ததை ராமன் கவனித்தபோதும், அதைப் பற்றி அவன் அக்கறைப்பட்டதாகவோ, சிந்தித்தாகவோ முகத்தில் தெரியவில்லை.

இடப் புறங்கை மேல் வலக்கரத்தை அழுத்திக் கொண்டு ஊத்தையை உருட்டுவதுபோல் உராய்த்தபடி முதலாளிக்கு எதிரே விறுமதடியனாட்டம் நின்றான்.

கண்களைக் கடைக்கோடியில் உருட்டி, சற்று நேரம் கண்ணாடிப் பிரேம்களுக்கூடாக ராமனை வெகுளித்துப் பார்த்தார் முதலாளி. மண்டைக்குள் வெகுண்ட சினம் அவர் மனத்தைப் பிரளயப்படுத்திற்று.

'வந்தவன் விஷயத்தை அவனாகவே சொல்லட்டும் என்ற இறுமாப்பில் சற்று வேளை பொறுமையோடு மௌனமாக இருந்து பார்த்தார். புண்ணுக்குத்தான் வலி எடுத்தது'

'பிஸ்நஸ்' சூடுபிடித்து அவரை நெடுநேரம் பொறுமை யாக இருக்க விடவில்லை. அவராகவே வாய் போட்டார்.

''என்னாது, காலங்காத்தாலே வந்து மரமாட்டம் நட்டுப் பிடிச்ச கணக்கா நிக்கிறியே, வேல வெட்டி இல்லியா?''

''வந்து இண்ணெக்கு ஒரு நாளு லீவு வேணுங்க முதலாளி.''

''அதென்ன 'திடீர்'ன்னு லீவு கேக்கிறே?''

''ஒடம்பு சரியில்லீங்க.''

''ஒடம்புக்கு என்னடா, நல்லாத்தானே இருக்கிறே?''

''தொழிலாளர்களின் தலைவிதி முதலாளி கையில் இருக்கும்வரை முதலாளியை மிஞ்சிக் கை நாடி பார்த்து விட முடியாது. அதற்கு வழி, அந்தத் தலை விதியைத் தொழிலாளர்கள் மாற்றி அமைப்பதுதான்' என்று ஒரு நாள் எழுத்தாளர் கந்தசாமி சொன்னது நினைவுக்கு வந்தது

அன்று அது புரியவில்லை.

இன்று...?

அவன் பயப்படவில்லை. துணிவு வந்துவிட்டது.

ஊளி வந்த சிரிப்பைக் கொடுப்புக்குள் அடக்கிக் கொண்டு முதலாளி கேள்விக்குப் பதில் சொல்லாமல் அவரையே மேலோட்டமாகப் பார்த்தபடி நின்றான்.

''என்னது, நான் கேட்டதுக்குப் பதில் சொல்லாமல் முண்டமாட்டம் நிக்கிறியே?''

''அதுதான் எப்பவோ சொல்லிப்புட்டனே... நீங்க 'தான் ஒண்ணுங் கேக்காத கணக்கா இருந்தீங்க.''

முதலாளி நெஞ்சு 'திடுக்'கிட்டது. அவன் இப்படிச் 'சிம்பிளாக' எடுத்தெறிந்து பேசுவான் என்று அவர் கற்பனையே பண்ணியதில்லை. சமாளித்துக் கொண்டார்.

''ஒடம்புக்கு என்ன?''

''என்னமோ தெரியலே. ஏதோ மாதிரி இருந்துது. ரா முழுதும் தூக்கமே வரல்லே,''

'என்ன, ரா முழுதும் தூங்காம முழிச்சிண்ணு இருந்தானா?'

அவர் நெஞ்சு அவருள் கமறியது, முகத்தில் பீதி தாவி, சாடையான ஒரு கிலேசம் தட்டிற்று.

'ராத்திரி வெசயம் இவனுகளுக்குத் தெரிஞ்சிருக் குமோ?'

நெஞ்சில் தந்தி அடித்த மாதிரி மீண்டும் ஒரு மின்னல் இடி.

''சரி சரி, போய்த் தொல.''

ராமன் இடம் பெயராமல் நின்று முழிசினான்.

''ஏன் நின்னுக்கிட்டிருக்கே?''

' கைச் செலவுக்கு ரண்டு ரூவா குடுங்க.''

லாச்சியை அவுக்கென்று வெளியே இழுத்தவர் பின் உட்பாடாக விசுக் கென்று ஒரு தள்ளுத் தள்ளி விட்டுச் சினந்தார்.

''காலங் காத்தாலே துட்டு எங்கிட்டால வரும். பணப் பெட்டி என்ன குட்டி போடுதா?''

'பெட்டி இல்லே வட்டி' என்று சொல்ல நினைத்த ராமன், மறுமொழி எதுவும் சொல்லாமலே அசையாமல் நின்றான்.

''என்ன பாத்துக்கிட்டிருக்கே, போயிட்டு வர்றது தானே?'' அதட்டினார் முதலாளி.

'சும்மாவா கேட்டேன். சம்பளத்தில கழிச்சுக்கிடறது தானே? அதுக்குக் குட்டி போடுற பேச்சு எதுக்கு? அப்புடிப்பாத்தா கந்தசாமித் தொர சொன்னாப்பல, மொதலாளிங்க தொழிலாளிங்கட ரத்தெத்தெப் புழிஞ்சு பணத்தைக் குட்டி போட வைக்கிற பெருச்சாளிங்க தானே?' என்று அவன் மனசும் கெந்தகித்தது. ஆனால், அவன் அப்படியும் கேட்கவில்லை,

தூங்கிற கோழி மாதிரித் தலையைக் கீழே தொங்கப் போட்டபடி மேசை விளிம்பை நகத்தால் சுரண்டிக் கொண்டிருந்தான்.

"போயிட்டு வாயேன்'டா. ஏன்'டா சும்மா நின்னு என் பிராணனை வாங்கிக்கிட்டிருக்கே?"

"மருந்துக்குங் காசு வேணுங்க மொதலாளி."

"கவுண்மேந்தட தரும ஆஸ்பத்திரியள்ல காசுக்கா மருந்து தர்றாங்க?"

"அதுதான் 'கைச் செலவு'க்கென்னு முதல்ல கேட்டேன்..."

முதலாளி சற்று வாயடைத்து நின்றார்.

'காலம்பொற வந்து அழுங்குப் புடியாட்டம் நிக்கிறானே' என்று மனத்துள் 'புறுபுறு'த்த முதலாளி 'அவுக்'கென்று லாச்சியை இழுத்து இரண்டு ரூபாய்த் தாளை எடுத்து மேசையில் வீசினார்.

"சரி, எடுத்துக்கிட்டுப் போ."

ராமன் தாளை எடுத்துக் கைக்குள் மடக்கி வைத்துக் கொண்டு அநாயசமாக நடந்தான்.

"என்ன வூட்டுக்குப் போறயா, இல்லே ஓட்டலுக்கே வந்துடறயா?"

"வூட்டுக்கு"

"அப்போ, நாளைக்கு வேளையோட வந்துடு."

'சரியுங்க' என்று தலையை ஆட்டி விட்டு, காம்பராவைத் தேடி நடந்தான்.

ராமன் மறைந்ததும், முதலாளி பதகளித்துக் கொண்டு பில் மாஸ்டரைப் பார்த்துக் கைச் சைகை காட்டி அழைத்தார்.

''ஏன்டா; ராத்திரிப்பூரா ராமன் தூங்காம முழிக்சுக்கிட்டிருந்தானாமே, நெசந்தானா?''

'செம்மளாக் கவனிக்கலீங்க மொதலாளி,''

''நீ என்ன செஞ்சுக்கிட்டிருந்தே?''

''நானு தூங்கியிட்டேனுங்க.''

''அப்போ, ரீ மேக்கர்?''

''அவனு எப்பவோ ஒறங்கியிட்டானுங்க,''

''அப்புடியா, சரி போயி வேலையப் பாரு.''

அவர் மனக்கிலேசம் சற்று நீங்கிற்று. என்றாலும், ராமன் இரவு நடுச்சாமம்வரை தூங்காமல் விழித்திருந்தானே, அதுதான் அவர் மனத்தைப் பூகம்பித்துக்கொண்டிருந்தது.

முதலாளி துரைச்சாமி தன்னிடம் ஏன் அப்படித் துழாவிக் கேட்டார் என்பதை அவன் அறிவான். தான் மனமறிந்து முதலாளிக்கு அப்படி ஒரு பொய்ச்சாட்டுச் சொல்லா விட்டால், அவர் செய்கின்ற களவாணித்தனம் தன்னையே பழி தீர்க்கிற நாடகமாக உருவெடுக்கலாம் என்று தனக்குள் சமாதானம் சொல்லிக் கொண்டான் பில் மாஸ்டர்.

'தூங்காம இருந்த ராமன், நம்ம வெசயமா ஏதும் தெரிஞ்சுக்கிட்டு வெளிய இல்லாத பொல்லாத கதெ சொல்லி உளறிக் கொட்டி விடுவானோ?' என்று முதலாளி நினைத்த மாத்திரத்தில், அவருக்குப் பட்டறையில் இருப்பே கொள்ளவில்லை' தேகம் போயிலர் போல் கொதித்துக் கொண்டது.

ஏதோ நினைத்தவராகச் 'சடா'ரென்று பட்டறையை விட்டு எழுந்தார். கணக்கப்பிள்ளையைக் கூப்பிட்டு, பட்டறையில் இருக்க விட்டு, ராமனைத் தேடிப் போய்

அவன் காம்பராவையே ஒரு சிறு குழந்தை போல் எட்டிப் பார்த்தார்.

இவர் வருமுன்பே அவன் எப்பவோ வெளியே கிளம்பி விட்டான்.

சுற்றுமுற்றுங் கண்ணெறிந்தார்.

காம்பராவுக்குள் 'விசேஷ'மாக ஒன்றுமில்லை வாசற் கதவோரத்தோடு எரிந்து கருகிய நெருப்புக் குச்சிகளும், ஒட்டுப் பீடித்துண்டுகளும், சிலும்பலான நெருப்புப் பெட்டி ஒன்றும் கூட்டி ஒதுக்கப்பட்டுக் கிடந்தன.

சண்டிக் கட்டாக வேஷ்டியைச் சிரைத்துப் பிடித்துக் கொண்டு திரும்பி வந்து ரீமேக்கர் தங்கவேலுவுக்கப் பக்கத்தில் சற்று வேளை நிதானமாக நின்று சாடையாகக் கண்ணெறிந்தார்.

ரீமேக்கர் தன் பாட்டில் சுறுசுறுப்பாகத் தேநீர் காப்பி தயாரித்துக் கொள்கிற விருத்தம் வழக்கம்போல முறையாகவே நடந்து கொண்டிருக்கிறது.

தங்கவேலு முகத்தில் எதுவித 'அசுமாற்ற'த்தையும் காணவில்லை.

முதலாளிக்கு உண்டான அச்சம் ஓரளவு நீங்கியது.

குசினிப் பக்கம் திரும்பினார்.

சமையற்காரர்கள் தங்கள் திருத்தியங்களை 'ஆ ஊ' என்று துரிதகதியில் ஆற்றிக்கொண்டிருந்தார்கள்.

முதலாளியைக் கண்டதும் அவர்களின் 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' ஆகிய 'ஒழுக்க விதி'களுக்கூடாக ஓய்வற்ற 'பறதி' ஒரு பாட்டம் துரிதப்பட்டது. அந்த ஒழுக்க விதிகளின் பிதாவான 'அண்ணா'வைத் தனக்குள் வாழ்த்திக் கொண்டார். அப்போது அவர் முகத்தில் மகிழ்ச்சி பிரவாகித்தது. திரும்பி வந்து பட்டறைக்கு

எதிரே நின்று முருகன் படத்தைப்பார்த்து மனங்கரையலானார்.

'முருகா வெசயம் எதுவும் வெளிக்கு வரப்படாது நீதான் தஞ்சம்.''

''ஏ, பில் மாஸ்டர்?''

''என்னாங்க.''

''ஒரு கப் காப்பி கொண்டா.''

''சரியுங்க மொதலாளி.''

வெள்ளிக் கிண்ணத்தில் பில் மாஸ்டர் கோப்பியைக் கொண்டு வந்து வைத்துவிட்டுப் பதனமாகத் திரும்புகையில், முதலாளி மறுவாட்டி அழைத்தார்.

''ஏய் பில்மாஸ்டரு, கொஞ்சம் நில்லு.''

அவன் திரும்பி வந்து அணிலை ஏறவிட்ட நாய்போல் அவர் முகத்தைப் பார்த்தான்.

''ராமன் ஒங்கிட்ட ஏதுஞ் சொன்னானா?''

''இல்லீங்க.''

''அவன் ஒடம்புக்கு 'என்னமோ'ன்னு சொன்னானே அது நெசமா?''

''ஆமாங்க.''

''என்னது?''

''எங்கிட்ட வெளப்பமா ஒண்ணும் சொல்லலீங்க.''

''நாளைக்கு வந்து விடுவானா?''

''நம்பலாள எப்புடியுங்க சொல்ல முடியும்?''

''சரி, நீ போயி ஒன் வேலையப்பாரு.''

அவன் திரும்பும் போது எழுத்தாளர் கந்தசாமி கோப்பி அருந்திக் கொண்டிருந்தார்.

''தொரே, என்னா இண்ணெக்கு வேளையோட கிளம்பீட்டீங்க?'' என்றான் பில் மாஸ்டர்.

''ராமுவையும் பார்க்கலாம் என்றுவந்தேன்'' என்றார் கந்தசாமி.

''அவரு ஒடம்புக்கு என்னமோன்னு ஆஸ்பத்திரிக்குப் பூட்டாருங்க.''

''வேறு ஏதும் சொன்னாரா?''

''இல்லீங்க.''

''அப்படியா, சரி நான் போயிட்டு வர்றேன்.''

''ராமுண்ணங்கிட்ட ஏதும் சொல்லணுங்களா?''

''இல்லை. நான் பிறகு வந்து ராமுவைச் சந்திக்கிறேன்.''

''பொறவென்னா...? அவரு நாளைக்குத்தான் வருவாருங்க.''

''ஏன் அப்படி?''

''ஒரு நாளு லீவு போட்டுக்கிடணும்'னு சொல்லிக்கிட்டிருந்தாரு.''

கந்தசாமி திரும்பி விறுவிறு என்று நடந்தார். அவர் கிளம்பி நேரே தனது அறைக்குப் போய் கதவைத்திறந்து உள்ளே நுழைந்து அரைமணிகூட ஆகவில்லை. ராமன் குரல் எதிர்பாராமல் ஒலித்தது.

''இப்பதான் ஹோட்டலுக்கு வந்து உம்மைத் தேடினேன். ஆஸ்பத்திரிக்குப் போனதாக பில்மாஸ்டர் சொன்னார். உடம்புக்கு என்ன?'' என்று கேட்டார்.

''ஒண்ணுமில்லீங்க. அப்புடிப் பொய் சொல்லிக் காட்டி லீவு கீவு எடுக்க முடியாதுங்க.''

''ஏன்; ஊர்ப் பக்கம் போய்வரவா?''

''இல்லீங்க, ஒங்களத் தேடிக்கிட்டுத்தான் வந்தேன். ஆனா, நீங்க என்னயத் தேடிககிட்டு ஓட்டலுக்குப் போயிருக்கீங்க.''

கந்தசாமி ராமனை உள்ளே அழைத்துக் கொண்டு போய் பெட்'டுக் கருகில் கிடந்த புட்டுவத்தைக் காட்டி 'இதில உட்காரும்' என்றார்.

அவன் புட்டுவத்தில் இருக்கத் தயங்கினான். தேகம் கூசியது. கந்தசாமியோடு சரி சமமாக அவன் ஒருபோதும் உட்கார்ந்திருந்ததில்லை.

'இல்லீங்க. பரவாயில்லே நானு நின்னுக்கிட்டிருக்கேன்'' என்று நைந்து கொண்டே குழைந்தான்,

''யாழ்ப்பாணத்தாங்க பெருமைபுடிச்சவங்க'ன்னு சொல்றாங்க. ஆனா, இந்தத் தொரெகிட்ட அப்புடி ஒண்ணும் கெடையாது''

தலை நிமிர்த்திக் கண்களைச் சுழற்றி அறை ஏகலும் பார்த்தான். சுவர் அடங்க மாட்டிக் கிடந்த படங்கள் அவன் மனத்தைக் கவர்ந்தன. சகல படங்களிலும் காம்பீரியம் கொண்ட புதுப்புது முகங்கள். பாரதியார் முகத்தைத் தவிர மற்றதெல்லாம் அந்நியமாகத் தெரிந்தன.

அவன் ஆகர்ஷிப்பைப் புரிந்து கொண்ட கந்தசாமி அந்த வரிசையிலே உள்ள படங்கள் ஒவ்வொன்றையும் வியாக்கியானம் செய்து விளக்கலானார்.

மார்க்ஸ், எங்கல்ஸ, லெனின், ஸ்டாலின், ட்ரொஸ்கி, மாவோ, லியூஷோஸி, குருஷேவ், கஸ்ரோ, கார்க்கி,

புதுமைப்பித்தன், பாரதியார், தாகூர், ஜீவானந்தம் வ. ரா, டால்ஸ்டாய், இக்பால்...''

'இங்கிட்டேல்லாம் காந்தி, நேரு, படங்கதானே மாட்டி இருக்காங்க. நம்ம மொதலாளியும் அதுங்களத் தான் மேலே மாட்டியிருக்காரு. அந்தத் தலவருங்க படங்கள்ல ஒண்டேயுங் காங்கலியே?''

தனக்குள் ஒருகணம் வியந்தான் ராமன். கந்தசாமி யின் போக்குத் துப்பரவாகப் பிடிபடவில்லை. மனத்துள் இனங் காணாத சலிப்பு.

''ஆமா தொரே, பொதுவா எல்லாரும் காந்தி, நேரு, ராணி, ராஜா படங்களெத்தானே வச்சிருக்காங்க. ஒங்க கிட்ட அவங்க படங்களெக் காங்கலியே. கடேசி மகாத்மா காந்திப் படத்தையாச்சும் வச்சிருக்கலாமில்லயா? காந்தி மகான் எவ்வளவு நல்லவரு தெரியுங்களா?''

கந்தசாமி சிரித்துக் கொண்டு சொன்னார் :

''மகாத்மா காந்தி மிகவும் உத்தமர். மிகவும் நல்லவர். வல்லவரா என்பதைத்தான் பார்க்க வேண்டும். அவர் 'எல்லோருக்கும் நல்லவரா'யிருந்தவரே, அதுதான் தவறு. அதனால்தான் வட்டிக்கடைக் குபேரன்களும், முதலாளித்துவப் பெருச்சாளிகளும் தங்கள் கண்கண்ட தெய்வமாக அவரைப் போற்றுகின்றார்கள்...''

ராமன் முகம் சுண்டிக் கறுத்தது. கந்தசாமி மீது அவனுக்கு ஒருவித வெறுப்பாக வந்தது.

''எல்லாருக்கும் நல்லவராயிருக்கிறது கூடாதுங்களா? அது நல்லதுதானே?''

இந்தக் கேள்விக்கு அவன் வாழ்க்கை அனுபவங்களை மூலமாக வைத்துக் கந்தசாமி கேட்டார் :

''இந்திய மக்களோ அல்லது உலக மக்களோ அனைவருமே ஒரே வர்க்கமாக— ஏற்றத் தாழ்வற்ற

வாழ்க்கை முறையைக் கொண்டவர்களாயிருந்தால் நீர் சொல்வது போல் அவர் எல்லாருக்கும் நல்லவராயிருப்பது நல்லதுதான். ஆனால், அவர் வாழ்ந்த இந்திய மக்களில் ஒரு சிறு கூட்டம் கூட அப்படி இருக்கவில்லையே. அப்போ அவர் எப்படி எல்லோருக்கும் நல்லவராக இருந்திருக்க முடியும்?''

''நீங்க என்ன சொல்றீங்க... ஒண்ணுமாப் புரிய லியே?'' என்றான் ராமன்.

''அப்படியா? சரி, உங்கள் முதலாளினய எடுத்துக் கொள்வோம். அவருக்கும் தொழிலாளியாயிருக்கிற உமக்கும் நான் நல்லவனாக அன்பனாக— தண்பனாக இருக்க முடியுமா? சுரண்டுகின்ற முதலாளியையும் சுரண்டப்படுகின்ற தொழிலாளியையும் ஒரே தரத்திலோ ஒரே விதத்திலோ நேசிக்க முடியுமா?''

''ஏன், முடியாதுங்களா?''

''எப்படி முடியும்? அவர் உம்மைச் சுரண்டி உமது உழைப்பால் கொழுத்துச் சொகுசாக வாழும் முதலாளி, நீரோ அந்த முதலாளியால் அன்றாடம் சுரண்டப்பட்டு அவல வாழ்க்கை நடத்தும் ஒரு நடைப்பிணமான தொழிலாளி. உம்மைச் சுரண்டி வாழ அவருக்குச் சுதந்திரம் உண்டு அதலிருந்து விடுதலையாக உமக்குச் சுதந்திரம் இல்லை. உரிமையும் இல்லை. அப்படியிருக்க, சுரண்டுகின்ற முதலாளி வர்க்கத்தையும், சுரண்டப்படு கின்ற தொழிலாள வர்க்கத்தையும் ஒரே விதத்தில் நேசிக்க முடியுமா? ஒருபோதும் முடியாது. இது ஒரு இயல்பான தன்மை. இரண்டு கன்னையாரிடமும் முரண்பட்ட எதிர்க்கொள்கைகள் இயல்பாக இருப்பதே இதற்குக் காரணம் இந்த உண்மைகளை மறைத்து இரண்டு முரண்பட்ட எதிர் வர்க்கத்தினரிடத்திலும் ஒரே விதத்தில் அன்பு செலுத்துவதென்பது சுத்த ஹம்பக்— வெறும் போலி... இதிலே சத்தியம் எங்கே இருக்கிறது?''

''எனக்கு ஒண்ணுமாப் புடிபடல்லே. தொரே, சுரண்டல் சுரண்டல்'னு அடிக்கடி சொல்றீங்களே அது என்னாங்க?''

கந்தசாமி முகத்தில் மகிழ்ச்சி துளிர்த்துச் சிலிர்த்தது. அமைதியாக விளக்கலானார்:

''கவனியும். சரி, உம்மையே எடுத்துக்கொள்வோம். நீர் இரவு பகலாக பதினாறு மணித்தியாலம் இயந்திரம் போல் வேலை செய்கிறீர். உமது உணவுக்கும் குடும்பச் சீவியத்துக்கும் ஐந்து ஆறுமணி நேரம் உழைத்தாலே போதும். அப்படியிருக்க மிகுதி நேர உழைப்பு யாருக்குப் போய்ச் சேருகிறது? முதலாளிக்குத்தான். இத்தனைக்கும் முதலாளி சும்மா இருப்பவரல்லவா?''

அவன் கவனித்துக் கேட்கிறானா என்று ஒரு கணம் அவதானித்தார். அவன் அவர் கூறுவதை எதிர் பார்ப்பதைத் தெரிந்துகொண்டார்.

''தொழிலாளிக்கு முதலாளியால் நன்மை இல்லையா? என்று நீர் யோசிக்கக்கூடும். அது உண்மையல்ல. முதலாளி சொத்துக்களைத் தன்னுடைமையாக்கித் தனியுரிமையான ஆதிக்கம் வகிப்பவர். தொழிலாளிக்கு எந்தச் சொத்திலும் எந்தப் பாத்தியதையும் கிடையாது. தனது சொத்துக்களைப் பெருக்குவதற்கு முதலாளிக்குத் தொழிலாளர்களின் உழைப்புத் தேவைப்படுகிறது. இந்தத் தொழிலாளி உயிரோடு இருந்தால்தான் முதலாளியின் உற்பத்தி பெருக வழியுண்டு. எனவே, தொழிலாளி உயிரோடு இருக்க வேண்டும் என்பதற்காகவே முதலாளி 'சம்பளம்' என்ற 'கூலி' தருகிறாரே தவிர, அவன் சீராக—சமத்துவமாக வாழ வேண்டும் என்பதற்காக அல்ல. உமது உழைப்பின் ஒரு பகுதியை இப்படி அவர் உமக்குத் தெரியாமலே உமது சம்மதத்துடன் அபகரித்துக் கொள்கிறார். இது அவரின் ஜனநாயக சுதந்திரம். ஆனால்,

உமக்கு அந்த ஜனதாயகம்— உரிமை என்பதெல்லாம் கிடையாது. உண்மையில் உமது மேலதிக உழைப்பு அவருக்கு 'லாபமாக' அவர் பணப் பெட்டியில் போகின்றது. இதன் சரியான அர்த்தம், உமக்குச் சேர வேண்டிய பணத்தை அவர் உமக்குத் தெரியாமலே களவாண்டு விடுகின்றார். இதற்குப் பெயர்தான் சுரண்டல். அதாவது, தொழிலாளிகளின் இரத்த வெயர்வை— அவர்களின் உழைப்பு முதலாளிகளின் பணமாகின்றது...''

''படுபாவிங்க, நாசமாப் போக.''

தன்னுணர்விழந்தே வாய் விட்டுத் திட்டினான் ராமன். கந்தசாமியிடம் பக்தியும் பாசமும் மதிப்பும் கவிந்தன.

''இப்பேர்ப்பட்ட சுரண்டும் கொடிய கொள்ளைக் காரன்களையும், சுரண்டப்படுகின்ற ஏழை இந்தியர்களை யும்தான் மகாத்மா காந்தி ஒரே விதமாக நேசித்து 'எல்லோருக்கும் நல்லவராக' இருந்தார். இது சாத்தியமா, இது சத்திய வாழ்க்கையா?''

'இல்லீங்க' என்று அவன் மனம் சொல்லிற்று; முகபாவமும் அப்படிக் காட்டிற்று. ஆனால், வாய் திறந்து அதனைச் சொல்ல முடியாமல் அவன் மனம் பேதலித்தது. எனினும். 'மகாத்மா காந்தி உத்தமர், உத்தமர், உத்தமர்' என்று மனத்துள் சொல்லிக் கொண்டான்.

இவ்வளவு காலமும் தங்களிடம் இரவு பகலாக முதலாளி வேலை வாங்கியதால் எவ்வளவு பணத்தைச் சம்பாதித்திருப்பார்; எத்தனை மண்டபங்களைக் கோபுரங்கள் போல் எழுப்பியிருப்பார் என்று அவன் நினைத்துப் பார்த்தான். தனது உடம்பு இப்படி நோஞ்ச னாகவும், முதலாளி கொழுகொழுத்துப் பூரித்துக் கொண்

டிருப்பதன் சூத்திரமும் அவனுக்குச் சாடையாக வெளித்தன. அப்போது அவன் முகத்தில் வெறுப்பும் ஆத்திரமும் அருக்கூட்டின.

கந்தசாமியை உணர்ச்சி ததும்ப ஆவலோடு நோக்கிய ராமன் தான் கேட்கவிருந்த விஷயங்களையெல்லாம், கந்தசாமி தானே விளக்கி வைத்த பாங்கை நினைத்து ஒரு கணம் வியந்தான். என்றாலும், இரவு பகல் பூராவும் தாங்கள் படும் அவஸ்தைகளிலிருந்து விடுபடுவது எப்படி என்பதுதான் அவனுக்குப் புரியவில்லை. அந்த உத்தரிப்பு களைப் பற்றிச் சொல்லி, அவற்றிற்கு நிரந்தரமான ஒரு தீர்வு காண்பதற்கே அவன் ஏலவே திட்டம் போட்டிருந் தான். ஆனால், சற்று நேரத்துக்கு முன் கந்தசாமி சொன்ன புதிய விஷயங்கள் அவன் மனத்துள் பூகம்பித்தன.

'தொழிலாளர்களின் உழைப்பும் வெயர்வையும் முதலாளிகளின் பணமாகின்றது.'

அணைக்கட்டு உடைந்ததுபோல் ராமன் நெஞ்சு வீரார வேசமாகக் குமுறியது. கண்களில் வெறித்தனம் தேங்கிற்று.

''என்ன சங்கதி, இப்படி ஆவேசமாகப் பார்க்கிறீர்?''

''தொரே, மனசு!என்னவோ!மாதிரி இருக்கு. இனிமே அந்த ஓட்டல்லே வேல செஞ்சிடறாப்பல உத்தேச மில்லே.''

''ஏன்?''

''இப்பல்லாம் மொதாளியிட கோணமும் போக்கும் வேற தினுசாப் போய்க் கிட்டிருக்குங்க.''

''என்ன போக்கு; முந்தியை விடக் கடுமையாக வேலை வாங்குகிறாரா?''

''அதைத்தான் எப்பவும் செஞ்சுக்கிட்டு வர்றாரே. அதில்லீங்க அது வேற ஒரு சமாச்சாரம்.''

''அதென்ன புதுச் சங்கதி?''

''அவரு 'கள்ளப்பொம்புளச் சாமி'யுங்க.''

கந்தசாமி கொக்கட்டமிட்டு வாயடங்கச் சிரித்தார்.

''அப்போ, வழக்கம்போல அவரும் வஷிஸ்டராகி விட்டார் என்று சொல்லும். என்ன, அப்படித்தானே?''

ராமன் அன்று இரவு நடந்த 'திருக்கூத்தை' ஆதியோடந்தமாகச் சொல்லிவிட்டு அந்த ரீமேக்கர் தங்கவேலுதான் பாவம்; அவனு ஒரு அப்பாவியுங்க'' என்று மனம் புழுங்கினான்.

'கந்தசாமிக்கு விஷயம் வெளித்து விட்டது. ஹோட்டல் சிப்பந்திகளையே சக்கையாகப் பிழிந்து பணம்பண்ணுகிற துரைச்சாமி, அந்தப் பணப் பெருக்கத்தின் பலத்தைப் பாவித்துத் தனது சுகானுபவப் போகத்திற்கு ஒரு தொழிலாளியின் குடும்பத்தையும் ஏகபோகமாக்கிக் கொண்ட அநியாயத்தை நினைத்தமாத்திரத்தில் நெஞ்சு கமறியது,

''பார்த்தீரா, உமக்கென்று ஒரு பெண்ணைத் துணைக்கு வைத்து வாழ்க்கை நடத்தவே உமது ஊதியம் போதாது. ஆனால், முதலாளி துரைச்சாமி உமது உழைப்பையே களவாண்டு அடுத்தவன் மனைவியைப் பெண்டாடி அங்கேயும் இன்ப சுகங்களைக் கள்ளத்தனமாக அனுபவிக்க முடிகிறதே முதலாளித்துவத்தின் நாசகாரங்களில் இதுவும் ஒன்று. ஒரு தொழிலாளி இந்த முதலாளித்துவ சமுதாயத்தில் எவ்வளவு மோசமாக ஈவிரக்கமின்றிச் சுரண்டப்படுகிறான் என்பதற்கு இந்தச் சிறு சம்பவமே ஓர் உதாரணம். இப்படியெல்லாம் தொழிலாளி சுரண்டப்படுகிறான் என்பதோடு அவன்

தனது உழைப்பை மட்டுமல்ல, உடல் உணர்ச்சி ஆசா பாசங்களையும் முதலாளிக்குத் தாரை வார்த்துவிட்டு ஒரு அடிமை போலச் சீவிக்கிறான். இப்படியெல்லாம் கொடுமைகள் புரிகின்ற முதலாளித்துவத்தைப் பூண்டோடு அழிக்க வேண்டுமே தவிர, இதை அனுமதித்துக்கொண்டு இருக்கக் கூடாது. இந்தத் தர்ம நியாயப் போராட்டத்தில் சகல தொழிலாளர்களும் ஒன்று சேரவேண்டும். தேவையானால் நானும் உங்களுடன் சேர்ந்து கொள்கிறேன்...''

லாம்புக் கண்ணாடி மினுங்கின மாதிரி ராமன் கண்கள் அப்போது கலங்கிக் கொண்டு வந்தன.

''ஏன் அழுகிறீர்? போராட்ட உணர்வுள்ள தொழிலாளி எந்தக் கட்டத்திலும் ஒரு போதும் அழக்கூடாது, தெரியுமா?''

''தொரே, நீங்கதான் எங்க...''

குழந்தைபோல் ராமன் விம்மி விம்மி அழுதே விட்டான்.

கந்தசாமி பரிதவித்துச் சிரித்தார். தன் மீது கொண்ட பாச உணர்வின் பீறல் அவனை அப்படி ஆக்கிறது என்று உணர்ந்த கந்தசாமி சமாளித்து அவன் முதுகில் தட்டி, ''இனிக் கலங்க வேண்டியதில்லை. இந்தப் புட்டுவத்தில் இருந்து புத்தகத்தைப்படித்துக்கொண்டிரும். தேத்தண்ணி கொண்டு வருகிறேன்'' என்றவர், விறாக்கியிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்துக் கொடுத்தார்.

''தேத்தண்ணி இப்போ எதுக்கு, வேண்டாமுங்க.''

''நீர்தான் ஒவ்வொரு நாளும் தேநீர் போட்டுத் தருகிறீரே, இன்று நான் தருகிற தேநீரைக் குடித்துப் பாருமேன்.''

ராமன் முகம் மலர, 'சரியுங்க, ஒங்க இஸ்டம்.' என்ற தோரணையில் தலை ஆட்டினான்.

கந்தசாமி வெளியே இறங்கினார்,

'நம்ம கந்தசாமித் தொரே அறிவாளி மட்டுமில்லே, பெரிய தமாஷ் பேர்வழி,'

புத்தகத்தை விரித்து, முதற் பக்கமாக அச்சிட்ட வரியில் கண் குத்தி மனத்துக்குள் வாசித்தான்.

'உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்'

அவன் மனம் 'கிளுகிளு'த்தது.

அடுத்த பக்கத்தைப் புரட்டினான்.

அதில் தீட்டியிருந்த தலையங்கம் அவன் மனத்தைக் காந்தமாக ஈர்த்தது.

'முதலாளித்துவத்தின் சுரண்டல் முறைகளும், தொழிலாளர்களின் விடுதலைப் பேரணியும்.'

தொங்கிய படங்களை மீண்டும் அவன் கண்கள் துழாவின.

எழுந்து படங்களுக்கருகில் சென்று சிறு குழந்தை போல் கையால் தடவினான். அவன் கரங்களில் படங்கள் சரியாக எட்டவில்லை. புத்தக அட்டைப் படங்களைப் பார்த்தான்.

புகை கக்குகின்ற வாக்கில் மொட்டைத் தலையும் தும்புத் தாடியுமாகத் தொழிலாளர்கள் மத்தியில் வீரா வேசத்தோடு பேசிக் கொண்டிருக்கின்ற லெனின் உருவத்தையும், புன்முறுவல் பூக்கச் சொண்டுகள் கூப்பிக் கண்களை உறுத்திப் பார்க்கின்ற பஞ்சுத் தலையும் முகம் அடர்ந்த வெண் தாடியுமான மார்க்ஸ் மாறி மாறிப் பார்த்தபோது அவன் மனமே பூஞ்சாடிற்று.

இந்த உருவங்கள் அப்போது அவன் கண்களுக்கு அந்நியமாகத் தெரியவில்லை: கந்தசாமியின் குணதோஷ உருவமாகவே தோன்றின.

அவன் கிருத்தியம் அவனுக்கே தெரியவில்லை. 'சடா' ரென்று புத்தக அட்டைகளின் உருவங்களை முகத்தோடு அணைத்து அழுத்திக் கொஞ்சினான்.

'உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்.'

மனத்திற் பதிந்த சுலோகம் எழுச்சி கொண்டு இதயத்தில் சுழித்தது

இந்த ஆகர்ஷிப்புக்குள்ளே கந்தசாமி இரண்டு கரங் களிலும் தேநீர்க் கிண்ணங்களுடன் அறைக்கு வந்து கொண்டிருந்தார்.

அவரை அந்தக் கோலத்தில் கண்ட ராமன் மனம் வெதும்பி நொந்து சங்கடப்பட்டதைக்கவனித்த கந்தசாமி சிரித்துக் கொண்டு உரக்கக் கத்தினார்:

''தொரே வாங்க, ஒக்காருங்க. தொரெக்கு 'ரீ'யா, காப்பீங்களா?''

அவன் சுய உணர்விழந்தே வாஞ்சையோடு கந்தசாமியைப் பார்த்துச் சிரித்தான். அவரே தன்னுடன் பிறந்த சகோதரன் போலவும், மதிப்பிற்குரிய மக்கள் எழுத்தாளர் போலவும் அவனுக்குத் தோன்றினார்.

''தொரே...''

''நிறுத்தும்''

''ஏன்'ங்க?''

''நான் 'துரை' இல்லை—உமது தோழன். இனிமேல் 'தோழர்' என்றே அழைக்க வேண்டும். தோழமையே தொழிலாளர்களின் உந்து சக்தி...''

''அப்புடீங்களா?''

''ஆமா ஆமா.''

''ஆமா, தொரே...''

"என்னது.. .....?"

' தப்புங்க...தோழரு, இம்புட்டுச் சமாச்சாரங் கெல்லாம் சொன்னீங்க. ஆனா, அண்ணெக்கு ஓங்ககிட்டப் பேசின வேசயத்தை வுட்டுட்டீங்க.. நீங்கென்னா, அதெச் 'சிம்பிளா'ச் சொல்லிப்பூட்டீங்க, ஆனா, எங்க வேசயத்தெ எப்புடித் தீர்க்கிறது'ன்னுதான் செம்மளாத் தெரியலே."

"எது தெரியவில்லை?"

"எங்க கஸ்டங்களப் போக்கிற வழிதான்."

"யாரால் துன்ப துயரம் வருகுதோ அவர்களை நீங்கள் எல்லாருமாகச் சேர்ந்து எதிர்க்கவேண்டும். அதற்கு முதல் ஒரு தயாரிப்பு வேலைத்திட்டம் உங்களுக்குள் இருக்க வேண்டும். அதுதான் முக்கியம்..."

"யாருங்கள எதிர்க்கிறது' மொதலாளிங்களயா?"

"ஓம், முதலாளித்துவத்தைக் கடைப்பிடிக்கின்ற முதலாளிகளை."

"என்னா'ன்னு—எப்புடீன்னு எதிர்க்கிறதுங்க?"

எட்டு மணித்தியாலத்துக்குமேல் வேலை செய்ய மாட்டோம்' என்று எல்லாத் தொழிலாளர்களுமாகச் சேர்ந்து ஒரே குரலில் முதலில் ஒரு கோரிக்கை வைக்க வேண்டும்."

"ஹோட்டல்களில் அப்படி வேல செஞ்சிடக் கேக்கலாமுங்களா?"

"சர்வதேசியத் தொழிலாளர் உரிமைச் சட்டம் என்ற ஒன்று இப்போ எல்லா நாடுகளிலும் இருக்கு. அதன்படி எட்டு மணி நேரத்துக்குப் பின் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு முதலாளி மேலதிக ஊதியம் கொடுக்க வேண்டும். ஆனால், உங்கள் ஹோட்டல் முதலாளி

அப்படித் தருவதில்லை. ஆகையால், முதலில் எட்டுமணி வேலை நேரக் கோரிக்கையை முன் வைத்துப் போராடினால்தான் அடுத்த உரிமைகளைப் பெற வழி பிறக்கும்.''

''அப்புடீன்னா, அடுத்த நிமிஷமே 'போடா'ன்னு மொதலாளி கழுத்தெப் புடிச்சு வெளிய தள்ளிப்புடுவாரு''

''அதைத்தான் முதலாளியாலே செய்ய முடியாது.''

''ஏன், முடியாது?''

''இதற்காகத்தான் 'தொழிலாளர்கள் ஒரே குரலில் ஒற்றுமையாக நிற்கவேண்டும்' என்று அழுத்திச் சொன்னேன். அப்படி இருந்தால் அவரால் எத்தனை தொழிலாளர்களின் கழுத்தை அப்படித் தள்ள முடியும்?''

''அது சரிதானுங்க. ஆனா, மத்தவங்க இதுக்கு ஒத்து வருவாங்களா?''

''மற்றத் தொழிலாளர்களுக்கும் விஷயங்களை விளக்கிச் சொல்லி அவர்களைப் போதம் பெறச் செய்ய வேண்டும் தொழிலாளர்கள் போதம் பெறும் வரைதான் முதலாளித்துவம் நிலைத்து நிற்கும். எனவே, அவர்களும் போராட்ட முறைகளை அறிந்து தெளிய வேண்டியது அவசியம். அதுக்குமுதல் நமது ஹோட்டல் தொழிலாளர் சங்கம் இருக்கே, அதில் சேர்ந்துகொண்டால் தொழிலாளர் ஐக்கியம் பலப்படும். அப்பதான் தொழிலாளர்கள் பலம் பொருந்திய சக்தியாக முதலாளித்துவத்துக் கெதிராக இறுதிவரை போராடமுடியும். தொழிலாளர்கள் வர்க்க ரீதியில் ஒன்றுபட்டால், அடுத்த கணமே முதலாளித்துவங்களின் கோபுரங்கள் தாமாகவே சரியும்...இப்படித்தான் பல நாடுகளில் முதலாளித்துவங்களின் கோபுரங்கள் சரிந்து வீழ்ந்தன. தொழிலாள வர்க்கம் வெற்றி வாகை சூடியது...''

''இதுங்களெல்லாம் மொதலாளி அறிஞ்சா, சங்கத்தில சேர வுடுவாரா? சன்னதம் ஆடிக்கிட்டல்ல நிப்பாரு?''

''அது உண்மைதான். கோழியைக் கேட்டா ஆணம் சமைப்பது?''

''நம்ப கோரிக்கையளத் 'தரமாட்டேன்' னுட்டா?''

''எல்லாருமாச் சேர்ந்து 'ஸ்ரைக்' பண்ண வேண்டியது தான்.''

'அப்புடீன்னா?''

''வேலை நிறுத்தம்.''

ராமன் சற்று நேரம் விக்கித்துப்போய் நின்றான்.

கந்தசாமி அவனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''அது சரியுங்க, எல்லாரையும் மொதலாளி வேலயில யிருந்து நிப்பாட்டிக்கிட்டார்னா, நம்மளால என்ன செஞ்சுக்க முடியும்?''

''தொழிலாளர் ஒருமித்து வெளியே நின்றால், முதலாளி ஹோட்டலை நடத்தமாட்டார். அதே வேளை அவர் ஹோட்டலைப் பூட்டிப்போட்டு உள்ளே சும்மா இருக்கவும் மாட்டார்,''

''ஏனுங்க அப்படி?''

''ஏனென்றால், முதலாளிகளின் உயிர் நாடியே 'லாபம்' 'சுரண்டல்' என்ற இரண்டிலும்தான் தங்கியிருக்கிறது. அதுதான் சங்கதி?''

ராமன் மனம் இப்போது இரு கன்னைப் போல் தத்தளித்தது.

பில்மாஸ்டர், ரீமேக்கர், குசினிக்காரர் கணக்கப் பிள்ளை, சப்ளைகாரர் எல்லாருக்கும் இந்த விஷயங்களை

எடுத்து விளக்கிச் சொல்லி, கந்தசாமி சொன்னதுபோல் அவர்களையும் ஹோட்டல் தொழிலாளர் சங்கத்தில் சேர்த்துக் கொண்டு, 'எட்டு மணி நேர வேலை' கேட்டுக் கோரிக்கையை முன் வைத்து மிக விரைவில் போராட்டம் நடத்துவது என்று தனக்குள் திட்டமிட்ட ராமன் கதிரையை விட்டெழுந்தான்.

''தொரே...அ...தோழரு, அப்போ நானு போயிட்டு வரட்டுங்களா?''

''ஓ...நல்லது.''

''ஏதும் புத்தகம்—படங்க இருந்தா ஒண்ணு குடுங்களேன்.''

''என்ன காந்தி, நேரு படங்களா, சாமி படங்களா?''

''அதுங்கெல்லாம் ஒட்டல் பூரா மொதலாளி வச்சிருக்காரு... 'ஒலகத் தொழிலாளங்களே ஒண்ணு சேருங்க' - ன்னாரே. அந்தத் தலைவர் படம்.''

அந்த உருவப் படம்—ஞான முனிவர் போன்ற மார்க்ஸ் படம். அவன் கையிலிருந்த புத்தகத்திலேயே இருந்தது அதையே அவன் சுட்டிக் காட்டினான்.

''சரி, இந்தப் புத்தகத்தையே எடுத்துக் கொள்ளும். வாசிக்கிற போது விளங்கிக் கொள்ள முடியாத பகுதிகளை என்னிடம் கேளும் சொல்லித் தருகிறேன்...''

''சந்தோஷம் தோழரு. நானு வாறேனுங்க.''

''மகிழ்ச்சி, போய் வாரும் தோழரே''

'தோழர்' என்ற வசனத்தை அவன் தன் மனத்துக்குள் இனிமையாக மீட்டு முகம் மலரச் சிரித்தான்.

இவன் என்றுமே கேட்டு அனுபவியாத அந்தப் புதிய வாக்கியம் ஒரே இலட்சிய தாகத்தோடு சகோதர உரிமை பூண்டு உலகெங்கும் வியாபித்து ஒலிப்பது போல்

ராமனுக்குத் தெரிந்தது. குதூகலித்த மனத்துள்ஓர் ஆனந்த சுகம் நீவிற்று,

இரவு பத்து மணிக்கு மேலாகி விட்டது.

ராமன் ஹோட்டலுக்குள் நுழையும் போது முதலாளி துரைச்சாமி வெளியே போயிருந்தார்.

எப்பவுமே தோன்றாத புதியதோர் வீறார்வ உணர்வு இப்போது அவன் மனத்தைப் பிரளயப்படுத்திற்று.

இத்தனை காலமும் புகலிடமாகவிருந்த லக்ஷ்மி ஹோட்டல் இன்று ஏதோ ஒரு பாழடைந்த மண்டபம் போல் அசிங்கமாகப்பட்டது. முதலாளியை நினைக்கவே வெறுப்புத் தட்டிற்று. சகலதையும் நினைக்க ராமன் நெஞ்சு கொதிநீர்போல் 'கதகத'த்தது. மனத்துக்குள்ளே முதலாளியை எதிர்க்கிற போராட்ட உணர்வு வீறு கொண்டு அருக்கூட்டிற்று.

கதவைத் திறந்து காம்பராவுக்குள் பிரவேசித்தான்.

சுவரிலே தொங்கிக் கிடந்த காந்தி நேரு படங்களில் சற்றுவேளை கண்கள் உற்று நோக்கிச் சுழன்றன.

மனத்தால் விவரிக்க முடியாத ஏதோ ஓர் அழுந்தல் இனங்காட்டாமல் நெஞ்சுள் அமுங்கித் தாக்கிற்று.

மெதுவாக அந்தப் படங்கள் இரண்டையும் கழற்றி வேஷ்டித் தலைப்பால் பக்குவமாகத் துடைத்து ஒரு மூலைப் பக்கத்தே தொங்க வைக்க நினைத்தபோது, மனம் குதறித் தேகம் ஊனிற்று கண்கள் சாடையாகக் கலங்கின. மீண்டும் சுவர் மேல் தொங்க வைத்தான். ஒரு காந்தமான பெருமூச்சு நீவிக் கழிந்தது.

கரங்கள் நடுங்கின. முகம் சுண்டிக் கறுத்துப் போயிற்று. பழைய இழப்பிலும் புதிய தென்பிலும்

அவன் மனம் தராசுமுள் மாதிரிச் சற்று நேரம் தவித்தது. சோணிப் போனான்.

படங்கை விரித்து அதன் மேல் ஒரு சள்ளைப் பாடாகக் கிடந்து சுவரோடு சாய்ந்த ராமன், 'சேப்'புக்குள் விரல் களை விட்டு ஒரு பீடியை எடுத்துப் பற்ற வைத்தான். புத்தக அட்டையில் உள்ள உருவப்படத்தைக் கண் இமைக் காமல் ஆனந்தத்தோடு ஒரே வெட்டாகப் பார்த்தான்.

எதையோ தேடிக்கொண்டு 'சடா'ரென்று காம்பரா வுக்குள் நுழைந்த பில் மாஸ்டர், "ராமுண்ணே. என்னா ரோசிச்சுக்கிட்டிருக்கே. கையிலே என்ன பொத்தகமா, இல்லே ஒங்க பழைய காதலி ஜானகி போட்டோவா?" என்று சிரித்தவாறு கிண்டலாகக் கேட்டவன் எதையோ தடவினான்.

"அதில்லேடா, நீயி என்னா தடவுறே?"

"காசு வத்சாம் எங்கிட்டு வச்சேன்'னு தெரியலே."

"வடிவாத் தேடிப்பாரு. மொதலாளி பாத்துட்டா அதெயும் வுடமாட்டாரு."

பில் மாஸ்டரின் கைத் தடவலுக்குள் சிக்கிய சாக்குத் துணி இழையில் மாட்டப்பட்ட காந்தி படம் 'கடக்' கென்று கீழே விழுந்து மேல் பார்த்துக் கிடந்தது. அவன் பதைத்துக் கொண்டு அழுகிற தோரணையில் குனிந்து அந்தப் படத்தைத் தாவி எடுத்து அணைத்துக் கொஞ்சி னான். கணநேரம் ராமனைக் கவலையோடு வெறுப் பாகப் பார்த்தான்.

"ஆமா, அந்தப் பக்கவாட்டுச் சுவரிலே மாட்டி வச்ச காந்தி மகான் படம் இந்த மூலைப்பக்கத்து மேலே எப்புடியண்ணே வந்துது?"

"அதெ நான்தான் கழட்டி இந்தால ஓரமா மேலே வச்சேன்."

பில் மாஸ்டருக்குக் கோபமாக வந்தது, நெஞ்சுள் ஏதோ நெருடல்.

''ஏன் அப்புடிச் செஞ்சே?''

''அப்புடித் தோணிச்சு செஞ்சேன்''

''ஒனக்கு அந்தாட்டம் தோணிண்டா, இந்தால வைச்சுடறதா?''

''இந்தால வைக்கலே, பத்திரமாத்தாண்டா மேலே கொழுவிட்டேன்.''

''காந்தித் தாத்தாவ அப்புடி ஒதுக்கி வச்சிட மனசு வந்துதா?''

''நானு அவரெ ஒதுக்கலே. அவரு கொள்கையத் தான் ஒத்துக்கொள்ள முடியலே...''

''என்னா, அப்புடிச் சொல்லிப்புட்டே?''

''ஏன்'னா, அவரு எல்லாருக்கும் நல்லவராட்டம் இருந்தாரு. இம்புட்டுக்காலமா 'அது சரி'ன்னுதான் நெனைச்சேன். ஆனா, 'அது புழை'யெங்கிறதெ இப்ப தான் தெரிஞ்சுக்கிட்டேன்.''

''என்னாங்கிறே. எல்லார்கிட்டயும் அன்பாயிருக்கிற தெக் கூடாதெங்கறயா?''

''எல்லாரும் ஒரே மாதியாவா இருக்காங்க? சிங்கத் தெயும் ஆட்டுக்குட்டியயும் ஒரே கணக்கா நோக்கலாமா? முடியாது. ஆனா, அவரு அப்புடித்தான் மொதலாளிங் களயும் தொழிலாளங்களயும் ஒரே விதமா நோக்கினாரு— நேசிச்சாரு... இல்லே'ங்கறயா?''

பில் மாஸ்டர் மனத்தில் சுருக்குத்தடம் ஒன்று விழுந்தது.

"மொதலாளிக்கிட்ட வேலை செஞ்சு அவரு தயவில வாழ்ந்துக்கிட்டே அவரெ நேசிக்கக் கூடாதெங்கறயே, இது பெரிய துரோகமில்லியா?"

ராமன் நமட்டிச் சிரித்தான். ஒருவர் தயவில் மற்றவர் வாழக் கூடாத ஒரு புதிய சமுதாய அமைப்பைப் பற்றிக் கந்தசாமி விளக்கிக் கூறியது போல் தன்னால் விளக்கி வைக்க முடியவில்லையே என்று வருந்தினான். தான் நேரத்தோடு விபரம் எதுவும் தெரியாமல் மந்தை போல் சேங்கிணியாக இருந்தது போலவே பில் மாஸ்டரும் ஒன்றும் தெரியாத வெறும் அப்பாவியாக இருக்கிறான் என்று தெரிந்து கொண்டான்.

நீண்ட காலமாக ஒருவனிடம் ஊறிப் போன பிடிப்புகளைச் சில மணி நேரத்துள் மாற்றுவது கடினமான காரியம் என்று தெரிந்து கொண்ட ராமன். இந்தச் சமாசாரங்களையெல்லாம் எழுத்தாளர் கந்தசாமி கூறினால் புரிந்து கொள்வான் என்று நினைத்த மாத்திரத்தில் ஒரு மேதாவி போல் அபிநயித்து, "'நம்ம மொதலாளி தொரச்சாமியும் காந்தித் தாத்தா படத்தெ' மாட்டிக்கிட்டிருக்காரு நாமளும் மாட்டிக் கிட்டிருக்கோம் நானு சொல்றதெ உறுதிப்படுத்திக்கிடணும்'னா எங்கிட்டே இருக்கிற இந்தப் படத்தெ மொதலாளிக்கிட்டக் கொண்டு போயி, காந்தித் தாத்தா படத்தோட இந்தத் தாத்தா படத்தெயும் மாட்டி வச்சிக்கச் சொல்லிப்பாரு, அவரு அப்படி வச்சுட்டார்'ன்னா நாமளும் இந்தப் படத்தோட காந்திப் படத்தெயும் வச்சிண்டிருப்போம். என்ன சொல்றே?" என்று கேட்டான்.

பில்மாஸ்டர் இதற்கு என்ன பதில் சொல்கிறான் என்று அவனையே உற்றுப் பார்த்தான் ராமன்.

பில் மாஸ்டர் பிடரியைச் சொறிந்தவாறு தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு எதுவும் பேசாதிருந்தான். ராமன் கூறியதன் முழு அர்த்தம் என்னவென்று சரியாகப்

புரியவுமில்லை. மூளை மசங்கிப்போய் விட்ட சாடை முழிசினான். மனத்துள் ஒரு புகைச்சல்.

'அந்த யாழ்ப்பாணத்துக் கந்தசாமி தொரெதான் இந்த ராமுண்ணெயக் கெடுத்துப்பூட்டாரு' என்று தனக்குள் ஒருபாட்டம் கறுவிக் கொண்டான்.

"இந்தப் படத்தில இருக்கிறவங்க யாரு?"

"மார்க்ஸ். லெனின். தோழர் லெனின் ஒலகத் தொழிலாளங்க விடுதலைக்காகப் போராடின ரட்சகரு. இவுங்க கட்சிதான் தொழிலாளிங்களுக்காவப் போராடி, அவங்க கஸ்டங்களெப் போக்கிண்டிருக்கு. இந்தக் கட்சி தான் மொதலாளிங்க செரண்டல ஒழிச்ச கட்சி."

"ஆமா, இம்புட்டு வெசயங்கள நீம எப்படித் தெரிஞ்சுகிட்டே?"

"பேப்பர்வள் பொத்தகங்கள் எழுதுவாரே நம்ம கந்தசாமித் தொரே அந்தத் தொரதான் சொல்லித் தந்தாரு"

"உந்தப் படம்—புத்தகத்தெயும் அவருதான் குடுத்தாரா?"

"அவரு தரல்லே, நாணாகக் கேட்டு வாங்கியாந்தேன்."

'அப்போ நாம நெனச்சது சரிதான்.'

மன ஈறலில் சற்று வெறுப்போடு ராமனையும் அந்தப் படத்தையும் பார்த்த பில் மாஸ்டர், மகாத்மா காந்தி உருவத்தை அணைப்பிலிருந்து எடுத்து ஆவலோடு உற்று நோக்கினான். விழிகளில் இரக்கவூனம்.

ராமனோடு எதுவும் பேசாமல், சுவரில் நெக்கிக்கிடந்த ஓர் உக்கல் ஆணியைப் பக்குவமாகக் கழற்றி, தான் உறங்குகின்ற பக்கவாட்டாக ஒரு கல்லால் இறுக அடித்து,

அந்த ஆணியில் காந்தி படத்தை மாட்டிவிட்டு, மாபெரும் சாதனை ஒன்றைப் புரிந்தவன்போல் சற்று இறுமாப்போடு ராமனை அநாயசமாகப் பார்த்த பில் மாஸ்டர் 'சடா' ரென்று காம்பராவை விட்டு வெளியேறினான்,

ராமன் சாக்குப் படங்கிலே குந்தி இருந்தபடி பில் மாஸ்டரை வெறித்துப் பார்த்துக் கொண்டே பீடியை இழுத்தான். எதனையும் வாய் திறந்து பேசாமல் ஒரு பெருமூச்செறிந்தான். பில் மாஸ்டர் வெறுப்போடுதான் போனானா அல்லது ஜோலியாகச் சென்றானா என்பதை ராமனால் சரியாக மட்டுக்கட்ட முடியவில்லை.

'அவரு கொள்கை எப்புடீன்னாச்சும் காந்தித் தாத்தா உத்தமரு—சத்தியவந்தரு' என்று மனத்துள் சொல்லிக் கொண்டே மகாத்மா காந்தி படத்தின் தூசைத் தட்டித் துடைத்தான் ராமன்.

இருந்தும் ராமன் மனம் 'என்னவோ மாதிரி' அவனே விவரிக்க முடியாமல் தவித்தது. அவனுக்கு ஒரு சந்தேகம்.

'இந்தச் சின்ன வெசயத்துக்கே இம்புட்டுப் பயந்து ரோசிச்சுக்கிட்டு இருக்கிறவங்ககிட்ட, 'மொதலாளிய எதிர்த்துப் போராட வாருங்கடா'ன்னா, முன்னுக்கு வருவாங்களா...!'

ஒரு மார்க்கமும் தெரியவில்லை. கடைசியாக ஓர் உத்தி தோன்றியது.

'இவனுகள நம்பி மொதலாளியோட மோதின நாமதான் கடேசியா அம்புட்டுக்கவேண்டிவரும்' போராட்டத்துக்குத் தயார்ப் படுத்துறமட்டும் மொதலாளிய எதிர்க்கிறத நமக்குள்ள வேற தினுசாக வச்சுக்கிடணும்'

தன்னாரவாரம் தர்க்கித்துக் கொண்டு எழுந்து போய் அண்டாவுக்குள் கொஞ்சச் சோற்று அவுழ்களை எடுத்த

ராமன், தான் கொண்டு வந்த மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் படங்களைப் புத்தகத்திலிருந்து கிழித்து எடுத்து, ஒரு காட்போட் மட்டையில் அழகாக ஒட்டினான். ஒட்டிய படங்களைத் தனது தலை மாட்டுச் சுவரிலே தொங்கவிட்டு சற்று நேரம் அதையே ஆனந்தப் பரவசத்துடன் பார்த்துக் கொண்டு நின்றான்.

மனத்துள் ரம்மியமான அந்தச் சுலோகத்தை அவன் முணுமுணுத்து மனனம் பண்ணலானான்.

'உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!'

"ராமு, வந்துட்டியா? ஒடம்புக்கு இப்போ எப்படி?"

'திடீ'ரென்று வந்த குரலை மட்டுக்கட்டாமல் ராமன் திரும்பிப் பார்த்தபோது, முதலாளி துரைச்சாமி நகைத்த முகமும் சிரைத்த வேஷ்டியுமாக நின்று கொண்டிருந்தார்.

"பரவாயில்லீங்க மொதலாளி?"

"ஆஸ்பத்திரிக்குப் போனியா?"

"போனேங்க."

"மருந்து குடிச்சியா?"

"ஆமாங்க."

எழுத்தாளர், கந்தசாமியிடம் தான் பெற்ற புதிய ஞானஸ்நானத்தை நினைத்தே அவன் ஆஸ்பத்திரியில 'மருந்து குடித்த'தாகப் பொய் சொன்னான்.

"சரி சரி, அப்புறமா வந்து என்னைப் பாரு. ஒன்னோட தனியாச் சில வெசயங்க பேசோணும்."

"வர்றேங்க."

இந்தச் சந்தர்ப்பத்தைத் தானும் நன்றாகப் பயன் படுத்திக் கொள்ளவேணடும் என்று அவனுக்கு ஒரு

யோசனை எழுந்தது. மனம் கேட்கவில்லை. இவனாகவே வாய் விட்டான்.

''நாமளும் ஒங்ககூட ஒரு முக்கிய வெசயமாப் பேசோணும்'னு நெனச்சிண்டிருக்கோமுங்க?''

முதலாளி நெற்றிப் புருவத்தை மேலே நெரித்து, சற்று முறைப்பாக அவனை ஏற இறங்கப் பார்த்தார்.

''என்னா வெசயம்?''

''பொறவு சொல்றோமுங்க.''

முதலாளி 'விசுக்'கென்று திரும்பி நடக்கலானார்.

அவர் சென்றபின் 'வேலை நேரத்தைக் குறைத்தும் சம்பளத்தைக் கூட்டியும் கேட்பதை எப்படி ஆரம்பிப்பது?' என்ற சிந்தனையில் ராமன் மூழ்கினான்.

'இந்த வெசயத்தெ மொதலாளி கூடப் பேச முந்தி, ஹோட்டல்ல வேல செஞ்சிண்டிருக்கிற நம்மளுக்குள்ள கதைச்சு முடிவு பண்ணணும்'

படங்கைச் சுற்றிச் சுவரோடு வைத்த ராமன், சுவர் வெடிப்புக்குள்ளால் ஊர்ந்த மூட்டைப்பூச்சிகளை நசித்து விட்டு வெளியே வந்து ஹோட்டலுக்குள் மெல்ல அடி வைத்தான்.

ஹோட்டலுக்குள் ஜன நடமாட்டம் இன்னும் ஓயவில்லை.

'எல்லா வெசயத்தெயும் ராவுக்குப் பேசி முடிவு கட்டிக்கிடுவம்'

ஒரு தீர்மானத்தோடு ராமன் திரும்பினான். மூளையில் ஓர் அரிப்பு.

'மொதலாளி தனியா என் கூட என்னா வெசயம் பேசுவார்'னு புரியலயே? சரி, வர்றது வரட்டும். எதனாச்சும் பாத்துக்குவம்.'

உறுதியோடு தனக்குள்ளே சமாதானம் செய்து கொண்டான்.

இரவு பதினொரு மணியாகிறபோது.........

ஹோட்டல் அடைத்தாயிற்று.

குகினிக்காரர் 'சப்ளை' பண்ணுவோர், பில் மாஸ்டர், கணக்கப்பிள்ளை—என்று எல்லா வேலைகாரரையும் தனித்தனியே சந்தித்தபின் ஒன்றாகக் கூடிச் சம்பாஷிப்பது என்று திட்டமிட்ட பிரகாரம் அன்று இரவு சகல சிப்பந்திகளும் காம்பராவுக்குள் கூடிக் கொண்டார்கள்.

தொழிலாளர்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து கொண்ட மகிழ்ச்சியில் ராமன் சற்று அசந்து போயிருந்த போது, கொட்டாவி விட்டு ஓய்ந்த பில் மாஸ்டர் கேட்டான்:

"மொதலாளி மேல் மாடியில இருக்கிறப்போ நாம இங்கின இருந்து கூடிப் பேசறது சரியா? நாம பேசுறது அவர் காதுல வுழுந்துட்டுதுன்னா சந்தேகப்படமாட்டாரா?"

பில் மாஸ்டர் வாயோச்சமாகச் சொன்னதையும் அதன் விளைவுகளையும் ஏலவே ஒருவரும் சீரியஸாக யோசிக்கவில்லையாதலால், அவன் தூக்கிப் போட்ட கேள்விக்கு எவருமே பதில் கூறாமல் ஆளையாள் பார்த்து முழிசிக் கொண்டிக்கிறபோது, சந்தி மணிக்கூண்டுக் கோபுரத்தில் பன்னிரண்டு மணி அடித்துக் கேட்டது.

"மணி பன்ராண்டாச்சு. மொதலாளி இனி எங்கே வரப்போறாரு. அவரு ஒறங்கப் போயிருப்பாரு" என்றான் ரீ மேக்கர் தங்கவேலு.

ராமனும் பில் மாஸ்டரும் ரீ மேக்கரை வெகு பரிதாபமாகப் பார்த்ததை அவன் கவனிக்கவேயில்லை.

"ரீ மேக்கரு, ஒனக்கு ஒரு எழவும் தெரியாதும்பா. நாம தூங்கிற நேரமாப்பாத்து மொதாளி முழிச்சுக் கிறவரு. அந்தத் கருமாதியிலதான் இப்போ அவரு மெனக்கெட்டுருக்காரு. இதெல்லாம் ஒனக்கு எங்கே தெரியப் போவுது?"

கிண்டலாகவும் கேலியாகவும் சொன்ன பில் மாஸ்டர் ராமனைக் கடைக்கண்ணால் பார்த்தான்.

ராமன் சிமிக்கிணாமல் கண் சிமிட்டி பில் மாஸ்டரைப் பார்த்து 'அவன் பாவம்'டா. அப்புடியெல்லாம் நம்மாளப் பேசக் கூடாது' என்ற தோரணையில் கையால் சைகை காட்டினான்.

அப்பவும் ரீமேக்கர் தங்கவேலுவை ஒவ்வொருவரும் ஏளனமாகவும் பரிதாபமாகவும் பார்க்க, அவனோ எதனையும் பொருட்படுத்தாமல் அவர்கள் முன்னே ஒரு சிறு குழந்தைபோல் வாயைப் பிளந்தபடி தூங்கி வழிந்து கொண்டிருந்தான்.

குப்பிவிளக்கு வெளிச்சத்தில் ஆலோசனைக் கூட்டம் ஆரம்பமாயிற்று.

எழுத்தாளர் கந்தசாமி சொன்ன விஷயங்களையும் கருத்துக்களையும் விருத்தாந்தமாக எடுத்துக் கூறிய ராமன், அவற்றை ஆதாரமாக வைத்து அவர்களுக்கு ஆறுதலாக விளக்கினான்.

முதலாளிகள் தொழிலாளர்களை எப்படியெல்லாம் நடத்துகிறார்கள், என்னென்ன விதமாகச் சுரண்டுகிறார்கள் என்றும், முதலாளிகளுக்கு 'லாபம்' என்ற வேட்கையைத் தவிர வேறு நோக்கமே இல்லை என்றும் இந்த முதலாளித்துவங்களால் நாடுகளில் கலகங்களும் அராஜகங்களும் யுத்தங்களும் எப்படித் தோன்றுகின்றன என்றும், இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு தொழிலாள வர்க்கம் மேலும் பலம்பொருந்திய கோபுரமாகி உலகத்

தையே நாசமாக்கி அடிமைப்படுத்திவிடும் என்றும்—இப்படியாகப் பல புதிய புதிய கருத்துகளை வெளியிட்டான்.

ராமனது பேச்சை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த சகபாடிகளின் முகங்களில் ஒருவித ஆர்ப்பரிப்பும் வீறுணர்வும் சூல் கொள்ள ஆரம்பித்தன.

இதைக் கவனித்த ராமன், 'இனி எந்தப் போராட்டங்களுக்கும் மொகங்குடுக்கத் தயாரா விடுவாங்க' என்று தனக்குள் இறும்பூதெய்தினான்.

ஆனால், ரீ மேக்கர் தங்கவேலு சுரணை செத்த செக்குமாடுபோல் தன் பாட்டில் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்த ராமன் கேட்டான்.

''என்னா ரீ மேக்கரு, ஒனக்கு வெசயம் புரிஞ்சுக் கலயா?''

''ஆமா. புரியுது.''

''என்ன புரிஞ்சுக்கிட்டே. சொல்லு பாப்பம்?''

''நீங்கல்லாம் மொதலாளிக்கு எதிராச் 'சதி' பண்ண என்னமோ ரோசிக்கிறீங்க... ஆனா, அது எம்புட்டுப் பெரிய துரோகம். மொதலாளிதான் நம்பளையெல்லாம் இம்புட்டுக் காலமா காப்பாத்திக்கிட்டு வர்றாரு. நன்றியில்லாத ஒங்ககூட மொதலாளிக் கெதிரா நானு ஒரு நாளும் சேர மாட்டேங்'கிறேன்.''

நறுக்குத் துண்டாக ரீமேக்கர் தங்கவேலுவின் வார்த்தை—அவன் கருத்து இப்படி மாறாக உருவாகுமென்று ஒருவரும் எதிர்பார்க்காததால் எல்லோரும் இடியுண்ட நெஞ்சினராய் ஒரு கணம் திகைத்துப்போய் ஆளையாள் பார்த்துக் கொண்டார்கள்.

கணக்கப்பிள்ளை தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான்.

'கருங்காலி—கைக்கூலி—அடிமை நாயி'

பில் மாஸ்டர் தனக்கு எழுந்த கோபத்தைக் காட்டிக் கொள்ளாமல் கெஞ்சுந் தோரணையில் சொன்னான்.

''ரீ மேக்கரு, நீமர் வெசயந் தெரிஞ்சுக்காம அப்புடிச் சொல்லாதேயுங்க. நாங்க மொதலாளிக்கு எதிராச் 'சதி' பண்ணக்கெணம்பலே. மொதலாளி இம்புட்டுக்காலமா நம்பளுக்குச் செஞ்சு'க்கிட்டு வர்ற 'சதி'யெத் தடுக்கிறதுக்காவத்தான் அந்தப் 'புளான்' போடறோம். அதான் வெசயம்''

''சதியா, என்னா சதி செஞ்சுட்டாரு?''

சற்றுக் கேந்தியாக விடுத்துக் கேட்ட ரீ மேக்கர் கண்கள் வியப்பில் அகல விரிந்தன.

ஏலவே ராமன் சொன்ன விஷயங்களைப் பின்னணியாகக் கொண்டு தன்னால் முடிந்தவரை முதலாளிகளின் சுரண்டல்களைப் பற்றிப் பில் மாஸ்டர் ஒரு பாட்டம் விளக்கிவிட்டு, முதலாளி துரைச்சாமி நடுச்சாம வேளைகளில் பெண்லோலனாகவும் மாறி இரகஸ்யமாகச் கரசலீலை பண்ணுகின்ற கோலங்களையும் விவரித்த பின் ரீ மேக்கர் முகத்தைக் கனிவோடு பார்த்தான்

'மொதலாளி பொண்ணு வேட்டைக்காரனாகவும் மாறியிட்டாரா. துப்புக் கெட்ட பய.'

ரீ மேக்கர் மனத்துக்குள்ளே அந்த விஷயத்தை மீட்டுக் கொண்ட போதுதான் தனது சம்சாரம் சொன்ன வார்த்தைகள் அவன் நினைவில் தட்டின:

''ஒங்க மொதலாளி இருக்காரே அவரு எம்புட்டு நல்லவரு தெரியுமா? அப்புடிப் பட்டவரு ஒட்டல்ல வேல

செஞ்சுக்கிற நீம நல்லா ஒழைச்சாத்தான் அவரு ஓட்டல் நல்லபடியா உருப்படும். அவரு உருப்பட்டாத்தான் நம்மளையும் செம்மளாக் கவனிச்சுக்குவாரு. நீம இங்கிட்டு வராம ஓட்டல்லயே இருந்துக்கலாம். 'வோணும்'னா நானு வந்து ஒன்ன ஓட்டல்லயே பாத்துக் கிடறேன்.''

அவள் வார்த்தைகளில் தொங்கியுள்ள 'அர்த்தம்' அவனுக்கு இப்பொழுதுதான் 'ஒரு மாதிரி'யாக வெளித்தது.

தேகம் ஊனிக் கண்கள் துடித்தன, நெஞ்சு பதறியது, முகத்தில் வெப்பிசார வெம்பல்.

பீடி ஒன்றை எடுத்து வாயில் நன்னிக் கொண்டு மௌனமாக | ஊதிக்கொண்டே ரீமேக்கர் அமைதியாகக் கேட்டான்.

''ஏ பில்மாஸ்டரு நீம சொன்னது நெசந்தானா?''

''நெசந்தான்'கிறேன். நம்பலயா? நம்பிக்காட்டிப் பரவாயில்லே. ஆனா, கவனமா இருந்துக்கோ.''

பீடித் துண்டைக் கடித்துத் துப்பினான். அவன் போக்கில் மாற்றம் காண்பதைக் கவனித்த ராமன், அவனைத் தனிமனிதக் குரோதவாதியாக்கி விடாமல் அவன் மனத்தைச் சாந்தப்படுத்துகின்ற பாவனையில் ''அந்த எழவு சவத்தெவுட்டுத் தள்ளுங்க மொதலாளிங் கட கொணதோஷத்தில அப்புடிக் கொந்த கிலிசகேடு களும் ஒண்ணாயிருக்கிறது வாஸ்தவம்தான். நாம தனிப்பட்ட வெசயங்களுக்கு எடம் குடுத்தா, பொதுவான முக்கிய காரியங்களெல்லாம் பாழாயிடும்...'' என்று எடுத்துக் கூறிவிட்டு ரீமேக்கரைப் பார்த்தான்.

வாய் பிளந்தபடி ஏங்கிப்போயிருந்த ரீமேக்கர் அழுத்தமாகக் கூறினான்.

''இனி என்னாச்சும் செஞ்சுங்க, நானு மேலைக்கு ஒங்ககூடச் சேந்துக்கிறேன்.''

அப்போது வெளியே ஆளரவம் கேட்டது.

ரீமேக்கர் 'சடா'ரென்று எழுந்து பார்த்தபோது முதலாளி துரைச்சாமி படி இறங்கிக் கீழே வந்து கொண்டிருந்தார்.

காம்பராவில் குப்பி விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது.

வேலையாட்கள் அத்தனைபேரும் சாக்குப் படங்குகளை விரித்துக் கூடியிருப்பதைக் கண்டதே அவருக்குச் தலையைக் கருவறுத்துக்கொண்டு பிறிட்டது.

''ஏன்'டா பயலுக. நீங்க இன்னும் தூங்கலியா?''

அவரின் சன்னதத்திற்கு ரீமேக்கரே பதில் சொன்னான்.

''தூங்கிறாப்பல இல்லீங்க.''

'தாயோளி, பூனைபோல் பதுங்கியிருந்த தங்கவேலு புலிபோல் பாய்ந்து இப்புடித் 'திடீர்' என்று பதில் சொல்ல எப்புடித் துணிவு வந்துது?' என்று யோசித்த முதலாளி, தொண்டையைக் கனைத்துக் கொண்டு அவனையே உற்று வெறித்துப் பார்த்து, ''தூங்காம இருந்து என்னுமடா பண்ணிக்கிட்டிருக்கீங்க?'' என்று ஆவேகித்துத் தன்பாட்டில் 'முறுகி'யடித்தார்.

என்றாலும் அவருக்குள் கருக்கொண்ட 'திடுக்' காட்டம் அவர் நெஞ்சுக்குள் துருத்திக் கொண்டிருந்து.

''என்னா மொதலாளி. எங்க வேல வெட்டி முடிஞ்சு நாம நமக்குள்ள கூடியிருந்து பேசறதுக்கும் உரிமை இல்லீங்களா?'' என்று இடுக்கி வந்தது, அடுத்த பேச்சு.

'உரிமை'...

இந்த வாக்கியத்தையும், அது அவன் வாயில் அழுத்தி வந்த தோரணையையும், அவர்களின் இந்தப் 'புதுப் போக்கை'யும் கவனித்த முதலாளிக்கு ஒன்றுமாகப் பிடிபடவில்லை. தலை 'கிறுகிறு'த்தது.

சற்று வேளை இடியுண்ட நெஞ்சினராய் மரம் போல் நின்றவர் வெக்காளிப்போடு கேட்டார்.

''என்னங்கிறே, 'உரிமை'யா கேக்கிறீங்க? ஆமா, இம்புட்டு நேரமாத் தூங்காமே உரிமை பாராட்டி என்ன சமாசாரங்களப் பேசிச்கிட்டிருக்கீங்க.''

முதலாளி பேச்சில் கிண்டலும் கேலியும் விஷங் கக்குவதுபோல் பாய்ச்சின. பேச்சின் பாணி அவர்களுக்குத் தெளிவாகப் புரிந்து கொண்டது.

துணிந்தாயிற்று.

ராமன் கழுத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு சற்று அசட்டுத் துணிச்சலோடு சொன்னான்.

''மொதலாளி, எங்க உரிமைங்க என்னா'ண்ணு நாளக்கிக் காலம்பொறத் தெரிஞ்சுக்கிடுவீங்க.''

அந்த வார்த்தை அவர் நெஞ்சுக் கொலுவை ஒரு தரம் உலுப்பிற்று. எப்பவோ நிகழப் போகின்ற ஏதோ ஒரு விபரீதத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற குற்றவாளி போல் அவர் மனம் ஏங்கியது. எனினும், அதையெல்லாம் வெளிக்காட்டாமல், கனல் தெறிக்கும் தொனியில் ஆவேசிக்கலானார்.

''என்னது 'புதுக்கதை' வருது? டே ராமூ, நானும் ஒன்னக் கவனிச்சுக்கிட்டுத்தான் வர்றேன். நீயி இப்ப முந்தின ஆளில்லே. எனக்குத் தெரியும்'டா, அந்த யாழ்ப்பாணப் பயல் கந்தசாமிதான் ஒன்னக் கெடுத்துப்

புட்டான். அவனுதான் பூனையா இருந்த ஒன்னப் புலி யாக்கிட்டான். அவனு எழுதுறதெயும் பேசுறதெயும் கேட்டுப்புட்டு நீங்கெல்லாம் கெட்டுப் பூட்டீங்க'டா. நம்ப மலைதாட்டுத் தொண்டங்க தலைவமாரு சொல்ற தெல்லாம் ஒங்க காதில விழல்லே. அதுதான் ஒனக்கு இம்புட்டு வாய்க் கொழுப்பான பேச்சு வருது'ங்கிறேன்.''

எழுத்தாளர் கந்தசாமியின் நாமத்தை முதலாளி குறிப்பிட்டதே தாமதம், ராமன் பொறுமையை இழந்து விட்டான்.

''மொதலாளி பேசுறதெ அளந்து பேசுங்க. ஒங்க தலைவரு— தொண்டங்க மாதிரி நீங்களும், 'யாழ்ப் பாணத்தான்', 'மலே நாட்டான்','மட்டக்கெளப்பான்'னு பேசிநஞ்சு ஊட்டாதீங்க ஒங்களப்போல மொதலாளிங்க. தான் யாழ்ப்பாணத்திலேருந்தும் மலே நாட்டிலேருந்தும் 'தோட்டக் காட்டான்' 'யாழ்ப்பாணத்தான்'னு சொல்லி தொழிலாளங்களப் பிரிச்சு வச்சுச் சுரண்டிக் கொள்ளை யடிச்சாங்க இப்பவும்அதெத்தான்செஞ்சுக்கிட்டிருக்காங்க. ஆனா, கந்தசாமி புதிய பாதெயச் சொல்லித்தந்தவரு. அவரு மலநாடு யாழ்ப்பாணத்துக்காவ மட்டும் எழுதுறவ ரில்லே. முழு லோக ஜனங்களுக்காகவும் எழுதுகிற பெரிய எழுத்தாளர். அவர் நம்ம தோழரு, எஜமானில்லே. அவர் நம்மளக்கெட வைக்கலே, கெட்டவங்கள இணங்காட்டித் தந்தவரு. இனிமே ஒங்க 'லவுடா' எங்கிட்ட எடுபடாது''

ஹோட்டல் உச்சிமேல் மலையிடிந்து விழுந்த மாதிரி முதலாளி துரைச்சாமியின் நெஞ்சு கமாரிட்டது. மூளை யில் மசக்கம்.

இத்தனை காலமாக முதலாளியின் 'எடுபிடி'களா யிருந்து அவர் சொல்வதை மட்டுமல்ல மனத்தால் நினைக்கிறதையே செயற்படுத்துகின்ற ராமன், அவருக்கு நன்றி விஸ்வாசமுள்ள 'கைப்பொடியன்' போலிருந்த பில்

மாஸ்டர், பெண் கொள்ளும் இளந்தாரியாயிருந்தே ஆண்மையற்ற தன்மையில் அவன் சம்சாரம் தன்னிடம் சோரம் போனதைத் தெரிந்தும் தெரியாதவன்போல வாய் மூடி—கை கட்டிச் சேவகம் செய்கிற ரீ மேக்கர் தங்கவேலு, தனது நிழல் கண்டாலே நடுங்கிக்கொண்டு ஹோட்டலை அமர்க்களமாக்கும் சிப்பந்திகள்—இத்தனை 'பயல்'களும் ஒன்று திரண்டு கோபுரம்போல் உயர்ந்துவிட்ட முதலாளியை எதிர்த்து நிற்பதென்றால்...எதிர்ப்பதென்ன? எதிர்த்தேவிட்டான்கள்—எதிரிகளாகியே விட்டான்கள்'—வடுவாக்களுக்கு என்ன துணிச்சல்?

யோசிக்க யோசிக்க மண்டை புழுங்கிற்று.

இப்பொழுது அந்த எழுத்தாளர் கந்தசாமி முதலாளி துரைச்சாமி கண்ணில பெரிய பூதம்போல் தெரிந்தார்.

'அப்பாவிப் பசங்களைத் தூண்டிவிட்டுக் கூத்துப் பாக்கிற அந்த யாழ்ப்பாணத்துப் பயல் வரட்டும். ஆளுங்கள வச்சே 'ஆபேஸ்' பண்ணிடறேன். எழுதுறானாம் எழுத்து. மண்ணாங்கட்டி. நாலு பத்துப்பேர் மதிக்கிற நம்மளப்போல பெரிய ஆளுங்களப் பத்தி நாலு வரி நல்லதா எழுதமாட்டானுக. சோத்துக் கட்சிக்காரங்க... ஒண்ணுக்குமே லாயக்கில்லாதவங்களப் பத்தித்தான் அளந்து கொட்டுவானுக...சமதர்மக்கட்சியாம் சமதர்மம். அதர்மம் புடிச்ச பயல் வரட்டு, செஞ்சு காட்டுறேன் வெளயாட்டு...'

மனம் புகைய, நெஞ்சு கமற அவர் தன்னுள் சன்னதமாடி, தன்னுள் தீய்ந்து புழுங்கும்போது, கந்தசாமி 'கல கல'த்துச் சிரிக்கிற தொனி—அந்தக் காட்சி அவர் மனக் கண்ணில் படை எடுத்தது.

''டே ராமு, எல்லாப் பசங்களுமாச் சேர்ந்து கட்சி கட்டிக்கிட்டு வர்றாப்பல கெடக்கே...ஏன்டா ஒங்க புத்தி

தடுமாயிடுத்தா, இல்லே, அந்தக் கந்தசாமிப் பய மாத்தி யிட்டானா?''

''மொதலாளி, முன்னமும் சொல்லியிருக்கேன். நம்மளப்பத்தி எது வேணும்னாலும் சொல்லிக்கோங்க. ஆனா, அவரெப் பத்தி மட்டும் ஏணாகோணமாப்பேசி. நம்மட வெசயத்தெ அமுக்காதேங்க...''

''என்'டாப்பா வெசயம்?''

''அ...அப்புடிக் கேளுங்க.''

''சர்தான், சொல்லித் தொலெக்கிறதுதானே. அதுக் கேன்'டா இந்த வீண் வம்பு தும்பு'ங்கிறேன்,''

''மொதலாளி, நாங்க ஒங்ககிட்ட வம்புதும்பு கலாட்டா பண்ண வரல்லே. எங்க ஒழைப்புக்கேத்த ஊதியம்தான் கேக்கிறோம்.''

''அடேப்பா, இம்புட்டுக்காலமா ஊதியம் வேண்டிக் காமலா வேல செஞ்சீங்க?''

''அதுவா...நீங்க வச்ச சட்டத்துக்குத்தான் அந்தாட்டம் கூலிவேல செஞ்சோம்; இனிமே அப்படிச் செஞ்சுக் கிடறதா உத்தேசமில்லே.''

''அப்புடீன்னா, நீங்க சொல்றாப்பல ஒங்க சட்டத் துக்கா நானு ஒட்டல நடத்தணும்'கிறே?''

''ஒங்க சட்டமும் வோணாம் எங்க சட்டமும் வோணாம், பொதுவா ஒலக வழக்கப்படியாச்சும் நீதியா நடந்துட்டாப் போதும்.''

''அதென்ன ஒலக வழக்கம்?''

''சொல்றோம்.''

ராமன் இத்துடன் பேச்சை நிறுத்திக் கொண்டான்.

''ஏன்'டா மவுனமாயிட்டே?''

''சத்தெக்குப் பொறுங்க மொதலாளி...இதெப் பாத்தீங்கன்னா நம்ப நெலவரத்தெத் தெரிஞ்சுக்கிருவீங்க... இந்தாங்க அறிவித்தலுப் பத்திரம், பாத்த பொறவு ஒரு முடிவு சொல்லுங்க.''

தன் கையால் எழுதிய ஒரு கடதாசிப் பத்திரத்தை ராமன் கொடுத்தான்.

துரைச்சாமி அதனை 'லபக்'கென்று இடுக்கிப் பறித்து முழி உருட்டிப் பார்த்தான்.

'சம்பளத்தெக் கூட்டணும்.'

'எட்டுமணி நேரம்தான் வேல செஞ்சுக்குவோம்.''

'அதுக்குமேல வேல செய்யறதுன்னா, ஓவர் டைம் சல்லி தந்திடணும்''

'இல்லேன்னா அதுக்கு 'ஒப்'புத் தரணும்.'

'இதுக்கும் சம்மதிக்கலேன்னா, ரண்டு மடங்காச் சம்பளம் கூட்டித் தரணும்.'

'வருஷத்துக்குப் பதினாலு நாளு வைத்திய லீவு தரணும்.'

'ஒரு வருஷத்தில இருவத்தெட்டு நாளு கசுவல் லீவு குடுக்கணும்.'

'வருஷத்துக்கு ஒருக்கா 'போனஸ்' தந்திடணும்.'

'இதுக்கெல்லாம் ஒரு கெழமைக்குள்ள ஒத்துக் கிடலே'ன்னா, தொழிற்சங்க நடவடிக்கை எடுத்துக்குவோம்.'

அவர் நெஞ்சு 'டக்'கென்று இடித்தது. பனிக் குளிரிலும் முகத்தில் வெயர்வை நுளம்பிற்று. எதனையும்

காட்டிக்கொள்ளாமல் ராமனைக் கொன்றுவிடுவதுபோல் முறைத்துப் பார்த்தார்.

'பயலுகளை வெட்டினால்தான் காரியம் சித்தியாகும்' என்ற ஒரு யோசனை—வழக்கமாக எழுகின்ற இந்த யுத்தி மனத்தில் தட்டிற்று.

'பசங்க ஏதும் தப்புத் தண்டாவுக்கு வந்துடுவான்களோ?' என்றும் மறுபாட்டம் உள்ளூர மனசு உறுத்திற்று. அசட்டுத் துணிச்சலோடு அட்டகாசிக்கலானார்.

''ஆமா, நீங்க நெனச்சாப்பல ஒங்க பாட்டுக்கு நடந்துக்கிட முடியுமா? 'சட்டம்'னு ஒண்ணு இருக்கிற தெத் தெரிஞ்சுக்காம என்னோட கலாட்டா பண்ணவா வந்தீங்க? வருவீங்கடா வருவீக 'எழுத்தாளன்' னு ஒரு பய—சுஞ்சிக்கு வழியத்த அந்தப் பய கந்தசாமி இருக்கானே, அந்த வடுவாவக் 'கம்பிக் கூட்டுக்க' தள்ளி னாத்தான் ஒங்களுக்குப் புத்தி வரும்'டா...''

'சடா'ரென்று குதறிக் கொண்டு முன்னே பாய்ந்தான் ராமன்

''மொதலாளி, மறுவாட்டியும் சொல்றேன், நம்மளப் பத்தி எப்புடியாச்சும் சொல்லிக்கோங்க. ஆனா. கந்தசாமியப் பத்தி வாய் தொறந்தீங்கன்னா அப்புறம் நடக்கிறது வேறே.''

முதலாளி உண்மையில் பயந்துதான் போனார்.

ஆனால், இந்த 'அற்பப் பயல்'களுக்கு விட்டுக் கொடுக்க அவர் மனம் ஒப்பவில்லை. 'எல்லாம் அந்தக் கந்தசாமிப் பயலால வந்தவெண. அவனெத் தொலச்சுக் கட்டினாத்தான் இந்தப் பசங்க உருப்படுவாங்க; நாமளும் நிம்மதியா இருக்கலாம்' என்று தனக்குள் 'கறுவிக்' கொண்டார்.

ரீ மேக்கர் தங்கவேலுவில் அவர் கண்கள் பொறி கக்கி விழுந்தன.

அவன் இருப்பிடம் மாறி மெல்ல நழுவினான்.

''ரீ மேக்கரு, சத்தெ நில்லுடா.''

ராமன் உரத்த குரலில் உத்தரவிட்டான். தங்கவேலு நின்றான்.

தனக்கு எதிரே — தன் நெற்றிக்கு நேரே தன்னை மீறி ஒரு கூலிக்காரச் சேங்கிணிப் பயல், தன் ஹோட்டல் வேலைக்காரனுக்குக் கட்டளையிடவா? என்ன ஆணவம்; என்ன திமிர்?

இதை முதலாளியால் ஜீரணிக்கவோ பொறுக்கவோ முடியவில்லை.

திரும்பி வந்து முகத்தை உலுப்பிக்கொண்டு பட்டறை லாச்சியைச் 'சடக்'கென அடித்து மூடினார், அந்தவாக்கில் சாவிக் கொத்தை எடுத்து இடுப்புவாரில் செருகிவிட்டு, விறுவிறென மேல் மாடிக்குச் சென்ற மறுகணம், டெலிபோன் மணி'ணங்' கிட்டது.

'பட்டறை 'டெலிபோன'வுட்டுட்டு, மேல் மாடிப் 'போன' ஏன் எடுத்தாரு?'

ராமனுக்கு விஷயம் ஓடி வெளித்தது

''என்ன ரீ மேக்கரு, மொதலாளி சாமி படங்களுக்குப் பூஜை பண்ணுற ஒத்தமர்'ன்னியே, இப்ப அவரு அந்தச் சாமிங்கள வுட்டுட்டு, நம்மளுக்கெதிரா பொலிசுப் பட்டாளச் சாமிங்களுக்குப் 'போன்' பண்றாரு, பார்த்தியா?''

'என்னாது, பொலிசுக்கா?'

ஹோட்டல் வேலையாட்கள் அத்தனைபேர் கண்களும் ஏகமாக வெளுறி மிரண்டன.

ராமன் எக்காளமிட்டுச் சிரித்தான்.

''ஏண்டா பயந்து நடுங்கிறீங்க...நாங்க என்ன பொழ செஞ்சுட்டோம். நாம என்ன 'மேடரா' பண்ணிப்புட்டோம்? மொதலாளிங்க அதிகாரத்தெப் பாவிச்சுண்டு பட்டாளத்தைக் கூப்பிடுவாங்க. நாங்க தொழிலாளங்கள நம்பிக்கிட்டு நம்மட சக்தியப் பாவிச்சுக்குவோம்...''

ராமன் வார்த்தைகளில் தெறித்த வீறு சகல சிப்பந்திகள் நெஞ்சங்களிலும் வஜ்ஜிர உருவேற்றியது.

''இண்ணெக்கு வேல செஞ்சுடாம எல்லாரும் ஒத்துமையா வாங்க. காம்பராக்குப் போயி ரோசிப்பம்... இண்ணெக்கு ஹோட்டலெப் பகிஷ்கரிச்சாப்பலயும் இருக்கும்...''

ராமனின் ஆக்கிரோஷ வார்த்தைகளுக்கு எல்லோரும் செவி படுத்ததுபோலவே ரீ மேக்கர் தங்கவேலுவும் நெஞ்சு நிமிர்த்திக்கொண்டு அவர்களுடன் இணைந்து சென்றான். நடையில் ஒரு புதிய வீறு.

'ஆற்றிலே நின்று அரகரா சிவ சிவா என்றாலும்

சோற்றிலே இருக்காண்டா சொக்கப்பன்'

தமிழகத்தின் இடி முழக்கமான ப. ஜீவானந்தம் கவிதையை உருப்போட்டு உருப்போட்டுப் பாடிக் கொண்டிருந்த கந்தசாமி, கதவு தட்டுகிற ஒலி கேட்டு வெளியே வந்து பார்த்த போது, சீரழிந்த தற்காலத் தமிழச் சினிமா நட்சத்திரம்போல் ஓர் இளம் யுவதி 'நளின'மாக வளைந்து 'நமஸ்காரங்க' என்று கை கூப்பி விட்டுச் சிரித்தாள்.

கந்தசாமி மலைத்துப் போனார். இவளை இன்று தான் காண்கிறார்.

"யாரைத் தேடுகிறீர்?"

அவள் 'ஹான்பாக்'கைத் திறந்து உள்ளே உள்ள முகவரித் துண்டு விபரத்தை மறுபடியும் ஒரு முறை பார்த்தபின் கேட்டாள்.

"எழுத்தாளர் கந்தசாமி'ங்கிறது நீங்கதானே?"

'யாரோ 'ஜனரஞ்சகப் பேனா'க்காரன் இவளுக்கு வலை வீசிவிட்டானோ அல்லது அவன் ஆபாசத்தில் இவள் மயங்கிவிட்டாளோ?'

"ஆமாம். என்ன விஷயம்?"

ைநந்து திமிறி ஒரு சிரிப்பு வாயில் பூவாய் விரிந்தது.

"ஒங்களத்தான் பாக்கோணும்'னு வந்தேன்."

கொழும்பில் இனங்காண முடியாத 'முடிச்சுமாறிகள், நடமாடுவதை இவர் கசடறத் தெரிந்தவர். கிலேசம் தட்டிற்று.

காடு மேடு, பற்றை பறுகு, கல்லு முள்ளு என்று கிடந்த மலையகப் பிரதேசத்தையே கலையகமாக்கிய தமிழ்த் தொழிலாளர்களின் வேள்வியானதியாக வாழ்க்கையும், அவர்களின் சிதைந்துபோன அவல வாழ்வும், சுதேசிய விதேசிய முதலாளித்து வங்களால் நிஷ்டூரமாக நசுக்கப்பட்ட லட்சக்கணக்கான மலையக மக்கள் பிச்சைத் தீனிகளாக மாட்டுத் தொழுவ லயங்களில் அடைபட்டு ஜீவனோபாய நிலைக்குத் தள்ளப்பட்ட கோரமும், சிங்கள தமிழ்ப் பூர்ஷ்வாத் தரகுமுதாலளி களால் அன்றாடம் சுரண்டப்படுகின்ற விதமும் கந்தசாமி யின் மனக்கண்ணில் நிழலாடித் திரையாக விழுந்தன.

வஞ்சகமே யற்றதால் மோசமாக வஞ்சிக்கப்பட்ட இந்தப் பரிசுத்தமான தோட்டத் தொழிலாளர்களுக்குள் — இந்த மக்களுக்குள் இப்படி ஒரு பெண் பெரும் ஐஸ்வரி

போல் நவநாகரிகமாகத் தன் முன் தோன்றியதை— அதுவும் தேடி வந்ததைக் கண்டு இவர் மனம் சற்றுப் பூரித்தபோதும், கூடவே ஒரு வலுவான சந்தேகமும் எழுந்தது.

'திடீர்'ப் பணக்காரியோ?'

''அந்தப் புட்டுவத்தில் இரும்—உமது பேர் என்ன?''

''மீனாட்சியுங்க.''

''வசிப்பிடம்?''

''கண்டியுங்க.''

''நீர் எங்கோ உத்தியோகம் பார்க்கிறீராக்கும்?''

''இல்லீங்க...எம் புருஷன் ஓட்டல் ஒண்ணுல வேல.''

''அப்படியா...சந்தோஷம். எந்த ஹோட்டல்?''

''லச்சுமி ஓட்டல்''

''ஓ...அப்ப அவரை எனக்குத் தெரிந்திருக்க வேணுமே அவர் பேர் என்ன?''

''தங்கவேலுங்க.''

''நம்ம ரீமேக்கர் தங்கவேலுவா?''

''ஆமாங்க.''

அவள் திகைத்தே விட்டாள். கந்தசாமி உண்மையில் அசந்துபோனார்.

'ஓகோ...தங்கவேலு பெண்டாட்டியா...அதுதானே பார்த்தேன்.'

''இப்ப உம்மை நான் வடிவாத்தெரிஞ்சு கொண்டேன் தங்கவேலு ஏதும் சொல்லிவிட்டாரா?''

''அவரு இல்லீங்க, அவரு மொதலாளி.''

"ஆர், துரைச்சாமியா?"

"ஆமாங்க."

மார்புச் சட்டைக்குள் கை விட்டு ஒரு தடித்த கவரை எடுத்துப் பிரித்து, அதற்குள் இருந்த கடதாசிப் பத்திரம் ஒன்றை வெகு பக்குவமாக விரித்தாள்

"இதெ ஒங்ககிட்ட மொதலாளி தடுக்கச் சொன்னாருங்க. நாளக் காத்தால வந்து பாத்துக்கிறதாச் சொன்னாரு. இந்தாங்க" என்று சொல்லிவிட்டு அவரிடம் நீட்டினாள்,

அது, ஐயாயிரம் ரூபாவுக்கான ஒரு 'செக்' தாள்.

அவர் கண்ணில் மின்னல் அடித்தது. ஊமை கண்ட கனவினராய் வாயடைத்து நிலை குலைந்துபோய் நின்றார்.

'அட பாவி, இவன் துரைச்சாமி இந்தப் பேதைப் பெண் பிறவியை மட்டுமா, என்னையுமல்லவா விலைக்கு வாங்க நினைத்தான் சண்டாளன்,'

அவர் இதயத்துள் கக்கிய அக்கினி எரிசரமாக அவருள் கனன்று கெந்தகித்தது.

லட்சக்கணக்கான இலங்கைத் தொழிலாளர் வர்க்க ரீதியாகவும், இனரீதியாகத் தமிழர்களும் காலங்காலமாக இனவாதிகளால் முதலாளித்துவத்தால் நசுக்கப்பட்டு, சுரண்டப்பட்டு, ஒடுக்கப்பட்டு நவீன அடிமைகளாக ஒரு பக்கம் செத்துக்கொண்டிருக்க, மறுபக்கம் தமிழனே தொண்டன் வேஷம் போட்டுத் தமிழரைச் சுரண்டியும் அடிமைப்படுத்தியும் சுகபோகிகளாக வாழும்போது, இந்தத் துரைச்சாமி இப்படியான கைங்கரியத்தில் இறங்குவதென்றால், முதலாளித்துவத்தின் ஈவிரக்க மற்ற ஆதிக்க வெறி எத்தகைய கொடூரமானது என்பதைப் பரிதாபத்துக்குரிய இந்தப் பெண் பேதை உணராமல்

தன்னைத்தானே அநியாயமாக அழித்துவிடுகின்ற அப்பாவித்தனம் கந்தசாமி நெஞ்சை ஆகவும் உருகிற்று.

அடிமை விலங்கை அறுத்து நொறுக்கும் சக்தி வாய்ந்த தொழிலாள வர்க்கமே அந்த விலங்காக மாறி விடுவதால் தான், தன்னாதிக்கவான்கள் கோபுரம் போல் தலை நிமிர்ந்து தொழிலாளர்களை—மக்களை மேலும் நசுக்க முடிகிறது என்று நினைத்த மாத்திரத்தில் இவள்மீது ஒருவித ஆத்திரமும் வெறுப்பும் கந்தசாமி மனத்தில் கிளர்ந்தன.

ஆவேசம் சம்பிரதாயங்களை மீறிற்று. நிலை குலைந்து போன கந்தசாமி எதுவித கூச்சமுமின்றிப் பச்சையாகவே கேட்டார்.

''மறைக்காமல் உண்மையைச் சொல்லும்; நீர் முதலாளி துரைச்சாமியின் 'ஆசை நாயகி' தானே?''

சற்றும் எதிர்பாராத இந்த எறிபாணத்தைச் சகிக்க முடியாமல் வெட்கத்தாலும் பீதியாலும் திகைத்துப் போன அவள் கண்கள் மிரண்டன.

சதிரங் குல்லிட, மனம் தடுமாறி அவள் அங்கே அசந்துபோய் நின்றபோது முகத்தில் வெயர்வை முத்துருட்டி வழிந்தது; கண்களில் கண்ணீர் துளும்பிக் கொண்டு பீறிட்டது.

எந்த ஒரு பெண்ணும் ஒரே வேளை இரட்டை வாழ்வை நினைக்கவே மாட்டாள் என்பதையும், இவள் இப்படி முதலாளிக்குச் சோரம் போன தன் தாற்பரியத்தை உடல் ரீதியாக, மனோதத்துவ வழியாக, பொருளாதார வாயிலாக—இப்படியெல்லாம் ஒரு பேராசான் போல் கட்டங் கட்டமாக எடுத்து வரலாறுபோல் விளக்கிய போது அவள் வியந்துபோய் மௌனமாகவே அப்போதும் நின்றாள்.

'இந்தத் தொரே இதுங்கள எல்லாம் எப்புடித் தெரிஞ் சுக்கிட்டாரு; என்னமாய்க் கண்டு புடிச்சாரு...புதுமை யான தொரே.'

அசந்துபோன அவள் நிலையைக் கவனித்த கந்தசாமி தொடர்ந்து சொல்கிறார்.

''உமது பயங்கர மவுனமே உம்மை உறுத்துகிறது, நீர் இந்த மானங்கெட்ட தொழிலில் ஏன் இறங்கினீர், இதற்கெல்லாம் ஏன் உடந்தையானீர் என்பதும் எனக்குப் புரிகிறது. இது உமது குற்றமல்ல. ஆனால், இதுதான் வாழ்க்கை முறை என்று அர்த்தப்படுத்திக் கொண்டு, இந்தக் கானல் நீரில் தாகம் தீர்க்க முனைகிறீரே இதுதான் தவறு. இதனால் நீர் உம்மைமட்டும் கெடுத்துக் கொள்ள வில்லை. தங்கள் வாழ்க்கைக்காக அன்றாடம் போராடிக் கொண்டிருக்கிற அந்த ஹோட்டல் தொழிலாளர் அனைவருக்குமே கேடு விளைவிக்கிறீர். இது பெரும் துரோகம் இல்லையா?''

'ஆமாங்க' என்பதுபோல் மீனாட்சி தலையசைத்தாள்

''மீனா, இது எத்தகைய மனிதாபிமானமற்ற செயல் தெரியுமா? பெருமைக்குரிய உன்னதமான ஒரு தாய்க் குலத்துப் பெண்மணியான நீர், இந்தத் துரோகத்தைச் செய்யலாமா?''

''இல்லீங்க தொரே'' என்று அவள் வாய் முனகியது. கண்ணீர் 'பொடுக்'கிட்டு விழுந்தது.

ஊனித்துச் சிதறிய கண்ணீரைக் கண்ட கந்தசாமி 'வெல வெல'த்துப் போனார்.

ஒருபோதும் அறிமுகமோ பழக்கமோ இல்லாதபோது பாசத்தோடு நீண்டகாலம் பழகிய ஓர் உடன் பிறந்த சகோதர உரிமையோடு தன்னுடன் பண்பாகப் பேசிய கந்தசாமியிடம் 'புகழேந்தி எழுத்தாளர்'களிடம் உள்ள

கர்வமோ, தலைக்கனமோ, வாய்ச்சவடாலோ, தாழ்வுச் சிக்கலோ, 'நான்' என்ற மமதையோ கொஞ்சமும் இல்லாதிருப்பதைக் கவனித்த மீனாட்சிக்கு அவர் மீது ஒரு பய பக்தி உண்டாயிற்று. தான் முதலாளி துரைச்சாமி யின் 'பணம்' ஒன்றிற்காகச் சோரம் போனதைத் தெரிந்தும் ஒரு முகச் சுழிப்போ, வெறுப்போ, அருவருப்போ அல்லது தன்னையே கவர்ந்து தன் இச்சைக்கு உட்படுத்துகின்ற ஆணவ உணர்ச்சியோ கொள்ளாத எழுத்தாளர் கந்தசாமி வணக்கத்துக்குரிய புனிதராய்— ஒரு பாசமுள்ள சகோதரன் போல் அவள் கண்ணில் அப்போது தோன்றினார்.

'இப்பேர்ப்பட்ட ஒரு இலட்சியவாதியான சத்திய வந்தரையா என்னைப் போல் ஒரு ஏமாளியாகக் கருதி, முதலாளியின் சதிக்கு உடன்பட்டு, பாடுபட்டு உழைக் கின்ற தொழிலாளர்களுக்கும் அவர்களுக்காகப்போராடும் இவருக்கும் கருங்காலியாக வந்தேன்' என்று ஒரு மனச் சாட்சி உந்திய போது, அவள் இதயம் துயரத்தால் உருகியது.

மாட்டுத் தொழுவங்களான லயங்களிலும் குடிசை களிலும் கூலிகளாக— பிச்சைத் தீனிகளாக அடிமைகள் போல் சீவிக்கிறவர்களில் ஒருத்தியான தன்னை 'எச்சில் பட்ட ஒரு விலை மாது' என்று தெரிந்தும் அருசைப் படாமல் தன்னை உயர்வாக மதித்து— 'பெருமைக்குரிய உன்னதத் தாய்க்குலத்துப் பெண்மணியான நீர், இந்தத் துரோகத்தைச் செய்யலாமா?' என்று உரிமையோடு கண்டித்துக் கேட்ட கேள்விக்கணை பரிவோடு கந்தசாமி தன்மீது அப்படி எறிந்த அந்த ஏவுகணை - அவள் நெஞ்சுள் ஊடுருவி அவள் மனத்தைப் பிரளயப்படுத் திற்று.

அந்தக் கணமே தன் தவறுகளுக்குப் பிராயச்சித்தமாக கந்தசாமியின் பாதங்களில் விழுந்து அவர் கரங்களைப்

பற்றிப் பிடித்து. 'என்னயி மன்னிச்சிடுங்க தொரே' என்று மனஈறல் ஆறிச் சுத்தப்படும்வரை கதறிக் குழறி அழ வேண்டும்போல் அவளில் ஓர் அந்தராத்மா சூல் கொண்ட மாத்திரத்தில் அவள் குனிந்து முகம் பொத்திக்கொண்டு சதிரம் குலுங்க அழவாரம்பித்தாள்.

கண்கள் கரைந்து கொப்பளம் தகர்ந்ததுபோல் 'குபுக்' கென்று முகத்தில் கண்ணீர் குமிழ்த்தது.

''தங்கச்சி, நீர் இப்போ ஏன் அழுகிறீர்?''

நெஞ்சுள் குமைந்து கொந்தகித்துக் கொண்டிருந்த வேம்பல் விம்மலாகி, 'ஏன் அழுகிறீர்?'' என்ற அவர் அதட்டலில் சோகமாகக் குமுறிப்பீறிட்டது.

''தொரே நா பாவஞ்செஞ்சுட்டேன் - துரோகஞ்செஞ்டேன்... இந்தப் பாவிய மன்னிச்சுடுங்க தொரே...''

கந்தசாமி சதிரம் குல்லிட்டது.

பக்கத்தே கிடந்த ஸ்ரூலில் முகத்தைக் கவிழ்த்திக் கொண்டு கேவிக் கேவி விம்மி அவள் அழுதபோதும் அவளைத் தேற்றவே தெரியாமல் மனம் பேதலித்து நின்ற கந்தசாமி தொண்டை 'கரகர'க்கக் கேருங் குரலில் சொல்கின்றார்,

''நீர் வஞ்சகமிலலாத ஒரு பிறவி. குற்றத்தை உணர்ந்த பின் கலங்கக்கூடாது. இனித்தான் நீர் உற்சாகத்தோடு செயறபடவேண்டும். அழாமல் எழுந்திரும்.''

அவள் தலை நிமிர்த்தி அவரை ஆதங்கத்தோடு பார்த்தாள்.

''தங்கச்சி, நீர் உம்மை எனது சகோதரியாக நினைத்துக் கொண்டு சொல்லும். முதலாளி துரைச்சாமி செய்கிற அநியாயங்களை— அவர் தொழிலாளர்களைச் சுரண்டுகிறதை எதிர்க்கிறது அவசியமல்லவா?'' என்று

எதிர்பாராத ஒரு கேள்வியைத் தூக்கிப் போட்டதும், அவள் எதுவும் கூறாமல் அசந்து போய் நின்று முழிசினாள்.

தொடர்ந்து, ''முதலாளி செய்கிற காரியங்கள் எல்லாமே பெரும் அநியாயம் என்பதை இப்போது உணர முடிகிறதா?'' என்று மறுபடி கேட்ட போது, அவள், 'ஆமா' என்பது போல் தலையசைத்தாள்.

''சந்தோஷம். அப்படியானால் நீர் துணிந்து ஒரு காரியம் செய்ய வேண்டும்.''

'என்னாங்க?' என்று கேட்கிற தோரணையில் மீனாட்சி கந்தசாமியைப் பார்த்தாள்.

''என்ன, செய்வீரா?''

''என்னா செய்யணும்'கிறீங்க?''

''ஹோட்டல் தொழிலாளர்களும் நானும் பார்த்துக் கொண்டிருக்கவே எங்களுக்கு முன்னால் நீர் முதலாளி முகத்தில் இந்தச் 'செக்' தாளை வீச வேணும். உம்மால் முடியுமா?''

''செஞ்சிப்புடலாம். ஆன...?''

கந்தசாமி சிரித்தார்.

''ஏன் நிறுத்திக் கொண்டீர்?''

ஹோட்டல் சிப்பந்திகள் உரிமைப் போரில் குதிக்கப் போவதை அறிந்த முதலாளி அவர்களுக்கெதிராகப் பொலிஸில் பொய்த் தாக்கல் செய்த விதம், முதலாளியிடம் கந்தசாமி லஞ்சம் வாங்கி சிப்பந்திகளின் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்து விட்டதாகச் செய்யவுள்ள பிரசாரம், இதற்கெல்லாம் தன்னையே முதலாளி பயன்படுத்திய முறை, தான் முதலாளியிடம் சோரம் போன விதம்—ஆகிய சகல சம்பவங்களையும்

அவள் கந்தசாமிக்கு எடுத்துக் கூறிய போது, கந்தசாமி வழமை போல் 'கலகல'த்துச் சிரிக்கலானார்.

இத்தகைய அந்தரங்க விஷயங்களைச் சுமந்து வந்த இவள் தூய்மையாக ஒளிவு மறைவின்றிச் சொன்னதால், அவள்மீது உண்டான பாசப்பிடிப்பு அதீத்துத் தோழமை உணர்வாகப் பரிணமித்தது

''சகோதரி, நான் தாமதியாமல் தொழிற்சங்கக் காரியாலயத்துக்குச் செல்ல வேண்டும், ஹோட்டல் தொழிலாளர்கள் அங்கே போயிருப்பார்கள்.''

கந்தசாமி 'பஸ்' ஏறிச் செல்லும்வரை மீனாட்சி பாதை ஓரத்தில் நின்று பார்த்து முறுவலித்துக் கொண்டிருந்தாள், மனத்துள் இனிமையான பூங்காற்று.

''சகோதரி'...''

**ஹோட்டல்** சிப்பந்திகள் வைத்த காலக்கெடுவுக்கு இன்னும் ஒரு நாளே பாக்கி.

இதை நினைக்கவே துரைச்சாமியின் முகம் அஷ்டகோணமாகியது. என்றாலும், கொஞ்சமும் ஆசுவாசுப் படாதவர் போல் கல்லுப் பிள்ளையாராட்டம் பட்டறையில் குந்திக் கொண்டிருந்தார். முகம் கறுத்துப் போயிருந்தது

கேலண்டரில் கண்கள் பதிந்தன.

'நாசமாப் போவாங்களால இண்ணெக்கு 'வெள்ளிக் கெழமே'ங்கிறதெயும் மறந்துட்டனே' என்று தலையில் அடியாத குறையாகப் பட்டறையை விட்டெழுந்தார்.

''டே தங்கவேலு, வெள்ளியும் வெறுவாயுமா இருக்கேன். காப்பி போட்டாச்சா... சாமி படங்களுக்குச் சாம்பிராணி காமிச்சாச்சா?'' என்று கத்தின முதலாளி ஹோட்டலை ஒரு நோட்டம் விட்டார்.

ராமனும் பில் மாஸ்டரும் அவர் கண்ணில் தென்படக் காணோம். கணக்கப்பிள்ளை வேறு லோகத்தில் சஞ்சரிப்பவன் போல் எங்கோ மிலாந்திக் கோண்டு நின்றான். பார்க்கும்போது ஹோட்டல் 'மந்த'மாகவே பட்டது. வழக்கமான ஜன சந்தடியோ 'கலகல'ப்போ இல்லை 'இழுத்து மூடி விடுவோமா?' என்று கூட ஆத்திரப் பட்டார்.

'தங்க கடமைகள, கண்ணியமா கட்டுப்பாடா ஒரு பசங்களாவது செய்யக்காணமே' அங்கலாய்த்தார். அண்ணாத்துரையை நினைக்க அவர் மனம் குளிர்ந்தது. இந்தப் பயலுகளை நினைக்க, கோபமே வருகிறது.

'ஏ ரீ மேக்கரு பசங்கெல்லாம் இம்புட்டு நேரமா என்னா பண்ணிக்கிட்டிருக்காணுவ...ஆமா, ராமனயும் பில்மாஸ்டர்ப் பயலயும் இந்தப் பக்கமே காங்கலியே... எங்கிட்டுத் தொலஞ்சாங்க...?''

தங்கவேலுவில் முதலாளி சீறிப் பாய்ந்த விருதத்தைப் பார்த்தால் இன்றைக்கே ராமனுக்கும் பில் மாஸ்டருக்கும் 'சீட்டுக்கிழிபடும்' போல் ரீ மேக்கருக்குத் தோன்றியது.

''ஏன்'டா முண்டமாட்டம் நிக்கிறே. எங்கிட்டுப் போட்டாங்க?''

''தெரியலீங்க''

''ஏன்டா பொய் சொல்றே?''

ரீ மேக்கர் நமட்டிச் சிரித்தான்.

அவன் சிரிப்பில் ஏதோ 'விஷமம்' இருப்பதாக யூகித்த முதலாளி 'இந்தச் சேங்கிணியும் அந்தப் பயல் கூடச் சேந்துட்டான் போலிருக்கே... நம்ம இளக்காரம். பயலுக்குக் கொழுப்பு வந்துடுத்து... வரட்டும் மீனாச்சி, செஞ்சு காட்டுறேன் வெளயாட்டு' என்று தன்னாரவாரம் கமறினார்.

"நானு ஏன் பொய் சொல்லணும்?"

"ஆமாடா, நீங்கெல்லாம் அரிச்சந்திர மவராசா மாதிரி சத்தியவந்தரு பாரு... ஒங்க வாயில பொய் வருமா? வராதுடா வராது... என் ஒப்பத்தின்னு எனக்கே கொள்ளி வக்கிறே பாரு, அப்புடிக் கொத்த ஒனக்கு பொய் வராது தான்டா..."

கிண்டல் கேலியாகச் சற்று வேளை சன்னதமாடிய முதலாளி, ஏதோ நினைத்தவராக 'விசுக்'கென்று மேல் மாடிக்கு விரைத்தார். போன வீச்சில் திரும்பி வந்து நின்று ஆக்ரோஷமாகக் கத்தினார்,

"எவண்டா ரெலிபோன் தொடுப்பு வயரெ அறுத்த வடுவா...? தாயோளி, எந்த வம்பில பொறந்த காலிப் பயல் அந்த வயரெ அந்தாட்டம் அறுத்தான்?"

தன்னாரவாரம் தொண்டை நரம்புகள் புடைக்கக் கத்துகிற முதலாளியின் சிம்மக்குரல அப்போது ஹோட்டல் அடங்க எதிரொலித்துக் கொண்டிருந்தது.

"டே, இந்த வம்பு வேல செஞ்ச சோமானி எவன்டா, சொல்லேன்டா?"

சதிரம் திமிற உலுப்பிக்கொண்டு 'பொயிலர்'க் கூடத்துள் ஒதுங்கி நின்ற தங்கவேலுவை நெருங்கிய துரைச்சாமி, அவன் சறத்தை 'அவுக்'கென்று பற்றிக் 'கொறகொற'வென்று வெளியே இழுத்துச் சுவரோடு சாத்தி வைத்து, "முண்டப்பயலே, உண்மையச் சொல்லிப்புடு. இல்லே. பொலிசில புடிச்சுக் குடுத்துடு வேன்" என்று உறுமிக்கொண்டே அவன் கன்னத்தில் அடித்து, நெஞ்சிலும் முதுகிலும் உதைத்தார்.

அவர் ஆடிய ருத்திர தாண்டவத்தில் ஹோட்டல் அல்லோலகல்லோலப்பட்டது. இருந்தும், ஆத்திரம்

தீரவில்லை. முதலாளிக்கு வெப்பிசாரம் தலைக்கேறியே விட்டது.

"தாயோளி, இருடா வந்துடறேன்" என்றவர் வேஷ்டியைச் சிரைத்துப் பிடித்துக் கொண்டு ஓடிப்போய் விறகு கட்டை ஒன்றைத் தூக்கிக் கொண்டு வந்து அவன் முதுகில் அடிக்க ஓங்கும்போது கோடை இடிபோல ஒரு குரல் அவர் காதில் ஓங்காரித்துக் கேட்டது.

"மொதலாளி, ஓங் கொடலப் புடுங்கிடுவேன்... வெறகு கட்டயெக் கீழ போடும் ஓய்."

பெரிய காட்டாக் கத்தியுடன், துரைச்சாமிக்கு எதிரே 'கமறி'க்கொண்டு, ஆவேசித்தவனாக ராமன் வீறுடன் நின்றான்.

மின் அணு இடுக்கியடித்தசாடை துரைச்சாமி அதிர்ந்தே போனார். 'வெலவெல'த்துப் போன அவர் சடலம் மரமாட்டம் அசையாமல் கிடந்தது.

பலவீனனை அடித்துப் பலவானைப் பயப்புளுத்த வெளிக்கிட்ட முதலாளி, பலவீனன் எதிரில் பயந்து போய் நின்றார். சரீரித்த மனத்துள் ஓர் அந்தகாரம்.

விடிந்தால் சனிக்கிழமை.

கோரிக்கைகளுக்கான 'ஒரு மாதக் காலக்கெடு' முடிகிறது. செயற்குழுவின் தீர்மானப்படி விடிகாலை யோடு நடவடிக்கையில் இறங்கியாக வேண்டும்.

தொழிற்சங்கக்காரியலாயத்தில்நடக்கும்ஆலோசனைக் கூட்டத்தில் ராமன், பில்மாஸ்டர், மீனாட்சி, கணக்கப் பிள்ளை, மெனிக்கா, ரீமேக்கர், சமையற்காரர், சப்ளை காரர்—சகல ஹோட்டல் சிப்பந்திகளும் கலந்து கொண்டதை அவதானித்த கந்தசாமி, 'தொழிலாளர்கள் ஒன்றுபட்டுவிட்டதால், உரிமைப் போராட்டம் நிச்சயம் வெல்லும்' என்று திடம் கொண்டார்.

லக்ஷ்மி ஹோட்டல் உட்பட ஹனிபா, முருகேசு, சங்கரன், ஆரியசேன—என்று கண்டிப் பிரதேசத்தின் சகல ஹோட்டல் சிப்பந்திகளின் பிரதிநிதிகளும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

வர்க்கப் போராட்ட முறை, தந்திரோபாயம், முதலாளித்துவத்தின் நிலைப்பாடு ஆகியனபற்றியே முதலில் ஆராயப்பட்டது. இவற்றையெல்லாம் உரையாகவும், சிப்பந்திகளின் கேள்விகளுக்குப் பதில் அளிப்பதன் வாயிலாகவும் கந்தசாமி விளக்கமளித்தார்.

''மக்கள் ஜனநாயகத்தின் பாதுகாவலனான தொழிலாள வர்க்கத்தின் உரிமைப் போராட்டங்கள் ஜனநாயக ரீதியிலேயே அமையவேண்டும். பணநாயக வாதிகளான முதலாளி வர்க்கம் பலாத்காரங்களையும் பயங்கர நடவடிக்கைகளையும் பாவிக்கும் போது தொழிலாள வர்க்கம் அதே வழியைப் பாவிக்க நேரிடுகிறதே தவிர, உண்மையில் தொழிலாள வர்க்கம் பலாத்காரவாதியல்ல...''

''தொழிலாள வர்க்கம் அராஜக வழியில் இறங்க வேண்டும் என்று, அதனைச் சாட்டாக வைத்து அவர்களை நசுக்கிவிடலாம் என்றும் முதலாளித்துவம் எப்போதும் ஆத்திரமூட்டும் விதத்தில் இன—மத—மொழி—குல பேதங்களை உசுப்பிவிடுவது இயல்பே. ஊர் குழம்பினால் உடையாருக்குத் தாயம் அல்லவா?''

''சின்ன விஷயம் என்றாலும் உதாரணத்துக்கு ஒன்றைக் குறிப்பிடலாம். அதாவது, முதலாளி துரைச்சாமியே ரெலிபோன் வயரை அறுத்து, அந்தப் பழியைச் சிப்பந்திகள் மீது போட நினைத்த செயல்—ரீமேக்கர் தங்கவேலுவைத் தாக்கி ஆத்திரமூட்டிய சம்பவம்—மீனாட்சிமூலம் ஐயாயிரம் ரூபா 'செக்' எழுதி என்னிடம் கொடுப்பித்துவிட்டு, அதே மீனாட்சியைச் சாட்சியாக்கி உன்னைப் பொலிஸில் பிடித்துக்கொடுக்கத் திட்டமிட்ட

சதி. இவை சில எடுத்துக்காட்டுகள். இது போன்று முதலாளித்துவத்தின் தில்லுமுல்லுகளை நாட்கணக்கில் இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்...''

இப்படியெல்லாம் கந்தசாமி விவரித்துக் கொண்டிருக்கையில் ராமன் பில்மாஸ்டர் காலில் தட்டி மெதுவாகக் 'குசுகுசு'த்தான்.

''அடேயப்பா, மொதலாளி இம்புட்டுச் சதியெல்லாம் பண்ணின்டே நாம துரோகம் பண்ணினதாப் பீத்திக் கிட்டாரே, அந்தாளு பெரிய களவாணிங்கறதே இப் பாச்சும் தெரிஞ்சுக்கிட்டியா?''

மாலை ஏழு மணிக்கு ஆரம்பித்த ஆலோசனைக் கூட்டம் முடிந்து உற்சாகத்துடன் அவர்கள் வெளியேறும் போது இரவு பதினொரு மணியாகிவிட்டது.

அன்று சனிக்கிழமை. விடிகாலை நேரம்.

கண்டி நகரம் வெளித்த பூமியாகப் பிரகாசித்தது. ஆனால், லக்ஷ்மி ஹோட்டலும் நகரத்தின் ஏனைய சகல ஹோட்டல்களும் விடியாமூஞ்சியாகக் கிடந்தன.

போக்குவரத்து வாகனங்கள் வீதிகளில் இரைந்து திக்குமுக்காடிக் கொண்டிருந்தன.

ஹோட்டல் ஓரமாக வீதியைக் மருவிக் கொண்டு 'கிறீச்' சென்ற உரசல் ஒலி காது பிளக்க, அந்தக் 'கேம்பிறிஜ் கார்' ஊமாண்டிபோல் வந்து நின்றது.

காரிலிருந்து 'விசுக்'கென்று இறங்கிய முதலாளி துரைச்சாமி கதவை இறுக அடித்துச் சாத்திவிட்டு, சற்று நேரம் வீதியையும் கூட்டத்தையும் வெறித்துப் பார்த்தார்.

கண்ணுக்கு எட்டாத தொலைவில் தொழிலாளர்கள் சகிதம் கந்தசாமியுடன் மீனாட்சியும் நின்றுகொண்டிருந் தாள்.

அவர் உடம்பு நெருப்பாய்க் கனன்று எரிந்தது.

'தாயோளி, கடேசியா இந்தத் தேவடியாளும் இவங்க கூடச் சேந்துட்டாளே. நாம கடிச்சுத் துப்பி எறிஞ்ச எலும்பு என் காலிலேயே குத்துடுத்து.'

மலையடி வாரங்களுக்கூடாகக் கிளர்ந்த உதய சூரிய ஒளிக்கதிர்கள் குத்தூசிகள் போல் வீதியடங்கப் பரவின.

லக்ஷ்மி ஹோட்டல் இன்று திறக்கப்படவில்லை.

முதலாளியின் நெஞ்சுப் பூணாரம் பூட்டிக்கொண்டது. நெஞ்சு நீவி ஒரு பெருமூச் செறிந்தார்.

'உள்ளே யாரும் பயலுக நிப்பானுக...'

சாவிக் கொத்தை மடி வாரிலிருந்து இடுக்கி எடுத்து, முகப்புக் 'கேற்'றைத் திறந்து, ஹோட்டல் கதவு இடுக்குகளில் கொழுவப்பட்ட இரும்புப் பாளத்தின் ஆவாரத்தினூடாகக் கண் குத்தி உள்ளே பார்த்தார்.

'தாயோளி, ஒரு பயலயும் காணமே.'

'சடார்'ரென்று ஹோட்டல் தாழ்வாரத்தால் சென்று, பின் கதவைத் திறந்து நாலா திக்கும் கண்ணெறிந்தார்.

சிப்பந்திகளின் காம்பரா, குசினமடுவம், பாத்ரூம், ஸ்டோர்ச் சாலை, பின் ஒடை எங்குமே எவரினது சஞ்சாரத்தையும் காணவில்லை.

ஹோட்டல் வெறிச்சோடி வெறுமையாக 'ஓ' வென்று கிடந்தது.

ஆத்திரம் பீறிட, அரச கொலுவிலிருந்து ஆவேகித்து இறங்கிய கண்டி அரசன் போல், நடு ஹோட்டலுக்கூடாக வந்து உள்ளே நின்று வெளிக் கதவைப் 'படார்' என உதைத்துத் திறந்தார்.

நெஞ்சு கமாரிட்டது.

'இம்புட்டுச் சோமாறிப் பயலுக, எகிட்டால வந்து குதிச்சாஞ்க...?'

துரைச்சாமியார் யாரைத் தேடினாரோ அத்தனை ஹோட்டல் தொழிலாளர்களும் ஆளுக்கொரு சுலோக அட்டைகளோடும் நிமிஷத்துக்கொரு தோஷமுமாக அதிர வைக்கின்ற சத்தம் அவர் செவிகளில் பறையாக விழுந்தது.

கோரிக்கை அட்டைகளை அவர் கண்கள் சீற்றத்தோடு துழாவின.

''வேலைக்கேற்ற வேதனம் கொடு.,

''மேலதிக வேலைக்கு நேரப்படி கொடு.''

''வைத்திய லீவைக் கட்டாயமாக்கு.''

''சேம லாபப் பங்கீட்டை அமல்படுத்து.''

''ஆண்டுக்கு இருபத்தொரு நாட்கள் லீவு கொடு''

''சாப்புச் சட்டத்தை அமல் நடத்து.''

''தொழிற்சங்க அங்கத்துவ உரிமையைப் பறிக்காதே.''

''ஹோட்டல் சிப்பந்திகளைப் பழி வாங்காதே.''

''தொழிலாளர்களே ஒன்று சேர்வீர்.''

''முதலாளித்துவம் வீழ்க.''

''தொழிலாளத்துவம் வாழ்க.''

''தோழர் கந்தசாமி வாழ்க.''

அடுத்து மீனாட்சி தாங்கிய சுலோக அட்டையில் பிரத்தியட்சமாகத் தொங்கவிட்ட ஒரு தாள்—முதலாளி துரைச்சாமியின் ஐயாயிரம் ரூபா 'செக்' தாள், அவர் கண் முன்னே, 'நான் கருங்காலியல்ல' என்ற ஒரு குறும் சுலோகத்துடன் பறை சாற்றிக் கொண்டிருந்தது.

ராமன், பில்மாஸ்டர், கணக்கப்பிள்ளை, சமையற் காரர், ரீமேக்கர், ஆப்தீன், சிவகாமி, அப்புசாமி, முத்துச்சாமி, சிறிசேனா — என்றெல்லாம் அவர் கணக்கிட்டுக் கொண்டிருக்கும்போது அந்தப் பிரதேசம் அவர் கண்களில் சிவப்பாய்த் தெரிந்தது.

இடியுண்ட நெஞ்சினராக அடி சாய்ந்த மரம்போல் துரைச்சாமி விறைத்துப் போய் நின்றார்.

எழுத்தாளர் கந்தசாமி வழக்கம்போல் 'கலகல'த்து அட்டகாசமாகச் சிரித்துக் கொண்டே கெந்தகித்து நின்றார்.

இரண்டு எதிர்முனைகளின் முதற்சந்திப்பு ஹோட்டல் களில்....வீதிகளில்... நகரங்களில்.

லக்ஷ்மி ஹோட்டல்போலவே கண்டி மாநகரத்தின் சகல ஹோட்டல்களும் அன்று திறக்கப்படவில்லை.

ஆனால் —?

(தினகரன். 1968)

**இலங்கை இனப்பிரச்சினை எண்ணற்ற சோக நிகழ்வு களை உருவாக்கியுள்ளது. இவற்றில் ஓரிரு நிகழ்வுகளை மையப்படுத்தி நவீன உத்தியில் எழுதப்பட்ட குறுநாவல்.**

# 3. மகாகனம் பொருந்திய...

## முன்னீடு

எமது நாட்டு மக்களோடு நான் கொண்ட நிபந்தனை யற்ற உறவு என் படைப்புகளில் ஆத்மார்த்த சுருதியாக வெளிப்படுவதை என்போலவே எனது வாசகர்களும் அறிந்து வைத்திருக்கிறார்கள். எனது வாசகர்களுக்கும் எனக்கும் உள்ள நெடுங்காலப் பந்தமும், அவர்களுடன் எனக்குண்டான உரிமையும் எனது இலக்கியச் சுருதியில் விளைந்தவை.

எனது படைப்புகளைப் படிக்காமலே என்னை விமர்சிக்கும் விபரீத வாசகர்களும், நாவலின் ஆரம்ப அத்தியாயம் ஒன்றையே பார்த்துவிட்டு முழுவிவரணத் திற்கும் விமர்சனம் செய்கிற புனைபெயர் வாசகர்களும், எனது படைப்புகளை ஆதங்கத்தோடு படிக்கிற வாசகர் களும் எனக்குண்டு. என்னைப்போலவே சில உத்திகளில்

ஆசைப்பட்டு எதையுமே எழுதாமல் தவண்டையடிக்கிற வர்களும் உண்டு. எது எவ்வாறாயினும் இலக்கியம் என்று வரும்போது அனைவரும் எனது அபிமானத்திற்குரியவர் களாகின்றனர். எனது கருத்துக்கு உடன்படாதோரும் என் போலவே என்னில் அன்பு செலுத்துகிறார்கள். இலக்கியம் தான் இதன் சூத்திரம். 1987ல் எழுதப்பட்ட இக்குறுநாவல் வெறும் கற்பனைப் படைப்பல்ல. கற்பனா வேதாந்தமு மல்ல. மானசீக கவசமுமல்ல. எமது மண்ணில் புதையுண்ட கொடுமைகளின் பிம்பமும் அதனையொட்டிய பிரசவமு மாகும்.

இலங்கையின் கறைபடிந்த நீண்டகால உத்தரிப் பிஸ்தலத்தில் நெஞ்சை உலுப்பும் பல சம்பவங்களை ஒரு சிறு குறு நாவலுக்குள் பூரணப்படுத்த முடியாது. பெரிய நாவலாக எழுதவேண்டிய இதன் மையக்கரு இங்கே குறுநாவலாக ஒரு குறுகிய காலப் பகுதியை மட்டும் தொட்டு நிற்கிறது. இன்றைய அவசரயுகத்தின் ஆக்ஞை என்னை எப்படி ஆக்கிற்று. எனினும் இந்தப் 'போரும் சமாதனமும்' கால வேளை கண்டு முழு நாவலாக விரியும். வாசகர்களின் அபிப்பிராயங்களும் விமர்சனங்களும் தேவை,

—எஸ் ஏ.

## 1

மகாகனம் பொருந்திய மதியூக அதிபருக்கு,

அதிக நீண்ட நாட்களாக என் மனசை உறுத்திக் கொண்டிருந்த சம்பவங்களை, இன்று இரவு முழுதும் ஆழ்ந்து யோசித்ததன் விளைவாக, இந்த நிருபத்தைத் தங்கள் கவனத்திற்கு எழுதுகிறேன்.

தங்களைப் போலவே நானும் இந்த நாட்டை நேசித்து, அதன் விசுவாசியான பிரஜைகளில் ஒருவன்

என்ற முறையிலும், இந் நிருபத்தைத் தங்களுக்கு எழுத நேரிட்டது என்னை மன்னியுங்கள்.

இப்பொழுது என் உடலும் மனமும் சோர்ந்து போய் விட்டன. வழமை போல் இன்று அதிகாலை என்னால் எழுந்திருக்கவும் முடியவில்லை. கடந்த காலங்களைவிட அண்மிய நான்கு ஆண்டுகளாக அதாவது, ஜுலை 83 கலவரத்துக்குப் பின் வேகமாகச் செயற்பட்ட போதும் எனக்கு இப்படி ஆனதில்லை.

நேற்று இரவும் கணக்கற்ற செத்த பிரேதங்களைக் கடந்தே உயிராக எரித்த மீதிச் சடலங்களைப் பார்வையிட நேர்ந்தது. அதனாலும் இப்படி ஆகியிருக்கலாம்.

இப்போது என் மனசு உற்சாகம் இழந்துபோய் தவிக்கிறது. இதயம் அடித்துக்கொள்கிறது. மண்டைக்குள் ஏதோ பிரளயம் நிகழுமாப் போல் வலிக்கிறது, சித்தங் கலங்கிவிட்டது போல் ஒரு பிரமை.

இந்த அவஸ்தைகளுக்குள்ளாகியிருக்கற போதுதான் நேற்று மாலைதான் தங்களால் பிறப்பிக்கப்பட்ட புதிய உத்தரவு கிடைத்தது. ஆனால், தங்கள் உத்தரவு கிடைப்பதற்கு முன்பே என் மனசின் துல்லியம் ஆட்டங் கண்டு விட்டது.

அன்பான அதிபரே,

தங்கள் மேன்மைக்குரிய அதிகாரத்தையும் கீர்த்தியையும் உறுதி செய்யும் பொருட்டு நான் தனிப்பட்ட சோதாவில் தன்னிச்சையாகவும் சற்று எதேச்சாதிகாரத்துடனும் முப்படைகளை உசுப்பிவிட்டுப் பல வெற்றிகளை ஈட்டியிருந்தேன் என்பதை அன்றாடம் அனுப்பி வைத்த அறிக்கைகள் மூலம் தெரிந்திருப்பீர்கள்.

அப்படி ஒருமுழு விஸ்வாசத்துடன் கடமையாற்றும் போது 'பயங்கரவாத'ப் போராளிகளால் உண்டான

தாக்குதல்களைக் கூடத் துச்சமாக மதித்துச் செயல்பட்டிருக்கிறேன். அதாவது, தங்களுக்காக எங்கள் உயிர்களைப் பணயம் வைத்தே கடமை புரிந்து வந்திருக்கிறேன்.

அப்பேர்ப்பட்ட எனக்கு இன்று இந்த நிலை ஏற்பட்டுவிட்டது. தங்கள் புதிய கட்டளையின் வாசகம் என் சேட்டுப் பைக்குள் அப்படியே கிடக்கிறது.

இற்றைவரை தரைவாயிலாகவும் கடல் மார்க்கமாகவும் தாக்குதல்களை நடத்திப் போராளிகளை வேட்டையாடிக் கொண்டிருந்த நாம் தங்கள் புதிய உத்தரவின் பிரகாரம் ஆகாயமார்க்கவும் விமானத்திலிருந்தும் அவர்கள் மீது குண்டுமாரி பொழிந்து தள்ளவேண்டும். ஆனால், போராளிகள் மீது குண்டுகளைப் பொழிந்து அழிப்பது சாத்தியமான ஒரு காரியமா என்பதும் சந்தேகம். அதன் நோக்கின் தமிழ்த்தேசிய இனம் முழுவதுமே பெரும் பயங்கரவாதிகள் என்று கருதுகிறீர்கள் போல் தெரிகிறது.

இதன் அர்த்தம் எனக்குச் சரியாகப் பிடிபடவில்லை. அதுமட்டுமல்ல, இஸ்ரேலிய மொசாட் படைகளும் பிரிட்டிஷ விமான ஓட்டிகளும் தங்களால் இனங்காண முடியாத போராளிகளையும் பொதுமக்களையும் எப்படி நிர்ணயித்துக் கொள்வார்கள் என்பதும் புதிரான விசயமே இவற்றையெல்லாம் நினைக்க என் மூளை குழம்பிப் போயிருக்கிறது. எனது சோர்வுக்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாக இருக்கலாம்,

தங்கள் புதிய உத்தரவின்படி எனது தலைமையில் வெளிநாட்டுப்படை நிபுணர்களோடு இணைந்து ஆகாய மார்க்கமாக எப்பவோ அந்தத் தாக்குதலை நடத்தியிருக்க வேண்டும். அதற்கான நவீன ஆயுதங்கள் வெடிகுண்டுகள் யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்தும், பலாலி ராணுவ

முகாமிலிருந்தும் 'சப்ளை' செய்யப்படும் என்பதும் மெய்யானதே.

சென்றவாரம் கொழும்பிலிருந்து கடல் மார்க்கமாகக் காங்கேசன் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்த சரக்குக் கப்பலில் பிரமாண்டமான வெடிகுண்டுகளும், 'ஷெல்' வெடி பொட்டணிகளும், எரி விஷ வாயுக்கணைகளும் நவீன போர்க்கருவிகளும் ஒரு வாரத்துக்குள் "நவீன போர்க்கருவிகளும் ஒரு வார காலத்துக்குள் முழுத்தமிழ்ச் சனத்தையும் அழித்து வட கீழ் மாகாணங்களையே சுடுகாடாக்கப் போதுமானவை என்பதும் வாஸ்தவமே. ஆனால், இன்று காலை ஒன்பது மணியாகிய பின்னரும் தங்களின் இந்தக் கட்டளையை என்னால் நிறைவேற்ற முடியவில்லை.

ஒரு ராணுவத் தளபதியாகினும் மேல் மட்ட உத்தரவுகளை மீறினாலோ உதாசீனம் செய்தாலோ, செய்யத் தவறினாலே அவர் எப்பேர்ப்பட்ட தண்டனைக்கு ஆளாவார் என்பதும் நான் அறிந்ததே. ஆயினும், இவற்றையெல்லாம் துச்சமென மதித்தே இன்று என் மனசு தளம்பி அலைபாய்ந்து கொண்டிருக்கிறது. எப்படியேனும் இந்த நாட்டின் பெரும்பான்மை மக்களால் சட்டரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்குத் தாங்கள் தலைவராதலால் எந்தக் கட்டளையையும் தன்னிச்சையாகப் பிறப்பிக்கும் அதிகாரம் தங்களுக்கு உண்டு என்பதும் எனக்குத் தெரிந்த விஷயமே. இந்த அரசபீடத்தின் சகலவல்லமையும் அதிகாரமும் இறமையும் கொண்ட தாங்கள் பிறப்பிக்கும் எந்தவோர் கட்டளையையும் அட்டியின்றி ஏற்று அவற்றை முழு விஸ்வாசத்துடன் நிறைவேற்றுவதற்காகவே தங்கள் படைத் தளபதியாக இந்தப் பிராந்தியங்களுக்கு தமிழ்ப் பிரதேசங்களுக்குக் கடமையாற்ற அனுப்பப்பட்டேன் என்பதை நான் பூரணமாக உணர்கிறேன்.

இந்த நாட்டின் மக்களுச்கும்,தரைப்படை, கடற்கடை விமானப்படை ஆகிய முப்படைகளுக்கும் ஏக தலைவரான தாங்கள் இடுகின்ற உத்தரவுகளை அவ்வப்போது நிறை வேற்ற வேண்டியது சகல படைப்பிரிவுகளின் நீங்காக் கடமை என்பதும் உண்மைதான்.

தாங்கள் இந்த நாட்டின் அதிஉன்னத அதிபர் பதவியில் அமர்ந்து அதிகாரம் வகிக்கும் பெரும் தலைவராகக் கடந்த பத்து ஆண்டுகளாக ஆட்சிப்பீடத்தில் வீற்றிருக்கிறீர்கள். ஐந்து ஆண்டுகளுக்கே அதிகாரத்தைப் பரிபாலிக்கும் உரிமையை நாட்டுமக்கள் தங்களுக்கு அளித்திருந்த போதும், இந்த அதிகாரபீடத்தை நழுவாதிருக்கத்தாங்கள் வகுத்த புதிய சட்ட திட்டம் பலித்தபோது, ஒரு ஜனநாயக முறையே மாற்றியமைக்கப்பட்டுச் சர்வாதிகாரத்துக்கு வழிகோலியது. அதன் போது ஏனைய மந்திரிபிரதானிகள் வெறும் பொம்மைகளாக்கப்பட்டார்களே, அது ஒன்றே தங்கள் திறமைக்கு அச்சாணி என்பேன்.

ஓர் அரசின் விஸ்வாசமுள்ள படைத்தளபதி என்ற முறையில் தங்கள் காலப்பகுதிக்கு முன்பிருந்தே இன்று வரை சகல கட்டளைகளையும் சிரமேற்கொண்டு ஒழுங் காகவும் செயற்பட்டு வந்திருக்கிறேன் என்பதை மேன்மை தங்கிய அதிபர் அவர்களே, தாங்கள் அறிவீர்கள்.

தங்கள் ஆட்சிக்காலத்தின் பிந்திய ஐந்து ஆண்டுகளும் படைபட்டாளங்களில் உள்ள நாம் அனைவரும் ஒரு வித பேசும் பொம்மைகள் போல் கடமையாற்றுகிறோமா என்றும் என்மனசு அடிக்கடி நெருடியதுண்டு. அதற்கு இன்றுதான் சரியான அர்த்தமுள்ள விடை கிடைத்ததாகக் கருதுகிறேன்.

அதி உத்தம அதிபரே, இந்த நெருக்கடியான கட்டத்தில் இப்படித் தாக்கமான வாசகங்களை எழுத நேர்ந்தமைக்காக உண்மையில் வருந்துகிறேன். இதற்காக என்னை மன்னியுங்கள்.

தங்களால் இந்த நாட்டில் நடைமுறைப்படுத்தப் படுகின்ற சட்டங்களின்படி மாத்திரமல்ல, தாங்கள் வகிக்கும் தலைமை ஸ்தானத்தின்பாலும் தாங்களே முப்படைகளின் தளபதியாகவும், நாட்டின் பாதுகாப்பு முறைகள் தங்கள் கட்டுப்பாட்டில் தங்கள் கட்டளைப் பிரகாரமே இயங்குவன என்பதையும் நான் அறிவேன.

இந்த விஷயங்களையெல்லாம் நன்றாகத் தெரிந் திருந்தும் நேற்றுத் தங்களால் பிறப்பிக்கப்பட்ட புதிய உத்தரவை இதுவரை என்னால் நிறைவேற்ற முடியாம லிருக்கிறது. இதனால் எனக்கு என்னென்ன விபரீதங்கள் நேரிடும் என்பதையும் நான் உணர்கிறேன், எனினும், எனக்கு உண்டான இந்த அதிர்ச்சியே எனக்குப் புதிய ஞான வெளிச்சத்தை ஊட்டுவதாகப்படுகிறது.

போர் முறையில் ஒரு தளபதிக்கு இருக்கவேண்டிய கண்ணியம் பிசகினால் அந்தப்போர்க்களமே மாசுபடுத்தப் படுகிறது. நாட்டின் தலைவிதியும் மாறிவிடலாம் கொஞ்சக்காலமாகத் தங்களால் பிறப்பிக்கப்படுகின்ற உத்தரவுகளை இந்தப் பிரதேசத்தில் நடைமுறைப் படுத்துகின்றபோதும், அவற்றின் பிரதிபலிப்புக்களை அவதானிக்கிறபோதும் எமது நடவடிக்கைகள் யாவும் மாசுபடுத்தப்படுகிறதாகவே தெரிகிறது.

ஒருவனுடைய வீரம் அவனுடைய நேர்மையில்தான் பிறக்கிறது. நேர்மை இல்லாதவன் வீரம் அவன் கோழைத் தனத்திலிருந்து வெளிப்படுகிறது இந்த உண்மையோடு பார்க்கும்போது வீரத்துடன் செயற்படவேண்டிய படை களும் அவற்றின் தளபதியாகிய நானும் தங்களின் மனிதாபிமானமற்ற புதிய புதிய திடீர் திடீர் உத்தரவு களால் நேர்மை தவறிநடந்து கோழைகளாகவே கடமை புரிய வேண்டியவர்களாகி விட்டோமே என்று நான் வெட்கப்பட்ட நாட்கள் அனந்தம்.

எனினும், இத்தனை காலமாக இவற்றையெல்லாம் சமாளித்துக்கொண்டு ஒரு கோழையாகவே செயற்பட்டேன் என்பதை ஒப்புக்கொள்வதில் வெட்கப்படவில்லை. உண்மையைக்கூறும்போது துன்பம்நேரிட்டாலும் நேர்மையான சத்தியவந்தனுக்கு அந்தத் துன்பத்திலும் ஓர் ஆத்ம சுகம் உண்டு அப்படி ஓர் ஆத்ம சுகத்தையே இதன் மூலம் தேடிக் கொள்கிறேன்.

இது ஏதோ பீடிகை என்று யோசிப்பீர்கள். தயவு செய்து பொறுமையாக ஆனால், நிதானமாக வாசியுங்கள்.

பாதுகாப்புப் போர்ப்பயிற்சியை மட்டுமல்ல, அந்த போர் முறைகளைத் தங்கள் அதிகாரத்துடனான சட்ட திட்டங்களுக்குத் தக்கவாறு எப்படியெல்லாம் அமுல் படுத்த வேண்டும் என்பதில் தேர்ந்த ஞானம் அறிவு பயிற்சி பெறுவதற்காகவுமே தங்கள் நேச தேசத்தவர்களான மேலைநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டேன். இன்று சகலயுத்த தந்திரங்களையுங் கற்று ஓர் இராணுவத் தளபதிகளுக்குரிய முழு மதி நுட்பங்களையும் தெரிந்து கொண்டவனாக விளங்குகிறேன். இதற்காக நான் தங்களுக்கு எனது விஷேச நன்றிகளையும் அன்பையும் பக்தி சிரத்தையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த யுத்தப் பயிற்சியின் கண் நான் இப்பொழுது போர்க்கருவிகளைத் துல்லியமாக இயக்கும் வல்லமையுள்ளவனாக மட்டுமல்ல, இந்த ஆயுதங்களைப் புதிதாக உற்பத்தி பண்ணவும்,நவீன உத்திமுறைகளால் இயக்கவும் அவற்றைக் கொண்டு கடல் தரை ஆகாய மார்க்கமாகத் தாக்குதல்களை நடத்தவும் தக்க நிபுணனாகிவிட்டேன் என்பதும் உண்மையே.

இவையெல்லாம் இருந்தும் என்ன? நேர்மை பிறழ்கின்ற கிருத்தியங்களால் கோழையாகிவிட்ட எனக்கு எந்தத் திறமையுமே பிரயோசனமற்றுப் போய்விட்ட

தாக உணர்கிறேன். இதனால்தான் இத்தனை தகுதி திறமை வல்லமை ஆகிய வாய்ப்புக்களிருந்தும், தங்களால் பிறப்பிக்கப்பட்ட புதிய உத்தரவை இன்னும் நிறைவேற்ற விழையாமலே எனக்குள் புழுங்கி மனஞ் சோர்ந்து போயிருக்கிறேன்.

தங்கள் புதிய உத்தரவில் ஒருஇனத்தையே பூண்டோடு அழிக்கும் போர்முரசுமுழங்குகிறது. மகாகனம் பொருந்திய உத்தமரே, மனிதாபிமானத்தைச் சவக்குழிக்குள் புதைக் கின்ற சாகசப் போர் முறை எனக்கு இப்போது சரியாகப் படவில்லை.

தயவு செய்து கவனியுங்கள்.

தங்கள் புதிய உத்தரவு போலவே என் தாயாரிட மிருந்தும் புதிய பாணியிலான ஒரு கடிதம் நேற்றுத்தான் கிடைத்தது இதற்கு முன்பும் என் மாதா பல தடவை கடிதம் எழுதியிருக்கிறாள். அந்தக் கடிதங்களில் எதையுமே விஸ்தரிக்க முடியாத ஏதோ ஒரு பீதி கலந்த சோகம் இழையோடியிருந்ததை அவதானித்திருக்கிறேன். ஆனால், இப்போது என் அன்னை எழுதிய கடிதம் அப்படியல்ல. இது ஒரு மானிடத்தையே கோடு காட்டி நிற்கிறது. வித்தியாசம் என்னவென்றால், தங்களைப் போல் என் மாதா எனக்குக் கட்டளை பிறப்பிக்கவில்லை. ஒரு வேண்டு கோள் விட்டிருக்கிறாள். நான் அறிந்தவரை உணர்ந்த வரை தாய்ஒருவளுக்குத்தான் கட்டளையிடும் உரிமையோ தகமையோ உண்டு. இருந்தும் என் தாய் வேண்டுகோள் விருத்திருக்கிறாள். அதுவும் படைத்தளபதியான தன் புதல்வன் எனக்கு வேண்டுதல் செய்திருக்கிறாள்.

தங்கள் புதிய கட்டளையை நிறைவேற்றாமலிருப் பதற்கு என் மாதாவின் இந்தக் கடிதமும் ஒரு காரணமா யிருக்கலாம் உலகில் தோன்றிய சகல ஜீவராசிகள் மட்டு மல்ல, முழு மனித குலமுமே தாய்மார்களால் பேணிப் பாதுகாக்கப்பட்ட ஜீவன்கள் என்ற முறையில் தாய்க்

குலத்தைவிட மேலான ஒன்று உலகில் இருப்பதாக எனக்குத் தோணவில்லை. தாங்களும் அப்பேர்ப்பட்ட ஒரு தாய் வயிற்றுப்புதல்வர் என்பதால் நமக்குள் ஒரு சகோதரத்துவம் கூட இருக்கலாம்.

தாங்கள் அரச பீடத்தின் உச்ச ஸ்தானத்தில் வீற்றிருக்க வரையறை செய்து கொள்ளப்பட்டவராதலால் தங்கள் கீர்த்தியும் அத்தகையதே. அது போன்று தபசுகால யோகியான துறவியைவிட ஒரு போர்க்காலத்து ராணுவ வீரனுக்கு அவனின் சொந்த பந்தப் பாச உணர்வும் உறவும் துண்டிக்கப்படுவது இயல்பே. ஆனால், என் தாயாரின் இந்தப் புனித கடிதம் அந்த இயல்பையும் தகர்த்தெறிந்து விட்டது.

அந்தக் கடித வாசகங்களிலே ஒரு கட்டத்தில் என் மாதா குறிப்பிட்ட வாக்கியம் என் இதயத்தையும் மனச் சாட்சியையும் உலுப்பி விட்டது.

என் மகனே இந்த நாட்டு மக்களின் பாதுகாப்புக்காக என்னை ராணுவத்தில் சேர அனுமதித்தேனே யன்றி, அதிகார வெறியால் மமதை கொண்ட பேரினவாதத் தலைவர்களின் விபரீத ஆசைகளை நிறைவேற்ற அல்ல. மனித உரிமை கோரி நிற்கிற இந்த நாட்டு மக்களை அநியாயமாகக் கொன்று குவிப்பதற்குமல்ல. இந்த நாட்டு மக்களை ஒரே விதமாக நேசிக்கின்ற இந்தப் பஞ்சமா பாதகக் கொலைகளை இத்தோடு நிறுத்திவிடு. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிடு. இது கட்டளையல்ல; என் வேண்டுதல். உன் தாயாரின் இந்த வேண்டுகோளை, என் அன்பான மகனே, நிறைவேற்றுவாயாக... இதன் பொருட்டு உனக்கு வரும் துன்பங்களை, இத்தனை காலம் புரிந்த தவறுகளுக்காக ஒரு பாவ விமோசனம் போல் கருதி எதையும் சகித்துக்கொள்ளச் சித்தமாயிரு. இதன் பொருட்டு உன் ஆத்ம சுகத்தைத் தேடி கொள் வாயாக...''

## 2

மாட்சிமையுடைத்தான அதி உத்தம அதிபரே, ஆத்ம ஈடேற்றம் எங்கே இருக்கிறது என்று பார்த்தீர்களா? என் மாதாவின் ஒரு பெரிய நீண்ட கடிதத்தில் இந்தச் சிறு வாக்கியம் பெரு நெருப்பாய்ப் பற்றிக்கொண்டிருக்கிற தாகவே நான் உணர்கிறேன். தங்களுக்கு எப்படியோ?

ஒரு விண்ணப்பம்.

ஒரு தாயின் மகிமையை என்னைவிடத் தாங்கள் உணர்வீர்கள். 'என் வாழ்க்கைத் துணைவியிலும் என் தாயைக் காண்கிறேன்' என்று ஒரு தடவை தாங்கள் கூறியது என் நினைவுக்கு வருகிறது. உலகத்தின் சகல ஜீவன்களையும் பிரசவித்து ரட்சித்து வளர்த்து ஆளாக்கிய தாயின் ஸ்தானத்துக்கு மேலான ஒரு உன்னத சிருஷ்டியை எவராலும் கற்பனை பண்ணவே முடியாது. இத்தகைய மகிமையுடைத்தான என் மாதாவுக்கு நான் எந்த விதத்திலும் பொய் கூறவோ, மாறாக நடந்துகொள்ளவோ கூடாது. மாதாவின் வேண்டுகோளை மீறி நடப்பேனாகில் நான் யாரலும் எந்தக் காலத்திலும் மன்னிக்க முடியாத பெரும் பாபியாகிவிடுவேன். எனவே, என் மாதாவுக்குச் சத்திய வாக்கான உண்மையையே எழுதவேண்டும். அது போன்றே தங்களுக்கும் சத்திய வெளிப்பாடுகளை எழுத என்னை அனுமதிக்குமாறு மிகத் தாழ்மையுடன் வேண்டுகிறேன்,

நான் படையில் சேரும்போதே என் தாயார் இப்படி ஆணையிட்டிருந்தாள்.

“மகனே, நீ எங்கே கடமையாற்றுகிறாயோ அங்கேயுள்ள உனது தலைமை அதிகாரியை உன் தாய் அல்லது தந்தையாக வரித்துக்கொண்டு அந்த அதிகாரிக்கு விஸ்வாசமாக நடந்துகொள்.”

அன்பான அதிபரே,

இற்றைவரை அந்த ஆணைப்படி தங்களுக்கு விஸ்வாசமாகவே நடந்து வந்தேன. இதை நம்புங்கள். அந்த விஸ்வாசத்திற்குத் துரோகம் இழைக்கக் கூடாது என்பதாலேயே, தங்கள் புதிய கட்டளையை நிறைவேற்ற முடியாதிருக்கிறேன். இதனை வெளிச்சமாக்கவே இந்த நிருபத்தை எழுதுகிறேன்.

அரசியல் களத்தில் நெடுங்கால அனுபவம்பெற்ற தாங்கள், அரச பீடத்தின் சகல சட்டதிட்ட நுட்பங்களையும் வெகு நுணுக்கமாகக் கற்றுத் தேர்ந்த அறிஞர் என்பதனையும் அறிவேன், அரசியலில் மட்டுமல்ல. சட்டம், நிர்வாகம், கணிதம், கலை, இலக்கியம், விளையாட்டு, குத்துச்சண்டை, மருடி வித்தை, மேடைப் பேச்சு, சித்திரம் வரைதல் ஆகிய சகல துறைகளிலும் தாங்கள் நிபுணத்துவம் கொண்டவர் என்பதனையும் அறிவேன். இத்தனைக்கும் மேலாகத் தாங்கள் ஓர் உண்மையான மத விஸ்வாசியாகவும் இனவாதியாகவும் திகழ்கிறீர்கள் என்பதும் வாஸ்தவமே. குறைந்த பட்சம் ஒரு மனிதனுக்கு இருக்க வேண்டிய அத்தனை ஆற்றல்களையும் கொண்டுள்ள தாங்கள் பௌத்த மத அனுஷ்டானத்திலும், சிங்கள இன முன்னேற்றத்திலும் விசேஷ அக்கறை காட்டி அவற்றை உயிரினும் மேலாக மதித்து நடந்து வருகிறீர்கள் என்பதும் உண்மையே. இதற்குமப்பால் புத்த பெருமானின் பஞ்ச சீலப் போதனைகளை இம்மியும் பிசகாமல் அச்சொட்டாக அனுசரித்து வருகின்ற அவர்தம் சீடர்களைக் காட்டிலும் தாங்கள் அதி உன்னத புண்ணியசீலர் என்பதை நான் மட்டுமல்ல, இந்த நாடே அறியும்.

இவற்றைக்காட்டிலும் தங்கள் மட்டில் நாம் பெருமைப் படத்தக்க-படுவதாகவுள்ள இன்னோர் முக்கிய அம்சம் என்னவென்றால், தாங்கள் ஓர் 'சிங்களவர்' என்பதால் மட்டுமல்ல, சிங்கள இனத்தவரான தாங்கள் ஓர் உண்மையான பௌத்த சிங்களவர் என்பதாலுமாகும்.

இதனை இங்கு குறிப்பிடாமல் விடுவது என் மனச்சாட்சிக்கே விரோதமான செயல். ஒரு உண்மையை நான் குறிப்பிட்டேயாக வேண்டும். தங்களைப்போல நானும் ஒரு பௌத்த சிங்களவன் என்பதால் எனக்குள் ஒரு பெருமித உணர்வு உண்டு என்பதை மறைப்பதற்கில்லை, இன உணர்வைக் காட்டிலும் மதப்பற்று எத்தகைய சக்தி வாய்ந்தது என்பதை இந்த நாட்டின்வரலாற்றை நுணுக்கமாக நோக்கும் ஒருவர் இலகுவாகப் புரிந்து கொள்வார். இதை நினைவு படுத்துவதற்காவே நானும் 'பௌத்த சிங்கள வனாயிருப்பதில் பெருமிதமடையலாமென்று குறிப்பிட்டேனேயன்றி, பரிந்துணர்வு கொள்ளவேண்டும் என்பதற்காக அல்ல.

நான் ஒரு ராணுவ அதிகாரி என்ற கோதாவில் யுத்த களத்தில் சமர்புரியும் போர்ப்பயிற்சியில் தேர்ச்சி பெற்றது போலவே, இந்த நாட்டுப்பிரஜை என்பதால் அரசியல் களத்தில் அதன் தத்துவ சிந்தாந்தங்களிலும் போதம் பெற்றவன் என்பதைத் தங்களுக்குத் தெரிப்பதில் தோஷம் இல்லை.

அரசியல் என்றவுடன் சிகப்புக் கொடி தங்கள கண்ணில் 'பளிச்'சிடும். இரத்தம் சிகப்பு, 'மனித குலம்' ஒன்றே என்பதற்கு இது முத்திரை. பின்னே வரும் ஆபத்தை முன்னே காட்டிச் சகலருக்கும் வழிகாட்டும் ரட்சண்யன் அது. ஆனால், தாங்கள் இதற்கு மாறான கருத்தையே போதித்து வந்தீர்களென்பதையும் நான் அறிவேன்.

தாங்கள் கம்யூனிஸத்தின் பரம வைரி என்பதும், கிழக்காசியாவில் தாங்களும் ஒரு சிறந்த கம்யூனிஸ எதிர்ப்பாளன் என்பதும். இந்த வரிசையில் *மக்கார்த்தி

---

*மக்கார்த்தி இரண்டாவது உலக மகாயுத்த காலத்தில் அமெரிக்கச் செனட்டராக இருந்தவர் கம்யூனிஸத்தின் பரம வைரி. 'சிகப்பு' நிறம் கண்டால் நித்திரை கொள்ள மாட்டார்.

யைக் கூடத் தங்களுடன் ஒப்பிடமுடியாது என்பதும் நான் அறிந்தே. ஆனால், நான் தங்கள் அரசியல் கருத்துக்குச் செவிமடுக்காமலே அரசியலை மேலும் என்னுள் புடம் போட்டுக் கொள்கிறேன். இதனால், என் பிறந்த மண்ணுக்கு நான் உரிமையுள்ள புதல்வனுமா யிருக்கிறேன் என்பதைத் தாங்கள் மனங் கொள்வீர் கள் என நம்புகிறேன்.

'மனிதனை மனிதனாக மதித்து நேசிக்கத்தெரியாதவன் மனிதனே அல்ல' என்பதையே அரசியலில் நான் முதன் முதல் கற்ற பாடம். கம்யூனிஸம் இதையே சொல்கிறது. மார்க்ஸ் எங்கல்ஸ் பிரகடனம் இதைத்தான் கூறுகிறது.

மனித குலத்துக்கு ஆகவேண்டிய சகல வாழ்க்கை வளங்களும் சிருஷ்டிகளும் இந்த வாசகத்துக்குள்ளே சூட்சுமமாக வியாபித்திருப்பதைக் காண்பீர்கள். ஓ... தாங்கள் ஓர் சிறந்த கம்யூனிஸ விரோதியல்லவா? என்ன செய்வது, அரசியல் என்றாலே அதைத்தான் எழுத வருகிறது.

சகல துறைகளிலும் மகா பராக்கிரமசாலியாகக்கீர்த்தி யுடைத்தான தாங்கள் இந்த நாட்டின் இரு ஆதிவாசி களான தமிழ்சிங்கள இனங்கள் மத்தியில் 'சிங்கள மகாசபை' என்ற ஸ்தாபனத்தைத் தோற்றுவித்துப் பச்சை இனவாதத்தைத் தூண்டிவிட்டபோது, இதே உந்து தலால் 'தமிழ் காங்கிரஸ்' என்ற போட்டி ஸ்தாபனம் தோன்றவும் தாங்கள் மூலகர்த்தாவாக இருந்தீர்களே, விபரீதமான இந்தப் பேதத்துக்கு அன்று ஏன் அப்படி அத்திவாரம் போட்டீர்கள் என்பதுதான் எனக்குஇன்னும் புரியவில்லை,

அந்தச் சிங்கள மகாசபையே இன்று பௌத்த மகாசங்கமாக விஸ்வரூபமெடுத்து நிற்கிறது. இதனைப் பற்றிப் பின்பு இந்நிருபம் விரிவுபடுத்திச் சொல்லும்.

இதன் தொடர்பாக மலையகத்தையே கலையகமாக்கி விட்ட இந்திய வம்சாவழித் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் பத்து லட்ச வாக்குரிமைகளைப் பறித்து அவர்களை 'நாடற்ற பிரஜை'களாக்க டி. எஸ். சேனநாயக்காவுக்கு உதவினீர்களே இது இந்த நாட்டின் வரலாறு காணாத அநியாயம் என்பதும், மனிதாபிமான நடவடிக்கையல்ல என்பதும் உண்மை - இதனை ஒரு விரல் சூப்புகிற குழந்தைப் பிள்ளையும் புரிந்து கொள்ளும். அப்படி இருக்க, தாங்கள் இதன் தாற்பரியங்களையோ வஞ்சக வினைகளையோ உணர்ந்ததாகத் தெரியாமல் அபிநயிக்கிறீர்களே ...இது வியப்புக்குரியதாகவேஎனக்குப்படுகிறது.

அரசியலில் 'ஆஜாட பூதித்தினம்' என்ற ஒன்றுண்டு. இது மனிதர்களைப் பலவீனமாக்கியே பலவான்களைப் போலப் பாவனை காட்டுகின்ற ஒரு மகுடி. இந்த வித்தை தங்கள் போன்ற சத்குணபோதகருக்கு வேண்டாத ஒன்று என்றே நான் கருதுகிறேன்.

புத்தஞ் சரணங் கச்சாமி, சங்கஞ் சரணங் கச்சாமி, தம்மஞ் சரணங் கச்சாமி' என்ற பஞ்சசீலரான கௌதம புத்த பெருமானின் முப்பெரும் தர்மத்துக்கே விரோதமான இந்தச் செயலை, 'பௌத்த சிங்களவருக்கே கீர்த்தி வாய்ந்த கைங்கரியமாக'த் தாங்கள் வியூகமாகக் காண்பித்ததன் நோக்கம், இதன் பால் தாங்களே அனைவராலும் வழிபட வேண்டியவர் என்ற தங்களின் ஒருவித வினோத ஆசையாக இருக்கலாம் என்றும் கருத இடமுண்டு.

தங்களால் அதிகார பீடம் கைப்பற்றப்பட்டதும் ஒரு கோடை மின்னல் போல் நாட்டில் நடந்த மாற்றங்களின் போது படைப்பிரிவுகளுக்குத் தங்களால் நியமிக்கப்பட்ட ஒரு ராணுவத் தளபதியான எனக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் இருக்கின்றது என்றும், தங்களால் பிறப்பிக்கப்பட்ட கட்டளைக்கும் அந்த விவகாரங்களுக்கும் எந்த வித

மான தொடர்பும் இல்லையே எனறும் தாங்கள் கருதுவீர்கள் என்று நினைக்கின்றேன்.

மகாகனம் பொருந்திய அதிபரே, தங்களைப்பொறுத்தவரை இது புதுரகமான விஷயம்தான். ஆனால், தங்கள் புதிய கட்டளைப் பிரகாரம், ஆதியோடந்தமான உண்மை வரலாற்றோடு இணைந்து பார்ந்தே நான் தற்போது இயங்கவேண்டியவனாகி விட்டேன் என்பதைக் கவலையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே மொழியால் சிங்களவனான நான், குலத்தால் மனிதனாயிருப்பதால் இன்னொரு தமிழனான என் போன்ற மனிதனைப் பற்றியே பேசுகிறேன்.

'மனிதனை மனிதனாக மதித்து, நேசிக்கத் தெரியாதவன் மனிதனேயல்ல.' என்று நான் இதிற் குறிப்பிட்டதை மீண்டும் நினைவுபடுத்துகிறேன். சிந்தையிற் கொள்வீர்களாக.

ஆனால், அதிபர் அவர்களே, தாங்களோ எமது நாட்டு மனிதர்களைச் 'சிங்களவன்-தமிழன்' என்று 'பிரிவினை' பண்ணிப் பேதப்படுத்தி, மனித நாகரிகத்திற்கே சவக்குழி தோண்டினீர்களே... இங்கேதான் தங்களால் பிறப்பிக்கப்பட்ட புதிய கட்டளைக்குச் சரியான அர்த்தம் தேடப்படுகிறது. 'பிரிவினைவாதி' யாகவிருந்த தாங்களே பிரிவினை வாதிகளைத் துவம்சம் செய்யும்படி கட்டளை பிறப்பித்திருக்கிறீர்களே. இப்படியொரு கட்டளை மனசாரப் பிறப்பிக்கப்படுகிறதென்றால் இந்தக் கட்டளைப் பிரகாரம் முதன் முதலாகத் தங்களையும் தங்கள் பரிவாரங்களையுமே துவம்சம் செய்யவேண்டும் என்றாகிறதல்லவா? யோசித்துப் பாருங்கள்.

ஆயினும், அதிபர் அவர்களே, நான் என் மாதாவின் கருணை உள்ளத்தை நினைவு கூர்கிறேனாதலால் தங்களையும் இப்பொழுது என் போலவே நேசிக்கக் கற்றுக் கொண்

டேன். எனவே, எவரையும் துவசம் செய்ய வேண்டு மென்ற அந்த எண்ணம் எனக்கு அடியோடு இனி எழாது என்பதனைத் தயவு செய்து உறுதியாக நம்புங்கள்.

உண்மை வரலாறு பதியப்பட வேண்டும் அது தன் னுணர்விலும் தன் நிலைப்பாட்டிலும் வரையறை செய் யப்பட்டதால் தான் இற்றைவரை போலியாகத் திரிபு படுத்தப்பட்டது. இதுவும் சுத்த 'ஹம்பக்' தான். முற்பகுதி யில் குறிப்பிட்டிருக்கிறேன். தயவு செய்து அதை ஒரு தடவை கவனித்து விட்டு இதனைத் தொடருங்கள்

தாங்களும் தங்களுக்கு முன் வந்தோரும். 'ஐக்கிய தேசியக் கட்சி' என்ற அரசியல் ஸ்தாபனம் ஒன்றை அமைத்து அந்தச் சுலோகத்துக் கூடாகச் சிங்களப் 'பேரின வாத' நெருப்பைப் பௌத்த மதவாதத்தோடு மூட்டியதன் விளைவாக, இந்நாட்டிலே 'தமிழரசுக் கட்சி' என்ற மற்று மோர் 'சிற்றினவாத'க் கழகம் ஒன்றைத் தோற்றுவித்தீர் கள் அல்லவா? அந்த மகிமையைத் தங்களிடமிருந்து தத்தெடுத்த 'ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி' என்ற இனவாத பேரிகை தாங்களும் கண்மூடித்தனமாகப் பரப்பியதால் தானே, 1956 இல் நிராயுதபாணிகளான சத்தியாக்கிரகி களை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சித் தொண்டர்களோடு தங்கள் ஐ.தே.க. தொண்டர் படைகளும் சேர்ந்து காலி முகத்திடலில் வேட்டையாடிற்று.

மனச்சாட்சியைத் தொட்டுப் பாருங்கள்.

பெரும் ஆயுதபாணியான பிரிட்டீஷ் சாம்ராஜ்யத் தையே முழு நிராயுதபாணியாக நின்று எதிர்த்துச் சத்தி யாக்கிரகப் போரில் குதித்த இந்திய தேசத் தந்தை மகாத்மா காந்தியைத் தயவு செய்து நினைவு கூர்வீர் களாக. காந்தி மகானின் சத்தியாகிரகத்தைப் பிரிட்டீஷ் சாம்ராஜ்யம் மிருகத்தனமாக அடக்கிப் பார்த்தது. கடைசியில் மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரகமே அந்த வெள்ளை ஏகாதிபத்திய வெறியரை வென்றது. இந்த

உண்மையை யாரால் மறுக்க முடியும்? இந்திய சுதந்திர வாடையே இலங்கையையும் மீட்டது

## 3

எங்கள் காலத்திலே இந்திய தேசத்தில் நிகழ்ந்த இந்தச் சம்பவங்களையும் தயவு செய்து இதொடு நினைவு படுத்திக் கொள்வீர்களாக

மகாத்மா காந்தி வழியில் சத்தியாக்கிரகம் செய்த அகிம்சைப் போராளிகளைத்தான் அன்று வெட்கம், மானம், ரோசம், வீரம் சகலத்தையுமே அடைவு வைத்து விட்டு அசல் கோழைகள் போல் எமது சிங்களப் பேரினவாதக் குண்டர் படைகள் காலிமுகத்திடலில் இம்சைப்படுத்தினார்கள். இத் துஷ்டத்தனத்திற்குத் தங்கள் ஐ. தே. க. துணையாயிற்று என்பதை நினைக்கும் போது......

அன்று தமிழ்ச் சத்தியாக்கிரகிகள்மீது சிங்களக் காடையர்கள் புரிந்த அட்டூழியம். இன்று எப்படி விஷ்வரூபம் எடுத்துவிட்டது பார்த்தீர்களா? இது யார் விதைத்த வினை?

1914ல் சிங்களவர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் உண்டான கலவரத்தின்போது தமிழர்கள் சிங்களவர்களுக்காக லண்டன்வரை சென்று வாதாடி இந்த நாட்டில் அமைதியையும் சகோதரத்துவத்தையும் பேணிப்பாது காத்த வரலாறு ஒன்று இருக்கிறது. சிங்கள இனத்துக்காகப் பேரம்பேசி வெற்றி கண்ட பொன்னம்பலம் ராமநாதன் என்ற அந்தத் தமிழர் கொழும்புத்துறைமுகத்தில் இறங்கியபோது, அவரை எமது சிங்கள மக்கள் பல்லக்கில் ஏற்றிக் காவிக்கொண்டு கொழும்பு மாநகரை

அடைந்த சம்பவத்தை இன்னமும் மறந்துவிட முடியா தல்லவா?

அந்த நன்றிக் கடனுக்காகவா இந்தத் தமிழ்ச் சத்தியாக்கிரகிகள் மீது, சிங்களக் குண்டர் படை ஏவிவிடப்பட்டது? 'சிங்களவர் நன்றி மறந்த சாதி' என்று உலகம் பழிக்க, அந்த ஒரு சம்பவமே போதும். செய்நன்றி மறந்தோர்க்கு ஒரு போதும் உய்வில்லை' என்று ஒரு தமிழ்ப்புலவர் பாடியதன்படி பார்க்கின், எமது நாடு உய்வில்லாமல், போனதற்கு இந்தச் செய்நன்றி மறந்த செயலும் ஒருகாரணியாக இருக்குமா என்றே கருது கிறேன். இல்லாவிட்டால், இன்று எமது சிங்கள இனம் மாத்திரமல்ல. இந்த நாடே அந்நிய ஏகாதிபத்திய நாடு களிடம் விலைபோகப்பட்டிருக்குமா?

ஆமாம் அதிபரே, எங்கள் நாட்டின் சுயாதீனம் பறந்துவிட்டது. தாங்கள் மட்டுமல்ல, படைப்பிரிவு களில் உள்ள நாங்களும் அந்நிய ஏகாதிபத்திய நாடு களிடம் வாங்கிய பிச்சைப்பணத்திலிருந்துதான் எங்கள் வயிறுகளை நிரப்ப வேண்டியவர்களாகிவிட்டோம். இப்பொழுது இந்த நாட்டையே சுயாதீனம் இழந்த பிச்சைக்கார நாடாக்கிவிட்டிர்கள். இன்னொருவகையில் கூறுவதானால், எங்கள் நாடு அந்நிய ஏகாதிபத்திய நாடு களின் அகதியாகிவிட்டது. இதன் பிரதிபலிப்பாகத்தானே நாள்தோறும் ஆயிரக்கணக்கில் மக்கள் அகதிகளாக வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை இன்னும் நீடித்துக் கொண்டிகுக்குமாயின் ஏகாதிபத்தியங்களின் அகதியாகிவிட்ட எமது நாடு அவற்றின் நிரந்தர அடிமை யாகவே போய்விடலாம்.

ஓ... என்னை மன்னித்தருளுங்கள். நான் என்னவோ சொல்ல முனைந்து எதையோ எழுதிக்கொண்டிருக் கிறேன். சமுத்திரத்தில் குமுறும் நீரை ஒரு சிறு குழாய் மூலம் வெளியேற்றும்போது அது சீறி அடித்துப் பாயு

மல்லவா? அது போன்ற என் நெஞ்சுள் குமுறும் அலைகளை இந்தச் சிறிய நிருபம் மூலம் வெளிப்படுத்தும்போது ஏனைய சம்பவங்களும் இப்படியாகச் சீறிப்பாய்ந்து கொண்டோடி வருகின்றன இவை என்னையும் மீறி வருவதால் அவற்றை நிரைப்படுத்திக் கொள்ளமுடியாது போகலாம் அதற்காக என்னால் எழுதாமல் இருக்க முடியாது. ஏனென்றால், நான் எதனையும் எனக்காக எழுதுவதில்லை. இந்த நாட்டு மக்களுக்காகவே எழுதுகிறேன். இது என் கடமையாகத் தெரிகிறது. எனவே, முடிந்தவரை என் மனசைக் கட்டுப்படுத்தி ஒழுங்கு முறையாக எழுதுகிறேன்.

மகிபரே,

இது வரை என் மனசில் தேக்கி வைத்திருக்கிற சகல விஷயங்களையும் ஒரு வரலாறுபோல் வரிசையாகத் தயாரித்தளிக்கவே திட்டமிட்டிருந்தேன். ஆனால், 'விமானங்கள் மூலம் ஆகாயத் தாக்குதல்களை மூர்க்கமாகத் தொடங்குமாறு'ள்ள தங்கள் புதிய அவசர கட்டளையைப் படித்தபின் அந்த எண்ணத்தை மாற்றிவிட்டு, ஒவ்வோர் கால கட்டங்களிலும் அவ்வப்போது நிகழ்ந்த சம்பவங்களை விஞ்ஞான பூர்வ ஆதாரத்தோடு விளக்கி அனுப்பவே உத்தேசித்துள்ளேன்.

எந்தவோர் சம்பவங்களோ நிகழ்ச்சிகளோ 'திடீர் திப்'பென்று தாமாகத் தோன்றுவதில்லை. எதற்கும் ஒரு வரலாறும், அதோடிணைந்த விஞ்ஞான பூர்வச் செயற்பாடும் உண்டு. விஞ்ஞானத்தைப் புறக்கணித்த சரித்திரமோ சரித்திரத்தைப் புறக்கணித்த விஞ்ஞானமோ உண்மைச் சம்பவங்களாகா. எனவேதான், ஆதியோடந்தமான ஆய்வோடு இதனைத் தயாரித்துத் தங்கள் சமூகத்துக்கு அளிக்கச் சித்தங் கொண்டேன்.

இந்தப் பிரதேசங்களில் கடமையாற்றும்போது நிகழ்ந்த அத்தனை சம்பவங்களையும் தங்களினதும்,

தங்கள் மந்திரி பிரதானிகளதும், பாதுகாப்பு மந்திரியினதும் 'நிர்ப்பந்த ஆலோசனை'களின் பேரிலேயே முற்றாகத் திரித்த பொய் அறிக்கைகளை இத்தனை காலமாக அனுப்பி வந்தேன். என்னாலும், என்போன்ற ஏனைய ராணுவத் தளபதிகளாலும் இவ்வாறு திரித்து அனுப்பப்பட்ட அறிக்கைகளையே தாங்களும் தங்கள் பரிவாரங்களும் அரச பிரகடனங்களாகப் பத்திரிகைகளிலும், வானொலிகளிலும், ரூபவாகினியிலும் மக்களுக்குப் பிரசார முழக்கம் செய்தீர்கள். வெளிநாட்டு-உள்நாட்டுப் பத்திரிகை நிருபர்களுக்கும் உற்சாகத்தோடு பேட்டி அளித்தீர்கள். குறிப்பிட்ட கைங்கரியங்களை நான் செவ்வனே புரிகிறேனா என்பதைக் கண்காணிக்கத் தங்களால் இரகசியமாக நியமிக்கப்பட்ட சில ஒற்றர்கள் எனது முகாமில் எடுபிடி வேலையாளர்களாக நியமிக்கப் பட்டிருக்கிறார்கள் என்ற சம்பவம்கூட இப்போதுதான் தெரியவருகிறது.

'நான் மக்களால் ஜனநாயக பூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர்' என்று அடிக்கடி வாய் ஓயாமல் மேடைகள் தோறும் முழக்கம் செய்கின்ற தாங்கள் சட்டத்தை மீறுகின்ற எந்தப் பிரஜைகளையாவது நீதி விசாரணை மூலம் தண்டிக்கப்படுவதையே ஜனநாயக நடவடிக்கையாகக் கொள்வீர்கள் என்று நம்பப்பட்டது. ஆனால், தங்கள் அரசுக்கு எதிராக இந்த நாட்டுமக்கள் ஜனநாயக ரீதியில் உரிமைப்போராட்டத்தில் குதித்த போது, தாங்கள் அவர்களைப் 'பயங்கரவாதிகள்' என்று நாக்கூசாமல் பகிரங்கமாகவே பிரகடனம் செய்ததுமன்றி, நீதி விசாரணை ஏதும் இல்லாமல் 'சுட்டுக் கொல்லும்' கட்டளையைப் பிறப்பித்தீர்களே ..... அந்தக் கட்டளைப் பிரகாரம் இந்த நாட்டு மக்களுக்குத் தங்கள் ஜனநாயக தர்மம் எப்படிப் பிரயோகிக்கப்படுகிறது என்பதைச் சாட்சி சொல்லக்கூட இன்று ஒருவரும் உயிரோடு

இல்லை. சுதந்திரமாகவே சுட்டுக் கொல்லப்பட்டுப் போனார்கள்.

தேடுதல் வேட்டையில்— பிரயாணங்களில் — வதை முகாம்களில் இறந்துபோனார்கள்.

நிச்சயமாகச் சொல்கிறேன். இவர்களில் ஒருவனோ ஒருத்தியோ தானும் பயங்கரவாதிகள் அல்லர். ஆனால், தாங்கள் கோடுகாட்டிய பட்டியலில் பச்சிளம் பாலகர்களும், பச்சைக்கர்ப்பிணிகளும், தள்ளாடும் வயோதிகர்களும் பயங்கரவாதிகளே.'

தங்களால் முடுக்கிவிடப்படுகின்ற பிரசார சாதனங்களின் மதிநுட்பம் என்னவென்றால், தங்கள் அரச பீடத்தை விமர்சிக்கின்ற எதிர்க்கிற இயக்கங்கள் பிரஜைகள் சகல தரத்தினரும் 'பயங்கரவாதிகள்' என்று நாட்டு மக்கள் அனைவரையுமே நம்ப வைத்து அவர்களைக் கிலிகொள்ள வைத்ததுதான். 'இந்தப் பயங்கர வாதிகளைத் தொலைத்துக் கட்டுவதற்குத் தங்களைத் தவிர வேறு பராக்கிரமசாலி இங்கு எவரும் இல்லை' என்று தங்கள் காலடியில் மக்களைத் தஞ்சம் கொள்ள வைக்க இந்த யுக்தி பயன்படுகின்றது என்று தாங்கள் போடும் தப்புக்கணக்கு அம்மணமாகவே தெரிகிறது. 'இது பெரும் அபாண்டமான சுத்த அயோக்கியத்தனம்' என்று தங்களுக்குத்துலாம்பரமாகத் தெரிந்த போதும், இதனையே தங்கள் மேலான 'அரசியற் சாணக்கியம்' என்று கருதுகிறீர்களே, இந்தச் சாணக்கியம் கடைசியல் நமக்குமட்டுமல்ல, தங்களுக்கே விபரீதமாக வந்து முடியலாம்.

தங்கள் பணிப்புரையின்பேரில் பயங்கரவாதிகளை ஒழித்துக்கட்டும் தேடுதல் வேட்டையில் எமது படைகள் இதுவரை எத்தனை ஆயிரம் அப்பாவி உயிர்களை அநியாயமாகப் பலி எடுத்தார்கள்...?

மகாகனம் பொருந்திய அதிபரே, இந்தப் படுகொலைகளுக்கெல்லாம் தாங்களும் தங்கள் பரிவாரங்கள் மாத்திரமல்ல, எனது சந்ததியும் பாவவி மோசனத்திற்காக ஏதோ ஒரு வகையில் கட்டாயம் உத்தரித்தே தீரவேண்டும். ஆதலால், இதற்கெல்லாம் நான் இன்று தொடக்கம் முழுக்குப்போடத் தீர்மானித்து விட்டேன்.

வதை முகாம்களில் சித்திரவதை செய்வதற்குப்பெயர் போன இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை தங்களுக்கு நன்றி விஸ்வாசத்துடன் செயற்பட்டபோது, அவருக்குத் தாங்கள் அளிக்கவிருந்த ஒரே ஒரு விருது 'தேசிய வீரன்' என்ற அந்தஸ்து அல்ல, ஒரு சிறு பதவி உயர்வு மட்டுமே அந்தப் பதவி உயர்வு அவரைக் காப்பாற்றியதா...?

வட கீழ் மாகாணப் பிராந்தியங்களில் எமது ராணுவ நடவடிக்கைகளால் இதுவரை நிகழ்ந்த மோசமான பயங்கரச் சித்திரவதைகளெல்லாம் எத்தகைய மகிழ்ச்சியோடும் பெருமிதத்தோடும் குதூகலித்துக்கொண்டு நடத்தி வைக்கப்பட்டன என்பதை இங்கே வகைக் கொன்றாக இடையிடையே நான் குறிப்பிடுவதன் நோக்கம், தங்கள் உத்தரவுகள் அனைத்தும் எப்படிப்பட்ட தாற்பரியங்களைக்கொண்டிருந்தன என்பதைத் தங்களுக்கு மீண்டும் நினைவூட்டுவதற்காகத்தான்.

மலை விழுங்கிகளான பூதங்களுக்கு அள்ளிப்போடும் உணவுபோல் இந்தப் படைப் பிரிவுகளுக்கு ஒவ்வோர் தினமும் வழங்கவேண்டும் என்பதைக் கருத்திற் கொண்டு தாங்கள் ஆயுதங்களுக்கும் ராணுவச் செலவுக்கும் பல ஏகாதிபத்திய நாடுகளிடமிருந்து பிச்சை வாங்கிப் பராமரித்துக்கொள்கிறீர்கள் என்பது வாஸ்தவம்தான். உண்டகளை தீர உலா வரும் நமக்கு ரோந்து சுற்றுவதெல்லாம் ஒரு பொழுதுபோக்கான களியாட்டமாகவே கழியும். அப்படி ஒரு பொழுது போக்கையே எங்கள் வழக்கமான கடமையாகக் கொண்டிருக்கிறோம்.

அப்படி ஒரு மாலைப்பொழுது, பூமியை இருள் மண்டிக்கொண்டிருக்கிற நேரம்.

பதினாறு 'றக்' வாகனங்கள் சகிதம் மூன்று 'ஜீப்'புகளில் குருநகர் முகாமிலிருந்து எங்களின் ஒரு 'யூனிட்' படைப் பிரிவின் பவனி ஆரம்பமாகியது. கிட்டத்தட்ட ஒரு மணித்தியாலத்துக்குள்ளாகவே மானிப்பாய், தாவடி, ஆணைக்கோட்டை, கொக்குவில், சுதுமலை ஆகிய ஐந்து கிராமங்களையும் சுற்றிவளைத்துச் சிக்காராக முற்றுகையிட்டுக்கொண்டோம். வாகனங்களை விட்டு இறங்கிய எமது படையினரின் கோடை இடிபோல் முழங்கிய துப்பாகி வேட்டுக்கள் முழுக்கிராமங்களையே உலுப்பி விட்டன. மனிதர்கள் பீதியில் ஆழ்ந்துபோய் விட்டனர், ஜனங்களை ஊசாடவிடாமல் அப்படியே ஸ்தம்பிக்க வைத்துவிட்டன எனக்கருதக் கூடியளவு அந்த அதிர் வேட்டுக்கள் அமைந்திருந்தன.

இந்த அமைதியினூடே இருந்தாற்போல் பற்றை பறுகுகளிற் பதுங்கியிருந்த நாய்கள் அம்மாறு போட்டு குரைக்கின்ற சத்தமும், மாடு ஆடுகள் முனகி அழும் கதறல் களும் காதில் விழுந்தன.

அவ்வளவுதான். வீதிகளிலும், சிறுசிறு குச்சொழுங்கைகளிலும், முற்றத்து மைதானங்களிலும் எமது ராணுவப் படைகளின் நடமாட்டங்களைத் தவிர வேறு எந்த அசுமாற்றமும் தெரியவில்லை.

சுமார் மூன்று மணி நேரத்துக்குள் எங்கள் தேடுதல் வேட்டை முடிந்து விட்டது.

இந்த வேட்டையின்போது மொத்தம் முந்நூற்றி யிருபத்தெட்டு வாலிபர்களைக் கைது செய்து பதினாறு 'றக்'குகளில் அடைத்தும் முடியாமற்போகவே, மிகுதிப் பேரை 'ஜீப்'புகளில் போட்டு முகாமுக்குக் கொண்டு வந்தோம். ஆனைக்கோட்டையில் மட்டும் தொண்ணூற்

றெட்டு வாலிபர்களைக் கைது செய்தோம். இத்தனைக்கும் நாங்கள் கைது செய்த வாலிபனிடத்திலாவது எந்தவோர் தடயமும் இருக்கவில்லை. ‘ஒரு கணிப்பீட்டில் சகல வாலிபர்களையும், முடிந்தால் யுவதிகளையும் கைது செய்யவேண்டும்’ என்ற தங்கள் பணிப்பின்பேரில் இதெல்லாம் கனகச்சிதமாக நிறைவேற்றப்பட்டது.

இதில் பதின்மூன்று யுவதிகள் அடங்குவர்

அன்று இரவே விசாரணை ஆரம்பமாகியது. எமது பொலிஸ் ராணுவ அகராதியின்படி ‘விசாரணை’ என்றால் நாங்கள் நினைப்பதைக் கைதிகளிடமிருந்து வர வழைப்பதே தவிர வேறு ஒன்றுமில்லை. அதாவது, கைது செய்யப்பட்டவன் சொல்கின்ற உண்மைகள் அனைத்தும் நாங்கள் எண்ணுவதுபோல் அமைந்திருக்காவிடில் அசந்து விடமாட்டோம். எப்படியும் நாங்கள் எதிர்பார்க்கிற சம்பவங்களை அவன் வாயால் உண்மை போல் கக்க வைப்பதுதான் எங்கள் கடமை. இதுதான் உள் விஷயம். இந்த விவகாரத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாதவன் எவனாவது பொலிஸிலோ ராணுவத்திலோ கடமை புரியத்தகுதியற்றவன் என்பதால், எமது தகுதியையும் திறமையையும் உரியவர்களுக்கு வெளிக்காட்டும் பொருட்டும் இப்படியாக நடந்தேயாக வேண்டும், இப்படி நடந்துகொள்ளும்போது சில உத்திமுறைகளைக் கையாள்வோம். அப்படிக் கையாண்டும் அவன் அந்த உண்மையைக் கக்காவிடில் நாம் சோர்ந்துவிடுவதில்லை. சலித்துக்கொள்வதுமில்லை. அவன் வாயால் அந்த உண்மைக்குப் பதிலாக இரத்தம் கக்கச் செய்துவிடுவோம். அதுவே அவன் கூறும் ‘ரத்த சாட்சி’யாக எடுத்துக் கொள்வோம். ‘எதிரிகள் மட்டில் எப்படி நடந்துகொள்ள வேண்டும்’ என்று எமது ராணுவ-பொலிஸ் பயிற்சிக்கூடங்களில் போதிக்கப்படும் முதல் பாடம் இந்த வகையில் தானே அமைந்திருக்கிறது?

 

அப்படித்தான் இந்த விசாரணை வழக்கம்போல் ஆரம்பமாகியது.

இத்தனை கைதிகளையும் விசாரணை செய்யும் பொறுப்பை ஒரு 'சார்ஜண்ட்' உட்பட இரண்டு 'சோல்ஜர்'களிடம் ஒப்படைத்தேன். ஒரு 'லெப்டினன்' இரண்டு 'சார்ஜண்ட் மேஜர்' முன்னிலையில் இந்த விசாரணை நடைபெற்றது.

அதனை அப்படியே தங்கள் மேலான கவனத்துக்கு அச்சொட்டாகத் தருகிறேன்.

## 4

வாட்டசாட்டமான ஒரு வாலிபன். இவன் கொஞ்சம் திமிர் பிடித்தவன் போல் காணப்பட்டான். கீற்று மீசையும் வாளிப்பான கன்னக்கிறுதாவும் விட்டிருந்தான். கட்டி வைத்து அடித்தாலும் இறுங்காத உடற் கட்டு. கிட்டத்தட்ட இவன் மாதிரியான பதின்மூன்று வாலிபர்களை நிரையாக நிறுத்தி வைத்து அந்தரங்க விசாரணை தொடங்கியது. லெப்டினன் உசாராகக் கனைத்துக்கொண்டு எழுந்து சுற்றிவர ஒரு நோட்டம் விட்டு நிலை குத்தி நின்றார்.

''எவனாவது உண்மை சொல்லாவிட்டால் உயிரோடு தப்ப முடியாது பயங்கரவாத இயக்கங்களோடு தொடர்புண்டா?' என்று கேட்டால், இதுவரை எந்தப் பயலாவது ஒழுங்காக உண்மை சொன்னதே கிடையாது. 'இல்லை, எனக்கு ஒன்றுமே தெரியாது' என்று ஒரு வார்த்தையை ஒரு சுலோகமாகச் சொல்லி மழுப்புவதே வழக்கமாகி விட்டது இதனால் எங்கள் பாடு மட்டுமல்ல, உங்கள் பாடும் பெருந் திண்டாட்டமாகி விடுகிறது. ஆனால், ஒரு விஷயம் 'ஒரு உண்மையை மறைக்க ஓராயிரம்

பொய் சொன்னாலும் அந்த உண்மை பொய்யாகி விடாது' என்ற உண்மையைப் புரிந்து கொள்ளவேண்டும். ஆகையால், உண்மையைத் தவிர வேறு எதைக் கூறி னாலும் தப்பமுடியாது என்பதை உணர்ந்து ஒவ்வொருவ ராக முன்னே வந்து பதில் சொன்னால் போதும்...''

இந்த விதமாக ஒரு பீடிகையோடு லெப்டினன் வலிபர்களை வரிசையாக முறுவலித்துப் பார்த்தார்.

ஒன்று—இரண்டு—மூன்று நிமிஷங்கள்.

'தண்ணியும் மூன்று பிழை பொறுக்கும்' என்பார்கள். பொறுத்துப் பார்த்தாயிற்று. காரியம் கைகூடவில்லை. ஒரு பயலாவது வாய் திறக்கவில்லை.

இதைச் சகியாமல் முறைத்துக் கொண்டு நெருங்கிய சார்ஜன்ட மேஜர், லெப்டினன் சொன்ன விஷயங்களுக்குச் சம்பந்தமில்லாத ஒரு வார்த்தையை வெகு அநாயாச மாகத் தூக்கிப் போட்டார்.

''தமிழ்ப் பொலிஸ் கான்ஸ்டபிள்களை 'இனத்து ரோகிகள்' ஒன்று ரகசியமாகச் சுட்டுக் கொன்று விட்டு, ஒன்றும் புரியாத அப்பாவி போல் தலைமறைவாக உலா வித்திரிந்த இன்பம் என்பவன், யாழ்ப்பாணப் பண்ணைக் கடல் பாலத்தடியில் அடையாளம் தெரியாதபடி கண்ட துண்டமாக வெட்டிப் பகிரங்கமாகக் கொலை செய்யப் பட்ட சம்பவம், உங்களில் எவனுக்காவது தெரியுமா?''

இந்தக் கேள்வியில் கிலிகொண்ட வாலிபர்கள் தாங்களே 'அந்தக் கொலையைப் புரிந்தவர்கள் என்ற தோரணையில் அசந்தே போய்விட்டார்கள். அவர்களின் மூளைகள் உண்மையில் கூழ் முட்டைபோல் கலங்கியிருக்க வேண்டும். ஒவ்வொருத் தரும் 'தறுதறு'த்து முழிசலானார் கள். தேகங்கள் குல்லிட்டுக்கொண்டன. ஒவ்வொருத்தன் உடம்பும் 'வெடவெட' வென்று அடித்துக் கொண்

டது. நனைந்த கோழிக்குஞ்சுகள் போல் தேகங்களில் நடுக்கம்.

'தெரியும்' என்றால் சங்கடம், 'தெரியாது' என்றால் வில்லங்கம், மௌனமாயிருந்தாலும் பொல்லாப்பு.

என்ன -- எதை— எப்படிச் சொல்வது?

பொறிக்குள் அகப்பட்ட எலிகள் நிலை.

குழப்பிய குட்டைக்குள் மீன் பிடிக்கிற ,தோரணையில் சார்ஜண்ட் ஒருவர் அடுத்தகணை தொடுத்தார்.

''இப்படித்தான் பெரும் பயங்கரவாதியான சிவ குமாரன் என்ற தறுதலைப்பயலும், எங்கள் தேடுதல் வேட்டையின் போது கூட்டாளிகளோடு வயல் வெளியில் அகப்பட்டான் அப்போது அவன் உங்களைப் போலவே எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லாமல் எதுவும் தெரியாத அப்பாவி போல் மௌனமாக இருந்தான். அவன் மனச் சாட்சி வேலை செய்யாதிருக்க வேண்டும். முகாமுக்குக் கொண்டு வர முதலே 'சையனட்'டை வாய்க்குள் திணித்துத் தற்கொலை செய்துகொண்டான். அப்படி அவன் செய்யாதிருந்தால் எங்கள் 'பேயினட்' தான் அவன் தொண்டைக்குள் செலுத்தப்பட்டிருக்கும். கடைசியில் அவன் சடலம் எரித்துத் தீய்க்கப்பட்ட சங்கதி தெரிந் திருக்கும் அல்லவா?''

இளைஞர்கள் என்புகள் நடுங்கின. அவர்கள் முகங்கள் குறாலி விட்டன.

சார்ஜண்ட் அடுத்த கணை தொடுத்தார்.

''சிவகுமாரன் பயங்கரவாதியல்ல, மாபெரும் தேச பக்தன். சிங்கள இராணுவ ரவுடிகள் பிடியிலிருந்து தப்ப முடியாது,என்று கண்டதும், 'கோழைகளால் மரணிக்கக் கூடாது எனத், தன்னைத்தானே அழித்துக் கொண்ட கர்மவீரன்' என்றே உங்கள் போன்றவர்களால்

சிவகுமாரன் நாமம் அர்ச்சிக்கப்படுகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள் அல்லவா?''

இந்தக் கேள்வியோடு அவர்கள் உயிருள்ள வெறும் சடலங்கள் போல் முகங்களைத் தொங்கப்போட்டுக் கொண்டு தேம்பி அழுகிற பாவனையில் நின்ற அவர்களின் பெற்ற தாய்மார்கள் பார்த்திருப்பின், அந்தத் தாய்கள் வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கதறிக் கொண்டே செத்துப் போவார்கள்.

ஒருவனாவது வாய் திறக்கிறதாய் இல்லை. விறும தடியன்களாட்டம் நிற்கிறார்கள். நடுச்சாமமாகி விட்டது. சுமார் மூன்று மணி நேரமாக விசாரித்தும் எந்தத் துப்பும் கிடைப்பதாயில்லை.

இந்தக் கட்டத்தில் விசாரணை நிறுத்தப்பட்டு விசயம் என் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட போது நான் சொன்னேன்:

''எங்களுக்குத் தேவையான விபரங்கள் கிடைக்கிற வரை இதே தோரணையில்— இதே உத்தியில் 'இறுக்கமான விசாரிப்பு' நடக்கட்டும். கைகூடாத பட்சத்தில் அடுத்த கட்டத்தைப் பிரயோகிக்கலாம்.'

மகுடி வித்தைக்காரன் போல் லெப்டினன் நமட்டிச் சிரித்துக் கொண்டு சார்ஜன்ட் மேஜர்களுக்கு, கண் ஜாடை காட்டினார்.

எதிர் அறைக்கதவு திறக்கப்பட்டது.

நான் 'சிகரட்' ஒன்றை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டு சற்றுத்தள்ளி அமர்ந்து கவனித்தேன்,

சார்ஜன்ட் உரத்துக் கத்தினார் :

''அடோ பண்டிப்பயல்களே, உள்ளே நடவுங்கோடா''

உள்ளே காலடி வைக்கிறபோது ரத்த வெடில் மூக்குத் துவாரங்களைத் துளைத்தது. தலை சுற்றி மயக்கம்

வருவது போல் சுவர் ஏகலும் சிலும்பல் கோடுகளாய் கிடக்கின்றன. வதை படலத்தின் சின்னங்கள் இரத்தச் சுவடுகளான விறுத்தத்தை இவர்கள் ஏறெடுத்துப் பார்த்த போதே இவர்களிடம் சூல் கொண்ட ஏக்கம் இவர்கள் முகங்களில் தேங்கியதை அவதானிக்க முடிந்தது. எவன் உடம்பிலும் நடக்க வலுவில்லை. சித்தப்பிரமை இவர்களை ஆட்கொண்டு விட்டதாகத் தெரிகிறது. ஒருவனை ஒருவன் தேம்பி அழுகிறதான முகபாவம். மன்னைகள் வீங்கிவிட்டன. இத்தனைக்கும் எங்களில் ஒரு இராணுவ வீரனாவது அவர்கள் மேனிகளில் கை வைத்ததில்லை.

அறையை மருவிய சதுப்பு ஓடைப்பக்கம் இவர்கள் கவனம் செலுத்தப்பட்டது.

அந்த ஓடைகளுக்குள் இருந்துதான் பிணவாடையின் நெடிலடிக்கும்.

எங்கள் இராணுவ வீரர்களின் தொடர்ச்சியான சித்திரவதையின் போது இறந்து போகிற சடலங்களை எரிக்கும் வரை, சதுப்பான இந்த ஒடிந்துபோன ஓடைகளுக்குள்தான் ஒதுக்கி வைப்பேம். அந்தர பவனியில் வேகமாகச் செயற்படுகின்ற போது விடுபட்டுப் போகிற சடலங்கள் இற்று நாறி ஈற்றில் எலும்புக் கூடுகளாகவே மிஞ்சி விடுவதுமுண்டு அந்த எலும்புக் கூடுகளையும் நாம் விட்டு வைப்பதில்லை. தேவைப்படும் போது விசாரணைகளில் பக்குவமாகக் கையாள்வோம்.

அறைக்கூடாக நடைபவனி தொடங்கியது.

இனி எங்கள் விசாரணையை நாங்கள் நினைத்தபடி சுலபமாக நடத்த இந்த இரத்தப் பீறல்கள்—சித்திரவதைக் கூடங்கள்—எலும்புக்கூடுகள்—என்கிற இந்த திகிற் காட்சிகள் போதும்.

இந்தப் பயங்கரக் கோலங்களைக் கண்ட மாத்திரத்தில் இவர்கள் சித்தங்கலங்கிப் பித்தர்களாகி பிதற்றுவார்

கள் என்று வள்ளீசாகத் தெரிந்தும், ஒன்றையும் காட்டிக் கொள்ளாத முகபாவனையில் மிகச்சாதரணமாகவே சார்ஜன்ட் மேஜர் இவர்களைப் பார்த்து அனுதாபப்படு பவர் போல் பாசாங்காகக் கூறுகின்றார்.

''நன்றாகக் கவனியுங்கள். இப்பொழுது உங்கள் உயிர் உங்களில் அல்ல; நீங்கள் சொல்லுகிற உண்மையில் தான் தங்கியிருக்கிறது. எப்போதும் உண்மைக்கு அழி வில்லை. அதற்குத்தான் உண்மையான விலையுண்டு. ஒரு மனிதன் இறக்கும் வரை அவன் உயிர் எப்படி விலை மதிக்க முடியாததோ அப்படித்தான் அவன் கூறும் உண்மையும் மகத்தானது. மகாத்மா காந்தி எப்போதும் உண்மையைக் கடைப்பிடித்தபடியால்தான் உலக சாம்ராஜ்யத் தலைவரான ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர் கூட எழுந்து நின்று மரியாதை செய்தார். எங்கள் மரியாதையை நீங்கள் பெறவேணடுமா னால் உண்மையைக் கூறவேண்டும். அவ்வளவுதான். அதைவிட மவுனமாயிருந்து 'அப்பாவியாகத் தப்பிவிட லாம்' என்று நினைத்தவர்கள் அனேகமாக உயிரோடு தப்பியதே இல்லை. அப்படிப்பட்டவர்களுக்கு நடந்த கதி எப்படியாயிற்று என்பதை இந்த இடங்கள் உங்களுக்குப் புலப்படுத்தியிருக்கும். ஆகையால், சுணங்காமல் ஒழுங் காக மறுமொழி சொல்ல வேண்டும்''

எளிமையான வார்த்தைகளில் நிதானமாக எடுத்துக் கூறியும் சார்ஜான்ட் மேஜர் முயற்சி பலித்ததாக இல்லை. தோற்றுப் போன வெக்காளத்தில் அவர் முகம் சிவந்து விட்டது. பக்கத்தில் நின்ற லெப்டினன் காதோடு ஏதோ முறையிட்டார். நாடகக் கொட்டகையில் சீன் விழுந்தது போலாயிற்று.

கண்மின்னி விழிப்பதற்குள் ஒன்றையொன்று பிணைந்த இரண்டு பெரிய மலைப்பாம்புகள் இவர்கள்

எதிரே எப்படித் தோன்றின என்று இவர்களால் யூகிக்கவே முடியவில்லை

அந்த அறையைச் சுட்டிக்காட்டி லெப்டினன் சொன்னார்:

''83 ஜூலை 23ம் திகதி பயங்கரவாதிகள் திண்ணவேலிச் சந்தியில் கண்ணிவெடி வைத்து 13 இராணுவவீரர்களை ஒரு நொடியில் படுகொலை செய்த போது நீங்கள் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்துக் கும்மாளம் அடித்திருப்பீர்கள். அப்படிப்பட்ட உங்களுக்கு அந்தப் பயங்கரவாதிகள் யார், எந்த ஊர் எங்கே மறைந்திருக்கின்றார்கள், அவர்கள் காம்புகள் எங்கெங்கே இருக்கின்றன யாவும் உங்களுக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்க வேண்டும். இராணுவ வீரர்கள் கொல்லப்பட்ட போது நீங்கள் அடைந்த குதூகலமோ, பயங்கரவாதிகள் மறைவிடங்களைத் தெரிந்து வைத்திருப்பதோ தண்டனைக்குரிய குற்றமாகக் கருத முடியாது. அது இயல்பான தன்மைகள். ஆனால், இவற்றையெல்லாம் வெளியிடாமல் மறைத்து வைத்திருப்பதுதான் குற்றம். இப்படியான குற்றம் புரிகிறவர்களுக்குச் சட்டப்படி என்ன தண்டனை வழங்கப்படும் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். இந்தக் குற்றவாளிகளுக்கு ஆகக் குறைந்தது 20 வருஷ காலச் சிறைத் தண்டனை அல்லது தூக்குத்தண்டனையும் கிடைக்கலாம். ஆனால், நீங்களோ, நிரபராதிகள். அந்தத் தண்டனைகளிலிருந்து உங்களைக் காப்பாற்றவே உங்களிடம் 'உண்மைகளைக் கூறுங்கள்' என்று கேட்கிறோம். இனியும் மவுனம் சாதித்தீர்களானால் அந்த மவுனத்தைக் கலைக்க நாங்கள் முனைவதற்குள் இதோ இந்த மலைப்பாம்புகள் உங்கள் மவுனத்தைக் கலைத்து விட நேரிடும் மரணத்தை விட விஷம் எவ்வளவு கொடியது என்பதைப் புரிந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்...''

இந்தக் கட்டத்தில் வரிசையில் நின்ற ஒரு தடித்த வாலிபன் 'பொத்'தென்று கீழே விழுந்தான். அவன்

கண்கள் மேலே செருகி விட்டன. மூக்கு நுனியில் கை வைத்துப் பார்த்த போது மூச்சு இழுபட்டுக் கொண்டிருந்தது, மயக்கம் தெளியவில்லை. முகத்தில் தேக்கிய வியர்வை நெய்யாக வழிந்து கொண்டிருந்தது.

கிருதா மீசை வைத்த இன்னொரு வாலிபன். இவன் தான் கைது செய்யப்பட்டவர்களில் சற்று வாட்ட சாட்டமாக இருந்தான். திரண்ட தோற் புயங்களிலிருந்து இவன் கராட்டிக்காரனாக இருக்க வேண்டும். இவன் இறக்கப் போகும் தருவாயில் கண்களை உருட்டுகிற ஜடம் போல் பரிதாபமாக மிரண்டு பார்த்துக் கைகளைப் பிணைந்து கொண்டு, 'ஒண்டுக்கு வருகுது' என்று திமிறிக் கூறினான். நன்றாகப் பயந்து போனான்.

உடற்கூறுகளை விஞ்ஞான முறைப்படி கற்றவர்களுக்கு இதன் தார்ப்பரியம் புரியக் கூடியதே. குளிர் உடம்பைத் தாக்கித் தாவும் போது மூத்திரப்பை சுரந்து சிறுநீர் கழிவதும், பயபீதி தாக்கும் போது குடலைக் கலக்கி கொண்டு மலம் நுளுந்துவதும் இயல்பான அவஸ்தைகள். இவன் இந்த அவஸ்தைக்கு ஆளாகி உடம்பு திணறுவதைப் புரிந்து கொண்ட லெப்டினன் சிரித்துக் கொண்டு, ஒரு பால்'டின்'னை எடுத்துக் கொடுத்து, 'இதிலே மொண்டு, அடுத்தவனிடம் கொடு. அவன் அதைக் குடிக்கட்டும்'' என்றார்.

## 5

இந்தக் கிருத்தியம் வெகு நுட்பமாகக் கையாளப் பட்டது.

இதன் பின் நிகழ்ந்த சம்பவங்கள் என் கவனத்திற்கு, மறுநாள் கொண்டு வரப்பட்டது.

''மலைப் பாம்புகளின் விஷப்பற்களை நாம் எப்படிப் பிடுங்கி வைத்திருக்கிறோமோ அது போலவே

இந்த வாலிபர்களின் வாக்குமூலங்களையும் நாம் விரும்பிய படி எடுத்துக்கொண்டோம்'' என்று லெப்டினன் என்னிடம் கூறினார்.

ஆனால், ஒரு அபத்தம். இந்தப் பேர் வழிகளில் ஏழு நபர்கள் குற்றுயிராக்கப்பட்டனர். மூன்றாம் நாள் ஏழு பேரும் இறந்தே போனார்கள். இறந்து போன சடலங் களை எரித்துக் கடலுக்குள் அல்லது காட்டுப் பற்றைக்குள் போட்டு விடுவதே வழக்கம். அன்று இதற்கு அவகாசம் இருக்கவில்லை. ஆதலால், இந்தச் சடலங்களைப் பெற்றோல் ஊற்றி எரித்து உருக்குலைத்துச் சாம்பல் மேட்டிலேயே விட்டுவிடுவோம்.

'அந்த ஏழு இளைஞர்களும் எங்களால் விடுதலை' செய்யப்பட்டார்கள் என்று மறுநாள் அவ்வட்டார அரச அதிபருக்கு அறிக்கை சமர்ப்பித்ததோடு அவர்கள், பற்றிய அன்றைய விசாரணையை முடித்துக்கொண்டோம்.

அவர்கள் விவகாரம் அதோடு சரி.

மகானம் பொருந்திய அதிபரே,

இற்றை நாள் வரை இது போன்ற கணக்கற்ற சம்பவங்கள் இதனிலும் மோசமாக அன்றாடம் நிகழ்ந்த ஆயிரத்திற்கு மேற்பட்ட விசாரணைகளின் அறிக்கைகளை அவ்வப்போது தங்கள் சமூகத்திற்குச் சமர்ப்பித்திருந்தேனல்லவா? அவற்றில் ஒன்றுகூட நேர்மையாக — உண்மையாக — சத்தியவாக்காக — நீதியாகப் பெறப்பட்டவையல்ல என்பதை, நாம் கையாண்ட உத்திமுறைப்படி தாங்கள் புரிந்துகொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

'நெருப்பில்லாமல் புகை மூளாது' என்பது எவ்வளவு உண்மையோ, அதுபோன்றே புகை மூள்வதற்காகவே நெருப்பை மூட்டுவதும் அதைவிட உண்மை எங்கள் உண்மை இரண்டாவது வகையைச் சேர்ந்தது 'சும்மா

கிடந்த சங்கை ஊதிக் கெடுத்த ஆண்டி' கதை கேள்விப் பட்டிருப்பீர்கள். எங்கள் நாட்டின் கதையும் அப்படித் தான். எங்கள் அறிக்கைகள்தான் உண்மையே தவிர, அவற்றில் பொதிந்துள்ள சம்பவங்கள் அனைத்தும் புனையப்பட்டவையே. மதியூகியான தாங்கள் இதனைப் புரிந்துகொள்வீர்கள்.

இதற்குச் சான்றாக மேலும் பல முக்கிய சம்பவங் களைக் குறிப்பிடலாம். அதற்குமுன் இந்த நாட்டின் உண்மையான அரசியல் சமூக பொருளாதார வரலாற் றினை ஒரு தடவை நேர்மையாக அலசித் தங்கள் கவனத்துக்குக் காண்டு வந்தபின் தற்போதுள்ள பயங்கரவாத நடவடிக்கைளின்போது எங்கள் விசாரணை களையும் நாங்கள் கடமையாற்றிய முறைகளையும் விவரிக்கலாமெனக் கருதுகிறேன்.

அன்புள்ள அதிபரே,

எங்கள் நாட்டு அரசியல் வரலாறு முதலாளித்துவத் தின் நலன் பேணப் படுவதற்காகத் திரித்து எழுதப்பட்டி ருப்பதனை நீங்களும் உணர்வீர்கள். இத்தனை அனர்த்தங் களுக்கும் இதுவும் முக்கியகாரணம் என்றே கருதுகின்றேன் டல்லாண்டுகாலமாக போத்துக்கீஸ்,ஒல்லாந்து தேசங்களின் மேலாதிக்கத்தைத் தொடர்ந்து பிரிட்டிஷ் சக்ராதிபத்தி யத்தின் கலோனிய ஆதிக்கத்தில் சிக்குண்டு அடிமைப் பட்டிருந்த இலங்கையில், இன்று வரை அதன் அரச பீட அதிகாரம் சுரண்டும் கொடிய முதலாளித்துவ அமைப்புக் குள் சிக்குண்டு தவிக்கிறதேயன்றி, புதிய சோஷலிச சமுதாய அமைப்புக்கான நல்ல வாய்ப்பினைப் பெறாமலே இருந்து வருகின்றது. இந்த வாய்ப்பை எங்கள் நாட்டி லுள்ள மத இன குல ஜாதி வெறியர்கள் தடுத்து வந்தார் கள் என்பதற்கும், அதற்குத் தங்கள் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி இடை விடாமல் எப்போதும் தூபம் இட்டு வந்தது என்பதற்கும் எத்தனையோ சான்றாதாரங்களடங்கிய சம்பவங்களுண்டு. அவற்றை

இந்த நிருபத்தில் இடையிடையே சுட்டிக்காட்டச் சித்தங் கொண்டிருப்பதால் முக்கிய தரவுகளை மட்டும் குறிப்பிடுகிறேன்.

'இலங்கை ஒரு முதலாளித்துவ அமைப்பைக் கொண்டது' என்று சொல்வதற்கும் இதன் மூல வளங்கள் இல்லை. உண்மையில் இலங்கை ஒரு தரகு முதலாளித்துவ வளர்ச்சியின் உற்பத்தி முறைகளைக் கூடக் கொண்டிருக்கவில்லை. சிங்கப்பூர் மலேசியா போன்ற நாடுகளைப் போல் இதுவும் முதலாளித்துவத்தின் சந்தைக்கூடாரமாகவே இன்றும் விளங்குகின்றது.

இத்தகைய தரகு முதலாளித்துவ அமைப்பைக் கொண்ட இலங்கையின் வரலாறு எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டார நாயக்கா ஸ்தாபித்த சுதந்திரக் கட்சியின் தலைமையில் 1956லே ஒரு 'தேசிய மறுமலர்ச்சி'யினூடாக, கம்யூனிஸ்டுகள்-சமசமாஜிஸ்டுகள் ஆகிய இடதுசாரிகள் அடங்கிய முற்போக்குச் சக்திகளின் துணையோடு திசை திருப்பப்பட்டு, சோஷலிஸ அமைப்புக்கு இட்டுச்செல்லஅத்திவாரமிடப்பட்டது. அந்த அத்திவாரங்கூடச் சரியான பரிணாமம் பெறுமுன்பே பிற்போக்கு இனவாத மதவாத-வகுப்புவாத நாசகாரர்களால் பின்னுக்குத் தள்ளப்பட்டு மீண்டும் 1877ல் ஏகாதிபத்திய முதலாளித்துவ அமைப்புக்குள் சிக்குண்டு தவிக்கிறது இந்த இடைப்பட்ட காலத்தில் முதலாளித்துவ வாதிகளால் கட்டவிழ்த்து விடப்பட்ட அராஜகிகள் பண்டார நாயக்கா அரசைக்கவிழ்த்துவிடக் கங்கணங் கட்டி 1958ல் இனக்கலவரத்தை நடத்தியதையும், அது வெற்றிபெற முடியாமற்போகவே பௌத்த வேஷமிட்டே பட்டப் பகலில் அவரைச் சுட்டுப் படுகொலை செய்ததையும் முழுஉலகமே அறியும் 'பண்டாரநாயக்கா செல்வநாயகம் ஒப்பந்தத்தை' எதிர்த்துத்— தங்கள் தலைமையில் கண்டியாத்திரை நிகழ்ந்ததே. அதற்கும் இந்தக் கொலைக்கும் முடிச்சுப் போடுவது என் நோக்கமல்ல. அதனைத்

தங்கள் மேலான மனச் சாட்சிக்கே விட்டுவிடுகிறேன். ஆனால், உண்மைகள் அழிவதில்லையல்லவா? 'சத்தியம் வெல்லும்' என்ற காந்திஜியின் உயிரைப் பலி எடுத்த லாதுராம் கோட்ஷேயினால் சத்தியம் தோற்றதும் இல்லை' என்பதை நீங்கள் உணர்வீர்கள் என்று நம்புகிறேன். உண்மையை அதன் சத்திய நெறியோடு நோக்குவதாயின் இலங்கை அரசாங்கங்களில் வரலாறு காணாத மிகப் பயங்கரமான ஏகாதிபத்திய முதலாளித்துவத்தின் கொடிய கரங்கள் பதிந்த நமது நாடு 1967 தாங்கள் தலைமை ஏற்றதிலிருந்து 'ரத்தக் களரி' யாக மாறிவிட்ட சோக வரலாற்றைக் கண்டதே. அதுவே இன்றைய கட்டமாகும். முதலாளித்துவ அமைப்பில் வழக்கம் போலவே தனி மனித வழிபாடும் வீர தீர சாகசங்களும், தன்னாதிக்க முறைமைகளும் தன்னிச்சாபூர்வக் கலை கலாச்சாரங்களும் விதந்து போற்றப்படுவது இயல்பேயாயினும். உண்மையில் அவை சரியான வரலாற்றினை நிர்ணயிக்கும் வர்க்க சக்தி' களாயிருப்பதில்லை. 'வர்க்கப் போராட்டங்களின் நிகழ்வுகளே வரலாறாகின்றன, என்னும் மெஞ்ஞானத்தினூடாக உணர்ந்துகொள்ளும் ஒருவருக்கு இதன் தாற்பரியம் புரியக் கூடியதே. இதன் உண்மையான அர்த்தம், எந்தவோர் செயற்பாடோ அல்லதுநிகழ்வோ எப்போதும் 'வர்க்க அணி' சார்ந்திருப்பதேயாகும்.வர்க்கப் போராட்டமில்லாமல் சமுதாய மாற்றங்கள் ஏற்படுவதில்லை. புதிய சமுதாயங்களோ சமுதாய மாற்றங்களோ எந்த நாட்டிலாவது வர்க்கப் போராட்டங்களினால் தோற்றம் பெற்றனவேயன்றி தனி மனிதர்களின் வீர தீர சாகஸங்களாலல்ல. பண்டாரநாயக்காவின் படுகொலையால் செயலற்றுப் போயிருந்த அவர் கட்சி பலப்படுத்தப்பட்டதே தவிர ஒரு சமுதாய மாற்றம் பரிணாமமாக நிகழவில்லை. தங்கள் தலைமையில் மீண்டும் இழுத்து விட்ட ரப்பர் விசைந்து வந்ததுபோல் பழைய ஏகாதிபத்தியக் கரங்கள் பலப்பட்டதேயன்றி, புதிய

சமுதாய அமைப்புத் தோன்றவில்லை. இதன் உண்மையான காரணம், இன்னும் இலங்கையில் ஒரு வர்க்கப் போராட்டம் நிகழவில்லை. அப்படி நிகழ்வதற்கு இன மத குலவாதிகள் விடவில்லை என்பதேயாகும்.

'இரண்டு கமுகமரத்தில் அமிர்தலிங்கத்தின் கால்களைக் கட்டி அவர் உடலை இரண்டாகக் கிழிக்க வேண்டும்' என்று நெவில்பர்ணாண்டோ கக்கிய விஷமும் அத்தகையதே. 'தமிழன் தோலை உரித்துச் செருப்புத்தைக்கவேண்டும்' என்று வகுப்புவாதம் கக்கிய கே எம். பி ராஜரத்தினாவும் உங்களுடன் இணைந்துள்ளதை அவதானிப்பீர்கள். 'சிங்கள நாய்கள்—சிங்களவரின் முதுகுத்தோலை உரித்துத் தமிழன் காலில் போட்டு நடக்க வேண்டும்' என்று அமிர்தலிங்கம் மங்கயர்க்கரசி கக்கிய இனவாதமும் கே. எம். பி. ராஜரத்தினா கக்கிய இனவாதத்திற்கும் உள்ள சுருதி ஒன்றே என்பதைத் தாங்களும் அறிவீர்கள். இனவாத சக்திகளை இனம் காட்டவும், தாங்கள் இவற்றுக்குத் துணை போன விறுத்தத்தைச் சுட்டவுமே உதாரணத்திற்கு அவற்றை நினைவுபடுத்தினேன். தனிப்பட்ட ஒரு மனிதனை அழிப்பதாலோ அல்லது ஒரு இனத்தை தூசிப்பதாலோ புகழராம் பாடி உயர்த்திவிடுவதாலோ சமுதாய மாற்றங்கள் ஏற்படுவதில்லை என்பதையும், அவை அராஜகத்திற்கே வழிகோலும் என்பதையும் தாங்கள் அறிவீர்கள்.

புராதன ஆதிப் பொதுவுடமைச் சமுதாயத்திலிருந்து அடிமைச் சமுதாயம் தோன்றியதும் அடிமைச் சமுதாயத்திலிருந்து பிரபுத்துவ சமுதாயம் தோன்றியதும் பிரபுத்துவ சமுதாயத்திலிருந்து முதலாளித்துவ சமுதாயம் தோன்றியதும், முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து சோஷலிஸ சமுதாய அமைப்புத் தோன்றியதும் தனிப்பட்ட மனிதர்களின் அழிவிலோ, அழிப்பிலோ, புகழாரத்திலோ, வீர தீர சாகஸக் கோஷங்களாலோ அல்ல. இவ்வாறான ஒன்றுக்கொன்று முரண்பட்ட சமுதாய

அமைப்புக்கள், அந்தந்தச் சமுதாய மாற்றத்துக்கான 'வர்க்கப் போராட்டங்'களாலேயே நிர்ணயிக்கப் பட்டன. ஒவ்வொரு நாடுகளில் நிகழும் அரசியற் போராட்டங்களும் இத்தகையதே. ஏன், நமது கிராமங் களில் சாதாரண மக்களுக்குள் நிகழும் சிறு சிறு சச்சரவு களும் சண்டைகளும் இருகன்னையான முரண்பாடுகளா லேயே உண்டாகின்றன என்பதைஅவதானித்திருப்பீர்கள்

சமுதாயம் மாற்றங்களுக்காக நிகழ்ந்தபோராட்டங் கள் அனந்தம் இவற்றில் எந்த வர்க்கம் நீதியானது எந்த வர்க்கம் அநீதியானது என்று தாங்கள் அறிவீர்கள் என்பதையும் நான் உணர்வேன். தங்கள் மனச் சாட்சி எப்பவோ தங்கள் வசம் இல்லாமல் போய்விட்டதால் அந்த உண்மையைக்கூட மறைத்து வருகிறீர்கள். உலகில் இன்று முதலாளித்துவ சமுதயாயம், சோஷலிஸ சமுதாய அமைப்பு என இரண்டு மூகாம்களின் போராட்ட மையத் தில் மனிதகுலம் வாழ்ந்துகொண்டிருக்கிறது. முதலாளித் துவ சமுதாய அமைப்புக்கு அமெரிக்க ஆளும் வர்க்க ஏகாதிபத்தியமும், சோஷலிஸ சமுதாய அமைப்புக்கு மூன்றாம் உலக நாடுகளும் தலைமை தாங்குகின்றன என்பதைத் தாங்கள் அறிந்ததே சோஷலிஸ சமுதாய அமைப்பு வளர்ச்சிக்கு இன்னும் நீண்டகாலப்போராட்டம் நடத்தவேண்டும் என்பது என் கருத்து, இதனை இன்னோர் கட்டத்தில் ஆதாரத்தோடு விவரிக்க எண்ணு கிறேன். இவ்விரண்டு முரண்பட்ட அமைம்புகளில் எந்த வர்க்கத்தைச் சார்ந்த தலமை நீதியான நேர்மையானது என்பதை மனித குலம் அன்றாடம் தரிசித்துக்கொண்டி ருக்கிறது. உலகமெங்கும் முதலாளித்துவங்களால் சுரண்டப்படுகின்ற அடக்கப்படுகின்ற ஒடுக்கப்படுகின்ற, கொடுமைப் படுத்தப் படுகின்ற தாழ்த்தப்படுத்தப் படுகின்ற, உரிமை மறுக்கப்படுகின்ற மக்கள் அதே சுரண்டலிலிருந்து, அடக்குமுறையிலிருது, ஒடுக்கப் படுவதிலிருந்து, கொடுமைப்படுத்தலிலிருந்து, தாழ்த் தப்படுத்தலிலிருந்து, உரிமை மறுக்கப்படுதலிலிருந்து

தங்களை முற்றாக விடுவித்துக்கொள்ளவும் சுதந்திர ஜீவிகளாக-சமத்துவமாக வாழவும் சோஷலிஸ சமுதாய அமைப்பை நாடியே விரைகின்றார்கள்.

எந்தவொரு முனைப்போ போராட்டமோ அது அரசியலாயினும் வரலாறாயினும், கலை இலக்கியமாயினும் 'வர்க்கம் சார்ந்தே' நிகழ்கின்றது என்ற உண்மையை அழுத்தவே இவற்றைக் குறிப்பிட்டேன். பிசகற்ற இந்தக் கண்ணோட்டத்தோடு எங்கள் நாட்டு வரலாறு எழுதப் பட்டிருந்தால் இந்த நாசங்கள் சம்பவித்திருக்கவே மாட்டா.

மக்களின் பாரம்பரியம், பண்பாடு, கலை இலக்கியம் கலசாரம், அரசியல், சமுதாயப் பிரச்சினை ஆகிய துறைகளில் எந்தத் தகுதியோ திறமையே ஆளுமையோ சரியான கண்ணோட்டமோ இல்லாமல் 'பண நாயகம்' என்ற வாய்விடாச் சாதியை மட்டும் வரித்துக்கொண்ட ஒருவர், முதலாளித்துவ சமுதாய அமைப்பில் மிகச் சுலபமாகவே சகல துறை சார்ந்த சாதனையாளராகவும். தகுதியுள்ளவராகவும், பலே கெட்டிக்காரராகவும் சகலகலாவல்லவன் போல் வேஷம் போடமுடியும்.

இந்த வேஷங்களே இங்கே பொதுவாகப் பரவியுள்ளன. இத்தகையே அருவருப்பான வேஷங்களுக்கு இந்த முதளாளித்துவ அமைப்பு ஒரு வரப்பிரசாதமான வாய்ப்பாகும். இதனால்தான் உலக மக்கள் பெரும்பாலும் புத்தி சுவாதீனமிழந்து அன்றாடம் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். விசனிக்கத்தக்க விஷயம் என்னவென்றால், இந்தப் பணநாயக வாதிகளைச் சார்ந்து அண்டிப் பிழைப்போர் பலர் தம்மிற் தகுதி, திறமை, வீரம், ஆளுமை ஆகிய அம்சங்களைக்கொண்டிருந்தும் முதலாளித்துவங்களின் துதிபாடுவதன்மூலம் தங்களையே திறமையற்றவர்களாக்கியும் தகமையற்றவர்களாக்கியும் கொள்வதுதான். இந்த நிலை சமுதாயத்தில் மட்டுமல்ல, கலை இலக்கிய அரசியற் களத்திலும் ஒரு சாபக்கேடாக

வுள்ளது. இந்தச் சீரழிவுகளும் நாசங்களும் தொடர்ந்து கொண்டிருப்பதற்கும் இந்த முதலாளித்துவ அமைப்பே காரணமாகும்.

நவீன இயந்திர சாதனங்களற்ற அந்தக் காலத்தில் திரித்துக் கூறப்பட்ட வரலாறுகளைச் சாதனையாகக் கொண்டு பெருமிதமடைந்த நம்மவர்கள், நமது இலங்கைத் தீவில் 1958 ம் ஆண்டு தொடக்கம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரை கப்பல் ஏறிய இனமாகி விட்ட சோகமான அசிங்க வரலாற்றை எப்படி அழைப்பது? இன்று நமது மக்கள் திக்குத் திசை தெரியாமல் கடலில் தத்தளிக்கும் மரக்கலங்கள் போல் நாடெங்கும் அகதிகளாக அலைகிறார்கள். இதனை நம்பிக்கையூட்டும் சோக முடிவாகவோ, அன்றேல் சோகமாகிவிட்ட நம்பிக்கையூட்டும் சாதனையாகவோ கொள்ளலாமா? சாதனை என்று எது கருதப்படுகிறதோ அது குறித்த சாதனை சமுதாய முன்னேற்றத்துக்கு மாற்றத்துக்கு எவ்வாறு பங்களித்தது என்பதைப் பொறுத்தே அதற்குச் சரியான அர்த்தம் உண்டாகிறது ஆனால் தங்கள் சாதனை மக்களின் அழிவு நாசங்களாகவிருக்கும்போது இதற்கு எப்படிச் சரியான அர்த்தம் கொடுக்க முடியும்?

மகாகனம் பொருந்திய அதிபரே.

இப்படி நான் தொடுக்கின்ற கேள்விக் கணைகளுக்காக என்னை மன்னியுங்கள். ஆனால், சக்தி வாய்ந்த திறமையான ஓர் உழைப்பாளியின் சாதனை சமுதாயத்தோடு பலவந்தமின்றி இயல்பாகவே சம்மந்தபடாவிடின் அவன் சாதனைக்கு எந்தவித அர்த்தமும் இல்லையல்லவா? அப்படித்தான் தங்கள் சாதனைகள் அனைத்தும் மக்கள் மட்டில் பலவந்தப்பட்டிருப்பதால் அவை இலவம் பஞ்சாகி விட்டன. தங்களால் நான் மட்டுமல்ல, நமது படை வீரர்களும் ஏன், முழுசனங்களும் இலவுக்காத்த கிளிகளாகி விட்டோம் என்பதை மிகத் துயரத்துடன் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருவதில் சற்று மன நிம்மதியடைகிறேன்.

# 6

மகியரே, வரலாறுகளை எப்போதும் கற்பனைக்கு இடமில்லாமலும் மெருகூட்டாமலும் சித்தரிக்கவேண்டும். ஆனால், ''மகாவம்சம்'' என்ற பௌத்த சாஸன நூலையும் இலங்கையில் பல வரலாற்றாசிரியர்கள் அதனைத் தழுவி எழுதிய நூல்களையும் பார்த்தால் அவை எப்படியெல்லாம் திரித்து எழுதப்பட்டுள்ளன என்பதுபுலனாகும். இந்தப் பொய்மைகளே இலங்கை இனக்கலவரங்களுக்குத் துணைபோயிருக்கின்றன. இலங்கை வரலாற்றாசிரியர்கள் மட்டுமல்ல சில இந்திய வரலாற்றாசிரியர்களும் இந்தப் புரட்டுக்களைச் செய்திருக்கிறார்கள். அதன் காரணமாகவே இந்தியாவிலும் வகுப்புவாத நெருப்பு இன்னும் எரிந்துகொண்டிருக்கிறது. இன்றைய இலங்கை அரசியல் வரலாற்றைக் குறிப்பிட்டு வந்த நூல்கள் பெரும்பாலும் அவ்வாறு விதந்தும் திரித்தும் புரட்டியுமே வெளிவந்துள்ளன. இந்த நூல்களுக்குச் சற்று வித்தியாசமான குறிப்புகளைக் கொண்டு இலங்கையாளர் குமாரி ஜயவர்தனா வெளியிட்ட 'இலங்கையின் இனவர்க்க முரண்பாடுகள்' என்ற வரலாற்று நூலில் பல நல்ல தரவுகள் தரப்பட்டபோதும். அவர் சரியான சமுதாயக் கண்ணோட்டத்தில் குறிப்பிடத் தவறிவிட்டார். இதனால், அதிற் சரியான கணிப்பீட்டைக் காணமுடியவில்லை. இருந்தும் அவர் நம்மைப்போல் ஓர் சிங்கள பௌத்தரா யிருந்தும் 'சிங்கள பௌத்த பேரினவாதத்தால் தமிழினம் சொல்லொணாக் கொடுமைகளுக்களாயிற்று' என்ற அவர் தம் கருத்தோட்டம் ஒரு கன்னையாயினும் அது மனங் கொள்ளத்தக்கதே. ஆனால், அந்தப் பேரினவாதம் எந்த வர்க்கத்தின் 'ஆயுதம்' என்பதையோ, 'எந்த வர்க்கம் அந்தப் பயங்கர ஆயுதத்தை எடுத்துப் பயன்படுத்தியது, — பயன்படுத்துகிறது' என்பதையோ அவர் சரியாகக் கணிக்கமுடியாமல் விட்டமை விசனிக்கத்

தக்கதே. அவர் அப்படிப் புலப்படுத்தியிருப்பின் அந்நூல் மிகப் பயனுள்ளதாக அமைந்திருக்கும். ஆயினும், அவர் ஓர் மானிடநேயமுள்ள முழுமையான நற்பிரஜை என்பதைக்காணும் போது, என் மனசு துவண்டுபோன இந்த வேளையிலும் குதூகலிக்கிறது.

சொற்ப காலமாக இலங்கை அரசியல் வரலாறுபற்றி வந்த ஏனைய பெரும்பாலான நூல்களும் வெளியீடுகளும் 'நாற்பது ஆண்டுகளாகத் தமிழினம் சிங்கள இனத்தினரால் உரிமை மறுக்கப்பட்டு வந்துள்ளது' என்றும்' 'தமிழ்த் தலைவர்களோடு செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் கிழித்து எறியப்பட்டன' என்றும், 'சிங்கள இனம் தமிழ் இனத்தின் எதிரி' என்றும் பொதுவான ஓர் பகை உணர்ச்சியை ஊட்டி உண்மையான வரலாற்றையே முற்றாகத் திரித்துப் புரட்டிவிட்டன. அது போன்றே, 'தமிழர்கள் இந்தியாவிலிருந்து படையெடுத்து வந்து சிங்கள இனத்தையே அழித்துவிடப்போகிறார்கள்' என்றும், 'நாட்டைத் துண்டு போட்டுச் சிங்கள இனத்தை வேட்டையாடப்போகிறார்கள்' என்றும் ஒரு பேரின-சிற்றினவாத உணர்வை ஊட்டி ஒரு பொய்மையான வழி காட்டி விட்டுள்ளன. 'இதோ சிங்களவர் வவுனியாவைத் தாண்டிவிட்டார்கள். இந்த அபாயத்தைத் தடுத்து நிறுத்த வேண்டுமானால் போடு புள்ளடி தமிழரசுக் கட்சிக்கு' என்ற இன உணர்ச்சியை வெகு இலகுவாகத் தட்டி எழுப்பி விட்டு மிகச் சுளுவாகப் பாராளுமன்றம் சென்ற முதலாளித்துவத் தலைமையின் கோடையிடியான மேடைப்பேச்சுக்கள் நினைவுக்கு வருகின்றன. இதே பாணியில் இதே சுருதியில் தெற்கேயுள்ள இவர்களின் 'சிங்களக் கூட்டாளி'களின் 'பௌத்த பேரினவாத' முழக்கங்கள் மேடைகள் தோறும் இடிமுழக்கங்களாகிய விறுத்தங்களும் 'தார்பூசித் தமிழ் அழித்த' சிங்கங்களும், அதேபோன்று, 'சிங்களம் அழித்துச் சிறை சென்ற' செம்மல்களும் மனக்கண்ணில் நிழலாடுகின்றன. யதார்த்த

பூர்வமான உண்மை யாதெனில், பொன்னம்பலம் ராமநாதன், டி. எஸ். சேனநாயக்கா காலத்திலிருந்து இன்றையவரையிலான இலங்கை அரசியல் வரலாறு 'சிங்கள தமிழ் முதலாளித்துவக் கூட்டுத்தலைமை'க்கும், தேசிய வாதத் தலைமைக்குள்ளும் உண்டான பேரம் பேசுதல் நேசமுரண்பாடுகளே தவிர, விரோத முரண்பாடு களல்ல. சிங்கள தமிழ் மக்கள் பொதுவாக ஒரு நேச சக்திகளாகவே இயல்பாக வாழ்ந்து வந்துள்ளார்கள். இதுவே உண்மை. இந்த உண்மை இன, மத, குல, ஜாதி வெறியர்களான 'முதளாளித்துவச் சிந்தனையாளர் களான' தங்கள் போன்றவர்களுக்குக் கசப்பாக இருக்க லாம். முதளாளித்துவ வர்க்க சிந்தனை என்பதே எதனை யும் குதர்க்கித்துக் குழப்புவதுதான். ஆனால் தொழிலாள விவசாய பாட்டாளி வர்க்க வெகு ஜனச்சிந்தனை இதற்கு முற்றிலும் மாறுபட்டது. பொய்மைத் தோற்றத்தை வித்திட்ட முதலாளித்துவ சிந்தனையாளர்களுக்கு அத்தோற்றத்தை விட்டொழிக்க நாட்கள் எடுக்கலாம். அல்லது காலம் செல்லலாம். ஆனால் உண்மை ஒருபோதும் அழியாது; அழிக்க முடியாதது. இந்த வகையில் உண்மை யில் நாற்பது ஆண்டுகளாக முதலாளித்துவ ஏகாதிபத்திய தாசர்களாலும், தேசிய வாதிகளாலும் தமிழினம் ஏமாற்றப்பட்டதும் உரிமை மறுக்கப்பட்டதுமே உண்மை. வரலாறு. ஆனால், இந்தப் பிரசுரங்களோ, 'சிங்கள இனம், தமிழ் இனம்' என்ற யதார்த்த நிலையைப் பார்த்தனவே தவிர, இந்த இரண்டு இன மக்களுக்குள் 'இரண்டு வர்க்கங்களும், வர்க்கக் குணாம்சங்களும் இருந்தன இருக்கின்றன' என்னும் அப்பட்டமான உண்மையை மறைத்தும் வருகின்றன. 'ஓர் இனவாத எழுச்சி எப்போதும் முதலாளித்துவ வர்க்கம் சார்ந்தே வெளிப்படுகின்றது அது முதலாளித்துவ வர்க்கத்துக்கே பலம் சேர்க்கின்றது' என்ற இயக்கவியல்லாத யதார்த்த உண்மையை உணர்த்தவும் அவை தவறி விட்டன. மறைத்தும் வருகின்றன.

முதலாளித்துவவாதிகளால் தட்டி எழுப்பப்பட்ட இனவாத உணர்ச்சி 1956ல் தலைவிரித்தாடியபோது, கம்யூனிஸ்ட் கட்சியின் 'தேசாபிமானி'ப் பத்திரிகை ஆசிரியராயிருந்த கே. ராமநாதனால் 'இலங்கையின் அரசியல் கோமாளி' என வர்ணிக்கப்பட்ட சமசமாஜிஸ்ட் தலைவரான கொல்வின் ஆர். டி சில்வா, 'ஒரு மொழி இரு நாடுகளையும், இரு மொழி ஒரு நாட்டையும்தோற்று விக்கும்' என்று மொழிந்ததைத் தாங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். அவர் அரசியல் களத்தில் ஒரு கோமாளி யாக இருந்தபோதும், அந்தக் கோமாளித்தனத்திலும் ஓர் அர்த்தம் இருந்ததை அவதானிக்க முடியும். அது பேரின வாதத்திற்குச் செப்பமாக விழுந்த சாட்டை அடி. அந்த அடியைக் கருத்தில் கொண்டிருந்தால் தமிழும் சிங்களமும் சம உரிமை பெற்று மக்கள் சகோதரர்களாக வாழ வழி ஏற்பட்டிருக்கும். இனப்பகை இறந்து வர்க்க முரண்பாடு, கூர்மைபட்டிருக்கும். இதற்கெல்லாம் செவி சாய்க்கத் தேசியவாதியான பண்டாரநாயக்கா தயாராகவே இருந்தார். அந்த நிலைக்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டு அதன் முதற்கட்டமாக, 'தமிழுக்கு உரிய அந்தஸ்து' வழங்கியதோடு 'பண்டா செல்வா' ஒப்பந்த மும் செய்து கொண்டார். ஆனால், தாங்களும் தங்கள் தலைமையிலான யூ. என். பி யும் அதை எதிர்த்து ஆர்ப் பாட்டங்களும் கண்டியாத்திரையும் செய்தீர்கள். புத்தஞ் சரணஞ்சாமிகளை ஏவிவிட்டுக் கிழிப்பித்தீர்கள். இந்தப் பழி இப்போ முழுச் சிங்கள மக்களுக்குமே சார்ந்து விட்டதைப் பார்த்தீர்களா? 'நாற்பது ஆண்டுகளாகச் சிங்கள இனத்தால் தமிழினம் உரிமை மறுக்கப் பட்டது' என்ற வசைச்சொல் தங்களாலும் தங்கள் போன்ற முதலாளித்துவப் பேரினவாதிகளாலும் எத்தகைய பொய்மையோடு உதவுகிறது பார்த்தீர்களா?

'சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து'க் கோரிக்கையோடு முகிழ்த்த இலங்கை மார்க்ஸிய

கம்யூனிஸ்டு 'சமசமாஜக் கட்சிகளின் உன்னத அரசியல் வரலாறு இன்றுவரை முதலாளித்துவ சக்திகளால் வேண்டு மென்றே திரித்தும் மறைத்தும் கூறப்பட்டமையே ஒரு தேசத்துரோகம். பெரும்பாலும் மேனாண்மை வர்க்கம் சார்ந்த பிரசாரக் கருவிகளாக இவ்வெளியீடுகள் விளங்கி பொய்மைக்கு முக்கியகாரணம் என்பதைத் தாங்கள் அறியாததல்ல இலங்கை அரசியல் வரலாற்றில் இலங்கைக் கம்யூனிஸ்டு சமசமாஜிஸ்டுகளின் உன்னத போராட்டங் களின் போது நிகழ்ந்த சம்பவங்களும் வேண்டுமென்றே மறைக்கப்பட்டபோது அவர்கள் கூறிய மார்க்கங்களே எமது நாட்டுக்கு அவசியம் தேவை என்பதும் அந்த மார்க்கங்களே எமது நாட்டின் விமோசனத்துக்கு வழி என்பதும் இன்று துலாம்பரமாகிவிட்டது. ஆகையால் மறைக்கப்பட்ட அந்த வரலாற்றை இன்று மக்களுக்கு வெளிச்சமாக்க வேண்டியிருக்கிறது.

இதனை இந்த நிருபத்தின் பிறிதொருகட்டத்தில் நேரம் வாய்க்கும்போது விரிவாக உரைக்கவிருப்பதால், இதன் தொடரான விசயத்திற்கு வருகிறேன்.

ஒன்றை மனசிருத்துவீர்களாக.

சிங்கள மக்கள் தமிழ் மக்களின் விரோதிகளோ அன்றேல் தமிழ் மக்கள் சிங்கள மக்களின் விரோதகளோ அல்லர். இரண்டு இனங்களுக்குள்ளும் விரோதத்தை வளர்த்ததே சுதேசிய விதேசிய தமிழ் சிங்கள முதலாளித்துவப் பிரசாரங்கள்தான். இன விரோதத்தை இன்னும் தொடர்ந்து வளர்த்து வருவதும் முதலாளித்துவ வெளியீடுகளே. அப்படி இருந்தும் இந்த இன விரோதப் போக்கு முதலாளித்துவ வர்க்க நலவலிமை கொண்ட சாதனம் என்ற உண்மையைக்கூட அவை மதிப்பிடத் தவறிவிட்டன. இதனால், சரியான கறாரான நிலைமை களை மக்கள் அறியமுடியாமல் போய்விடுகிறது. இன்றைய கொடுமைகளுக்கும் விரோதங்களுக்கும் தன்படை

மாற்றான்படை தெரியாமல் நடக்கும் கொலைக்கும் இது ஒரு முக்கிய காரணமாகும்.

தயவு பண்ணிச் சற்றுக் கூர்ந்து கவனியுங்கள்.

வர்க்க முரண்பாடும் இனப்பாகுபாடும் ஒன்றெனக் கருதுவது தவறு. இந்த வேற்றுமைபற்றித் தெரிந்து கொள்ள ஒரு சாதாரண மனிதனால் கூடமுடியும்.

'வர்க்க முரண்பாடு' இரண்டு இனங்களுக்கிடையில் மாத்திரமன்றி ஓர் இனததுள்ளேயும் நிகழும் தவிர்க்க 'முடியாத அம்சம். அப்படித்தான் நிகழ்ந்தும் வருகிறது இரண்டு இனங்கள் இணைந்து சகவாழ்வு' கொள்வது வேறு 'இரண்டு இனங்கள் வர்க்கரீதியாக இணைந்து' அரசியற்போர்ராட்டம் நடத்துவது வேறு. இரண்டு முனைப்புகளையும் ஒன்றாகக் கருதுவதுதான் பிசகு அதாவது, வர்க்கப் போராட்டத்தையும் இனப் போராட்டத்தையும் ஒன்றாக ஒரே போராட்டமாகக் கணிப்பதுதான் தவறு. இந்த வகையில் 'இரண்டு இனங் கள் சகவாழ்வு' என்பது சாத்தியமானது. இதன் சரியான அர்த்தம். ஓர் இனத்துள் இரண்டு வர்க்கங்கள்- இரண்டு வர்க்கக் குணாம்சம் கொண்டவர்கள் முதலாளித்துவ வர்க்க பாட்டாளிவர்க்கக் குணாம்சம் கொண்டவர்கள் சகவாழ்வு வாழ்வதே அது. இதுபோன்றே இரண்டு இனங்கள் 'வர்க்கரீதியாகத் தோழமை' கொள்வது சாத்தியமற்றது 'தோழமை' வேறு, 'சக வாழ்வு' வேறு இத்தகைய சரியான கண்ணோட்டத்தில் எழுதப்படும் நூல்களே உண்மையான வரலாற்றைச்சுட்டுவன.

வரலாற்றுக் குறிப்புக்கள் கற்பனைப் புனைவுகளால் ஆக்கப்படும் நாவல் இலக்கியமோ, ஆசிரியர் தன் கருத்தினைப் புகுத்தும் சிருஷ்டியோ, சிருஷ்டித்த பாத்திரங் களின் குணவியல்பான சித்தரிப்போ அல்ல. இருள் சூழ்ந்த வியாபகத்திலிருந்தும் மக்களுக்கு ஞானவெளிச்சங் காட்டுங் கலங்கரை விளக்கமாக உன்னத இலக்கியங்கள்

திகழ்வதுபோல் வரலாற்றுக் குறிப்புகளும் சரியான கண்ணோட்டத்துடன் எழுதப்பட்டாலே உண்மை விளம்பிகளாக விளங்க முடியும். இதற்கு முற்றிலும் மாறான கண்ணோட்டத்தில் நடப்பியல் வாதங்களையே சரியான கருதுகோள்களாகச் சித்தரித்து வெளிவந்த சில நூல்களில் அடங்கிய வாசகங்களையும் அவ்வாசகங்களில் மறைபொருளாகவுள்ள எனது கருத்தோட்டங்களையும் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வரச் சித்தங் கொண்டு முக்கிய அம்சங்களை வெளிச்சமாக்க விரும்பு கிறேன்.

இலங்கைத் தீவில் இனப் பிரச்சினை மிக மோசமான நிலையை இன்று அடைந்திருக்கின்றது, சிங்கள பௌத்த மேலாதிக்க இனவாதம் பாரிய ஒடுக்குமுறைகளில் ஈடு பட்டுள்ளது' என்ற முன்னுரையோடு தொடரும் வாசகம், 'வரலாற்றின் ஆரம்பத்திலிருந்து ஐரோப்பியர் காலம் வரை.' 'ஐரோப்பியர் காலம்,'' சுதந்திரத்தின் பின்,' 'குடியரசுகாலம்' என்ற நான்கு கட்டங்களைக் குறிப்பிட்டு நூலில் நுழைகின்றது.

இலங்கையில் மட்டுமல்ல எந்த நாட்டிலுமே இனப்பிரச்சினை தோன்றுவதும் தோற்றுவிப்பதும் பொருளாதாரப்பிரச்சினைதான். பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்க வக்கற்ற முதலாளித்துவம் இன மத மொழி குல ஜாதி உணர்ச்சிகளைக்கிளறி அவற்றையே ஆயுதமாக வரித்துக் கொண்டு மக்களை மோத வைத்து அழிக்கிறது, இந்த உண்மையினூடாக இனப் பிரச்சினையைப் பார்க்கத்தவறும் ஒருவர் இந்த ஆயுதங் களை இலங்கையில் பாவித்த பாவிக்கிற வர்க்கம் எது என்பதைக் கண்டுபிடிப்பதற்குப் பதிலாக, இதற்குப் பலி யாகிய மக்கள்மீது பழியைப் போட்டு விட்டுத் தப்பித்துக் கொள்வதும் இந்த வகுப்பு வாத ஆயுதங்களைத் தூக்கிய முதலாளித்துவத்திற்கே லாபம் சேர்க்கிறவராகின்றார். அல்லது முதலாளித்துவத்தின் மற்றோர் கன்னையான

துணைப் பிரசாரகாரராகி விடுகிறார். இலங்கையில் தோன்றிய மத இன குல மொழி ஜாதி வெறியர்கள் அனைவரும் முதலாளித்துவத்தின் கைக்கூலிகள் என்பதும், இந்தக் கைக்கூலிகளுக்கு எதிரான வர்க்கம் சார்ந்த மக்கள் இலங்கை பூராவும் பரந்து வாழ்கின்றார்கள் என்பதும் உண்மையாயிருக்கும் போது, அந்த வர்க்கம் சார்ந்த மக்களும் இயக்கங்களும் நிகழ்த்திய போராட்டங்களின் போது இந்தப் பிரசாரகர்கள் இதே முதலாளித்துவ வர்க்கத்தின் பக்கம் நின்றார்கள். ஆக இவர்களும் 'இனப்பிரச்சினை' என்ற பொய்மையான தோற்றத்தை மக்களுக்கு ஊட்டி முதலாளித்துவத்திற்கே துணை போகிறார்கள் என்றாகிறது. 'நீ அடிக்குமாப் போல் அடி, நான் அழுமாப் போல் அழுகிறேன்' என்ற தோழன் சூத்திரம் குழந்தையும் புரியக்கூடியதே.

மகாவம்சத்தைத் தழுவி பிரசார நூல்களோ இப்பிர சாரங்களை மறுத்து வெளி வந்த பிரசார நூல்களோ எவ்வாறு முற்றிலும் மாறுபட்ட உண்மைக்குப் புறம்பான கண்ணோட்டங்களில் ஆக்கப்பட்டன என்பதையும். இதன் விளைவாக மக்கள் மத்தியில் ஒரு முழுமையான வகுப்புவாத உணர்வை இவை எப்படி அழுத்தி விடு கின்றன என்பதையும் இதில் விஸ்தரிக்கவே முனைந்தேன். ஆனால், இன்றைய நெருக்கடிகளைத் தங்கள் சமுகத் திற்குச் சமர்ப்பிக்க வேண்டியது அவசியமாதலால் அவற்றைப் பிறிதொரு தொகுப்பில் விரிவு படுத்தச் சித்தங் கொண்டு இந்த நிருபத்தில் தவிர்த்துள்ளேன்.

இப்பொழுது நேரம் இரவு பதினொருமணி. இதனை எழுதிக்கொண்டிருக்கும் பொழுது வடதிசையில் வெடி குண்டுகளின் இடிமுழக்கங்கள் கேட்கின்றன. போராளி களாகத்தானிருக்க வேண்டும். முகாம் கட்டிடங்கள் அதிர்கின்றன. நமது படைபட்டாளங்கள் உசார் கொண்டு துரிதவேகமாகச் செயற்பட ஆயத்தமாகிறார்

கள். துரித வேகமாகச் செயற்படுகின்ற போதும் அவர்கள் முகங்கள் தேம்பி விம்மிச் சலித்துப் போய்க் கிடப்பதாகவே மின் வெளிச்சத்தில் தெரிகின்றன. அவர்கள் கடமை புரிவதைக்காட்டிலும் தங்கள் உயிர்களுக்காகப் பரிதவிக்கிறார்கள் போல் தெரிகின்றது. யுத்த களத்தில் வீரம் மட்டுமல்ல, மரணபயமும் உள்ளூரத்தொற்றிக் கொள்வது இயல்புதானே? ஹிட்லர் நெப்போலியன் கூட மரணபயத்திற்கு ஆளானவர்கள் என்பதை வின்ஸன்ற் சேர்ச்சில் இரண்டாவது உலக மகாயுத்தம் பற்றி எழுதிய நூலில் வர்ணித்திருப்பதைத் தாங்கள் படித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். நாம் எல்லாம் எம்மாத்திரம்! இந்த வெடி குண்டுகள் எங்கிருந்து இடி முழக்கம் செய்கின்றன என்பதைக் கவனித்து வேண்டிய நடவடிக்கை எடுத்து விட்டு இந்த நிருபத்தைத் தொடரலாம் என்று கருது கிறேன்.

## 7

மகிமை மிகு அதிபரே,

விசனம் ஆட்கொண்டதால் சயனிக்கவும் முடியவில்லை. பத்திரிகைகளைப் புரட்டினாலும் இந்த அரசைப் பற்றிய குறிப்புகளே குவிந்துள்ளன.

'யூ. என். பி. அரசில் தமிழர் நம்பிக்கேட்ட' வரலாறு, என்று வித்தக பண்டிதர் என்பார் எழுதிய விஷயம் என் மனசை நெருடியது ஒரு சுவையான கதைபோல் கிளர்ந்த அச்சித்திரத்தைத் தாங்கள் சிந்தனையால் கொள்வீர்கள் என்ற கோதாவில் அப்படியே வரைகிறேன்.

வரைபடம் போல் நகரும் அந்த விமர்சனம் இது-உற்றுக் கவனியுங்கள்.

நம் நாடு வட்டிக்கு வட்டி கொடுக்கவும் வக்கற்ற தீவு. இத்தகைய கீர்த்தி பெற்ற அரசின் சாதனையைக் கேள்வியுற்ற ஒரு புலவர், 'விகாரம் இப்படியிருக்கையில் எப்படியப்பா இலங்கையில் சிறீமான் பொதுஜனம் உயிரோடு வாழ்கிறது?' என்று வினவி தன் ஆச்சரியத்தைத் தெரிவித்தார்.

இதற்குச் சுருக்கமாக விளக்கம் அளித்து ஒரு மடல் தீட்டினேன். அதன் சாரம் இது.

எங்கள் தீவிலே 'தர்மிஷ்டர்' தலைமையில் யூ. என் பி. ஆட்சி நடக்கிறது இந்த 'உத்தமர்' அமெரிக்க மாமாவின் அத்தியந்த நண்பராக இருக்கவேண்டும் 'பண்டாசெல்வா' ஒப்பந்தத்தைக் கொடூரமாக எதிர்த்தார். சிங்களவர் தமிழர் சுயாதீனமாக ஒற்றுமையோடு வாழ வித்திட்ட அந்த ஒப்பந்தத்தைச் சிங்கம் என எதிர்த்துக் 'கண்டி யாத்திரை' மேற்கொண்டபோதே இலங்கைக்குச் 'சனியன்' பிடிக்கத் தொடங்கியது. தர்மிஷ்டர் பாஷையில் கூறின், 'நாட்டுக்கு நல்ல சகுனம்' பிடித்தது. அன்று தொட்டு இன்று வரை பேரின வாதிகளாலான இனக் கலவரத்துக்குக் குறைச்சலே இல்லை.

பண்டாரநாயக்கர் ஆட்சியை வீழ்த்த 1958ல் பேரின வாதக் காடையர்களால் இனக்கலவர நெருப்பு மூட்டப் பட்டது. இருந்தும் பண்டாரநாயக்கர் அரசை இந்த 'உத்தமர்'களால் வீழ்த்தமுடியவில்லை. ஆனால், பண்டார நாயக்கா அழிக்கப்பட்டார்: அவர் பட்டப்பகலில் சுட்டுக் கொலைசெய்யப்பட்டார். அவர் படுகொலைச் செய்தி நாடுபூராவும் பரவியபோது யானைகள் துள்ளிக் குதித்துக் கொண்டாடியதை முழுநாடே அறியும்.

எனினும், அதி உத்தமர்களின் கரங்கள் ஓயவில்லை. ஆயினும், உத்தமர்கள் தோற்றுப் போய்விட்டனர்.

அம்மா அரசபீடத்தில் பிரவேசம் செய்யப்பட்டார். வாழ்க இலங்கரத்தினா, டாக்டர் என் எம் பெரேரா, பீட்டர் கெனமன்!

அந்தகோ, அந்த அம்மாவையும் இந்த உத்தமத் தர்மிஷ்டர்கள் விட்டு வைக்கவில்லை.

அவ அரசை வீழ்த்த, 1962ல் 'குஷி'யாக ஓர் அரசியற் 'சதி' நிகழ்த்தப்பட்டது.

தர்மிஷ்டரின் அத்தியந்த பொலிஸ்-ராணுவ மேல் மட்ட நண்பர்கள் கைதாகினர்.

அம்மா கழுத்துக்கு வந்த கண்டம் தலையோடு தப்பியது. எனவே, அந்தச் கூத்தும் எடுபடவில்லை.

1971ல் றோகணா என்ற வீரவாகுவை ஏவிவிட்ட கூத்து நடந்தது. அந்தக் கூத்தும் எடுபடவில்லை.

தர்மிஷ்டர் சும்மா இருக்கவில்லை.

அம்மா ஆட்சிக்கு எதிராக அத்தனகலையில் 'சத்தியாக்கிரகம்' என்ற நாடகத்தை மேடையேற்றிப் பார்த்தனர். காந்தி, செல்வா பாணியில் காப்பியடித்த அந்தச் சத்தியாக்கிரக நாடகமும் சோபிக்கவில்லை.

பின் அமெரிக்க மாமாவின் புத்திசுவாதீனம் போலும் தர்மிஷ்டர் கொக்குத்தவம் செய்யலானார். ஓடு மீன் ஓடி உறுமீன் வருமளவும் வாடி இருக்கும் கொக்குப் போல் உத்தமர்கள் வழிமேல் விழி வைத்துக்கொண்டிருந்தனர்.

ஒரு சவமும் அகப்படவில்லை.

அம்மாவுக்கு எழுந்த அதிகார ஆசையால் கண்மண் தெரியவில்லை.

'கழுதை' மூளையாக ஒன்று அவவுக்கு மகனாகியதால் எதிரிக்கு வாசியாகியது. தர்மிஷ்டர் துள்ளிக் குதித்தார்.

இந்தக் கழுதை மூளையை அந்த உத்தமர் வாறாகப் பயன்படுத்தலானார்.

அதன் விளைவு...?

அம்மா ஏறிய ஏணிகளை உதைத்தா.

இடது சாரிகளை உதறித்தள்ளிவிட்டு, உருத்திராட்சப் பூனைகளையும், முழிகண் கோழிக்கள்ளனையும் அணைத்துக் கொண்டதால் வந்தது நாசம்; விழுந்தது நசல்.

என். எம். மும் பீட்டரும் வெளியேறினர்.

அம்மா பிடித்த கொப்பும் விட்டு, மிதித்த கொப்புத் தவறி 'தொப்'பென்று விழுந்தா.

கொக்குத்தவம் புரிந்த தர்மிஷ்டர் விழித்துக் கொண்டார்.

அம்மையார் 'தொப்பிபுரட்டி'க்கதை கேட்டு மொக்குத்தனமாக உயர்கல்வியில் பல்கலைக் கழகத்தில் தமிழ் மாணவர்க்குப் பாகுபாடு காட்டியது, இந்த உத்தமர்களுக்கு அசல் வாசியாயிற்று கல்விச் சாலையில் குல்லாவை மாட்டப்போய் வந்த வில்லங்கத்தை அம்மையார் பிறகுதான் உணர்ந்தா. அதற்கு அவளின் கழுதைப்பிள்ளையும், சட்டவாதி முழிகண் கோழிக் கள்ளரும் பக்கபலமாயிருந்தமை ஒரு காரணமாகும்.

சொந்தங்கள், பந்தங்கள், வாரிசுகள் பார்த்துக் கட்சி நடத்த வெளிக்கிட்டதால் வந்த பொல்லாப்பு இது.

'படித்தும் பயனில்லை' என்று கண்டதால் வேறு மார்க்கம் தேடாது விரக்தி கொண்ட மாணவர்கள் 'தனிநாடு' கோஷத்தை முன் வைத்தபோது, பீட்டர் கெனமன் நற்தீர்ப்பையும் தட்டிக் கழித்த அமையார் சும்மா கிடவாமல், அதனைத் தீர்ப்பதற்குப் பதிலாக

மோட்டுத் தனமாகப் பட்டாளத்தை ஏவிவிட்டு அடக்கப் பார்த்தா.

அதன் விளைவே தமிழர் பிரதேசமான வடகீழ் மாகாணங்களில் ராணுவம் படையெடுக்கக் காரணமா ற்று. உரிமை கேட்ட இனத்திற்குக் கங்கு கரையற்ற படையை ஏவிவிட்ட நாடும் நமது இலங்கைதான்.

தமிழினம் கெம்பி எழுந்தது. இது சிங்கள மக்களுக்கு எதிராக அல்ல, இனவாத அரசுக் கெதிராக அமைந்தது.

அடக்கப்பட்டவனை அடக்கியாள முடியாது. ஒடுக்கப் பட்டவனை ஒடுக்கியாட்டமுடியாது. எரிமலை வெடித் தால் காடும் கரை புரளும்

சட்டமறுப்புச் செய்த தமிழ்த் தலைவர்களைக்கூட்டுக் குள் அம்மா போட்டா.

இங்கேதான் அம்மாவின் வீழ்ச்சி ஆரம்பமாயிற்று.

இப்படி எத்தனையோ அநியாயங்கள் தமிழனத்தைச் சூழ்ந்தன.

இவற்றையெல்லாம் துச்சமென மதித்துக் கண்மூடித் தனமாக நடந்துகொண்ட அம்மையார், 'இது பேரிடியாக விஸ்வரூபமெடுக்கும்' என்று இடதுசாரிகள் எச்சரிக்கையையும் பொருட்படுத்தாமல், எவரோ மாட்டிய குல்லாவுக்குள் உல்லாசமாகவே இருந்தா..

கொக்குத்தவம் மீண்டது.

இவற்றையெல்லாம் தர்மிஷ்ட உத்தமரும் அவர்தம் யூ. என் பி தாசர்களும் வாறாகப் பயன் படுத்தினர்.

"ஆகோ வாரும் பிள்ளாய், அம்மையார் அநியாயங் களைப் பாரும் பிள்ளாய்" என்று கவிதைப் பாணியில் தமிழினத்தைப் பார்த்து முதலைக் கண்ணீர் வடித்த னர்.

நம்பிக் கெட்டவன் தமிழன்: தும்பி பிடிப்பவன் தமிழன்.

தமிழ்த் தலைமையோ இதனை உண்மையென்று நம்பியது. தமிழ்த் தலைமை தங்களை நம்பிக் கெட்டும் தங்களையே கதியென்று கிடந்ததும் அவர்களுக்கு வள்ளீசாகத் தெரியும். இரண்டு தலைமைகளும் அடிப் படைக் கொள்கையில் ஒன்றுதானே?

எனவே, தமிழினத்தைப் பார்த்து யூ. என். பி விட்ட முதலைக் கண்ணீர் முட்டைக் கண்ணீராக உதிர்ந்தது.

''அம்மையார் செய்த அநியாயத்தால்தான் நீங்கள் விரக்தியடைந்து 'தனிநாடு' கோஷத்தை முன் வைத்துப் போராடுவதற்குத் தள்ளப்பட்டீர்கள். நாம் ஆட்சிக்கு வந்தால் நீங்களே, எங்களுக்குத் தனிநாடு வேண்டாம், என்று கூறுமளவிற்குச் சகல உரிமையையும் கொண்ட 'வட்ட மேசை மகாநாடு' வைத்து அதில் நிரந்தரத் தீர்வு காண்போம்' என்று யூ. என் பி.தாசர்களும் தர்மிஷ்ட உத்தமத்தாரும் மேடைகள் தோறும் சத்தியவாக்களித் தனர்.

தென்னிலங்கை மக்கள் மட்டுமின்றி, வடகீழ் மாகாணங்களின் பெரும்பாலான தமிழ்மக்களும் அந்தச் சத்தியவாக்கைத் தேவவாக்காக நம்பி யூ. என். பி.க்கே வாக்களித்தனர். வாக்குத்தத்தம். பலிதமாகுமென்று வாக்குச் சீட்டுப் போட்டார்கள்.

இடது சாரிகளோ, 'யூ. என். பி. தாசர்களின் பசப்பு வார்த்தைகளை நம்பி ஏமாந்து போகவேண்டாம்' என்று காலில் விழாத குறையாகச் சொல்லிப் பார்த்தார்கள்.

''ஜே. ஆர். இதயம் ஹிட்லரைவிடக் குரூரமானது'' என்று அம்மையாரும் கண்டிப் போகம்பர மைதானத்தில் கடைசியாக எடுத்துக் கூறினா.

ஆனால் தமிழ் மக்கள் செவிசாய்க்கவில்லை. பெரும்பாலான தமிழ் மக்களும், தமிழ்ப் பெரு வியாபாரிகளும் "யூ. என். பி. ஆட்சிபீடமேறினால் நாட்டில் 'சமாதானம் நிலவும், எந்தவித பயமுமின்றி நாட்டின் சகல பாகங்களிலும் 'சுதந்திரமாக' நடமாடலாம். எனவே, போடு புள்ளடி யானைக்கு நேரே'' என்று கூறி யூ. என். பிக்கே வாக்களித்தனர்.

தமிழ் மக்களின் பெரும்பான்மை ஆதரவே யூ.என்.பி, அதிகாரத்துக்கு வரக்காரணம் என்பதை முழுநாடே அறியும்.

ஆனால், அது பதவிக்கு வந்ததே தாமதம், நாடு 'குரங்கின் கை பூமாலையாயிற்று' என்பதை முதல் வருஷ வரவு செலவுத் திட்டமே காட்டிவிட்டது.

அமெரிக்க மாமாவிடம் 'கடன் பிச்சை'க்கு நாடு ஆலாய்ப் பறக்கவாரம்பித்தது.

காரணம் எதுவுமின்றியே இனக்கலவரம்தலை தூக்கப்பட்டது.

விளைவு, தென்னிலங்கையில் மட்டுமல்ல, மலையகத்திலும் பேரினவாதிகளின் பேயாட்டம் கட்டவிழ்க்கப்பட்டது.

கண்டி, இரத்தினரி, பதுளை திரிகோணமலை ஆகிய பிரதேசத் தமிழர்கள், தோட்டத் தொழிலாளர்கள் தாக்கப்பட்டனர். 'லயன்'களில் சீவித்த மக்கள் பேரினவாதிகளால் அடித்து நொறுக்கப்பட்டார்கள் உயிர்கள், உடமைகள், கடைகள் சூறையாடப்பட்டன. பாதுகாப்புப் படையினரோ வெகு பக்குவமாக, 'நடப்பவையெல்லாம் நடந்து முடியட்டும். நஷ்டமெல்லாம் தமிழருக்குகே' என்ற தோரணையில் வேடிக்கை பார்த்து ரசித்தனர். அவர்கள் பாஷையில் 'வேண்டிய பாதுகாப்பு' அளித்தனர்.

இக்கொடுமைகளையெல்லாம் தட்டிக்கேட்க அவர்களுக்கிருந்தவிடம், பாராளுமன்றம் ஒன்றுதான். அங்கே அதனை அமிர்தலிங்கம் பிரஸ்தாபித்தபோது, 'சமாதானமென்றால் சமாதானம் போரென்றால் போர்' என்று தர்மிஷ்ட உத்தமரே திருவாய் மலர்ந்தருளினார். பிரகடனப் படுத்தப்படாத யுத்தம் ஒன்றைக் கட்டவிழ்த்து விட்டார் தமிழினம் திகைத்தே போயிற்று

தமிழ் மக்கள் எவரைப் பதவியில் அமர்த்தக் காரணமாயினாரோ அவராலே தமிழினம் அழிந்து மடிந்து கேட்பார் யாருமின்றித் தவித்துத் தத்தளித்துக் கொண்டிருக்கிறது..

இந்நாட்டின் பேரினவாதிகளும், தொழிலாள வர்க்க எதிரிகளும், தமிழினத்தின் பகைவர்களும், யூ. என். பி.யும் அதன் அரசுமே, இதனை ஓர் அரசியற் சித்தாந்தத்தோடு ஆய்வு செய்தபின் அடுத்து விளக்கப்படும்.

மகிபரே, எமது நாட்டின் யதார்த்தபூர்வமான உன்னத சிந்தனையாளர்கள் எப்படி இந்த அரசநிர்வாகத்தைக் கணித்து வைத்திருக்கிறார்கள் என்பதற்கு வித்தக பண்டிதரின் விவரணம் ஒரு சான்று. அபகீர்த்திமிக்க இந்த அரசின் தாற்பரியங்களைப் புரிந்து கொண்டும் நான் வட கீழ் மாகாணத்தின் தலைமைத் தளபதியாகக் கடமையாற்றுகிறேன். இது வெட்கங்கெட்ட செயல் என்று என் மனச் சான்று அடித்துச் சொல்லுகிறது.

இதனையும் தங்கள் மேலான கவனிப்புக்குச் சமர்ப்பிக்கிறேன்.

அசட்டை பண்ணுவீர்களானால், தங்கள் சாணக்கியமும் பெரும் இந்திய நாட்டுப் படையெடுப்புக்குச் சரணடைய நேரிடலாம்.

எச்சரிக்கையல்ல, தார்மீக உணர்வுக்கும், தங்கள் சித்தத்துக்கும் விடும் வேண்டுதலாகும்.

எனினும், எனது முடிவை மறுபரிசீலிப்புக்கு மாற்றுவது நோக்கமல்ல என்பதை இத்தாற் தெரிவித்துக் கொள்கிறேன்.

# 8

கூனந்தங்கிய அதிபரே,

என்றுமில்லாத வகையில் இன்று என் மனசு பேதலித்துவிட்டது! நரம்புகள் சோர்ந்துவிட்டன. உடம்பு நரிடி நடுங்குகிறது. கண்கள் பஞ்சாடிப் பூஞ்சாணமாகி வருகின்றன. மண்டைக்குள் ஏதோ கிண்ணரம்போடுகிறது. கண்களை மூடிக்கொண்டு மனக்கண்ணால் நோக்குகின்றேன். அனந்தகோடி நட்சத்திரங்கள் வானத்தில் இருந்து சரமாரியாக வெடித்துச் சிதறி மின்மினிப் பூச்சிகளைப்போல் பூமியடங்க வந்து விழுகின்றன எந்த வேளையிலும் மரணத்தறுவாயிலிருக்கும் ராணுவ அதிகாரியான நானே இவ்வாறான அதிர்ச்சிக்குள்ளாகிவிட்டேன். தாங்கள் இவற்றைப் பார்த்திருக்க வேண்டும். பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில், அவராவது பார்த்திருக்க வேண்டும். தாங்களோ இந்நேரம் பஞ்சணையில் துயின்றுகொண்டிருப்பீர்கள். பாதுகாப்பு அமைச்சரோ சகலநெருக்கடிகளுக்கும் எப்படி உகந்த பதில் அளிப்பது என்ற கனவுத் தூக்கத்தில் நிலைகொண்டிருப்பார். அதிகார உல்லாசம் யாரைத்தான் விட்டது? என்றபோதும் ஒரு கணம் மனக்கண்ணாலாவது பார்க்க வேண்டும். வெடி குண்டுகளின் சத்தம் கேட்ட திசை நாடிப் போன நான் இப்படியான ஒரு பயங்கரக் கோலத்தைக் காண்பேன் என்று கற்பனை செய்தும் பார்த்ததில்லை. அது என் முட்டாள்தனந்தான். அந்தப் பயங்கரக் காட்சிகள் என்னை நிலைகுலைய வைத்துவிட்டன. மனதில் தேங்கியிருந்த வச்சிர உறுதியும் கலைந்துவிட்டது.

கவனியுங்கள்.

தங்கள் புதிய உத்தரவுகளை நிறைவேற்றாமல் நான் எப்படித் தன்னிறைவு கொண்டேனோ, அது போன்றே எனது ராணுவப் பிரிவில் உள்ள படையினரும் தங்களிச் சையாக நடந்து கொண்டார்கள். என்னால் கட்டுப் படுத்த முடியாதபடி நிலைமை மோசமாகி விட்டதென்றே கருதுகிறேன். நான் எதனைச் செய்யக் கூடாதென்று படைப்பிரிவுகளுக்கு உத்தரவிட்டிருந்தேனோ அதுவே நிகழ்ந்து விட்டது: என் உத்தரவு எனக்குத் தெரியாமலே மீறப்பட்டுள்ளது.

முன்னைய எங்கள் விசாரணைக்குப் பின் கடந்த வாரம்தான் வடமாகாண எல்லைக்குள் பரவலாகவிருந்த கிராமங்களைச் சுற்றி வளைத்துத் தேடுதல் போட்டு ஆயிரத்தி இருநூற்றிப்பன்னிரண்டு இளைஞர்களையும், முப்பத்தேழு யுவதிகளையும் கைது செய்து முகாமுக்குள் அடைத்து வைத்திருந்தோம். ஒரு வாரமாக விசாரணை செய்தபோது சட்டப்படி பார்த்தாலும் இந்த இளைஞர் களில் எவருமே தண்டிக்கக் கூடியவர்களாக இருக்க வில்லை. ஆனால், தங்கள் பாதுகாப்பு அமைச்சின் கூற்றுப்படி அவர்கள் எவ்வாறேனும் காலியில் உள்ள பூஜா ராணுவ முகாமுக்கு அனுப்பியேயாக வேண்டும். அன்றேல் 'பொலிஸ் றிக்ஸ்' உத்திகளைப் பாவித்து. 'விடுபட முடியாத குற்றவாளி' என்பதன் நிருபண அர்த்தம் என்னவென்பதை நான் மட்டுமன்றி, சகல ராணுவப்படைப் பிரிவு அதிகாரிகளும் அறிவர்.

'மரணதண்டனை' என்ற தீர்ப்பைச் சட்டவாக்கக் காகிதத்தில் மிகச் சாதாரணமாகவே எழுதிவிடலாம்! அதனை நிறைவேற்றுவதற்கு மனிதனின் மனது இரும்பா யிருக்கவேண்டும். அவ்வளவுதான். பற்றற்ற பஞ்சசீலத் துறவுகளல்லவா? இலகுவான விஷயம் என்று பாதுகாப்பு அமைச்சு அடித்துக் கூறும் பண்பைக் கலாசாரமாக

வரித்துக் கொண்டிருக்கிறது! எனவே, உயிர் ஒரு தூசு என்று கருதப்படுகிறது. மெய்யாகவே ஒன்று சொல்லுகிறேன், என் மனசோ ஒரு தாயின் இதயம் போல் மென்மையாகி விட்டது. தன்னுயிர் போல் மன்னுயிரையும் நேசிக்க எப்பவோ பண்பட்டுப் போய் விட்டது. ஓர் உன்னத உயிரை ஒரு பயித்தியக்காரன் கூட மிகச் சுலபமாக அழித்து விடலாம். ஆனால், போன உயிரை உலகின் எந்தப்பெரிய மேதையானாலும் மீட்க முடியாது; ஓர் உயிரை மீட்க வக்கற்ற எவனும் இன்னோர் உயிரை அழிக்க உரிமையற்றவன். அந்த இளைஞர்கள், யுவதிகள் மட்டில் தான் அப்படித்தான் நடந்து கொண்டேன். ஆமாம், அதிபரே நான் அப்படித்தான் நடந்து கொண்டேன்.

பாதுகாப்பு அமைச்சால் பிறப்பிக்கப்படும் உத்தரவுகளுக்கு நான் அவர்களைப் பூஜா ராணுவ முகாமுக்கு அனுப்ப தவறின் 'முறையான' தண்டனை வழங்க வேண்டும்,

அதிபரே, என்னை மன்னியுங்கள். இந்த இரண்டில் நான் எதையும் நிறைவேற்றவில்லை.

அவர்களுக்கு இந்த நாட்டின் அரசியல், சித்தாந்தம், வரலாறு, கலை, இலக்கியம், கலாச்சாரம், பண்பாடுகளையும் அவற்றின் தாற்பரியங்களையும், நடைமுறைப் படுத்தும் மார்க்கங்களையும் என்னாலான வரை போதித்து நற்பிரஜைகளாக்கி அனுப்பவே திட்டமிட்டிருந்தேன். அடிப்படையில் மாற்றம் ஏற்படாமல் எந்தப் போதனையும் ஒருவருக்கு நிறைவான மாறுதலை உண்டாக்காது என்பதை நான் அறிவேன். ஆனால், எனது போதனை அவர்களை நிதானப்படுத்தி அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தத் தூண்டும் என்பதாலேயே அப்படி முனைந்தேன்.

அந்தத் திட்டத்தில் மண் விழுந்து விட்டது. மின்னல் வேகத்தில் இப்படி ஒரு பேரழிவு நிகழும் என்டதை நான் கற்பனையிலும் நினைக்கவில்லை. அதை விவரிக்கவே கைகள் நடுங்குகின்றன. தேகம் உதறுகிறது. மனித நேயம் என்பது சித்திரவதையின் கூடாரம் என்பதை நான் இப்போதுதான் உணர்கிறேன். மானிட நேயத்துடன் நான் இந்த இளைஞர்கள் யுவதிகளை நோக்கியதன் விளைவு எனக்கு இப்படியாகி விட்டது.

என்ன கோரமான மரண அவலங்கள்...?

நமது ராணுவப் படைகள் அர்த்த ராத்திரி வேளையில் எழுந்து அடைத்து வைக்கப்பட்ட அத்தனை வாலிபர்கள் யுவதிகளையும் 'விசாரணைக்காக அழைக்கப்படுகிறீர்கள்' என்று வெளியே உள்ள ஏகாந்தமான சாலை ஒன்றில் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இத்த நடு நிஜியில் விசாரணையா? என்ற பேதலிப்போடும் தயக்கத்தோடும் எழுந்து வந்து அத்தனை பேரும் கப்டன் ஒருவர் முன் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள் கப்டன் மூன்றாம் மாடியில் உள்ள அறையில் இருந்து இந்த விசாரணையை மேற் கொண்டிருக்கிறார்.

லெப்டினன், சார்ஜன்மேஜர், சார்ஜன்ட், புல் கோப்ரல் மட்டத்தில் உள்ள ராணுவத்தினர் உட்பட இந்த விசாரணையில் எழுபத்திரண்டு வேகசேவை அதிரடிப் படைப் பிரிவு ராணுவத்தினரும் ஈடுபட்டிருக்கின்றனர். ஒரு மணி நேரமாக விசாரணை எதுவும் நடைபெறாமலே பத்திரங்களைத் தயார்ப்படுத்திக் கோவைப்படுத்துவதில் மும்முரமாக இயங்கிக் கொண்டிருந்த வேளையில். ஜீப் டிரைவர் ஒருவர் பெட்றோல் எடுத்துக் கொள்கலனில் ஊற்றி அடைத்துக் கொண்டார். அந்த வீரர் காமம் துள்ளும் பாடல் ஒன்றைச் சீட்கை அடித்துக் கொண்டே துரிதகதியில் நின்றார்.

ஒரு யுவதி சோர்ந்து விட்டாள் அவள் கால்கள் தடுமாறி விழுந்து விட்டாள் அவள் பாவாடை அவள் கழித்த சிறு நீரால் துவைந்து போய்க் கிடந்தது. அந்தக் கோப்ரல் கொடுப்புக்குள் சிரித்தான் இதனையடுத்து அவர்கள் மத்தியில் சலசலப்பு ஏற்பட்டது. அவ்வளவு தான். அவள் தனி அறைக்குள் தூக்கி வரப்பட்டாள்.

கப்டன் டாக்டர் அல்ல, ஆனால், அவர் ஒரு டாக்டர் போல் அபிநயித்துக்கொண்டு இருக்கையை விட்டெழுந்து வெகு முடுக்காக அந்த அறைக்குள் பிரவேசித்தார். சிறு பறவையின் கீச்சுக்குரல் போல் அந்த அறையிலிருந்து யுவதியின் கேருந்தொனி எதிரொலித்தது.

கனம் அதிபரே, இந்தக் கட்டத்தைச் சற்று ஆழ்ந்து சிந்திப்பீர்களாக.

யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற சித்திரவதைப் பேர் வழியான பொலிஸ் இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளையின் சரித்திரம் எப்படி அவலமாக முடிந்தது என்பதைத் தாங்களும் அறிவீர்கள் சிறீமாவோ பண்டார நாயக்கர் அதிகாரத்தின் போது நிகழ்ந்த அராஜக கிளர்ச்யின் தொடர்பாக தென்னிலங்கையில் பேரழகி மனம்பேரியைச் சித்திரவதை செய்து நாஜிகள் பாணியில் படுகொலை செய்த ராணுவ அதிகாரியைவிட இந்த ஆணவக்காரரர் சித்திரவதை செய்வதில் மாகாவிண்ணன் என்பது பிரசித்தம், நான் அவதானித்தே வந்திருக்கிறேன். இவற்றையெல்லாம் தாங்கள் அறிந்ததே, பெண்ணாய்ப் பிறந்த எந்த ஒருவளும் மகிமைக்குரிய உன்னத தாய்குலத்தின் ஊற்றுக் கண் என்பதையும் யோசிக்காமல் உயர் பதவி வெறி கொண்டு தன்னாணவத்தில் தன் இனத்து இளைஞர்களை மட்டுமல்ல, தன் ஜென்மபூமியின் பெண்மணிகளையே மானபங்கமாக இம்சைப் படுத்திய மகாபாவியான அந்த இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை கதை பரிதாபமாக முடிந்தவேளையில், இந்தப் பெண்மணிகளில்

ஒருவனே நெஞ்சீறலெடுத்து அழுது மூர்ச்சித்திருக்கிறானென்றால், பெண்களின் இதயம் இயல்பாகவே எப்பேர்ப்பட்ட மனித பாசம் கொண்டது என்பதை எந்த மூடனும் புரிந்து கொள்வான். ஓர் அரக்கன்கூட உணர்ந்து கொள்வான். ஆனால், தங்கள் அதிகாரத்தின்போது எனது படைப்பிரிவில் பணியாற்ற வந்த இந்தக் கப்டனுக்கு இதுவே புரியாமல் நிர்க்கதியான அந்த வீர மங்கையில் கோழைத்தனமாகப் பலாத்காரக் குற்றம் புரிந்திருக்கிறார். அவளின் பரிபூரணமான இசைவோடு அவர் அவளைப் புணர்ந்திருந்தாலும், பாவமான பாதகம் என்று கருதும் நான், பலாத்காரம் புரிந்த இந்தக் கப்டனுக்கு என்ன தண்டனை வழங்குவது?

கட்டுப்பாடும் தேச பக்தியும் நேர்மை தவறாதவனுமே ராணுவவீரன்.இவற்றைவிட போலியான கவசம் எதுவும் இருக்கமுடியாது. இதைத்தான் நான் தெரிந்து வைத்திருக்கிறேன், ஆனால் நமது படைப்பிரிவில் குறிப்பாகத் தங்களது ஆட்சிஅதிகாரத்தில்பெரும்பாலும்கடைந்தெடுத்த காடையர்களும்,லப்பிகளும், கண்மூடித்தனமான காமவெறிக் கழிசடைகளும், கற்றறியா மூடர்களும் மலிந்துவிட்டதால், இவர்கள் பாஸிஜ ஹிட்லரின் நாஜிப் படைபோல் கூலிப்பட்டாளங்களாக கோழைகளாக வீணர்களாக விறுத்தர்களாக மாறிவிட்டார்கள். இவர்கள் பெற்றதாயையும், உற்ற தங்கையையும், ஏற்ற காதலியையும் இனங்காணமுடியாத கண்ணவிந்த கபோதிகள். அல்லாவிட்டால் இந்தக் கப்டன் தானறியாத இந்த யுவதியில் அந்த அகால வேளையில் மிருகம் போல் பலாத்காரம் புரியத்துணிவாரா? இப்பேர்ப்பட்ட பேர்வழிகளுடன்தான் நான் இந்தத் தேசத்திற்காக மாரடிக்க வேண்டியிருக்கிறது இவர்களே உண்மையான பயங்கரவாதிகளாக இருக்கிறபோது, தங்கள் கற்பனையில் உதித்த 'பயங்கரவாதிகளை' எப்படி ஒழிப்பது?

# 9

மகிபரே, செவி மடுத்துக் கவனியுங்கள்.

யுத்த சன்னதமாடும் மனநிலையில் இருக்கிறவேளை யிலும் உணர்ச்சி செத்துச் சோர்ந்து போன வெறும் மாமிசப் பிண்டங்களில் தன்னிச்சையாக வெளிப்படுத்திய காமாக்கினியை விரசமாக விகாரமாகத் தணித்து விட்டு வீறாப்புடன் வெளியேறிய கப்டன். தன் சகாக்கள் புடை சூழ நின்று இளைஞர்களைப் பார்வையிட்ட போது மின்னிடி வேகத்தில் அதிரடியாக முகத்தில் விழுந்த குத்து எங்கிருந்து வந்ததென்று கணிக்க முன்பே முகங்குப்புற விழுந்து விட்டார். அந்தக் குத்தோடு கப்டன் செயலிழந்து மயங்கி விடுவான் என்றே எதிர்பார்த்தேன். ஆனால், கப்டன் திணறி எழுந்தார். நாசித் துவராங்களினூடாக ரத்தம் குபீரித்துக் குமுறிப் பீறிட்டது,

ஏலவே அந்த இளங்கன்னியில் சோரமாகக் கண் வைத்து, தக்க தருணத்தில் அப்பி இச்சை தீர்க்கக் கருதி யிருந்த சார்ஜண்ட் மேஜரே அந்தப் படைப்பிரிவுக்குள் ளிருந்து சற்றும் எதிர்பாராமல் கப்டன் முகத்தில் அப்படி மின்னி விளாசி விட்டான். நிச்சயம் இளைஞர் யுவதி களில் அறிவார்கள். ஆனால் அவர்களோ அந்த நெஷ்டூரத் தால் திகிலடைந்து விக்கித்துப் போய் நின்றார்கள்.

இந்த ராணுவத்தினனோ குய்யோ முறையோ என்று தூஷிணித்து மண்டப சாலை அதிர மிகப் பலமாகக் கத்தினான்:

''பயங்கரவாதிகளில் ஒருவன் எங்கள் கப்டனை அடித்துப் போட்டான். ஒரு பௌத்த சிங்கள வீரன் மேல் கைவைத்த பறைத்தமிழன் கரங்களில் உடனே விலக்கு மாட்டுங்கள். அவனை உயிரோடு விடக்கூடாது!''

ஏதோ ஒன்றில் கருக் கொண்ட விஷயம் தலைகீழாக மாறுபட்டு எப்படி வேறாக உருக்கொண்டிருக்கிறது பார்த்தீர்களா? முதலாளித்துவ தத்துவம் என்பது இது தான். விஷயம் எங்கோ இருக்க எதையோ எல்லாம் போட்டுக் குழப்பி அடித்து மனிதர்களின் மூளைகளையே கூழாக்கி விடுகிற சூத்திரம் அது. அப்படித்தான் உலகம் முழுதும் முதலாளித்துவம் விஷயங்களைக் குழப்பி யடிக்கிற மாபெரும் சிந்தனாவாதிகளால் தான் இந்த நாடு சீர்கெட்டு, சுளுவான பிரச்சனையையே இப்படிச் சிக்கலாக்கிக் குழப்பியடித்திருக்கிறது. ஊர் குழம்பினால் உடையாருக்குத் தாயம் அல்லவா!

மான் குட்டிகளில் பாய்ந்த வேங்கைகள் போல் இந்தப் படைப்பிரிவு ராணுவத்தினர் போராளிகள் மீது பாய்ந்து குதறத் தொடங்கினார்கள். கரடு முரடான பூட்ஸ் லாடன்களின் லயம் பிசகிய ஒலிகள் மண்டபத்தில் ஓயாமல் கேட்கத் தொடங்கின. முடுக்கிவிட்ட யந்திரம் போல் எழுந்த அலறு சத்தம் காதைத் துளைத்தது.

ராணுவப் படைப்பிரிவின் வதை படலம் ஆரம்பித்து விட்டது.

இளைஞர் யுவதிகளாக - போராளிகளின் கேருந் தொனிகள் அடிபட்ட புறாக்களின் கீச்சுக்குரல் போல் ஈனித்துக்கேட்டன.

முகத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டு திடீரெனத் துடித்து வீராவேசமாக எழுந்த கப்டன் நெஞ்சை அகல விரித்தபடி கர்ஜிக்கும் தொனியில் கத்தினான்.

"அற்றேன்ஷன்? போதும் நிறுத்துங்கள். இனி யார் மீதும் கை வைக்க வேண்டாம்"

சூறாவளி வீசி ஓய்ந்த அமைதி சாலையில் நிலவியது.

அரைவாரில் மாட்டியிருந்த ரிவோல்வரை அதன் 'சாக்' படங்குப் பூட்டிலிருந்து மெல்ல எடுத்துக் குறிவைத்த கப்டன் மீண்டும் உரத்துச் சத்தம் போட்டான்.

''எவனும் அசையக் கூடாது, அசைகிறவன் எவனோ அவனில் இந்தக் குண்டு உடனே பாயும்.''

தறிகெட்டு நிலை குலைந்து நின்ற அத்தனை பேரும் உதறியெடுக்கிற கெண்டைக்கால்களில் மண்டபத்தூண் களைப்போல் அசையாமல் நின்ற கோலம் கப்டன் கண்ணில் தெளிவாகத் தெரிந்தது.

ரிவோல்வரின் குழல் நுனியிலிருந்து நெருப்புக் கோணமாய்ப் 'பளிச்'சிட்ட ஒரு தீப்பொறி கண்ணில் மின்னிற்று.

இரத்தம் பீறிட்ட நெஞ்சை அழுத்துப்பிடித்துக் கொண்டு கண்மூடி விழிக்கு முன் ஆவேசமாக அலறித் துடித்த சார்ஜன்ட் மேஜர் மாலாரடித்துப் 'பொத்'தெனக் கீழே விழுந்தான்.

சில வினாடிகளில் சார்ஜண்ட் மேஜர் உயிர் முற்றாகவே பிரிந்து விட்டது.

இறந்து போன சடலத்தைப் பார்த்துக் கொக்கரித்துச் சிரித்த கப்டன் பூட்ஸ் கால்களால் பிரேதத்தைப் புரட்டி ஒரு காலை அதன் மேல் அழுத்தி வைத்தபடி கனைத்துக் கொண்டே கர்ஜிக்கிறான்:

''ஒவ்வொருவனும் கவனத்தில் எடுக்க வேணும், ஒரு பெண்ணைப் பலாத்காரமாகக் கற்பழிக்கும் செயல், அவளைக் கொலை செய்வதற்கு ஒப்பாகும். இங்கே நாங்கள் பயங்கரவாதத்தை ஒழிக்க வந்தவர்களேயல்லாமல் பயங்கரவாதம் புரிவதற்கல்ல. இதை ஒவ்வொருவனும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆனால், இந்தக் கொலைஞனோ தான் தப்பித்துக் கொள்வதற்காக என் மீதுபாய்ந்து தன் கைவரிசையைக்காட்டிவிட்டிருக்கிறான். அந்தக் கன்னியிலும் என் மீதும் குதறிப் பாய்ந்தஒரு வெறி பிடித்த மிருகமே உங்கள் மத்தியில் இதோ பிணமாகக் கிடக்கிறது. யுத்த காலத்தில் இதெல்லாம் சீரியசான

விஷயமல்ல என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே, இந்தச் சம்பவத்திற்காக உங்கள் மனசைப்போட்டு அலட்டிக் கொள்ளவோ சோர்ந்து போகவோ வேண்டிய தில்லை. நாங்கள் நாட்டை எவ்வளவு நேசிக்கிறோமோ அந்தளவிற்கு எதிரிகளால் வரும் துன்பங்களையும் மரணங்களையும் எதிர்கொள்ள வேண்டியவர்களா யுள்ளோம்...''

இத்தனை நேரமாக மலைத்துப் போய் ஊமையாக விருந்த அந்த யுவதி ''திடீ''ரென்று போட்ட கூச்சல் அப்போது மண்டபம் ஏகலும் அதிர்ந்தது.

கப்டன் உஷாரானார். அவர் அவளைத் தேடி விரை வதற்குள் அவள் நின்ற நிலையில் மூர்ச்சித்து விழுந் தாள்.

அவருக்கு விஷயம் வெளித்துவிட்டது.

வெலவெலத்துப்போன அவர் முகம் குல்லிட்டது. நிதானம் இழந்துபோன கப்டன் சற்று வேளை நிலை குலைந்து தடுமாறினார். அவர் கண்ணில் சூன்யப் பிரதேசம் போல தெரிந்த மண்டப சாலையின் மங்கிய வெளிச்சமும் குன்றிப் போய் ஒரே அந்தகாரமாகிவிட்டது.

ஏதோ யோசனையில் ஆழ்ந்த கப்டன் ரிவோல்வரை வறாகக் கைக்குள் அழுத்திக் கொண்டு உரத்த குரலில் உத்தரவிட்டார்.

''வீரர்களே, நீங்கள் அனைவரும் பரக்ஸிற்கு உடனே திரும்பிச் செல்லுங்கள். பதினைந்து நிமிஷம் ஓய்வு எடுத்த பின் பரேட் கிறவுண்ட் முனங்கிலே உஷார் நிலை கொண்டு வரிசையாக நில்லுங்கள்''

'என்ன நிகழப் போகிறது?' என்று எவராலும் யூகிக்க முடியவில்லை ஒருவரை ஒருவர் தறுதறுத்து முழிசினார் கள்.

படைப் பிரிவினர் வெளியேறியபின் போராளிகளையும் கப்டனையும் தவிர மண்டபசாலையில் எந்த ஊசலாட்டமும் இருக்கவில்லை.

மண்டபசாலையின் கோடிப் புறத்தே உள்ள இரும்புக் கம்பி ஒன்றை எடுத்த கப்டன் எங்கோ முண்டு கொடுத்துத் தெண்டிய போது மண்டபம் பகல்போல் வெளிச்சிட்டது.

ரிவோல்வரின் முனைப்புப் புடங்கைக் குதிப் பூட்ஸ் லாடனில் தட்டி விட்டுஇடுப்பு வாரின் பூட்டிலே தொங்கும் சாக்கினுள் செப்பமாகச் செருகிய கப்டன் நெஞ்சு நிமிர்த்தி ஒவ்வொருவராக நோட்டம் விட்டார்.

'விடுதலைப் போராளிகளான உங்களையெல்லாம் பயங்கரவாதிகள் என்று கைது செய்துகொண்டு வந்த எமது படை வீரர்களின் பயங்கரவாதச் செயல்களை நீங்கள் இப்போது அனுபவித்தும் அவதானித்தும் இருக்கிறீர்கள். பயங்கரவாதிகளைக் கைது செய்து விசாரித்த பின் தண்டனைக்கான தீர்ப்பு வழங்குவதும், இத் தண்டனைகள் ராணுவ உயர் அதிகாரிகளாலேயே நிறைவேற்றப்படுவதும், அரசாங்கத்தின் இன்றைய நிறைவேற்றுச் சட்டங்கள் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். ஆனால், ராணுவ அதிகாரிகளான நாங்களும் மனிதர்களே என்பதை நீங்கள் சில தடவை மறந்தே போய்விடுகிறீர்கள். எங்களால் இம்சிக்கவோ, துன்பப்படவோ நேரிடுகிற போது எங்கள் மீது உங்களுக்கு எத்தகைய ஆத்திரமும் வெறுப்பும் ஏற்படுகின்றனவோ, அதுபோலவே நீங்களும் எங்களை இம்சிக்கும் போதும், தொல்லைப் படுத்தும் போதும், எங்களுக்கும் ஆத்திரம், கோபம் உண்டாகின்றன என்பதை நீங்கள் ஏன் உணர்வதில்லை?

நான் ஒரு தீர்மானத்திற்கு வந்து விட்டேன். அதன்படி இன்று உங்கள் அனைவரையும், அதிகாலைக்கு முன் விடுதலை செய்ய முடிவு எடுத்து விட்டேன். நீங்கள்

உங்கள் விருப்பம் போல் சுதந்திரமாக வெளியேறலாம். இந்த முடிவு உங்களுக்கு அதிசயமாகவோ, மகிழ்ச்சியாகவோ இருக்கும். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, வெளியேறும் நீங்கள், எந்தவித சந்தடியும் செய்யாமல் சென்றுவிட வேண்டும். ஒரு நிபந்தனை. உங்களுக்காக காவல் நிலையச் சென்றியின் கேட் திறப்படமாட்டாது. ஆகையால், முகாமைச் சுற்றி வளையம் போடப்பட்ட, முட்கம்பி வேலிகளைத் தாண்டியோ, நீக்கிக் கொண்டோ, உங்கள் வசதி போல், சுதந்திரப் பறவைகளாக வெளியேறலாம். இங்கே கொண்டுவரப் பட்டபின், உங்களுக்கு, என்னாலோ எனது படைவீரர்களாலோ, ஏதும் துயரமான கஷ்டமான சம்பவங்கள் ஏற்பட்டிருப்பின் அவற்றை இங்கேயே மறந்து விடுங்கள். தங்கள் கடமைகளைச் செய்யும் போது, படைவீரர்களுக்கு மட்டுமல்ல, இயக்கப் போராளிகளான உங்களுக்கும் தவறுகள் நேர்ந்து விடுகின்ற போது, தண்டனை வழங்கும் முறையும், இயக்கங்களுக்குள் மர்மமாகிவிடுகிறதல்லவா? அதுபோன்றே, இங்கே அசம்பாவிதங்கள் நிகழ்ந்திருப்பின், அவை உங்களுக்குள் மர்மமாகவே இருந்து போகட்டும்......

மகாகனந்தங்கிய அதிபரே, இதிற்கு மேல் விவரிக்க மனசு தளர்கிறது,

எமது படைப்பிரிவின் தலைமை அதிகாரிகள், எனது கட்டளைக்காகவும் காத்திராமல், தங்கள் மனம் போகிற போக்கில், மிகக் குரூரமாக, எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதற்கு இந்தச் சம்பவமும் சான்று.

மகிபரே, நெஞ்சு குல்லிட்டு நடுங்குகிறது.

கப்டன் தன் வஞ்சம் தீர்க்கக் கையாண்ட, நயவஞ்சக யுக்தி, அத்தனை கைதிகள் சடலங்களையும், முட்கம்பி வேலியில் தொங்க வைத்தது,

இடம் பொருள் ஏவலுக்கு ஏற்றவாறு, அறிக்கை தயாரிப்பதில், மர்மநாவலாசிரியர்களை விடச் சூரரான கப்டன் இந்த பயங்கரக் கொலைகளைப் பொய்யாகச் சோடித்து உண்மை போல் தயாரிக்க முடியாமல், கதி கலங்கிப் போனார்.

என் நெஞ்சை உருக்கும் வேதனை என்னவென்றால் கப்டன் தலைமைப் படைப்பிரிவினர் நடாத்திய படு கொலைகள் மிகப் பயங்கரமாக இருந்த போதும், பொய் யான இந்த அறிக்கையும் நான் 'சரி'யென்று உத்தரவாதப் படுத்தித் தங்கள் சமுகத்திற்குச் சமர்ப்பிப்பதுதான்.

'தப்பியோட எத்தனித்த பயங்கரவாதிகள் அனை வரும் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்'

பொய்யாகவே சோடித்த இந்த அறிக்கை தங்கள் அதிகாரத்தை மேலும் பலப்படுத்தும் என்பது மெய்யே. இந்த அறிக்கை நாளைய தினசரிகளை அலங்கரிக்கப் போவதும் உண்மையே.

விவகாரம் இப்படிப் போய்க்கொண்டிருந்தால் நாடு என்ன ஆகும்?

இனி ஒரு கணமும் என்னால் தங்கள் கட்டளைகளை ஏற்றுச் செயற்பட முடியாத நிலைக்கு, என்னை ஆளாக்கிக் கொண்டேன்.

ஒரு பரிகாரம் தேட வேண்டும்.

ஒரு ராணுவத் தளபதியான எனக்கு இலங்கை அரசி யல், கலை இலக்கியம் சமுதாயம் பற்றி அறிந்த ஒரு வித்தகரின் ஞான போதம், என் மனச் சான்றைத் தட்டி விட்டிருக்கிறது. சிங்கள மக்களின் உள் உணர்வைத் தமிழ் மகன் ஒருவரால் எப்படி முழுமையாக உணர முடியாதோ அம்மாதிரியே தமிழ் மக்களின் உணர்வை சிங்கள மகன் ஒருவரால் உணர-உணர்த்த முடியாது என்பதாலேயே நான் இந்த முடிவுக்கு வர ஏதுவாயிற்று.

என்னால் தகர்த்தெறியப்பட்ட நம்பிக்கை தங்களுக்கு ஒரு சோதனையாகி விட்டதை நான் உணருகிறேன்.

இனி நான் எப்படிச் செயற்படுவேன் என்பதைத் தாங்கள் சுசட றப்புரிவீர்கள் என்று திடமாக நம்புகிறேன்.

மகிமைக்குரிய அதிபரே,

எனது ''படைவிலகல்'' நிருபம் தங்கள் பதவிக் காலத்தில் தாங்கள் எனக்குத் தண்டனை வழங்க இயலாத போது அதிகாரம் இழந்த காலத்திலும் அர்த்தப்படலாம்.

இதனிமித்தம் தங்கள் அதிகாரம் பிறப்பிக்கும் புதிய உத்தரவு, என்னை மிரட்டலாம். எதனையும் எதிர் கொள்ளச் சித்தங் கொண்டே இந்த விவரணத்தை எழுதினேன் என்பதை மதிநுட்பமான தாங்கள் சரியாகப் புரிவீர்களாயின், எனது பிரகடனம் வெகுஜனங்களோடு சம்பந்தப்பட்டிருப்பதையும், மக்கள் குரலாக வெளிப்பட்டிருப்பதையும் உணர்வீர்கள்.

இந்த விவரணத்தின் பிரதிபலிப்பு எப்படியெல்லாம் என்னை எதிர்கொள்ளும் என்பதை, நான் துலாம்பரமாக அறிவேன். தங்கள் வியூகத்தின் சட்டவாக்கப்பிடி எத்துணை வலுவாகவிருப்பினும், அனைத்தையும் எதிர் கொண்டு, தகர்த்தெறியவும் சித்தமாய் இருக்கிறேன்.

பொதுமக்கள் அனுகூலத்திற்காக என்றும் தங்களை எதிர்கொள்வேன்.

என்னை மன்னியுங்கள்.

(இடை நிறுத்தம்)

□ □ □

## எமது சிறந்த நாவல், சிறுகதை வெளியீடுகள்

புதிய தரிசனங்கள் - மூன்று பாகங்கள் - பொன்னீலன்

மோகத்திரை - அறந்தை நாரயணன்

தமிழ்ச் சிறுகதைகள் - சு. செந்தில் நாதன்

மேய்ப்பர்கள் - எஸ். அகஸ்தியர்

எரி நெருப்பில் இடைபாதை இல்லை - எஸ். அகஸ்தியர்

பஞ்சும் பசியும் - தொ.மு.சி. ரகுநாதன்

மலர் விடு தூது - விராஜ்

இரவின் ராகங்கள் - ப. ஆப்டின்

தீம் தரிகிட - தனுஷ்கோடி ராமசாமி

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்**

**சென்னை - 600 098.**